Koviloor Digital Library

அகஸ்தியர்

வைத்தியப் பிள்ளைத் தமிழ்

விளக்கவுரை

ஹகீம். பா.மு. அப்துல்லா சாயபு



Acc.No: 44779
R 689

தாமரை நூலகம், சென்னை - 26.

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

உ

அகஸ்திய முனிவர் அருளிய

வைத்தியப் பிள்ளைத் தமிழ்

டாக்டர். ஹகீம். பா.மு. அப்துல்லா சாயபு அவர்கள் எழுதிய உரையுடன்

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44779

தாமரை நூலகம்

7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி,
சென்னை - 600 026.
தொலைபேசி எண் :(044) 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு : எண் 207.
முதல் பதிப்பு : பிப்ரவரி 1998.
இரண்டாம் பதிப்பு பிப்ரவரி 2018

நூலைப் பற்றி

உரிமை பெற்றது

நூலின் பெயர்	:	அகஸ்தியர் வைத்தியப் பிள்ளைத் தமிழ்
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	பிப்ரவரி 2018
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 கி.கி. வெள்ளைத்தாள்
எழுத்து அளவு	:	10, 11 புள்ளிகள்
மொத்த பக்கங்கள்	:	200 + VIII
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 80
கணிப்பொறி	:	கார்த்தி கிராபிக்ஸ், சென்னை - 26.
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட், சென்னை - 34.

KOVILOOR ... LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

91/4

பதிப்புரை

அற்புதமான பல மருந்துகளை அகஸ்தியர் பெருமான் இந்த நூலில் கூறியுள்ளார்.

இந்த மருந்துகளைச் செய்த சித்த மருத்துவர்கள் இருந்தார்கள். தீராத நோய்களையும் குணப்படுத்தினார்கள். இன்றும் இருக்கிறார்கள். போதிய ஆதரவு இல்லாமையால் பணச் செலவும், நாட்கனக்காக, மாதக்கணக்காக அரும்பாடுபட்டு மருந்தைச் செய்து முடித்தபின் அதற்குத் தகுந்த பலன் இருக்குமோ இருக்காதோ என்ற அவநம்பிக்கையும் காரணமாக நலிந்து கொண்டிருக்கிறார்கள்.

சித்த மருந்துவம் என்றால் ஏதோ இலை தழைகளைக் கொண்டு செய்யும் மூலிகை மருந்துவம். இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் செலவில் முடிந்து விடும் என்ற மனப்போக்கு இன்றைய மக்களிடையே காணப்படுகிறது. அதனாலேயே போதிய அக்கறையும், அதற்குரிய மதிப்பும் கொடுத்துப் பழகும் பண்பும் குறைந்து காணப்படுகிறது.

அப்படியல்ல. பஸ்ப செந்தூர வைத்தியம் தான் சித்த வைத்தியம். கஷாயம், இலேகியம், சூரணம், மாத்திரை இவை எல்லாம் ஆயுர்வேதத்திலும் உண்டு. பஸ்ப செந்தூரங்களும் ஆயுர் வேதத்தில் உண்டு. ஆனால் தனிச் சிறப்புடையவை சித்தர் முறைப்படி தயாரிக்கப்பட்டவையே ஆகும்.

இன்று வரை, நீரிழிவு, ஆஸ்த்மா, குன்மம், குஷ்டம், பக்க வாதம் போன்ற நோய்களுக்கு மேல்நாட்டு மருத்துவ முறைகளில் பரிகாரங்கள் இல்லை.

வாதம் என்றால், யுனானி, ஆயுர்வேத, சித்த வைத்தியர்களிடமே வந்தாக வேண்டும். அவற்றிலும் சித்தர்முறை தான் மிகவும் சிறப்பானது.

சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் பட்டப்படிப்போடு நின்றுவிடாமல் பழம்பெரும் வைத்தியர்களை அணுகி அவர்களிடம் இருந்து நுட்பமான மருந்துகளையும் மருந்துவ முறைகளையும் கற்றுக்

Koviloor Digital Library

கொள்ள வேண்டும். தவிர நிறையப் படிக்க வேண்டும். பல நூல்களையும் படித்து ஒவ்வொரு சித்தரும் ஒரு மருந்து தயாரிக்கும் முறையில் எந்த முறையைக் கூறியுள்ளார். ஒருவர் கூறியதற்கும் இன்னொருவர் கூறுவதற்கும் என்ன வேறுபாடுகள் உள்ளன என்பதையெல்லாம் ஆராய வேண்டும்.

அனுபவத்தில் மருந்துகளைக் கொடுத்துப் பார்க்கும் போது ஒருவர் முறைக்கும் மற்றவர் முறைக்கும் உள்ள வேறுபாடு புரியும். மருத்துவம் வளரும். தாங்களும் வளர்ந்து புகழ், பெருமை, வசதிகள் யாவும் பெற முடியும்.

டாக்டர் ஹகீம் பா.மு. அப்துல்லா சாயபு அவர்கள் இந்த நூலுக்கு உரை எழுதியுள்ளார் என்ற ஒன்றே இந்த நூலின் தனிச் சிறப்பு விளங்கப் போதுமானது. இதன் பழைய பிரதி ஒன்று சுமார் ஒரு நூறாண்டுக்கு முன்பு வெளிவந்தது பக்கங்களைப் பிரித்தால் உடைத்து நொறுக்கி விடக் கூடியது. அப்படிப்பட்ட பிரதி ஒன்றைப் பத்திரமாக வைத்திருந்து மறுபதிப்புச் செய்யக் கொடுத்து உதவிய நண்பர் திரு. எம். என். அனுபந்தன் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இதன் பயன் கடலினும் பெரியது என்பதை சித்த மருத்துவ உலகம் நன்கு அறியும்.

வணக்கம்

எஸ்.பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்

Koviloor Digital Library

91/4

பொருளடக்கம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகீம்

அகத்திய மகாமுனி

வைத்தியப் பிள்ளைத்தமிழ்

முகவுரை

என்னருமைச் சகோதரர்களே! இந்நூதன கிரந்தத்தை வெளிப்படுத்த நேரிட்ட காரணம் இன்னதென இதனடியிற் கூறப்படும் விஷயங்களால் வெளியாய்த் தெளிவாய் விளங்கும்.

கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் பற்பல பண்டித சிரோமணிகளின் அநுக்கிரகத்தாலும் அடியேனாலியற்றப் பட்டவைகளும் வெளிப்படுத்தப்பட்டவைகளுமான யூநாநி வைத்திய தாது விர்த்திபோதினி முதல் இரசவாத சிந்தாமணி யீறாகவுள்ள பல அபூர்வ யூநாநி இந்து வைத்திய கிரந்தங்களை யாவரும் அங்கீகரித்து, அவற்றிற் சொல்லியிருக்கப்பட்ட சிகிச்சாக்கிரமங்களை யனுஷ்டித்தும், நமது இராஜ அவுடத சாலையில் விற்கப்படும் பற்பல அவுடதங்களைக் கையாடியும் அளவிறந்த பிரயோஜனங்களை யடைந்து ஆனந்தித்து வருவதைக் கடிதமுகத்தாலும் பிறவற்றாலும் எமக்கறிவித்து நம்மைப்பல விதத்தாலும் ஆதரித்து வரும் சுதேசாபிமானிகளான பல கனவான்களின் கோரிக்கையாவது :-

மகாகஷ்டரோகங்களையும் அறத்தீர்க்கும் பற்பல பற்பம், சிந்தூரம் முதலிய அரிய முறைகளடங்கிய இராஜவைத்திய மகுடமாகிய தேரையர் யமக வெண்பா என்னுங்கிரந்தம் வெளியான போது அந்நூலிலுள்ள சொன்னோக்கம், பொருள் நோக்கம், தொடை நோக்கம், நடை நோக்கம், முதலியவைகளையும், ஒவ்வொரு அவுடதத்தையும் செய்து முடிக்கும் விதிமுறை முதலியவைகளை வெகு தெளிவாய், விரிவாய், முறையாய், நுட்பமாய்ச் சொல்லியிருப்பதையும் கண்ணுற்ற பல வித்வ சிரோமணிகளும், கற்றவர்களும், மற்றவர்களும் ஆனந்த பரவசத்தினராகி அடங்கா மகிழ்ச்சியை அடைந்து வரினும், மேற்படி கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் பற்பம், சிந்தூரங்கள் முதலியவை அதிக உன்னதமானவைகளே. அதில் எவ்வித சந்தேகமும் கிடையவே கிடையாது. ஆனால் அவற்றைச் சாதாரணமாகிய எல்லோரும் செய்துகொள்வது இலேசான்காரியமல்ல; ஏனெனில், ஒவ்வொரு பற்பத்தை அல்லது சிந்தூரத்தைச் செய்துமுடிக்கப் பல மாதங்கள் செல்கின்றன. அதைச் செய்துமுடிக்க இராப்பகல் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. தேகசிரமம் அதிகமாகயிருக்கிறது

Koviloor Digital Library

போலவே திரவியச்செலவின் மிகுதிக்கும் காரணமாயிருக்கிறது; இவையன்றி அச்செய்யுட்களின் கருத்தை யறிந்து கொள்வதற்காக இலக்கிய இலக்கணப்பயிற்சியும் விசேஷமாய் வேண்டியதா யிருக்கிறது. அப்படி விசேஷமாயில்லாதவர்களுக்கு அச்செய்யுட்களின் பொருள் ஒன்றுமே விளங்காது ;அக்கிரந்தமும் சற்று விரிவானதாகவே யிருக்கிறது. ஆகையால் இலக்கிய இலக்கணப் பயிற்சியில்லாத சிறுபிள்ளையாயிருந்தாலும் கூடியவரையில் விளங்கி ஞாபகப்படுத்தக் கூடியசெய்யுட்க ளுள்ளதும், தேகசிரமம், திரவியச்செலவு முதலியவைகள் கூடினவரையில் மிகவும் சொற்பமாக விருப்பதுடன் காலதாமதமின்றிக் கூடிய சீக்கிரம் சாதாரணமாய் எல்லோரும் முடிக்கக் கூடிய பற்பல முறைகளடங்கியதுமான ஒரு கிரந்தமும் அடியேனால் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதேயாம்.

ஆனால் அடியேன் அவ்வளவு சக்தியுள்ளவனாயில்லாவிட்டாலும் நம்மைப் பலவிதத்திலும் கனப்படுத்திவரும் சுதேசாபிமானிகளின் நன்னோக்கத்தை யவலமாக்க வசமற்றவனாய், அதை நிறைவேற்ற வேண்டுமென முயற்சிசெய்து செய்யுட்களாயுள்ள பல ஏட்டுப்பிரதிகளை ஆராச்சிசெய்து வந்ததில், மேற்கண்ட அகத்திய மகா முனி வைத்தியப் பிள்ளைத் தமிழ் கிரந்தமொன்றே மேற்படி நோக்கத்திற் கிசைந்ததாய் அவை யெல்லாவற்றிலும் சிரேஷ்டமானதும் அநுபவசித்தமாய் நம்பத் தக்கதுமாய்க் காணப்பட்டது; ஏனெனில்,

(1) இலக்கண, இலக்கியப் பயிற்சியில்லாத சிறுபிள்ளைகளும் கூடியவரையில் விளங்கி ஞாபகப்படுத்தக் கூடிய வெள்ளையான தெள்ளிய தமிழில் படிப்போருக்கும் கேட்போருக்கும் இனிமையா யிருக்கும்படி அருமையான பாக்களால் இந்நூல் அமையப்பெற்றிருக்கிறது.

(2) இது அட்டவணை ரூபமாயில்லாமல் நூறு பாக்களால் அமையப்பெற்ற ஒரு சிறு கிரந்தமாயிருப்பதால் மேற்கண்ட சிறுவர்கள்கூட, இது விரிவான தென மலைத்துப் பின்வாங்காமல், இரண்டு மூன்று மாதங்கள் சாதாரணமான கவலை யெடுத்துக்கொண்டால் வெகு சுலபமாக மனப்பாடம் செய்து ஞாபகத்தில் வைக்கக் கூடியது.

(3) நிச்சயப் படுத்தப்படாத அச்சுப் புத்தகங்களில் கண்ட பாகங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பொறுக்கியெழுதி பற்பல விசித்திரப் பெயரிடப்பட்டு இக்காலத்தில் வெளிப்பட்டுலாவும் புழுதிமாயப் புத்தகங்களைப் போலாகாமல், பெரியோர்களால் பண்டைக் காலந்தொடுத்து அநுபவ சித்தமாய்க் கையாண்டுவந்த சித்த அவுடதமென்னும் நிச்சய அறிகுறியான பாக்களான அத்தாட்சியுட னிருக்கிறது.

(4) இது ஒரு சிறிய கிரந்தமாயினும், ஒரு தகுந்த வைத்தியருக்கு அவசியமான முறைகளான பற்பம், சிந்தூரம், சூரணம், லேகியம், தைலம் முதலிய பல பாகங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

(5) மேற்கண்ட முறைகளைச்செய்ய அதிக கால தாமதம், அதிக தேகசிரமம், அதிகப் பணச்செலவு முதலியவை வேண்டியதே யில்லை. ஒவ்வொரு முறையையும் கால தாமதமின்றி வெகு சுலபமாக, மிகவும் குறைந்த செலவுசெய்து முடித்துக் கொள்ளலாம். இவ்விதம், இந்த அவுடதங்கள் செய்யப்படினும் காலதாமதம் அதிகப் பணச்செலவு முதலியவைகளுண்டான பெரிய அவுடதங்களைப்போலவே குணஞ்செய்வதில் எவ்வித சந்தேகமுமில்லை.

(6) இச்சிறு கிரந்தத்தில் வைத்திய ரகசியமுறைகள் அநேகம் சொல்லப் பட்டிருப்பதுபோல வேறெந்த கிரந்தத்திலும் சொல்லப்படவில்லை. இன்னும் பற்பல ரோகச்சிகிச்சை, பாம்பு, எலி முதலிய விஷச்சிகிச்சை, ரணச்சிகிச்சை முதலியவைகள் சொல்லப்பட்டிருப்பதால், இந்த ஒரு நூலே எல்லாவித சிகிச்சைகர்களுக்கும் போதுமானது. வேறுநூலைப் பார்க்கும்படியான அவசியமே இராது.

இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறையையும் மிகவும் சுருக்கமானதும் மிகவும் சுலபமானதுமாம். இப்பாகங்களைப்போல வேறெந்த கிரந்தங்களினுஞ் சொல்லப்படவில்லை யென்பது திண்ணம். இதுவரையில் வெளிப்பட்டிருக்கும் தமிழ்க் கிரந்தங்களில் இதற்குச்சமானமான தொன்று மில்லையென்றே சொல்லல்வேண்டும். இதனுண்மையை இதனைப் பார்வையிடும் அநுபவசாலிகளெவரும் ஒருவரெடுத்துச் சொல்லாமல் தாம்தாமே தெரிந்துக்கொள்ளக் கூடும்.

இன்னவைகளும், இவை போன்றவைகளுமே பிரதான காரணங்களாம்.

ஆனால் இப்பாக்கள் மிகவும் தெளிவாகவும் எளிதாகவுமிருக்கினும், ஒவ்வொன்றிலும் ஒரு சரக்கின் அல்லது பல சரக்குகளின் பெயர்கள் குறிப்பாக அல்லது இடுகுறியாக அல்லது விசித்திரமாக அல்லது சிறப்பாக அல்லது பரிபாஷையாக அமைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் இதன் கருத்தை பண்புபட்ட பண்டிதர்களும் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ந்து தெளிந்துகொள்ள வேண்டும். அல்லது கரண பரம்பரையாகக் கேட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வித அர்த்தத்தையும், ஒவ்வொரு முறைகளின் செய்பாகம், கைபாகம்; அநுபான முதலியவைகளையும் கற்றவர்களும் மற்றவர்களும் இலகுவாய் தெரிந்துகொள்ளும் படியாய் இப்பாக்களின் கருத்து முதலியவைகளைத் தெளிவான எளிய நடையில் வெளிப்படுத்தினால் மாத்திரந்தான் மேற்கண்ட எல்லோருக்கும் உபயோகமாகி உலகத்திற்குப் பெரும் பிரயோசனமாயிருக்கும். அப்படியன்றேல் அவ்வளவாய்ப் பிரயோசனப் படுமெனச் சொல்ல ஏதுவில்லை. இவ்விதம்செய்ய பலவகை கஷ்டமெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது அநுபவசாலிகளான ஒவ்வொருவருக்குந் தெரிந்த விஷயமே. ஆயினும் நம்மைப் பல விதத்திலும் கனப்படுத்திவரும் சுதேசாபிமானமுள்ள கனதனவான்களின் கருத்தை நிறைவேற்றி அரிய விஷயங்களைத் தக்க விதமாய் வெளிப்படுத்தினால் கனப்படுத்தி யாதரிக்க தக்கவர்கள் சித்தமாயிருக்கின்றார்களென்றே உற்சாகமுண்டாகி இப்பெருங் காரியத்தில்

Koviloor Digital Library

முன்வந்தேன். இதற்காக இந்த ஒரு கிரந்தத்தின் பல பிரதிகளைச் சேகரித்து ஒன்றோடொன்றை ஒத்திட்டு அனாவசிய மானவைகளையும்; சந்தேகத்திற் கிடமானவைகளையும் நீக்கி இந்நூலை அடியேன் சிற்றறிவிற் கெட்டினவரையில் ஆராய்ந்து தெளிவுரை எழுதியிருக்கின்றேன். மேற்கண்ட பாக்களில் அனேக முறைகளில் நிறை, அளவு, பிரமாணம், செய்பாகம் முதலியவை திட்டமாய்ச் சொல்லப்படவில்லை; மேலும் காலங்கள் தோறும், தேசங்கள் தோறும், அளவு, நிறை முதலியவைகளின் வழக்கானது மாறுபட்டிருப்பது சகஜமாகையால், அவ்விதமான முற்கால நிறை, அளவு ஆகியவைகளை, இத்தமிழ்நாட்டில் தற்காலத்தில் பெரும்பான்மையாய் வழங்கப்படும் நிறை, அளவு முதலிய கணக்கின்படி எழுதியிருக்கின்றேன்; இன்னும் அவசியமான இடங்களில் சில வியாதிகளின் லக்ஷணங்கள், சில வியாதிகளின் சாத்தியாசாத்திய லக்ஷணங்கள்; ஆங்காங்கு வேண்டிய அநுபானாதிகள், சில முக்கிய சரக்குகளின் சுத்திக்கிரம பாகங்கள் முதலியவைகளையும் எழுதியிருக்கின்றேன்.

இந்த அருமையான நூலானது வைத்தியம் செய்யும் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியதாகையால்; இதனை அதிக சுலப விலைக்கு அச்சிட்டு வெளிப் படுத்தலானேன். இதைப்போன்ற நூதன கிரந்தம் வேறொன்றிருக்குமென்பது குதிரைக்குக் கொம்புளதெனச் சொல்வதுபோலாம்.

இந்நூலில் சொல்லப்பட்ட பற்பல முறைகளின் செய்பாகத்தில் ஒருதடவை சொன்னவைகளையே மடக்கிமடக்கிச்சொல்ல நேரிட்டிருக்கிறது. இது வாசிப் போர்க்கும், இதை எழுதின அடியேனுக்கும் ஒரு வகையில் கஷ்டமாயினும், அப்பாகத்தைச் செய்வோர்களுக்குப் பலவகையிலும் இலாபகரமாகவே யிருக்கும். ஏனெனில், கைபாகம், செய்பாகம் முதலிய பாகங்களில் ஒவ்வொரு முறைகளிலும் பல மாறுதல்களிருக்கின்றபடியால், அவற்றுளொன்றில் கொஞ்சந் தவறினும், அம்மருந்து பூரணமாய் நிறைவேறாது. ஒருவேளை பூரணமாய் முடிந்தாலும் அதன்குணம் முற்றும் காண்பிக்கப்பட மாட்டாது. மேலும் அவுடதங்களைச்செய்ய முயற்சிசெய்யும் ஒவ்வொருவரும் ஒருவரைப்போலவே சமமாய்ச் சூட்சும புத்தியையுடையவர்களா யிருப்பார்களென நினைத்தல் கூடாது, என்பதே.

ஆகையால், நண்பர்களே, "கூறினது கூறல்" என்னும் குற்றத்திலும், மற்ற வகையிலும், அடியேனையுட்படுத்தாமல், தயவுடன் மன்னிக்கும் படியாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ் வித்வ சிரோமணிகளையும், ஆயுள்வேதசிரோமணிகளையும், மற்ற நண்பர்களையும் மிகவும் வினையமாய்க் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பமாவது: இவ்வரிய கிரந்தத்தைப் பல ஏட்டுப்பிரதிகளிலிருந்து வேறு பல வகைகளாகவும் ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தபடியாலும், இது முதற்றடவை யானபடியாலும், மனித சுபாவத்தவறுதலாலும், மற்ற வகைகளிலும் நேரிட்ட பிழை முதலியவைகளை மன்னித்து, அவரவர்களுக்குத் தெரிந்தவைகளை ஜீவகாருண்யத்துடன்

Koviloor Digital Library

அடியேனுக்குத் தெரிவித்தால், அவை யுக்தமானவைகளாயின் அடுத்தபதிப்பில், அவற்றையும் சேர்த்து வெளிப்படுத்தப் படுமென்பதேயாம்.

இந்நூலில் சொல்லப்பட்ட பாகங்களுக்கும் மற்ற விவரங்களுக்கும், அமுதசாகரம், ரசமஞ்சரி, ஜீவரக்ஷாமிர்தம் முதலிய கிரந்தங்களினுடையவும், சில அநுபவசாலிகளான பண்டிதர்களுடையவும் உதவி அவசியமாயிருந்தது. ஆகையால் அக்கிரந்த கர்த்தாக்களுக்கும், அப் பண்டிதர்களுக்கும் உலகம் எப்போதும் நன்றியுள்ளதா யிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இந்நூலின் பாக்களிலுள்ள இலக்கிய இலக்கணப்பிழைகளை ஆய்ந்து சீர்படுத்தினவர் யாரென்றால்-ஜீவகாருண்ணியமும், பரோபகாரச் சிந்தையு முடையவரும், மகாராஜஸ்ரீ மஹாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் மாணாக்கருமாகிய ஸ்ரீமான், மகா கனம் பொருந்தியதொண்டர் சீர்பரவுவார் தம்பிரான் சுவாமிகளேயாம். இந்த சுவாமியார் அவர்கட்கும், இதன் மூலப் பிரதியை சம்பாதிக்க வெகு கஷ்டமெடுத்துக் கொண்ட வைத்தியர் மகாராஜஸ்ரீ டி. ரங்காசாரியார் அவர்கட்கும் இருதய பூர்வமாய் மிகவும் நன்றி யுள்ளவனா யிருக்கின்றேன். அவ்விதமே உலகத்தாரும் இருப்பார்களாக.

இந்தக்கிரந்தத்தை ஆதியோடந்தமாய்க் கவனித்து, வாசித்து, அறிந்து, அதில் சொல்லப்பட்டவைகளைச் செய்து கொள்பவர்களுக்கு, இப்பாட்டுத் தலைவரான அகத்திய மகாமுனிவரே சமீபத்திலிருந்து, உற்றசமயத்தில் ஊன்றுகோல்போல் உதவி செய்வதற் கொப்பாகுமென்பதிற் சந்தேகமே யில்லை.

ஆனதுபற்றி, நோயற்றவாழ்வு, ஆயுள்விருத்தி முதலிய இம்மைக்குரிய பல விர்த்திகளை விரும்புகின்ற ஒவ்வொருவரும் இக்கிரந்தத்தை அலட்சியம் செய்யாமல் மனங்கவிந்து மனப்பூர்வமாய் அங்கீகரித்தேற்று, கிரமப்பிரகாரம் சிகிச்சைசெய்து கொள்வதனால் இம்மைக்குரிய பலன்களை இனிது பெற்றநுபவித்துத் திடகாத்திர தேகிகளாய்ச் சுகித்து வாழ்வார்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

Koviloor Digital Library

உ
கடவுள் துணை.

அகத்திய மகாமுனி

வைத்தியப் பிள்ளைத்தமிழ்

கடவுள் வாழ்த்து.

தாவர சங்கமத்தைத் தருமுழுமுதல்வ னியாவன்
ஓவற வதனைக்காக்கு முயர்நலமுடையோ னியாவன்
மேவற வழித்துத்தானாய் வேறிலாதிருப்போனியாவன்
பாவனா தீதனாமப் பரனடிபணிந்து வாழ்வாம்.

பருவத்தொகை.

சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை-போற்றரிய
வம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

காப்புப் பருவம்

துவாதச சிந்தூரம்.

சிவசத்தி கவுரியரி தாரமொடு லிங்கமுஞ்
சிலைவெள்ளை துரிசு துத்தஞ்
செய்பொரிக் காரமொ டிணங்கனொடு காரமுஞ்
சேர்வகைக் கோர்க ளஞ்சாய்த்
தவஞானி யண்டமு மீராறெடுத் துளுள
தான்கருவை நீக்கி ஒட்டில்
சரக்கொன்று வெவ்வேறு பூநாக தானியின்
சாற்றா லரைத்துள் விட்டு
நவசீலை மண்செய் துமிப்புடஞ் சாணிடு
நல்ல மஞ்சட் கருவினால்

Koviloor Digital Library

நலமாக வொன்றித் தரைத் துலர்த்திப்பொடி
நல்லோட்டில் வை சீலைசெய்
அவமிலா மணலிலே யெரிவைத்து நாளொன்று
மாறியெடு சிந் தூரமா
மதனிலொரு பணமிடவெ யகலுமே குட்டெனு
மகத்தியர்க் கரு ளாதியே. (1)

குன்மக் குடோரி.

மண்ணுல குளோர்க்குவரு மட்டகுன் மத்திற்கு
வரு குடோரிப் பற்பமாம்
மாலிங்க வீரம்பொ ரிக்கார மூன்றுமே
வகையாதி துவம் வேதமே
யெண்ணுமெடை பிசகாது பொடிசெய்து பீங்கானி
லிட்டரி வைபால் முழுகவே
யிட்டமுடன் விட்டுமே ரவியிலே சுண்டவை
யிடுசிமிளில் பொடி செய்துமே
கன்னல் திராக்ஷயி லரைப்பணந் தூக்கிவிடு
கட்டா கமுப் பொழுதுமே
கைக்கடங் காவாய்வு அண்டமுடன் வாதமு
கருது மெலிகடி யீளையும்
பின்னப் படுத்தவரு கெண்டை பேராம்பலும்
பேராக் கிரந்தி முதலாய்ப்
பேருமென் றேசொலுங் குறுமுனி யவர்க்கு
பேரருள் புரி யாதியே. (2)

அண்டரச பற்பம்.

குக்குட வெளைக்கரு வெருக்கலம் பால்ரசங்
கூர்புரணி சேர்த்தரைத்திக்
கூட்டினி லடைத்தேழு சீலைமண் செய்துமே
குக்குடம் போட்டெடுத்தே
தக்கவெல் லத்திலொரு பது பொழுது வஞ்சுநாள்
தான்கொடுத் தாற்றீ வெந்நீர்
தன்னையவ் வீதமே தாரைவிட் டாற்றியே
தான்முழுக ஏரண்ட நெய்
மிக்கான குன்மமொடு வாய்வுமுப் பத்தாறு
மிகுசூலை பதினெட்டுமே

Koviloor Digital Library

மேனியழி குட்டங் கிரந்திநோய் கண்டமதில்
மேவுதாட் சூலை பலவும்
ஒக்கப் பறந்துவிடு மென்றுமே யுரைசெயு
முட்கிருபை ஜக மீதிலே
யுற்றபொ திகைக்குரு வகத்தியர்க் கன்பாக
வுறுகருணை யருள்ராதியே. (3)

அரிதார பற்பம்.

வாரியினி லவணமது பலமஞ்சு கடமாவின்
வருபா லைவிட் டரைத்து
வட்டோட்டில் வில்லைவைத் தேசீலை மண்செய்து
வளர் குக்குடப்புட மதாய்ச்
சாக வகைமூன்று செய்தண்ட வெள்ளைச்
சிறந்தகரு விட் டரைத்துச்
செய்யாமல் தேவியொரு பலமீது கவசமிடு
சீலைமண் ணேழு செய்து
பாரமுள சட்டியில் விரற்கடை மணற்குமேல்
பதிய வைமேல் மணலிடு
பைங்கமல மதுபோல வெரிசாம மாறவை
பகரரிய சேறு தனிலே
சீரமுட னாறியெடு சிந்தூர மாம்பணம்
சேர்த்துவிடு தேனத னிலே
செப்புசுர சயகுட்டஞ் சன்னிபோ மென்னுமே
திருமுனிக் கருளாதியே. (4)

மாலிங்க சிந்தூரம்.

திருமருவு லிங்கமொரு கட்டியக லச்சட்டி
சேர்கெந் தியந்த வெடைதூள்
செய்துகீழ் மேலிட் டெரிப்புமே தீபமாய்ச்
சேர்ந்துருகும் வேளை தனிலே
மருவுலவு கடமாவி னெழுபா லுழக்கதனை
வாங்கிச் சுருக்க திட்டு
வடிமெழுகு போலுருக வனலிலொரு நாள்முழுதும்
வைத்தெடுத் துக்கழு வியே
பொருதுவரு ஜன்னிசுர தோசங்கள் போகப்
புகட்டிவிடு இஞ்சி நீரிற்

Koviloor Digital Library

புகலரிய திரிகடுகு சித்ரமூலப்பட்டை
போட்டிடு கசாய மதிலே
வருமிந்த வனுபானம் வைத்திடு பணத்திடை
வாதமொடு சூலை யகலும்
மாலிங்க சிந்தூர முரைமுனி யவர்க்குமே
வாய்ந்தருள் புரி யாதியே. (5)

நாக பற்பம்.

துத்திநாகம் பலமெடுத் தயச் சட்டிவை
தூவா வினைய் யுருக்கு
சொல்லரிய கொச்சையின் பாலிலே நான்குசாய்
சுத்திசெய் தேயெடுத்து
மற்றமண் சட்டியி லுருக்குமுடி யோர்பல
வகையாக விட்டு வறுநீ
மயில்நிற மதாமதனில் வீரம்நா லொன்றிட்டு
வருபழச் சாற்ற ரைத்துப்
புத்தோட்டி விட்டேழு சீலைமண் செய்தபின்
போட்டுவிடு குக் குடத்தில்
புகலவே யாறியெடு பொன்னிறம் போலவே
போடுபண வெடை தேனிலே
யுற்றவெலி கடியீளை காயாசு வாசங்க
ளுதரநோய் பிர மேகமு
மோயாக் கடுப்பகலு மென்றுமுன் குறுமுனிக்
கோங்கருள் புரி யாதியே. (6)

கருவங்க பற்பம்

கருவங்க மெடுபல முருக்காவி னீர்பாற்
கலந்துசாய் நான்கு தரமுங்
கட்டான சட்டியி லுருக்குமுடி யோர்பலங்
கால்மனோ சிலை பொடித்து
பருவமுட னிட்டுவறு வசுவவே ரரைநாள்
பற்பமதை யேகுவித்துப்
பாங்காக மேற்சட்டி மூடியரை நாளுமே
பகர்கடாக் கினியை மூட்டித்
சிருமருவு சிந்தூர மருணோ தயம்போற்
சிறந்தெடுத் தேயடைத்துச்

Koviloor Digital Library

செய்யபஞ் சாங்கமு வெண்ணெ யொடுசேரச்
சிறந்துபண வெடை கொடுக்க
மருமேக மிருபதும் வரட்சியுங் காந்தலு
மாறுங் கிரந்தி சூலை
வைக்கவெகு வனுபானம் வெகுநோய்கள் போமெனும்
வரமுனிக் கரு ளாதியே. (7)

வெள்வங்க பற்பம்.

வெள்ளீய மொருபலஞ் சுத்திசெய் தெடைரோமம்
வெட்டிமால் தேவி காலும்
வினவியிடு சட்டியி லுருக்குமுக மிவைதூவி
மேவிவறு நான்கு சாமந்
துள்ளுமா வென்னவெடு தோடையின் சாற்றரை
துலங்க வட்டோட் டிலிட்டு
சொல்லரிய குக்குடப் புடமதிடு வெள்ளையாந்
துய்யதாம் பற்பமதனை
விள்ளரிய நோய்கண்டு மனுபான வகைவகை
விரித்தொரு பணத் தளவிடு
மேகவகை யிருபதுங் குட்டம் பரங்கியும்
மெய்யில்வரு பதகரி முதல்
தள்ளிவிடு மென்றுமால் மருகனருள் செய்யவுந்
தரணிதனில் மா னிடர்க்குத்
தயவாக வருள்செயுங் குறுமுனியவர்க்குமே
தந்தருள் புரி யாதியே. (8)

வாலைரச தாம்பிராதி.

மூலமீ ராறுபொடி ராவுசா ரணைநீரை
முழுகவிடு மூன்று நாள்வை
முறையான மால்தேவி சத்திசிவ மெட்டதாய்
முன்மருந் தோ டரைத்துச்
சீலமுட னொன்றா யுருட்டிரவி வைத்தோடு
சீலைமண் செய் துலர்த்தித்
திறமாக வொருமுழக் குழியெருவில் வைத்து
சேரொரு முழப் புடமதாய்
வாலைரச தாம்ப்ராதி யென்னவெகு மாத்திரை
வகைவகை கூட்டி யரைநீ

Koviloor Digital Library

மாறாத குன்மங்கள் வாயுமுப் பத்தாறு
வளர்சோகை கவுசை கெண்டை
சூலைமுதல் மூலவகை தேனிலொரு பணமிடச்
சொன்னநோய் தீரு மெனவே
சுகவாலை தாம்ப்ராதி சொல்குறு முனிக்குத்
துலங்கவருள் புரி யாதியே. (9)

உப்புச் சிந்தூரம்.

கரியுப் பெருக்கலம் பாலிலரை புடம்ரண்டு
கனதிருகு கள்ளி ரண்டு
கண்டசிறு தும்பைமரு தம்பட்டை குமரியின்
கனகசார் வகை ரண்டதாம்
பிரியமொடு சம்பழச் சாறுபொடு தலைரசம்
பிரளக் கலந் தரைத்துப்
பின்னமில் லாமலொரு புடமி டருணோதயம்
பிரபை சிந்தூர மாகும்
குறியாகவே யெடுத் தடைபதன மாகவே
கொடுதேனில் முப் பணவெடை
கூறிய குன்மவகை மீறுமு தரத்தினோய்
கொடிய க்ஷயசூலை வீக்கம்
வெறிவாயு பித்தக் கிராணியிவ் வகையெலாம்
வெங்கனற் கண்ட பஞ்சாம்
வெற்றியுட னேயுரை செயுங்குறு முனிக்குமே
விரைந்தருள் புரி யாதியே. (10)

காப்புப் பருவம்-முற்றிற்று.

****

Koviloor Digital Library

செங்கீரைப்பருவம்.

சிந்தாமணிக் குளிகை

கெந்திவிந் தொடுநாபி நெரிவிஷந் திரிகடுகு
கிளறுமுப் பலைகரிய சீர்
கெணிதமுறு காக்கைவிதை காருகோல் தாரமுங்
கீர்பொரிக் காரம் வாளந்
தந்தியுடனே வகைத் கோர்களஞ் சும்ரச
தாம்ப்ராதி நாற் களஞ்சு
தகுதிபெறு கையானி லரைமூன்று சாமமுந்
தான்செயொரு குன்றி யளவாய்
எந்தவகை யாலெழுஞ் சன்னிசுர தோஷமு
மெழுமிஞ்சி நீரி லிடவே
இயல்பான தர்மசிந் தாமணிக் குளிகையென
வெம்மனோர்க் கருள் முனிவனே
செந்திரு மகிழ்ந்துலவு பொதிகைவரை யாதிப
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (1)

விஷ்ணுச் சக்கரம்.

வந்தகரு நாபிசிலை சூதமொடு கெந்தகம்
வளருமுக் கடுகு காந்தம்
வகையான ரோகணியு மிந்துதா ரஞ்சோகி
மாலிங்கம் ரச தாம்பிரமும்
சுந்தரி யுரித்தொன்று மற்றவைக ளஞ்சுவகை
தூக்கியே கல்வ மிட்டு
சுவையான நிம்பப் பழச்சா றரைத்துமே
சொல்குன்றியள வுருட்டி
தந்தமுற விஞ்சியின் சாற்றிலிடு வலிஜன்னி
தனுர்வாதம் விறையல் விக்கல்
சாரமாமாதிமால் சக்கரக் குளிகையிது
தானென்று மெய்ப் பாகவே

Koviloor Digital Library

சிந்தனை யகத்திவளர் பொதிகை மலையாதிப
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (2)

கறுத்தபூபதி.

நட்டாகு முக்கடுகு திரிபலை ரசங்கெந்தி
நறுநாபி நெரிவிஷ முடன்
நற்கருஞ் சீரகம் காக்கைவிதை தாம்ப்ராதி
நாயனார் வகை களஞ்சா
யொப்பா மிதிற்பாதி வாளமது சுத்திசெய்
யுடனரை கையா னீரிலே
யொழுங்கா கவேயரைத் திடுசாம் மூன்றுமே
யுண்டையோர் குன்றி யளவாய்த்
தப்பாது ஜன்னிசுர மொடுகூகை வீக்கமுந்
தானகலு மிஞ்சிநீரில்
சந்ததம் புகழ்பெற்ற பூபதிக் குளிகையிது
தானென்று சொல்லி மிக்க
செப்பமுறு பொதிகைவரை யிற்பரவி நின்றமுனி
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (3)

யோகரச மாத்திரை

சூதமொன் றதினோடு வாளமொன் றெடுநாபி
சொலுகெந்தி வகையொன் றதாய்த்
துய்யதாம் பராதி நாலஞ்சுகிட் டப்பொடி
துலங்கு மரிதகி த்ரிதிநீர்
மோதியரை முச்சாம மோரளவு குன்றியெடை
முறையோக ரச மாத்திரை
முன்னவனு பானங்கள் தேனிஞ்சி சர்க்கரை
முறையுடன் குளிகை யிட்டாற்
சேதமுறு ஜன்னிசுர தோஷக்ஷய மீளைவலி
திருகு குன்மங் கிரந்தி
தீராத சூலைவீச் சுடன்விரைப் புட்குத்து
சேரப் பறக்குமென்ற

Koviloor Digital Library

சீதமெழு பொதிகைவரை மேவிவளர் முனிவநீ
செங்கீரை யாடியருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (4)

சூரியப்பிரபை

இந்துதிரி கடுகுள்ளி கெந்திதுரி சொடுநாபி
லிங்க மும்முக் காரமு
மினிதான வெள்ளைசிலை விஷகாந்தி கரியசீர்
எழுகுறா சாநி தாரி
வெந்தயந் துத்தஞ் சவுக்கார மொடுகவுரி
விடுதொட்டியோர் களஞ்சாய்
மிக்கதையா னுதகம் வெண்ணொச்சி மேனிபன்
மெய்நீலி பாக மின்னீர்
விந்தையொடு நாளொன்ற தாயரைத் தேகுளிகை
மேவுமொரு குன்றி யளவாய்
விட்டிடவே யனுபான மீதிலுதரப் பிணிகள்
வெந்தனலி விடு பஞ்சதாஞ்
சிந்தனைவிடுஞ் சூரி யப்பிரபை சொல்முனிவ
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (5)

மகா மிருத்துவாதி.

முத்துமது ரம்பவளம் மான்கொம்பு திரிகடுகு
முந்திரிகை தாம்பிரா தியும்
முப்பலை வசம்புநில வேம்போடு லிங்கமு
முசிர்முட் டைகோ ரோசனை
ருத்திரா க்ஷம்பணி கண்டரச நாபியோ
டுறுகுந் திரிகஞ் சூடனு
முரியபூ லாவிருட் சத்தினொடு செஞ்சந்த
முயர் வெளிச்சப் பிசினெலா
மற்றுமே வகைகளஞ் சண்டமஞ் சட்கருவும்
வருநிம்ப கனி சாற்றறை
வருகுன்றி யளவிஞ்சி முலையமுதி விடஜன்னி
மாமிருத் துவாதி சொன்ன

Koviloor Digital Library

சித்தாதி பர்க்கதிப பொதிகமலை யாதிப
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (6)

க்ஷயகுலாந்தகன்.

சாதிலிங்கம் பொரிக் காரமொடு நாபிரச
தாம்பிரா திமுக் கடுகுடன்
சமனாக வேயெடுத் தரையிஞ்சி நீரினாற்
றா ளரைத்துப் பின்புமே
பாரில்வளர் மேனியின் சாற்றிலொரு நாளரை
பருங்குன்றி யுண்டை செய்து
பகரறிய தேனிலிடு துளசிதூ துளைதோடை
பகர்கண்ட ரிண்டி சங்கு
சீரிலகு புட்டவியல் செய்துமேற் பொடியோடு
சேர்த்திடுங் குளிகை மூன்றிற்
சீறுசி றென்னவரு காசங் கபங்களுஞ்
செய்யசய ரோக மீளை
தீருமெனவே க்ஷய குலாந்தகன் மொழிந்தநீ
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (7)

அமுதபலாதிச் சூரணம்.

முந்திரிகை பேரீந்து நன்னாரி முத்தமொடு
முதியவிரு வேலி சந்தம்
முதிருவால் மிளகோ டரத்தைதிரி கடுகுபொரி
மோதுதிரி சாத மதுரஞ்
சந்தமுறு மல்லிதனி நெல்லிசீர் வகையொன்று
சாத்திரு களஞ்சி வறுதூள்
சரிசீனி கொண்டுவெரு கடிவீத முண்ணசுர
க்ஷயகாச உளமாந் தையும்
வந்தருளு மோங்கார பித்தவெறி யசதியும்
வாங்காத காந்த லெரிவும்
வாயரோ சிகமோடு காயுமா கணைபிரணி
வாங்கமுத சூரண மெனுஞ்

Koviloor Digital Library

செந்திரு வுலாவிவளர் பொதிகைமலை யாதிப
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (8)

சுர மாத்திரை

தாராகு முமைபாக னார்விந்து கெந்தியொடு
தாம்பூர பற்ப முடனே
சாதியின் காயோடு சூடனிது வகையொன்று
தருசுத்தி வாளம் ரண்டு
காராத குமரியுட நீரினி லரைத்துமே
கனவுளுந் தள வுருட்டி
காற்றினி லுலர்த்தியே செப்பிலடை சர்க்கரை
கலந் தவுஷதமுங் கொடுக்க
பேராது நின்றசுர மெட்டெட்டும் மூன்றுநாள்
பேணிக் கொடுத்து வரவே
பீளையின் பஞ்சுகாற் றிற்பறந் ததுபோற்
பிரிந்துவிடு மென்னு முனிவ
தீராத பிணியகற் றும்பொதிகை மாதவ
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (

பட்டை ரசாயனம்

பட்டைபல மெட்டினொடு குக்கில்நா லெடுசத்தி
பகர்குக்கி லவ் வீதமே
பகரரிய சுத்தி தாவிநெய் தெளித்துவறு
பருவமொடே கிலதனைச்
சட்டமுட னிவைமுன் றிடித்த தூளைச்சேர்
சரக்கு முக்கடுகு பலையும்
தானான திரிசாத மரிதார விடையமுஞ்
சாரமொடு வெண் காரமுங்
கட்டான விருசீர் விளங்கிரண் டோமமுங்
கனசிவதை மூலம் ரெண்டும்
கடுகுரோ கணிகுந் திரிக்கங் களஞ்சிநால்
கண்ட வெடை சீனி கூட்டுஎன்

Koviloor Digital Library

சிட்டப் பவுத்திரங் குட்டகலு மெனுமுனிவ
செங்கீரை யாடி யருளே
செங்கனற் கும்பமிசை வந்திடு மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (10)

புண் புகை

அரிதார கெந்திகாண் டீப்பமுங் காரீய
மாதிசிவன் விந்து மிளகு
மாட்டிய விலுப்பையின் கோதுகுல லிங்கமு
மழகான காந்த முடனே
கரிசீரகந் துரிசு துத்தமுஞ் சரிசமன்
கணக்கா கவே நிறுத்துக்
கம்மியர்க ளம்மிதனில் வைத்துப் பொடித்து
கலையில் வைத்துத் திரித்து
எரிபாக மானபுகை புண்வாயில் காட்டிவிடு
ஏழுதர மூன்றரை யினாள்
ஏறுமா றாகும் பறங்கியுஞ் சூலையும்
எப்படிக் கொத்த புண்ணும்
திரிகாண வேயுலர்ந் திடுமென் றுரைத்தவா
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்ப் பொதுகையில் வந்திடுங் குறுமுனி மகத்தீச
செங்கீரை யாடி யருளே. (11)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

****

தாலப்பருவம்

(வேறு)

இடிவல்லாதி

விந்து கருஞ்சீர் துணைவன் வகைக்கு
வேண்டு களஞ் சொன்று
வெல்லஞ் சித்திர மூலமோம
மிடைவகை காற் பலமாய்
அந்த முறுஞ்சேங் கொட்டையோ ரிருபது
அதனுட னிடி மசிய

Koviloor Digital Library

அளவது நெல்லிக்கனியது போல
வருந்திடு நாலரை நாள்
இந்த வகைக்குக் குளிர்ஜல மூழ்கி
யிருந்திடு பத்திய மா
யெழுபடர் தாமரை சூலை பறங்கிக
ளேகுங் குட்ட மெனச்
சந்த முறச்சொல் பொதிகைக் கிறைவா
தாலோ தாலே லோ
சற்குரு வான அகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (1)

ஜன்னிப்புகை

பொன்னரி தாரம் பூமியி னாதம்
பொடியெடு சரியெடை தூள்
பூட்டி யரைத்திடு வர்க்கம் பாலால்
பூசுக புங்கத் தில்
நன்னய மாக வுலர்த்தி யுருட்டிரு
நாசியில் விடுபுகை யை
நழுவிய ஜன்னிகள் முகவலி தோசம்
நாடிய முயலக னும்
பின்னமதாகு மிழுப்பு வலிப்பொடு
பேருந் தனு வாதம்
பிறகிது வாரா தீது பெரும்புகை
பெட்பி லெனச் சொலிய
தன்ம மயம்பெறு பொதிகையினாதிப
தாலோ தாலே லோ
சற்குரு வான அகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (2)

முனியாதிச் சூரணம்

விண்டிடு மலைமுனி யொருபல மதனை
விரைந்தெடு சட்டியில் வை
மேன்மை யதாஞ்சிறு தும்பையி னீர்படி
விட்டதில் நிழலுல ரக்
கொண்ட துலர்ந்தது கண்டெடு பதர்களை
குன்ம மெலாமற வே

Koviloor Digital Library

குறியுள வஸ்தம் சுவடதில் மிளகு
கூட்டு களஞ்சொன்று
முண்டிடு முதரப் பிணிபல குன்ம
மொழிந்திடு முண்மை யென
வுறுதி யுடன்திரி நாளிரு போதுண்
ணுற்பன மா மென்னுந்
தண்டமிழ் சேர்பொதி கைக்கிறை யானவ
தாலோ தாலே லோ
சற்குரு வானவ கத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (3)

குலிகாதிச் சூரணம்

பின்னு பிரண்டையு மேனிதை வேளை
பிழிந்தெடு வகைபடி நீர்
பேணு மரைப்போ ரைம்பல மிடிவறு
பெருகிய மயில்நிற மாய்
அன்ன மதின்பே திக்கடு ரோகணி
யான குறா சாநி
அதுபலம் வகைகா லிடுபனை வெல்ல
மைம்பல மொன்றாக
முன்னீர் விரவி யுலர்த்தி யிடித்துண
மோதிய புன்னைக் காய்
மொழியுங் குன்மம் பெருவயிர் பீலிகை
முற்றிய கெண்டை யறுந்
தன்னிய மென்றருள் பொதிகையி லுரைமுனி
தாலோ தாலே லோ
சற்குரு வான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (4)

கர்ப்பக் குழம்பு

பொங்க முறும்பொரி காரங் காயம்
பொற்புறு சாந்த முடன்
புகலுந் தேங்கா யெடுவகை சரியெடை
பூட்டிடு வெல்லத்திற்
சங்கைய தாகச் சம்பழ நீர்விடு
தானரை முச்சா மந்

Koviloor Digital Library

தன்னிலு லர்ந்தம ருந்தெடை வாளந்
தான்முளை போக்கி வறு
மங்கள மாக வரைத்துச் சிமிளினில்
வைபண மள வெடையே
மாதர்கள் கர்ப்பச் சூலை யகத்திடு
மைந்தர்கள் பேறுண் டாந்
தங்க மயம்பெறு பொதிகையின் மாமுனி
தாலோ தாலே லோ
சற்குருவான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (5)

பால கபஹாரி.

மதுரங் கோட்டந் திரிகடு கிந்து
வருந்திரி சாத முடன்
வளர்கடு ரோணி யரத்தையோ டக்கிரம்
வைத்திடு தேற்றன் விதை
விதமுறு நல்ல வெழிச்சிப் பிசினிவை
வேண்டு களஞ் சொன்று
மேவிய தோடைச் சாறதி னாலரை
விசைபெற முச்சாமம்
பதமொடு தூதளை காயள வுண்டைசெய்
பருகிடு தே னதிலே
பாலன் குத்திரு மற்கணை யீளை
பறந்திடு மென வுரைசெய்
சதுரப் பொதிகைக் குருமுனி யானவ
தாலோ தாலே லோ
சற்குரு வான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (6)

மதுரவேலாதி

ஆகதி மதுரங் கோட்டந் திப்பிலி
யழகிய திரி சாத
மம்புறு சந்தஞ் சாத்திர பேதியு
மன்னில வங்க முடன்
பாகம் தோரிச பற்பட கத்தொடு
பகர்வசு வாசி முதல்

Koviloor Digital Library

பார்வகை யொன்றுகோ ரோசனை நாலெடு
பையரை தெங் கிளநீர்
ஏகம தாக வுருட்டிடு குன்றியி
னெடையிடு சர்க் கரையில்
எழுகணை யசதி கழிச்சல் துரத்த
லெழும்பிய தோஷ முதல்
தாகம் வரட்சிகள் விடுமெனு முனிவநீ
தாலோ தாலே லோ
சற்குரு வான அகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (7)

புள்ளடிப்பிரயோகம்

தேற்றன் கொட்டை பூவிரி மதுரஞ்
சீரக முஞ் சங்குஞ்
சேர வகைக்கோர் களஞ்சியு மொருபிடி
சிறுபுள் ளடியுடனே
*வீற்றிடு மாவின் பாலி லரைத்திடு
விடுபடி கா லதிலே
விரைந்து கரைத்துணு நாளோ ரைந்தும்
விட்டிடு புளி யுப்பு
சீத மெழும்பிய மஞ்சட் சோகை
சிரசிடி வெறி வாயு
தேக மயக்கமு முட்சுர முங்கடல்
சென்றிடு மென் றருளாற்
சாத்திடு மொருபொதி காசல தேசிக
தாலோ தாலே லோ
சற்குரு வான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (8)

கணைப்பிரயோகம்

வெந்தயம் நான்கு களஞ்சிவெள் ளுள்ளியவ்
வீதங் குமரி யது
வேறொரு பிடியு முடக்கொற் றானிலை
மீறா தொரு பிடியுஞ்

*வீற்றிடும் ஆ - கர்ப்பழுடைந்த பசு

Koviloor Digital Library

சிந்த விடாம லரைத்திடு மைபோற்
சிற்றே ரண்டெண் ணெய்
சேர்த்திடு காற்படி யிற்கரை சூரிய
தெரிசனை செய்தறு நாள்
வந்திடு மெண்ணெயொர் காசள வீந்திடு
மதலைகள் ந்தணை பிரளி
வரட்கணை சுரமொடு போய்விடு முற்றிலும்
வகையுட னென் றுரைசெய்
சந்ததம் வாழ்பொதி காசல மாமுனி
தாலோ தாலே லோ
சற்குரு வான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (9)

மேகப் பிரயோகம்

மருமத் தம்விதை யிருசீர் காந்தமும்
வகைரண் டோம மொடு
வருதிரி சாதம் லிங்கந் திப்பிலி
வளர் பாற்கெரு டக்கல்
ஒருபது ரண்டு மருந்துகள் வகைவகை
யொன்று களஞ்சி யதா
யுடனிடு வபினது நான்கு களஞ்சியு
முறவரை தே னதிலே
பருவ முடன்சிமி ழதனிலடைத்திடு
பருகு களஞ் சதுகால்
பஞ்சென வேநீ ரிழிவு கடுப்பு
பறந்திடு மெனவே தான்
தரும முரைத்தவ பொதிகையில் மாமுனி
தாலோ தாலே லோ
சற்குரு வான வகத்திய மாமுனி
தாலோ தாலே லோ. (10)

தாலப்பருவம் முற்றிற்று.
ஆகக்கவிகள்-31.

****

Koviloor Digital Library

சப்பாணிப்பருவம்

ஏலாதி மாத்திரை
(வேறு)

மதுரமுந் திரிகைபே ரீந்துசாத் திரபேதி
வங்காள பச்சை கல்நார்
வருதேவ தாரஞ் சடாமாஞ்சி முத்தமில
வங்கமொடு கோ ரோசனை
மெதுவாம் விலாமிச்சு மிருவேலி சந்தனம்
மேலமோ ரிலை நாரியும்
வேண்டுரோ கணிசீரி நெல்லியின் வற்றலும்
வீருவால் மிளகோ டுமே
புதிதான கொம்பரக் கிவ்வகை களஞ்சதாய்ப்
பூவைபால் கன்ன விளநீர்
பூட்டியரை சுண்டையின் காயினள வுண்டைசெய்
புகழுமே லாதி யெனவே
சதுமறை முழங்கிவளர் பொதிகை, மலையாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரசத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (1)

இரத்தபித்தப் பிரயோகம்

காம்பரிந் தீருள்ளி உரலிலிடி பிழியெடுநீ
காற்படி தனிச்சா றதாய்க்
கருதரிய ஆவாரை யின்மல ரரும்பது
களஞ்சி நாலதி லரைத்து
சோம்பாம லேயரைத் துக்குடிநீ யிப்படிச்
சொன்ன படிநாள் மூன்றுமே
துணுக்காக நெஞ்சினி லிருந்துவாய் வழிவிழுந்
துண்டம திரத்த பித்தம்
வீம்பாக வந்தமென வோடுமுக் கூட்டெண்ணெய்
மேவு வெந் நீரில் மூழ்க
விரிகமல மாதுலவு தேக வச்சிரகாயம்
மேன்மைபெறு மென்னவே தான்

Koviloor Digital Library

தாம்பூர நதியொழுகு பொதிகைமலை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (2)

தார மாத்திரை.

சுகமாக வரிதார மறுகளஞ் சதுகட்டி
துண்டுதுண் டாகு மாங்கற்
சுண்ணத்தை நீற்றிக் கலக்கியந் நீரிலே
தொளாந்திரம் மெரித்துப்
புகையூறல் முக்களஞ் சதனோடு கற்சுணப்
பொடியது வுமுக் களஞ்சு
பூண்டரைத் திடுமுலைப்பாலதிற் சாமமரை
பொற்குன் றிபோ லுருட்டிச்
செகதலத் தோர்க்குமே வருசுர மனைத்துமே
தீர்ந்துவிட வெல்ல மிதிலே
சேர்த்திரண் டுண்டையிடு சுரதோஷ முழுதுமே
சேரப் பறக்கு மென்னும்
சகலரிஷி முனிவர்புகழ் பொதிகைமலை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (3)

பூவேர்க்கிருதம்.

நீலமுறு மவுரியிலை கொண்டுவந் திடிபிழி
நேர்தனிச் சா றுரியுடன்
நீகருந் தேங்காயைநாலுடைத் தெடுபாலும்
நீண்டபடியுங் கலந்து
சீலமுறு பூநாகம் மாங்காயி ளைவதாய்ச்
சேர்த்தரைத்தே கலக்கித்
தீயினிற் காய்ச்சிவடி கடுகுடன் நெய்தனைத்
தீருநா ளிரு போதுமே
கூலமுற வீரைந்து நாளுணு கரண்டிநெய்
கொண்டக்ஷய மீளை காசந்
குடிபோக வேபத்ய பாகமா யுண்டுவா
குவலயந் தன்னி லென்னுந்

Koviloor Digital Library

தாலமிசை வரைகளிலு முயர்பொதிகையாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (4)

சூலைப் பிரயோகம்

திடமுறு கழற்சியொ டிலுப்பை கையானொச்சி
சேரும்நீர் முள்ளி யுடனஞ்
சிலைவகைக் கொருபிடியு மிருநாளி நீரவித்
தேகுறுக் கியு நீருரி
யடவாக வேர்க்கொம்பு மஞ்சள்வெள் ளைப்பூடு
மதுவகைக் கொரு களஞ்சாய்
அரைத்துக் கலக்கியே காய்ச்சிக் குடித்திடில்
ஆகும் நாள்மூன் றிப்படி
முடமா கவேநடக் கொட்டாத சூலைமுதல்
முஷ்ண மேற்குத் துளைச்சல்
மூளுமன லிற்பஞ் செனப்பறந் தோடிவிடு
மோசம் வரா தென்சொல்
தடவரையி னடுவினுயர் பொதிகைமலை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (5)

ஈளைப் பிரயோகம்.

பருவசம் பொடுகடுக் காய்த்தோ லுதிப்பிலி
பகரறிய தேற்றின் வித்துப்
பாங்குநெய்க் கொட்டம் பழத்தோல் வகைக்கு
பலங்கா லதா யெடுத்துத்
திருமேனி நீர்விட்டரைத்துமை போலவே
சேலையது தன்னி லூட்டிச்
செவ்வனாய் நீழலி லுலர்த்தியபின் விரலளவு
சேலையது சதுர மாகப்
பெருகாது காற்படி வென்னீரிலே பிசை
பிழிந்தநீர் தனை யிப்படி
பிசகாது பொழுதேழு கொள்ளவே யீளையொடு
பேரிருமல் தீரு மென்னும்

Koviloor Digital Library

கருவில்வண் டிசைமுழங் கிடுபொதிகை மாதவ
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற்கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (6)

மூலப் பிரயோகம்

திரிசாத மோமங்குறாசாநி கஞ்சா
சிறந்திடுங் காயமபினுஞ்
சேரவும் வகைக்குக் களஞ்சிரண் டாங்கருணை
சீவியுலர் பலம்ரண் டதாம்
முறுகாம விளவறுப் பாகவே பாகமாய்
மூண்டிடித்தே வடித்து
முட்டாம விருபோது தேனில்வெரு கடியளவு
மூவேழு நாளருந் தக்
குருகாம லேவளரு மூலவகை யாறுங்
குலைந்து கருகிப் போகவே
குவலயத் தோர்கள்தான் புளியுப் பகற்றியே
கொண்டுவர பத்திய மெனுஞ்
சருவமுனி யோர்கள்புகழ் பொதிகைமலை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (7)

பீனிசப் பிரயோகம்

கண்டத்தில் மேல்வரு பிணிக்கு மிதிபாகற்
கருக்குவாய் துளசி நொச்சி
காட்டெருக் கிலையாலினதுபழுப் புச்சாறு
காற்படி வகைக்கு வகைதான்
விண்டிடுந் திரிசாத மிருசீரகத் தோடு
மிளகபின் சுக்கு மதுரம்
விடையமொடு சனிநாயன் வகையொடு களஞ்சதாய்
மிகுதேவ தாரமோடு
கொண்டிடு மருந்தெண்ணெய் படியொன்று சாற்றினிற்
கூர்ந்தரைத் துக்காய்ச் சியே
குணமாக மூழ்குதலை யிடிபீனி சங்களொடு
குடிசேரு தலைவாய் வெனுந்

Koviloor Digital Library

தன்டா மரைத்தடஞ் சூழ்பொதிகை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (8)

கணைக்கிருதம்.

தூதளங் காய்பழம் வேருமிலை பூவினொடு
சொற்சிறுக் கீரை மூலந்
தோயமது விட்டான் கிழங்கினொடு மதுரமுந்
துடியீர வுள்ளியு மெலாம்
நீதமுற வேவகை களஞ்சுநா லாவினெய்
நேச மொடுகாற் படியினில்
நேர்த்தியுட னேசிவக் கக்காய்ச்சு காசெடைநெய்
நீயருந் தக்கொடுக் கச்
சேதப் படுத்தவரு கணைபிரளி தோஷமுஞ்
செய்வறட் சோகை யிருமல்
திட்டுமுட் டென்றுவரு காசங் கபங்களுந்
திருகுகுத் திருமல் வாய்வுஞ்
சாறாது போமெனும் பொதிகைமலை யாதிப
சப்பாணி கொட்டி யருளே
சங்கரற் கினிதான தவமுய ரகத்தீச
சப்பாணி கொட்டி யருளே. (9)

சப்பாணிப் பருவம்-முற்றிற்று.

****

முத்தப்பருவம்.

(வேறு)

காசப் பிரயோகம்.

ஆகந் தழைக்குந் திரி சாத
மடுத்த பலையு முக்கடுகு
மழகாங் கோட்ட மிரு வேலி
யரத்தை மாஞ்சி யேலமுடன்

Koviloor Digital Library

தாக மகற்றும் வால்மிளகு
தருசீர் விளங்கம் நாகப்பூ
தக்க மிளகு தான்றி சிங்கி
தானாந் தேவ தாரமுடன்
போகந் தருவெண் குந்திரிகம்
பூட்டும் வகைக்குக் களஞ்சி ரண்டு
பொடியா யிடிதே னெய்யிலுண்ணப்
போகுங் காச மனைத்துமெனும்
மோக மவுனப் பொதிகைமலை
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத் தீச
முனிவா முத்தந் தருகவே. (1)

பித்தக்கிருதம்

கன்னி சிந்தி கொடுப்பை யுடன்
கமுகின் பாக்குத் தோடு வகை
கட்டாய் வெட்டி யிடிபிழிநீர்
கருதும் வகைக்குப் படியொன் றாய்ப்
பின்னா நெய்யும் படியொன் றில்
பேசு மதுரம் முந்திரிகை
பெய்யுங் கூகை நீர் சந்தம்
பிரிவாய் வகைக்குப் பலமொன்று
துன்ன வரைத்து மிகக் காய்ச்சித்
துலங்கக் கடுகோ டருந்திவரிற்
சூதாம் பித்தக் கிறுகிறுப் புந்
தொடருங் கிரிகை மிகத்தீர
முன்னும் பொதிகை மலைக்கரசே
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (2)

மந்தாரகாசப் பொடி

ஆவி னீர்தா னிருநாழி
அழகாங் கடுக்காய்த் தோல்பலம்ரெண்
டதனில் தேற்றின் பழத்தோலு
மந்த வெடையே யிடித்திட்டு

Koviloor Digital Library

மேவக் காய்ச்சி வெயிலுலர்த்தி
வேண்டும் பொடிக்கு மூன்றிலொன்று
விள்ளு மகிதப் பொடிசேர்த்து
வேடன் பாலில் வெருகடியுண்
கூவு மிருமல் மந்தாரங்
கொடிய காச மெய்ப் பிளைப்பு
கோழை பறிக்கு முளமாந்தை
கூட்டோ டருந்து போமென்னும்
மூவா நடனஞ் செய்பொதிகை
முனிவா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (3)

மூலப்பாண்டுப் பிரயோகம்.

கண்டங் காரி திரிகடுகு
காண்முப் பலைகற் கடசிங்கி
கதித்த கோட்டஞ் சிறுதேக்கு
கனக் மாஞ்சி லிந்துப்பு
கொண்ட சீன முந்திரிகை
கூட்டு வகைக்குப் பலங்காலாய்க்
குளிர வறுத்துப் பொடியிடி தூள்
கொள்ளத் தேனில் நறுநெய்யில்
விண்ட மூல விஷபாகம்
வீக்கஞ்சூலை பீலிகையும்
விளையுஞ் சிலேற்ப கோபமுதல்
விட்டே யகன்று விடுமென்னும்
முண்டத் தடங்கள் செறிபொதிகை
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (4)

பச்சைக் குழம்பு.

கெந்தி வெடியுப் பிந்துசெம்பு
கிளறுஞ் சீனம் பெருங்காயம்
கெணிதம் வகைக்குப் பலங்காலாய்க்
கிண்டிப் பொடித்துப் பீங்கானில்

Koviloor Digital Library

அந்த முறவே பழச்சார்விட்
டருணோ தயத்தில் தினமூன்று
மழகாய்க் காய்ச்சிக் கல்வமதி
லரைத்து மெழுகாய்ச் சிமிழில்வைத்து
விந்தை யுடனே பணவெடைதேன்
விட்டுக் கொடுநா ளஞ்சரையும்
வெந்நீர் விடுநீ கவுசை குன்மம்
வெப்பும் பாவை யோடுமெனு
முந்தும் பொதிகைக் குருவாகு
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே.

சுரத்தைலம்.

அரத்தை யகவஞ் சதகுப்பை
யான கோட்ட மரமஞ்சள்
அழகா மரக்கு முக்கடுகு
மான மதுரந் திரிதார
முரத்த கடுகு ரோகணியு
முத்த முத்தங் களஞ்சிரண்டா
யுரவா யிடித்துப் படியெண்ணெய்
யூற்றிக் காய்ச்சி தலைமுழுகச்
சுரத்தா லெழும்பும் பலபிணியுஞ்
சுடர்போ லெரியு மழலனைத்துஞ்
சூழ்ந்த வெப்பும் போய்க்குளிர்ந்து
சுகமாந் தேக மிகக்குளிர
உரைக்குந் தமிழ்சேர் பொதிகைவரைக்
குடையாய் முத்தந் தருகவே
உத்தி தருமெய் யகத்தீச
வும்பா முத்தந் தருகவே.

எறிவாதத் தைலம்.

சீத நறுநெய் யெள்ளெண்ணெய்
சேரா மணக்கு வேப்பெண்ணெய்
தெளிவாய் வகைக்குப் படியரைக்கால்
றிறந்தொன் றித்தே யதனிலே

Koviloor Digital Library

மாதர் மஞ்சல் பொரிக்காரம்
வசம்பு வில்வ வேறோடு
வகைக்கொர் மிச்சம் பழம்போல
வடிய வரைத்துக் கரைத்ததிலே
தீதி லடுப்பிற் காய்ச்சிவடி
தெரிவா தங்கள் தனக்கிதனை
தேய்த்து மூன்று நாட்கழித்துச்
சிறிய பயரிற் குளியென்னும்
மோதி வளரும் பொதிகைமலை
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (7)

மேகசஞ்சீவி நெய்

துளசி சீதா செங்கழுநீர்
சுரைவல் லாரை யீருள்ளி
சூழ்கர்ப் பூர வல்லி வில்வந்
துவைத்து வகைக்குச் சாறுரியாய்ப்
பழங்கூகையினீர் திரிசாதம்
பாற்கெரு டக்க லதிமதுரம்
பகரு மிருசீ ரிருசந்தம்
பார வேலங் களஞ்சிரண்டாய்
அளவாம் நறுநெய் படிநாழி
யதனி லரைத்துக் காய்ச்சிவடித்
தருந்தச் சுரமே கழுமழலை
யகலும் பித்த ரத்தமெனும்
முளரி சிறக்கும் பொதிகைமலை
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (8)

அண்டசூலை எண்ணெய்

சிற்றே ரண்டம் நிம்பெண்ணெய்
சிறந்த வகைக்குப் படிகாலிற்
சேர்க்கு முருங்கை புளிகளஞ்சி
திகுதி சுளலா வரைசங்கன்

Koviloor Digital Library

வெற்றி யெருக்கின் பழுப்புடன்மா
விலங்கு மூக்கன் சாரணையும்
விளாத்தி வகைச்சார் படியரைக்கால்
வெள்ளைப் பூடு கடுகுசுக்கு
முற்ற வசம்பு திப்பிலியு
மோதும் வகைக்குக் களஞ்சி ரண்டா
யுறவா யவித்து வெந்துவடித்
துணவே யண்ட சூலையற
முற்று முரைக்கும் பொதிகைமலை
முதல்வா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (9)

பூதச் சக்கரப்பொடி

ஓங்கும் வெளிச்சிப் பிசின்மிளகும்
உத்த கருஞ்சீர் திப்பிலியும்
உறைய வகைக்குக் களஞ்சரையா
யோட்டில் வெதுப்பிப் பொடிநன்றாய்
வாங்கு தேனில் வெள்ளுள்ளி
வடித்த தயில முஞ்சேர்த்து
வந்த பொடியை யதிற்கிளரி
மதலைக் கிடுவாய் நாள்மூன்று
ஏங்கி யிழுக்கு மிளைப்பிரும
லீளை களையுந் தீர்ந்துவிடு
மீதுவே தேவா மிர்தத்திற்
கிணையாந் தெளியு முடலென்னும்
மூங்கிற் றரளஞ் சொரிபொதிகை
முனிவா முத்தந் தருகவே
முத்தி தருமெய் யகத்தீச
முனிவா முத்தந் தருகவே. (10)

முத்தப்பருவம் முற்றிற்று.

****

Koviloor Digital Library

வருகைப்பருவம்

காசக் குடிநீர்.

கரிய மிளகு திப்பிலிகீழ்க்
காய்வேர் சுக்கு சிறுதேக்கு
கண்டங் காரி சங்குநெல்லி
களஞ்சி வகையாய்த் தானெடுத்தே
யிருநா ழியதாம் வெள்ளமதில்
இட்டே யெரித்துக் குறுகிவடித்
திடுகாற் படிகொள் ளிப்படியே
யேழு நாளுஞ் சரியாக
பருவ முடன் பத்திய மாகப்
படிவா காயாச் சுவாசமஞ்சும்
பறக்குந் தேகந் தெளிவுதரும்
பண்ணிக் குடிக்க வென்னவுரை
அருளே சொரியும் பொதிகைவரை
ஐயா வருக வருகவே
அடியா ரகத்தி லீசுரனா
மரசே வருக வருகவே. (1)

இரத்தமூலப் பிரயோகம்

நாறு கரந்தை தனையரைத்து
நற்கூ விளங்காய்ப் பருமனொடு
நல்ல வெண்ணெய் படியுரியில்
நழுகப் பிசைந்தெட்ப் புண்ணாக்கு
மேறப் பொடித்துப் பலம்நாலு
விசைத்துக் கொடுக்க மெழுகுபத
மேற்றித் தின்க நாளஞ்சில்
இல்லை யிரத்த மூலமெல்லாம்
வேறு மருந்து யிதற்கீடோ
வெந்நீர் கொள்ளு பத்தியமாய்
விதனம் பொருக்கு மூலத்தில்
விரண போகும் வடுக்களெனும்

Koviloor Digital Library

ஆறும் பொதிகா சலத்துரையு
மையா வருக வருகவே
யடியா ரகத்தி லீசுரனா
மரசே வருக வருகவே. (2)

கெந்தக ரசாயனம்

மாதாஞ் சத்தி சுத்திசெய்து
வாங்கும் பலமூன் றதனிலிடு
மருந்து சடம்பு விதையினொடு
வளர்முக் கடுகு வாய்விளங்க
மேதாங் கொட்டை யிலவங்கத்
திலையுஞ் சித்ர மூலமுட
னினிதாய் வகைக்குப் பலமரைகொண்
டிடித்துச் சீனி கனிகதலி
நீதான் வேகு கிண்டிகொள்ள
நிலையாங் குட்டம் பதகரிகள்
நெருப்பா மூலம் குறைநோவு
நீண்ட குன்ம மறுமென்னும்
ஆதி முனிவோர் தொழுபொதிகை
அருமா தவனே வருகவே
அரியைச் சிவமாக் கியவரதா
வகத்தீ சுரனே வருகவே. (3)

எலிகடிப்பிரயோகம்

கசல்வெள் ளெருக்கின் வேரதுவுங்
களர்பூ னாகம் வகைவகைக்குக்
கடுக்கா யளவே யரைத்துருட்டி
கதிர்நெல் தவிட்டிற் புறட்டியுண்ண
பசலை தென்னங் காய்திருவி
பாலும் பச்சை யமுதுண்ண
பாங்காய் மூன்று நாளாறு
பகரும் பொழுதுண் பத்தியமாய்
விசமா மெலிகள் பதினெட்டும்
மேவிக் கடித்த விஷம்பலவும்
விண்ணிற் பறந்து போம்லது
வேறு துயர மிலையென்னும்

Koviloor Digital Library

அசலம் பெரிய பொதிகைமலைக்
கரசே வருக வருகவே
அரியச் சிவமாக் கியவரதா
வகத்தீ சுரனே வருகவே. (4)

குட்டக்குழித்தைலம்
(வேறு)

கொட்டை யெட்டி விதைநூறு
கொள்ளும் வாள மிறுநூறு
கொடுநீர் வெட்டி படிரெண்டு
கோல வுளுவை படியொன்று
கூறுங் கருஞ்சீர் துணைமஞ்சள்
குறியா மிளகு கொடிவேலி
கொள்வாய் வகைக்குப் படியொன்று
குலவுங் கெந்தி யரிதாரம்
கட்டாய் வகைக்குப் பலமரையாய்க்
கடுக விடிகுன் றியின்சாற்றில்
கரைத்தே யூற வெயிலுலர்த்திக்
காணுங் குழியாந் தயிலமதில்
கருதுஞ் சூத மரிதாரங்
கதித்த லிங்கஞ் சவுக்காரங்
கனமாய்ப் பொரியுங் காரமிவை
களஞ்சி வகைக்குத் தானெடுத்து

மட்டா யரைத்துத் தயிலமதில்
மசியக் குழப்பிக் கலந்துகொண்டு
மலராந் தேனிற் காசெடைகொள்
மறுத்து முடம்பிற் பூசிவிடு
மருவும் பால்தேன் நெய்யமுது
வாகா யருந்திப் பத்தியங்கார்
மாறுங் கிரந்தி சூலைகுட்டம்
வண்டு கடிசில் விஷந்திமிர்கள்
அட்டக் கரப்ப னரைப்புற்று
மடங்கச் சேறா புள்ளிவண்டு
ஆக்கை யதனில் சொறிவெழுப்பு
மடறும் படர்தா மரைக்கீற்று

Koviloor Digital Library

மாறு மென்னும் பொதிகைவரை
யரசே வருக வருகவே
யரியைச் சிவமாக் கியவரதா
வகத்தீ சுரனே வருகவே. (5)

விஷபேதி மாத்திரை

மிளகு சூடன் சாதிக்காய்
வேலன் பிசினோ டபினோடு
மேவும் ரசகர்ப் பூரம்நெல்லி
வெந்தயங் கிராம்பு பெருங்காயந்
தளமாய் வகைக்குக் களஞ்சிகஞ்சா
சாற்றா லரைத்துக் கடலையுண்டை
தருவாந் தேனில் வஸ்துவினில்
தானே யிடுவா யிரண்டுண்டை
களமா மூழி வயிறோட்டங்
கறுக்குத் தேக தோசமெல்லாம்
கடலிற் புகுமே கொம்பனொன்றுங்
காய மளிக்கு மிதுவென்னு
வழகாம் பொதிகை வரைமேவு
மையா வருக வருகவே
யரியைச் சிவமாக் கியவரதா
வகத்தீ சுரனே வருகவே. (6)

சுந்தரிப் பிரயோகம்

சுமைசேர் எருதின் கழுத்திலணி
சோகி யஞ்சு சுட்டெடுத்து
சொல்லும் பழச்சா ராழாக்கிற்
சூடோ டிட்டுப் பொரிக்காரம்
தமத மின்றி யிடுகழஞ்சு
தன்னைப் பொரித்து மதனுடனே
தாதா வெண்ணெய் பாக்களவு
தண்டிக் கரைத்து நாள்மூன்று
திமிதத் துடனே சரியளவாய்த்
திடமா யாறு பொழுதுண்ண
சீரும் ரத்தப் பிரமேகந்
திரள்கல் லடைப்பு விடுமென்னும்

Koviloor Digital Library

அமுதம் பொழியும் பொதிகைவரைக்
கரசே வருக வருகவே
அரியைச் சிவமாக் கியவரதா
அகத்தீ சுரனே வருகவே. (7)

அமிர்த மிருத் துவாதி

பேரீந் தேல முந்தி ரிகை
பெருநற் சீர மிலவங்கம்
பிடிசெங் கழுநீர் திரிகடுகு
பிரியாக் கோட்ட மதி சந்தங்
காரஞ் சீர் கஸ்தூரி மஞ்சள்
கல்நார் கிராம்பு கடுரோணி
கடிய சாத்திர பேதி முத்தங்
கனக மலிகூ டன்வகைக்குப்
பாரீர் களஞ்சி ரெண் டிளநீர்
பகர வரைதூ தளங்காய்போற்
பருகு முலைப்பா லுஷ்ண சுரம்
பறக்கு மிருத்து வாதியென்னும்
யாரும் பரவும் பொதிகை வரைக்
கரசே வருக வருகவே
யரியைச் சிவமாக் கிய வரதா
வகத்தீ சுரனே வருகவே. (8)

மேகக்குழித் தைலம்

படரும் நிலவா கையும் வேம்பும்
பருவெள் ளறுகு சிவன்வேம்பு
பாராய் நொச்சிக் கொடிவேலி
பதிபூ வரசின் பட்டைவகை
யுடனே பலம்பத் திடித்தெடுத்தே
யோங்குங் குழியில் தைலவடித்
துறவே தாரம் ரசலிங்க
முத்த கெந்தி பொரிக்காரம்
திடமாய் வகைக்குக் களஞ்சொன்று
சேரத் தேனிற் காசெடைகொள்
சிரங்கு குட்டம் பதகரிபோம்
தேக மதிலுந் தடவவெனும்

Koviloor Digital Library

அடர்வா தாகி வில்வலனை
யடக்கு முனிவா வருகவே
யரியைச் சிவமாக் கியவரதா
வகத்தீ சுரனே வருகவே (9)

அமுதாதி எண்ணெய்

உரிசம் பட்டை வெண்பசும் பால்
உத்த சிகப்பி முலைப்பாலு
முறவே சிறிய வீருள்ளி
யுரலி லிடித்துச் சாறெடுத்து
வரிசை யுடன்சிற் றேரண்டம்
வளருங் காடி தனிலரைத்து
வந்த வெண்ணெய் காற்படியு
மருந்து வகைக்குப் படிகாலும்
பிரிச முடனே காய்ச்சிவடி
பேணிக் கரண்டி யளவதுகொள்
பித்த வெறிவா யுட்டினங்கள்
பேரும மூல ரத்தமெனும்
அரிமும் மதங்கொண் டொலிபொதிகைக்
கரசே வருக வருகவே
அஞ்சிப் பயந்த அமதிசையோ
ரழவாக் கியவா வருகவே. (10)

வருகைப் பருவம்-முற்றிற்று.

****

அம்புலிப்பருவம்.

(வேறு)

பாதிரிக்குழம்பு.

வேடர்சிலை தாரிரசம் நாபிகரு சீரநெரி
விஷகாய காரீ யமும்
வெள்ளுள்ளி கெந்தியெடை வகையொரு களஞ்சியா
மிகுமுத்த தாளி நீரிற்

Koviloor Digital Library

சாடவரை தினமூன்று தேங்காயின் பாலது
தன்னி லரையவ் வீதமே
தருவெல்லல் முஞ்சிரட் டைக்கரியும் வகைகளஞ்
சாயிட் டரைத் துலர்த்தித்
தோடவிழும் நேர்வாளம் நஞ்செடுத் திவ்வெடை
துலங்க வறுவரை சிமிழிடு
தூக்குசிறு பயறளவு நாசியிடு ஜன்னிபோந்
தொடுகடுகு விளியல கைபோம்
ஆடரவு சாடுவிஷ மோரடவருள் மாமுனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (1)

விஷத்தூள்.

மாவிநிகர் பாம்பொன் றுலர்த்திடுயெடு புகையுறை
வசம்பு துரிசொடு காயமும்
வளமான மிளகோடு சேர்மருந் தெல்லாம்
வகைக்கொரு களஞ்ச தாகச்
சாலவெடு சம்மியர்க ளம்மியில் நுணிக்கிவிடு
தருசீலை வடிகட் டியே
சட்டமுடனே குழலி லிடுநாசி பணவெடை
தானிடாக் கிராண மாகக்
காலகடி முதலான வேகமுந் தசையஸ்தி
காலேறி யே மயங்கிக்
கடவாயி னுடையொழுகி யுடல்குழுந் திருகணுங்
கறுகறுத்துப் பஞ்சு போல்
ஆலவிட மேறிசிர சேறுவது தீர்முனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (2)

விஷமை.

வேகமுற வெட்டுண்ட புண்பல மதோர்கட்டி
வேண்டியிடு தில்லை யதனை
வெட்டிக் குடைந்துள முளத்தியே மண்டல
மேவிக் கடந்த பின்பு

Koviloor Digital Library

பாகமுற வேசென் றெடுத்துவா சூத்திய
பழம்புளி போ லிருக்கும்
பதனமாய்ச் சிமிழதி லடைத்துவிட மோட்டிடும்
பண்டிதனும் நீயு மெனவே
தாகமறு வெந்நீர்கள் சின்னீர்கள் வெற்றிலைகள்
தன்னிலிடு சிறுபய றுபோற்
சர்ப்பங் கடித்தெட்டு வேகமோ டாடியே
தாண்டி நிற்கின்ற விடமு
மாகமிசை தாவுகடு போகவருள் ஜெயமுனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (3)

விஷத்தைலம்.

விசைதரும் பேய்ப்பீர்க்கு வித்துநேர் வாளமொடு
வேப்பரிசி மூன்றை யுநீ
மேவியோ ரெடையா யெடுத்தரைத் திடுவாய்நீ
வெங்கலத் தால மதிலே
நிசமாக வடைதட்டி வைத்துரவி தன்னிலிடு
நெகிழ்தைலம் வருகுமதனை
நேராக வெற்றிலை யிலேபணத் தெடைகள்கொடு
நீல விழியிற் கடுகுபோற்
பிசகாது தீட்டிவிடு கொடியவிஷ முந்தீர்ந்து
பேர்ந்திடுந் திரியி லூட்டிப்
பிரியமொடு புகைநாசி யூட்டிவிடு ஜன்னிகள்
பிரிந்து விடுமென்ன வேதா
னசுரர்பகை யோர்பெருகு பொதிகா சலத்தனோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (4)

மதனகாமேசுர லேகியம்

மோதுதிரி சாதஞ்சீ ரகமோம மேலமபின்
முக்கடு குளுந்து மதுரம்
முற்றநெல் லிப்பருப் பசுவ மிலவின்பிசின்
முதிர்பூனை விதை விளங்கல்

Koviloor Digital Library

காதலுறு மிலவங்கம் நிலதால் நெருஞ்சிவேர்
கசகசா வகை களஞ்சு
கண்டவெடை சீனிகஞ் சாசுத்தி செய்தது
களஞ்சிநாற் பத்தி ரண்டு
சீதமுறு மாநெய்படி கால்தே னரைக்கால்
சிறக்கு மாவின் பால்படி
சேர்த்தரைத் திடுவெந்து மஞ்சாடி யளவுண்
சிறந்த பூரணமா மெனும்
ஆதவன் றாதுகுளிர் நீதபொதி காசலனோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறுமா முனியோ
டம்பு லீயாட வரவே. (5)

இஞ்சிச் சூரணம்

பத்துபல மிஞ்சியது சீவியே காய்ந்தபின்
பசுவினெய் தெளித்து வறுநீ
பகரோம மிலவங்க மதுரமொடு திரிகடுகு
பாங்கான திரிசா தமும்
வெற்றியுறு மிந்துப்போ டேலமதி விடையமு
மெடுவகை களஞ்சொன் றதாய்
வெப்பிப் பொடித்திடுஞ் சூரண மதிற்பாதி
வெள்ளையாஞ்சீனி சேர்த்து
சித்தமுற வெருகடி யெடுத்தருந் திடுவாயு
சேருங் கிராணி யெட்டுந்
தீர்ந்துவிடு மேபுளி தள்ளியுப்பு கூட்டு
தேக மாரோக்ய மென்னும்
மத்தனரு ளால்மவுன முத்தபொதி காசலனோ
டம்பு லீயாட வரவே
யன்பருளு மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (6)

பல்லாதகி.

சீரான சேங்கொட்டை முகிழ்வெட்டி யொருபலம்
சீத ஜலமிட் டுலர்த்தி
சோதகரை விதையுமது பலமொன்று கெந்திகரு
சீர்துணைவ னொடு குக்கிலும்

Koviloor Digital Library

பாராடு தீண்டாத பாளைவிதை பட்டையும்
பகர்கரிய குந்தி ரிக்கம்
பகர்சனி யினாயனொ டரைப்பலம் வகைவகை
பருவமவறு இடிவடி கொள்நீ
தீராத குட்டங் கிரந்திபத கரிசூலை
சேர்கரப் பன் சிரங்கு
தீரும் வெருகடியளவு கொள்ள யுப்புகூட்டு
தேய்முழுகு முக்கூட் டெணெய்
ஆரண நிறைந்துரை பூரணமெய் மாமுனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருளு மேவுநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (7)

வாயுவுண்டை.

உகமதனில் நக்கல்பல மூன்றெடுத்தே கரியி
னுரிசை பல ரெண்றெடுத்தே
யொன்றா யரைத் தெடுத்தே புதுகலசத்தி
னுள்வைத்து நாள் நடப்பாய்ச்
சுகமுறப் புன்னையின் காயளவு கொண்டுவர
சூலைவயி றெரிவு வாயுச்
சூதக மலட்டுவலி யுங்குடற் சூலைகள்
சுருள்குன்ம மடல் வாயும்
நகிழுமே யுடலைவிட் டேபத்ய மாகமாய்
நீயுண்டு வா நாளுமே
நேர்த்திய துடம்பு சவுகயமர்கு முசிதமே
நீணிலத் தோர் செயவெனும்.
அகரமுத லுகரவரை மகரநடு வுறுமுனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (8)

குக்குட லேகியம்

ககனமுறு வெண்கார முந்தெவச் சாரமுங்
கதிர்சீன நவ சாரமுங்
கடுகுநீர் வெட்டிமஞ்சள் சவுக்காரமுங்
கருஞ்சீர மோம முடனே

Koviloor Digital Library

சகலதிரி கடுகுள்ளி யோமமொடு கெந்தகந்
தருகழல் பருப்பரைபுந்
தான்வகை யரைக்களஞ் சாகவரை ஞானிகறி
தனில்விரவி யவி யிஞ்சிநீர்
சுகமிளகு சுக்கிவை வகைக்குமொரு பலமாக
தூள்கிண்டி முக்களஞ் சுண்
டுடரா துள் மூலகுன்மங் குடலில் வாதமுஞ்
சோகை கவுசி போமெனும்
அகபுவனனாதார முறும்வேத முதல்முனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவிநிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (9)

இராஜபேதி மாத்திரை.

சாதிலிங்கஞ் சுக்குமிளகு திப்பிலிசிறு
சாற்றா மணக்கி னுடனே
தகுரசமும் வெண்கார மிலவுதரு கொட்டையுந்
தான்வகை களஞ்சொன் றதாய்க்
காதலுறு வாளமது சுத்திசெய் தெட்டுக்
களஞ்சியதி னோடு சேர்த்தும்
கட்டான சுத்தஜலம் விட்டரை சாமமுங்
கலந்திடவே நாள் மூன்றுமே
பேதிகாணக் குன்றி யளவுண்டை ரண்டிடு
பேயனது கனி யதனிலே
பிறகுகுளிர் ஜலமுளக் குண்ணு தண்ணீரிலே
பிரியமுடன் குளி யென்றுரை
ஆதியொளி யேறியமு தூரவுணு மாமுனியோ
டம்பு லீயாட வரவே
யன்பருள மேவி நிறை கின்றகுறு மாமுனியோ
டம்பு லீயாட வரவே. (10)

அம்புலிப் பருவம் முற்றிற்று.

****

Koviloor Digital Library

சிறுபறைப்பருவம்

க்ஷயப்புகை

பந்துமுலை மாதரணி பவள மரிதாரமும்
பகர்சாதி லிங்க முடனே
பார்கடலி னுரையினொடு சமனா யெடுத்துப்
பழச்சாறு விட் டரைத்து
விந்தையொடு சாண்மூன்று சதுரங்க மாகவெடு
வெண்சீலை தன்னி லூட்டு
வெயிலது படாநிழற் காய்ந்தேழு துண்டமாய்
வெட்டிநீ யேழு பொழுதுந்
கந்தியுறு தீபந் தனிற்கொழுத் தவிபுகைச்
சாப்பிட்டு மோ ர்முதுமுண்
க்ஷயமான தொண்ணூற்றி யாறுமே போமென
சாற்று தூப மிதுவெனும்
செந்திரு நிறைந்துலவு பொதிகை மலையாதிப
சிறுபறை முளக்கி யருளே
செங்கண் மாலைச்சிவ மெனப்பணி யகத்தீச
சிறுபறை முளக்கி யருளே. (1)

வீக்கத் தயிலம்.

தங்குமெள் ளெண்ணெய்படி யொன்றதா மதினுடன்
சம்பீர ரச முரியதாந்
தக்கதோ ருசிலுடைய பட்டையிடி பொடியது
தன்னி லாழாக் கெடுத்துப்
பங்கம் வாராமற் பிசைந்தே யடுப்பினிற்
பாகமுட னேகாய்ச் சியே
பருவமுட னுறுசிரசில் தேய்த்துவெந் நீர்முழுகு
பாண்டுநோய் வீக்க மெல்லாஞ்
சிங்கார மாகவரு சோகைகா மாலையுந்
தேகமதில் வரு பீலிகை
சிந்திவிடு மென்னவே சுளுவாகவே யெண்ணெய்
சிந்தையுட னுரை முனிவநீ

Koviloor Digital Library

செங்கய லுலாவிவளர் பொதிகைமலை யாதிப
சிறுபறை முளக்கி யருளே
செங்கண் மாலைச் சிவமெனப்பணி யகத்தீச
சிறுபறை முளக்கி யருளே. (2)

நீரடைப்புப் பிரயோகம்.

வல்லதொரு நாயுருவி சிறுநெருஞ் சியினோடு
வாழையி னுலர்ந்த சருகு
மற்பெரு நெருஞ்சிசிறு பீளைமுத லிவையெலாம்
வகையுடன் சுட்ட சாம்பல்
மெல்லவே ஜலமதனில் வகைவகை யாழாக்கதாய்
விட்டுத் தெளிந்த நீரில்
மேவு பொரிகாரம் பொரித்துக் களஞ்சரையு
மிடுமதுர பொடி யவ்விதம்
கல்லடைப் பானதுந் துர்மாங்கிஷத் தோடு
கடுத்துவிழும் நீ ரடைப்புங்
காணாம லோடிவிடு மேபொழுது மூன்றுமே
கணக்காய்க் குடிக்க வென்னும்
தில்லைநட மிடுமீச னெல்லையுறு மாமுனிவ
சிறுபறை முழக்கி யருளே
செங்கண்மா லைச்சிவ மெனப்பணி யகத்தீச
சிறுபறை முழக்கி யருளே. (3)

சுரபாணம்

நாவியொடு கெந்தியும் ரசம்வகை களஞ்சதாம்
நல்லபொன் மத்த விதையும்
நாடுசுக் காத்தியும் வகைக்குவகை யாகவே
நாட்டியிடு முக்களஞ் சாய்ப்
பாவனைய தாமிஞ்சி நீரினி லரைத்திடு
பகர்குன்றி யள வுருட்டிப்
பண்பாக வேயிஞ்சி நீரினிலி ரண்டுண்டை
பத்தியம தாக வுண்ணு
தரவியுடல் மேவிவரு பித்தசுர தோஷமுந்
தனுவாத சுரமீ தெலாந்
தங்கா தனற்பஞ் செனப்பறந் தோடிடுந்
தக்கமாத் திரையறி யெனும்

Koviloor Digital Library

தேவிபுரி யஷ்டமிசை மேவுபொதி காசலநீ
சிறுபறை முழக்கி யருளே
செங்கணமா லைச்சிவ மெனப்பணி யகத்தீச
சிறுபறை முழக்கி யருளே. (4)

குட்டத்தெண்ணெய்.

கொங்குலவு நொச்சிமுன் முருக்கிலை செறுப்படிகள்
குப்பை மெனியும் பருத்திக்
கூரிய கழற்சியிலை வகைசாறு படியரை
கூட்டவுரி வேர் சூரைவேர்
சங்கைபொடி சங்கின்வேர் வகைசம் பழத்தளவு
தருவேந்த னிலையோர் பலம்
தானரைத் தெள்ளெண்ணெய் படியொன் யதிற்கரை
தனிமெழுகு பக்வ மதனில்
மங்களமதாந் துரிசு துத்தம் பொடித்திடு
வகைகளஞ் சரைய தாக
வடியெண்ணெய் தான்முழுகு குட்டங் சுரப்பனும்
மாறும்நெற் றொலி கூட்டெனும்
செங்கனற் றீபவொளி பொங்கினிறை மாமுனிவ
சிறுபரை முழக்கி யருளே
செங்கண்மா லைச்சிவ மெனப்பணி யகத்தீச
சிறுபறை முழக்கி யருளே. (5)

பாண்டுச்சிதம்.

ஒருகூட தாகும்வெள் ளுளியோர் சிரங்கைய
துரித்தரைத் திடு கத்தப
முடனிட்ட லத்திபலம் ரண்டெடுத்தே நீரி
லுற்பன மதாய்ப் பிசைந்து
வருமுழக் காகவும் வடித்திறுத் தேமுன்
மருந்து தன்னிற் கலக்கி
மாறாம லேமூன்று நாளிந்த வீதநீ
வகையுடன் கொண்டு வருகில்
பருகுபாண் டொடுசோகை வீக்கம்வெள் ளுமுழைவையும்
பெருவயிறு கவுசை யெல்லாம்
பெயர்ந்தோடி யேவிடும் பத்தியங் காத்துநீ
பேணிக் கொடுக்க வென்னும்

Koviloor Digital Library

திருவம் பலம்புகுந் தொருவனருள் பெறுமுனிவ
சிறுபறை முழக்கி யருளே
சித்தமிசை குடிகொண்ட வத்தனருள் பெறுமுனிவ
சிறுபறை முழக்கி யருளே. (6)

பாண்டுமாத்திரை.

குறியான தாம்பூர வரபொடி யயப்பொடி
கூர்கெந்தி சுக்கு நாலுங்
கொள்க வோரளவு சமனாசவே தேசியின்
குலவுமினி நீர் விட்டரை
பிரியாம லேநான்கு சாமமரை கடலையின்
பிரமாண மா யுருட்டிப்
பிசகாமல் வெண்ணீரி லொருவுண்டை யிடுபாண்டு
பெருவீக்க மும் போகுமே
விரிவான சோகைகா மாலைபோம் புளியுப்பு
மேவாது தள்ளி விடுவாய்
வெள்ளையா வின்புதுப் பாற்கஞ்சி யுண்ணவே
விட்டகலும் நோய்க ளென்னும்
திரிமண்டலங் கடந்துறு கெவுன மாமுனிவ
சிறுபறை முழக்கி யருளே
சித்தமிசை குடிகொண்ட வத்தனருள்பெறு முனிவ
சிறுபறை முழக்கி யருளே. (7)

கிராணிபற்பம்.

கற்பமாஞ் சேங்கொட்டை கொடுவேலி திரிபலை
களஞ்சி ரண்டாம் வகைக்குக்
கடியவிந் துப்பது களஞ்சி பத்தாகவே
கவனமாய்ச் சேர்த் திடித்து
நற்பதாஞ் சிறுசட்டி தனிலிட்டு மூடியே
நாறுமண் சீலை செய்து
நன்றாக குக்குடப் புடமிட் டெடுத்துநீ
நகட்டிப் பொடித் தறைத்துப்
பற்பமது காசெடைய தாவெண்ணெய் தனிலுண்ணு
பத்தியம தாக வேதான்
பகருங் கிராணிக் கழிச்ச லிவையெல்லாம்
பறந்துவிடு மென்னுமுனிவ

Koviloor Digital Library

சிற்சபையில் நடனவொலி சேர்மவுன மாமுனிவ
சிறுபரை முழக்கி யருளே
சித்தமிசை குடிகொண்ட வத்தனருள்பெறு முனிவ
சிறுபரை முழக்கிய யருளே. (8)

பித்தவாயுத் தைலம்

துப்பாவ தாகவே நெல்லியின் காய்சீந்தி
தொடுகுமரி கையா னொடு
சுகமான சீதேவி செங்கழுநீ ரிவையெலாந்
துவைத்தசார் வகை யுரியதாய்த்
தப்பாமல் நல்லெண்ணெய் படிரெண்டு மாவினோரு
தண்தனிப் பா லிரண்டாந்
தருகாத மதுரமது பலமா றரைத்ததில்
தான்கரைத் துக் காய்ச்சியே
வெப்பான தணுகாமல் முழுகிவர பித்தனோய்
வெறிவாயு தலையிடி கள்போம்
வெந்நீரி லுசிவிலை யரைத்தரைப் பிடுகவே
வெங்கனற் பஞ்சா மெனும்
செப்புதமி ழுக்கொரு சிரோரத்ன மாமுனிவ
சிறுபறை முழக்கி யருளே
சித்தமிசை குடிகொண்ட வத்தனருள்பெறு முனிவ
சிறுபறை முழக்கி யருளே. (9)

அசனாத தயிலம்.

தவழ்று மரத்தைதிப் பிலிமதுர முத்தமொடு
சந்தம் நன்னாரி தேவ
தாரம் விலாமிச்சை குறுதொட்டி பொன்மெழுகு
தருகட லினுரை ரோகணி
பவிசுபெறு கோட்டமொடு செவ்வள்ளி யிவையெலாம்
பார்வகை களஞ்சி ரண்டு
பசுவின்மோர் நானாழி நல்லெண்ணெ யிருநாழி
பகர்மருந் தரை கரைத்து
அபிசேக மாகவே முழுகு வெந்நீரினி
லரைப்பு சியக்கா யிடு
அசனாதி தயிலமிடு குளிர்சுரங் காந்திக
ளனைத்துமே நீங்கு மென்ற

Koviloor Digital Library

சிவனருளு முருகனுப தேசமே பெறுமுனிவ
சிறுபறை முழக்கி யருளே
சித்தமிசை குடிகொண்ட வத்தனருள்பெறு முனிவ
சிறுபறை முழக்கி யருளே. (10)

சிறுபறைப்பருவம்-முற்றிற்று.

****

சிற்றிற் பருவம்

(வேறு)

வாதசூலைத் தைலம்

விந்தை பெருக்கம் பால்நொச்சி
வெள்ளாட் டின்பால் வீழியிலை
வேண்டும் வகைச்சார் மூவழக்கும்
மிகுநல் லெண்ணெய் படியொன்றும்,
பந்தமுற வேகலந்து கொண்டு
பதமாய்க் காய்ச்சு மெழுகுபதம்
பார்த்து வடித்துக் கலசமதிற்
பதிவாய் வேடு கட்டி வைத்துத்
தொந்த முறவே முழுகிவரச்
சூலைவாத மெண்பதும் போஞ்
சுளுவா மெண்ணெ யிதுபோலச்
சூட்டு மருந்து மிலையென்னும்
சிந்தித் தமரும் பொதிகைமலைச்
செல்வா சிற்றிற் சிதையேலே
திரிகோ ணுரையு மாலிங்கத்
தேவா சிற்றிற் சிதையேலே. (1)

சன்னித் தயிலம்

பெருவேப் பந்தோல் சிவன்வேம்பு
பிரமி தொளசி தொடைநொச்சி
பேசுஞ் சங்கு கிலுகிலுப்பை
பெருத்த வேலிப் பருத்திமஞ்சள்

Koviloor Digital Library

மருவாஞ் சந்தம் நன்னாரி
மதுரஞ் சூரி கோட்டமிந்து
வசம்பு ரோணி முசுர்முட்டை
மரத்தின் மஞ்சள் சிறுதேக்கு
உருகுஞ் சேடன் சட்டையும்நாங்
குளுவுங் கடுக்காய்த் திரிகடுகு
ஒவ்வோர் களஞ்செள் ளெண்ணெய்படி
யூறக்காச்சு சனிக ளென்னுந்
திருவாழ்ந் துலவும் பொதிகைமலைச்
செல்வா சிற்றிற் சிதையேலே
திரிகோனு ரையும் மாலிங்கத்
தேவா சிற்றிற் சிதையேலே. (2)

உஷ்ண நிவாரணத்தயிலம்

சீரா ரேல மதிமதுரம்
சிறுநா கப்பூ லாமிச்சு
சீதா தேவி வேர்கோட்டஞ்
சேர்ரோ கணியோ டிலவங்கங்
தாரார் வகைக்குக் களஞ்சிரண்டு
தருசீ தேவிச் சாறுபடி
தன்னி லரைத்துக் கரைத்தானெய்
தக்க படியொன் றிற்சேர்த்துத்
தோரா தனலிற் காய்ச்சிவடித்
துடனே முழுகி வரும்போது
சுரங்க ளெரிவு தலையெரிவு
சுரந்த பித்தம் போமென்னும்
தீரா வினைதீர்த் தருள்முனிவா
செல்வா சிற்றிற் சிதையேலே
திருகோ னுரையும் மாலிங்கத்
தேவா சிற்றிற் சிதையேலே. (3)

குமரித் தயிலம்

கானார் தேவ தார்சந்தங்
கர்ப்பூ ரம்பத் திரிமதுரங்
கடுரோ கணிதக் கோல்மஞ்சட்க்
க்ற்சா திக்கா யகிலேலம்

Koviloor Digital Library

மானார் புனுகு சட்டமுத்தம்
மாஞ்சி விலாமிச் சிலவங்கம்
மஞ்சிட் டியும்நன் னாரியுந்தா
மரையின் வளையஞ் செங்கழுநீர்
கோனா கப்பூ திரிபலையுங்
கொள்வாய் வகைக்குக் களஞ்சிரண்டு
குமரிப் பாலொன் றெண்ணெய்ரண்டு
கூர்ந்து காய்ச்சிப் படிமுழுக
தீனார் விழிநோய் போமென்னுஞ்
செல்வா சிற்றிற் சிதையேலே
திரிகோ னுரையும் மாலிங்கத்
தேவா சிற்றிற் சிதையேலே. (4)

உளமாந்தைக்கிருதம்.

தருவா மிளநீ ராநெய்யுந்
தம்மில் வகையொன் றிருநாழி
தண்ணீல் வேர்பால் சிற்றுமல்லி
தருதிப் பிலிரோ கணிநாரி
யுரிய கீழ்காய் நெல்லிநிம்ப
முயர் முந்திரிகை சந்தமல்லி
யுத்த விச்சிப் பூமிச்ச
முடனாந் தோடை களஞ்சிரண்டு
மருவிக் காய்ச்சிக் கரண்டிகொள்ளு
வருமுள் மாந்தை சுரகாசம்
வளரும் பித்தம் மேலிளைப்பு
வருத்துங் கயநோய்த் தீருமெனத்
திருவாய் மொழியும் பொதிகைமலைச்
செல்வா சிற்றிற் சிதையேலே
திரிகோ னுரையும் மாலிங்கத்
தேவா சிற்றிற் சிதையேலே. (5)

ஏரண்டபூசுதயிலம்

காட்டின் மேதி யிலைச்சாற்றிற்
கதித்தே ரண்ட முத்தவித்துக்
கதிரோன் முகத்திற் காய்ந்திடித்துக்
கனதி யுறுமச் சாறுதன்னிற்

Koviloor Digital Library

கூட்டிக் காய்ச்சி யெண்ணெய்வடி
கொண்டன் னீரி லெண்ணெயெடு
குளிர வுடம்பில் மிகப்பூசி
குளிப்பா யரைப்பிட் டஞ்சாம்நாள்
வாட்டுஞ் சூலை வாதமுதல்
வந்த முடக்கம் பலவகலும்
வடிவா முடம்பு தெளிவுண்டாம்
வசிய மாரு மெனமுன்னாள்
தீட்டும் பொதிகைக் கும்பவரு
செல்வா சிற்றிற் சிதையேலே
திறல்வா தாகி வில்வலனைச்
செற்றாய் சிற்றிற் சிதையேலே. (6)

சூதக வாயுப் பிரயோகம்

எள்ளு படியொன் றளந்தெடுத்தே
யிலங்கக் கழுவி யரைப்படிநீ
ரெடுத்து வெல்லம் பலமொன்று
மிதனிற் கரைத்துக் கொடுத்துவிடக்
கள்ளம் பொருந்தும் மாதாந்தக்
கனத்த வுதர ரோகமெலாங்
காணத் திரண்டு வருஞ்சூதக்
கட்டி கரைந்து வெளிப்பட்டுத்
துள்ளித் துலங்கப்பிரவடையாய்த்
துளிர்போல் மேனி வடிவுண்டாய்ச்
சூடும் வதுவை மணமாகச்
சூழும் வசியம் பெரிதெனவே
தெள்ளுந் தமிழ்தந் தருள்முனிவா
செல்வா சிற்றிற் சிதையேலே
திறல்வா தாகி வில்வலனைச்
செயித்தாய் சிற்றிற் சிதையேலே. (7)

மகா வல்லாதகி

துத்தந் துருசு மிருசீரஞ்
சொல்லுங் காந்தங் கெந்திரசம்
தூப மோமஞ் சுவைகோட்டந்
தோரா லிங்கஞ் சிலையினொடு

Koviloor Digital Library

உத்தவகைக்குக் களஞ்செடுத்து
முறவா கியசேங் கொட்டைபத்து
முடனீர் வெட்டி யெண் பருப்பு
முரைசக் கரைநாற் பதுகளஞ்சு
வித்தெள் ளுளக்கிட் டிடியூ்ானெய்
மேவிப் பிசைந்துண் தேசிக்காய்
விடுமீ ரைந்து போதாவின்
வெண்பாற் கஞ்சி முருங்கைக்காய்
தெத்துங் குட்டம் போமென்னுஞ்
செல்வா சிற்றிற் சிதையேலே
திறல்வா தாவி வில்வலனை
செற்றாய் சிற்றிற் சிதையேலே. (8)

சூரித் தைலம்

விரைசேர் நத்தைச் சூரியது
வேரின் றோலாந் தன்னையுரிநீ
மேவிப் பலமொன் றரையெடுத்து
மிச்சம் பழச்சா றொருபடியி
வரைபா கமுடன் நல்லெண்ணெ
யளந்து படியொன் றதிற்கலக்கி
யனலிற் பருவ முடன்காய்ச்சி
யழுந்தத் தேய்த்து முழுகிவர
புரைசேர் நாசிப் புழுவிழுதல்
புண்கள் மண்டை யிடிசூலை
போகும் பீனிச நீரெல்லாம்
பொருந்த வெந்நீர் முழுகிடெனும்
திரளு மணிமுத் தெறிபொதிகைச்
செல்வா சிற்றிற் சிதையேலே
திறல்வா தாவி வில்வலனை
செற்றாய் சிற்றிற் சிதையேலே. (9)

மல்லியாதிக் கஷாயம்

கொத்து மல்லி கூவிளவேர்
கோரைக் கிழங்கு குறுந்தொட்டி
குலவு சுக்கு நெற்பொரியுங்
கூட்டி வகைக்கு நாற்களஞ்சு

Koviloor Digital Library

பத்தி யிடித்தே யிருநாழிப்
பாணி தனிலிட் டெட்டொன்றாய்ப்
பருகிக் குடிக்க சர்க்கரையும்
பாங்காய்க் கூட்டிக் கொடுத்துவரக்
குத்தும் பித்தஞ் சத்திகுன்மம்
குணமா முடலுங் குளிர்ந்துவிடும்
கொள்ளு மன்னஞ் சீரணமாஞ்
கொடிய வாய்வு மகலுமெனச்
சித்தர் மகிழும் படியுரைத்த
செல்வா சிற்றிற் சிதையேலே
திறல்வா தாகி வில்வலனை
செயித்தாய் சிற்றிற் சிதையேலே. (10)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

****

சிறுதேர்ப்பருவம்

நவக்கிரக வெள்ளை.

சீனம் பொரிக்கார காரம்வெடி யுப்பிந்து
சேர்கவுரி வீரம் லிங்கந்
திகள்சூட னொவ்வொரு வகைக்குக் களஞ்சியரை
சித்ர மூலிகை நீரினால்
தானரைத் துக்குகை பிடித்துலர்த்திச் சட்டி
தன்னிலுப் பிட்டு வைத்துக்
தருசூத மைங்களஞ் சதிலிட்டு மேற்சட்டி
தனிலேழு சீலை செய்து
கானன லெரிப்புமொரு நாள்முழுது மாறியெடு
கனமுயுர் பதங்க மதனை
கனவெல்ல மதனிலொரு பயறுண்ண வெழுபோது
காணாது சூலை குட்டெனும்
தேனுலவு பொதிகை மலைமேவிய வகத்தீச
சிறுதே ருருட்டி யருளே
சிவமவுன யோகியர்கள் பரவுகுண சாகரே
சிறுதே ருருட்டி யருளே. (1)

Koviloor Digital Library

கர்ப்பக்கிரந்தி யெண்ணெய்.

பாதாள கெஜமூலி நொச்சிசங் கங்குப்பி
பகராடு தீண்டா விலை
பார்தேசி லத்திநீர் வகைவகைக் கோர்படி
பத்திமுத் தேரண்டநெய்
போதம தாயரைப் படிகருஞ் சீரகம்
புகல்கடுகு ரோகணிமுதல்
பூட்டிடாத் திக்கடுக் காய்பறங்கிப் பட்டை
புதிய கார்கோல ரிசியுங்
காதலுறு செஞ்சூரை வேரிரு களஞ்சிவகை
காணசத்தி சிவம் லிங்கமுங்
கனதாரம் வகையோர் களஞ்சிசெய் யுண்மூலக்
கர்ப்பக் கிரந்தி யருமென்
சீதமுயர் தென்றற் குளிர்ந்தபொதி கைக்கடவுள்
சிறுதே ருருட்டி யருளே
திரிகூட மாயனைக் சிவமெனத் துதிசெய்முனி
சிறுதே ருருட்டி யருளே. (2)

சஞ்சீவியாதிக் கிருதம்

சிந்திற் கிழங்குமா மதுரமொடு சீரகஞ்
சிற்றேல மிலவங் கமுஞ்
செப்பரிய கூகைநீ றொக்கவகை காற்பலம்
சீனி யதரைப் பலமுமே
பேந்தாறு நெய்நாழி பொடியிட் டிளங்கொதி
பெறும் பருவமா யிறக்கிப்
பேசுங் கரண்டிநிறை யுண்டுவா கிருதமிது
பெரியதோ ரவுழ்க மாங்காண்
கார்ந்தலோ டெரிவும் வரட்சி யுட்டணமெலாங்
காணா தொளிந்து மிக்காங்
கந்தமுறு தேகங் குளிர்ந்து சுகமுண்டாங்
கருணை யுண்டாகு மென்னுந்
தேர்ந்தவே தத்தொளி முழங்கு பொதி காசல
சிறுதே ருருட்டி யருளே
சித்தர்கள் வணங்கு மகத்திய முனிக்கடவுள்
சிறுதே ருருட்டி யருளே. (3)

Koviloor Digital Library

சோகைக் குளிகை,

சுகமான தாம்பிர மிரும்பினர பொடியும்வகை
தூக்கிடு களஞ்சி யஞ்சு
சொல்லரிய சம்பளச் சாறுவிட் டரைகடலை
தோற்ற மள வுண்டைசெய்து
தகமான முண்டையொன் றிடுவெந்நீர் தன்னிலே
தக்கபாற் கஞ்சி கொள்ளு
தள்ளிவிடு முப்புப் புளிப்பு முதலாகவே
தானகற் றஞ்சுநா ளுண்
அகமேவு சோகை காமாலை பாண்டிவைமுதல்
அட்ட பீலிகையு மகலும்
ஆரோக்கிய தானமது மழகுமுக் கூட்டெண்ணெய்
அன்பாக முழுக வென்னுஞ்
செகசோதி மயமீறு பொதிகை மலையாதிப
சிறுதேருருட்டி யருளே
சிவமவுன யோகமெய் யகத்திய முனிக்கடவுள்
சிறுதே ருருட்டி யருளே. (4)

குட்டோ சிதம்.

நல்லெண்ணெய் ரண்டரைச் சுவடுபொடு தலைரசம்
நலமாக வஞ்சு சுவடாம்
நலமீறு தர்க்குவறு பொடியுவெரு கடியதாம்
நற்பனை வெல்ல மதுதான்
துல்லியம தாகவொரு பாக்களவு கரைகொடு
துலங்கேழு பொழுது நன்றாய்ச்
சுத்தமா யுப்புப் புளிப்பாகத் திடுமிதிற்
சொல்லும் நெல்லிப் பிஞ்சதாம்
வல்லமை யதாகிய குறுக்குவலி கோரைவலி
வந்திடுங் குட்ட ரோகம்
மாறாப் பரங்கிபடர் தாமரைகள் தீர்ந்திடும்
மகத்தான மூலி யென்னச்
செல்வமுட னுரைசெய்த பொதிகைமலையாதிப
சிறுதே ருருட்டி யருளே
தென்திசைத் துயர்தவிர்த் திடுகும்ப மாமுனிவ
சிறுதே ருருட்டி யருளே.

Koviloor Digital Library

செவிநோய் சங்காரன்

வஞ்சளு மத்தொடு விளாநொச்சி யூர்முதலி
வருதூதி துளசி முள்ளி
வளர்வேளை மாவிலங்கொடுவச் செருக்கிலை
வருமுருக் கிவைவகை யெலாம்
பஞ்சென இடித்துவகை யோரரைக் காற்படி
பகுந்துவடி நல்லெண்ணெயிற்
பகர்கோட்டஞ் சதகுப்பை தேவதார் கரியசீர்
பருவசம் போ டரத்தை
யொஞ்சாம லோர்வகை களஞ்சிரண் டாயரைத்
துரவாக காய்ச்சி யுச்சி
யொருசெவியின் மீதுமடை செவியின்நோய் தூரகலு
முண்மையிது வாகு மெனவே
செஞ்சிலம் பொலிபாத பொதிகைமுனி யுரைசெய்முனி
சிறுதே ருருட்டி யருளே
சிவநடன தெரிசனைசெய் குறுமுனிநல் தவமுனி
சிறுதே ருருட்டி யருளே. (6)

மூலமுளை நிவாரணி.

நின்புதோல் தோடையுத் தமதாளி கண்டனொடு
நிறைவகை யரைத்து லாமாம்
நித்தித் தவம்புனாற் குருணியி லமுக்கிவாய்
நேர்சேலை வேடு கட்டி
நிறையான குக்கில்பலம் நால்வண்டில் வைமூடு
நீர்வற்றி யெடு கழுவியே
நீதகர்ப் பால்விட் டவித்தெடுத் தாவினது
நெய்தெளித்தே வறுப்பாய்
அன்பான கெந்திமே திச்சாற் றவித்தெடு
மாம்பலம் நால தாக
ஆலவ முதிற்பட்டை யிற்சுத்தி செய்யெடுத்
ததுவுமே பல மெட்டதாய்
அதனிலிடு வெண்கார மெவச்சார முஞ்சிவதை
யாம்விளங் கத்தொடு விளால்
அரிசியிரு சீரம் குறாசாநி திரிசாத
மானதொரு திரி கடுகுடன்
வெண்குந் திரிக்கம்விடை யம்ரோணி சாரம்
வீரான சித்திர மூலம்

Koviloor Digital Library

விரியுமுப் பலைவசம் போடுதிரி மூலம்
மீறாது வகைகாற் பலம்
வெதுப்பியு மிடித்துவடி செயசீனி நால்கொண்டு
விரவுதேன் நறுநெய் யதில்
விட்டுருட் டித்தேசிக் கனியளவு மிருபொழுது
மீறாது கொண்டு வருவாய்
திண்மண் டலமூல முட்பவுத் திரஞ்சூலை
சிரங்கொடு பரங்கி குட்டம்
தீராத துன்மாங்கி ஷந்தீரும் வரையோடு
சீராநெய்த் தொலி துவரையாம்
சிறுமுளைக் கீரையொடு கண்டமா மென்னுமுனி
சிறுதே ருருட்டி யருளே
தென்திசைத் துயர்தவிர்த் திடுகும்ப மாமுனிவ
சிறுதே ருருட்டி யருளே. (7)

சிரநோய்த் தைலம்.

நல்லெண்ணெய் படிகால் கொடுப்பைகை யாந்தகரை
நன்றான முசு முசுக்கை
நரியவெற் றிலையினொடு கோரக்கர் மூலியிடி
நற்சாறு வகை காற்படி
வல்லமிள கபின்மதுரம் நற்சீர கத்தினொடு
வால்மிளகு வகை களஞ்சி
மாட்டிமுன் சாற்றரைத் தேகலக்கிக் காய்ச்சி
வடிமெழுகு பத மாகவே
யுல்லாசமாந்தைலம் நான்குநாட் கொருமுழுக்
குறுநாசி வடியும் நீரும்
ஒருதலைக் குத்துசிர சின்சூலை யுஞ்சிரா
யோடுமுப் பும்புளி விடு
தில்லையம் பலவுர்திரு நடனவொலி கண்டமுனி
சிறுதே ருருட்டி யருளே
தென்திசைத் துயர்தவிர்த் திடுகும்ப மாமுனிவ
சிறுதே ருருட்டி யருளே. (8)

திமிர்ப் பிரயோகம்

சூரிசங் கங்குப்பி செந்தொட்டி நிலவாகை
சூலி கண்டங் கத்திரி
துங்கமுறு வெள்ளருகு தகரைகொடி வேலியுஞ்
சுடலையார் வாரை சங்கு

Koviloor Digital Library

சீரிலகு குருவிஞ்சி கொல்லனது கோவையும்
திரிபுர மெரித்த பூடும்
சிவனார் குரண்டிசெங் கத்தாரி சேரீச்சஞ்
செடியினது வேர் சமனதாய்
ஏரிலகு கமலையின் பாலிலரை சம்பளம்
எனுமுண்டையைக் கலக்கி
யிருபொழுது நாளொன்று மெட்டுநா ளுண்ணவே
இயல்பிலா பத்து திமிருந்
தீருங் கிரந்திபத கரிசூலை யெனுமுனிவ
சிறுதே ருருட்டி யருளே
செம்புவரை மீதிலுயர் கும்பமுனி வாவணிகொள்
சிறுதே ருருட்டி யருளே. (9)

வாதவைத்தியக் கட்டு

நல்லவாண் மீறுகுறி துடியொன் றெடுத்துபின்
நலமான ரவி கஞ்சமும்
நன்மை யுண்டாகக் கலம்பொடி வகைக்குமே
நயமான விரு நிட்கமாந்
துல்லியம தாங்கன்னி யின்பாலிலே தோய்த்
துடன் கவச முறைமூன்றுமே
துலங்கெரிமுன் வைத்துநன் றாய்க்காய்ந்த பின்னுமேல்
தொற்சீன கார சாரம்
வல்லமை யுடன்வகைக் கிருநிட்க முமிநீர்
வார்த்தரைத் திடு கவசமும்
வைத்தெரிமுன் பின்னுமொரு மண்சீலை செய்யெரிவை
வருபுடம் மிடுமுறை யெடு
செல்லுமிக் கட்டுமிரு முறையும்வரு மெனுமுனிவ
சிறுதே ருருட்டி யருளே
தென்திசைத் துயர்தவிர்த் திடுகும்ப மாமுனிவ
சிறுதே ருருட்டி யருளே. (10)

சிறுதேர்ப் பருவம்-முற்றிற்று.
அகத்திய மகாமுனி
வைத்தியப் பிள்ளைத்தமிழ் மூலம்
முற்றிற்று.

****

Koviloor Digital Library

உ
கடவுள் துணை.

அகத்திய மகாமுனி

வைத்தியப் பிள்ளைத்தமிழ்

விளக்கம்.

சகோதரர்களே! மேற்படி பெயர்பூண்ட இப்பொழிப்பை இதனுடன் எழுதநேரிட்ட காரணம் கீழ்க்காணும் விஷயங்களால் தெள்ளெனத் தெள்ளிதாய், விளங்கும்.

(a) அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத்தமிழென்னும் இவ்வரிய கிரந்தமானது யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளும்படியாக மிகவும் தெளிவான இனிய தமிழ்ச் செய்யுட்களினாற் செய்யப் பட்டிருப்பினும் அவற்றுள் பல செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சரக்கின் அல்லது பல சரக்குகளின் பெயர்களைக் குறிப்பாக அல்லது இடுகுறியாக, அல்லது பரிபாஷையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள், பலசாஸ்திரப் பழக்கமும் பலநாள் வைத்திய அனுபவமுள்ள பண்டிதர்களுக்கு அல்லது கரணபரம்பரையாகக் கற்றறிந்த பண்டிதர்களுக்குத் தெரியுமேயல்லது மற்ற பண்டிதர்களும், வைத்தியர்களும் கண்டுகொள்வது அரிதாகையால் இது நம்மனோர்க்கு அதிகம் பிரயோசனப்படவேண்டும்.

(b) மேற்கண்ட நூலில் அனேக முறைகளில், நிறை, அளவு, பிரமாணம், செய்பாகம், கைபாகம் முதலியவைகள் திட்டமாய்ச் சொல்லப்படவில்லை. ஆதலின் அவ்வித பாகங்கள் பலநாள் அநுபவசாலிகளான வைத்தியர்களுக்குப் பிரயோசனப் படுமேயொழிய மற்றவர்களுக்குப் பிரயோசனப்படாது. ஆகையால் அவ்வகை பாகங்களும் யாவருக்கும் பிரயோசனப்பட வேண்டும்.

(c) மேலும் காலங்கள்தோறும், தேசங்கள்தோறும், அளவு, நிறை முதலியவைகளின் பெயர் வேறுபட்டிருப்பது சகஜமாகையால், ஒரு தேசத்தில் வழங்கப்படும் பெயரை மறுதேசத்திலும், ஒரு காலத்தில் வழங்கப்படும் பெயரை மறுகாலத்திலும் தெரிந்து கொள்வது இலேசான காரியமல்ல: ஆகையால் அவ்விதமான முற்கால நிறை, அளவு முதலியவைகளை இத்தமிழ்நாட்டில் தற்காலத்தில் பெரும்பான்மையாய் வழங்கப்படும் நிறை அளவு கணக்கின்படி எழுதினாலொழிய அனேகருக்கு இந்நூல் அதிகப்பிரயோசனப் படாது.

---

*இச்சரக்குகளின் சுத்திக் கிரமங்கள் பாகப்படுத்தும் விதிமுறைகள் பின் எழுதப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

(d) இதில் சொல்லப்படும் சிகிச்சைகளில் ரோகங்களின் பெயர் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சாத்தியா சாத்தியம் இன்னின்னிவை யென்பதும், ஒவ்வொருவகை ரோகத்திலும் பற்பலவிதங்களாகையால், அவ்வவ் விதங்களுக்காம் அனுபானவிசேசங்களின்னிவை என்பதும் சொல்லப்படவில்லை. ஆகையால் மேற்கண்டவைகள் விபரமாய் எழுதப்படாவிட்டால் பலநாள் அனுபவ வைத்திய சிரோன்மணிகளுக்கேயன்றி மற்றவர்க் கவ்வளவாயிது புலப்படாது.

(e) பலநாள் அநுபவசாலிகளான வல்லபண்டித சிகாமணிகளும் சற்றுப் பின் வாங்கும் கஷ்டசாத்திய வியாதிகளான குஷ்ட ரோகம், குன்மரோகம் முதலிய பலவகைகளின் சிகிச்சையெல்லாம் இக்கிரந்தத்தில் சொல்லப்பட்டிருப்பதாலும், இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறைகளும் அநுபவ சித்தமானவைகளான படியாலும் இது மிகவும் முக்கியமும் அபூர்வமுமான கிரந்தங்களில் ஒன்றென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் அவ்வகை கிரந்தமானது கூடினவரையில் விபரமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம். நம்மால் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு கிரந்தத்தையும் கைக்கொண்டு, நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்தும், உற்சாகப் படுத்தியும் வரும் ஒவ்வொருவருக்கும் அதிகப் பிரயோசனப்பட வேண்டுமென்பது அவசியத்திலும் அவசியம்.

இன்னன பல காரணங்களினால், அதில் சொல்லப்படும் வியாதிகளில் முக்கியமானவைகளின் லக்ஷணம், சாத்தியா சாத்தியம், அனுபான விசேஷங்கள் முதலியவைகளை அமுதசாகரம், சதுரார்த்த சிந்தாமணி, ஜீவரக்ஷாமிர்தம், இந்நூலிற்கு முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட அட்டவணை, இந்நூலைக் கையாண்டு வந்த அநுபவசாலிகளின் அனுபான விசேஷக் குறிப்பு முதலியவைகளின் படியும், அநுபவத்தின் படியும் விவரித்தெழுதி, ஆங்காங்கே, ஒவ்வொரு முறைகளின் செய்பாகம், பிரமாணம், உபயோகம் முதலியவைகளும் மிகவும் விபரமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் இது யாவருக்கும் அதிகப் பிரயோசனப் படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆகையால் சுதேசாபிமானமுள்ள கனவான்களும் மற்றவர்களும் அடியேனா லியற்றப்பட்ட யூநாநி வைத்திய தாது விர்த்தி போதினி முதலிய கிரந்தங்களை அங்கீகரித்து, அடியேனைப் பலவிதத்திலும் கனப்படுத்தி வருவதுபோல், இந்த அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத் தமிழென்னும் கிரந்தத்தையும், இனி அச்சிடப்படும் கிரந்தங்கள் முதலியவைகளையும் அங்கீகரித்து ஆதரித்துவரும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் பற்பலவகை முறை முதலியவை களையும் ஆதியோடந்தமாய்க் கவனித்து, அவற்றின்படி நடந்து கொள்பவர்கள் கடவுளினது கிருபையால், மகாரோக முதலியவைகளினின்றும் நீக்கப்பட்டு சுகானுபவங்களை யுடையவர்களாய் இம்மை மறுமைக்குரிய பயன்களை இனிதுபெற்று நீடூழி வாழ்வார்களாக. ஆமீன்.

Koviloor Digital Library

காப்புப் பருவம்

1-ஆம் செய்யுள்

துவாதச சிந்தூரம்

(a) *சுத்தி செய்யப்பட்ட ரசம், சுத்தி செய்யப்பட்ட நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்தி செய்யப்பட்ட கவுரிப்பாஷாணம், சுத்தி செய்யப்பட்ட தாளகம், சுத்தி செய்யப்பட்ட லிங்கம், சுத்தி செய்யப்பட்ட மனோசிலை, சுத்தி செய்யப்பட்ட சங்குப் பாஷாணம், சுத்தி செய்யப்பட்ட துரிசு, சுத்தி செய்யப்பட்ட துத்தம், * பாகஞ் செய்யப்பட்ட படிக்காரம், பாகஞ் செய்யப்பட்ட கம்பி வெடியுப்பு, பாகஞ் செய்யப்பட்ட வெண்காரம் இப்பன்னிரண்டு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

(b) இவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனி, கல்வத்திலிட்டு குப்பைமேனியிலையின் தனிச்சாற்றைச் சிறுக சிறுக வார்த்துக் கைவிடாமல் நான்குசாமமரைத்து அதிகக் கெட்டிப்பதமா யிராமலும் அதிக நீர்ப்பாகமாயிராமலும் மிதமான பதமாக சித்தம் செய்துகொள்ளவும்.

12 கோழி முட்டைகளை எடுத்து, ஒவ்வொன்றிலும் சுண்டுவிரல் கொள்ளத்தக்க சிறுதுவாரமிட்டு, அதிலுள்ள வெள்ளை, மஞ்சள் என்னுங் கருக்களை யூற்றிவிட்டு, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் ஒவ்வொரு மருந்தையும் தனித்தனி ஒவ்வொரு முட்டைக்கூட்டில்விட்டு, அதன்வாயை வேறொரு முட்டையின் ஒட்டின்துண்டில், உளுந்துமாவை அல்லது கோதுமைமாவைக் குழைத்துப்பூசி ஒட்டவைத்து சந்துபந்தனம்செய்து, வெயிலில் உலரவைத்து, ஒவ்வொன்றின்மீதும் ஒன்பது சீலைமண்செய்து உலர்த்திக் கொள்ளவும். ஒன்பது சீலை மண்ணையும் ஒரே தடவையாய்ச் செய்தால் உள்ளிலுள்ள சீலைமண் உலர ஏதுவிராது. ஆகையால் இரண்டு சீலைமண்செய்து உலர்ந்தபின்பு மறுபடியும் அதன்மேல்-2-சீலைமண்செய்து அதுவும் உலர்ந்தபின்பு மறுபடியும்-2-சீலைமண்செய்ய வேண்டும். இவ்விதம் இரண்டிரண்டாய் உலர உலரச் செய்து கொள்வதே யிலகுவானவும் சுலபமானவும் மார்க்கமாம்.

(d) ஒருசாண் அகலம், 1-சாண் நீளம், 1-சாண் ஆழமுள்ள குழியொன்று, சற்று மேடான பூமியில் தோண்டி, அக்குழிநிறையக் கொள்ளும்படியான பச்சையரிசி உமியைச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த உமியானது புடைக்கப்பட்டு, தவிடு, நொய், சிற்றுமி முதலியவைகள் நீக்கப்பட்டவைகளாகவும், பெரும்பாலும் பின்னப்படாமல் முழு உமியாகவும் இருக்கவேண்டும். இவ்விதம் சித்தப் படுத்தப்பட்ட உமியை மூன்று பங்காக்கி, 1-பங்கை, முன் குழியிலிட்டு சமமாகப்பரப்பி, அதன்மேல் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கவசங்களை,

Koviloor Digital Library

ஒன்றின்மீதொன்று படாமலும், அதிகங் குறைவென்னும் இடவிகற்ப மில்லாமலும் சம அளவாகவும் வாய் மேற்பக்கமாக இருக்கும்படியாகவும் வைத்து, அவ்வொவ்வொன்றின் இடையிலும் உமியைப்போட்டு நிறைத்து, மெதுவாய் அமுத்திலிடு. அதன்மேலும் மற்ற உமியைக்கொட்டி சமமாகச் செய்துவிடவேண்டும். இவ்விதம் செய்த பின்பு, இரண்டொரு வராட்டிகளையும் சிறுதுண்டுகளாகச் செய்து உமியின்மீது அடுக்கி நெருப்பிட வேண்டும். சில சமயங்களில் முற்றும் நெருப்பு பிடிக்காமற் போவதுமுண்டு. ஆகையால் அடிக்கடி நெருப்பிருக்கிற தாவெனவும் பரீட்சித்துவரவும் வேண்டும். இதற்காகக் குழியின்மீது சற்று உயரத்தில் கையைப்பிடித்தால் நெருப்பின்சூடு நன்றாய்த் தெரியவரும். நெருப்பில்லாதிருக்கில் குளிர்ந்திருக்குமாகையால் இரண்டு மூன்று வராட்டித் துண்டுகளை வைத்து நெருப்பிட எரியாத மற்றபாகமும் நெருப்புப்பிடித்து முற்றும் எரிந்துபோம். இவ்விதம்செய்து புடம்முற்றும் எரிந்துபோனபின் ஒருநாள்விட்டுக் குளிர ஆறினபின் ஒவ்வொரு கவசத்தையும் சாக்கிரதையுடன் பிரித்து ஒவ்வொரு முட்டைக் கூட்டிலுமுள்ள ஒவ்வொரு சரக்கையும் தனித்தனியாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(e) இந்தச் சரக்குக ளொவ்வொன்றும் ஒருவிதமாய்ப் பக்குவப்பட்டிருக்கும். ஆனால் ரசமாத்திரம் மடிந்துபோகாமல் அரைகுறையாகத் தன் சுயரூபத்தைப்பெற்று ஜனித்திருக்கும். அவ்வளவையும் கல்வத்திலிட்டு முன்னெடுத்த கெந்தகத்தையும் சேர்த்து இரண்டும்சேர்ந்து ஒன்றாசிறவரையில் அரைத்துப் பின்பு மற்றச் சரக்குகளையும் சேர்த்துக் கைவிடாமல் சுமார் இரு சாமம் அரைக்கவேண்டும். அரைக்கும் போது அடிக்கடி சரக்குகள் கல்வத்தில் ஒட்டிப் பிடித்துக்கொள்ளாம லிருக்கவும், எல்லாச் சரக்குகளும் சமமாய் மிஸ்ரமிக்கும்படியாகவும் தந்தக்கத்தியால் அல்லது மரக்கத்தியால், சுரண்டிக்கொடுத்து வரவேண்டும்.

குறிப்பு

மேற்கண்ட ரசத்தைப் பின்காணும்விதமாக 'மலரவைத்துப் பின்பு குப்பைமேனிச் சாற்றைவிட்டரைத்து முன்போற் புடமிட்டெடுத்துக் கொண்டால் இரசம் ஜனிக்காம்லிருப்பதுடன் துவாதசிந்தூரமும் விசேஷகுணமுள்ளதாம். அம்முறையிது.

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-12 ½, சீனக்காரம் பலம்-10, கல்லுப்பு பலம்-5, ஆரம்பத்தில் இம்மூன்று சரக்கையும் தனித்தனிக் கல்லுரலிலிடித்துப் பின்பு மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய் மசியும்படியிடித்து, இரண்டுபங்காக்கி ஒருபங்கை திராவகசீஷாவிலிட்டுப் பாகப்படி திராவகம் இறக்கி, இத்திராவகத்தை மற்றொருபங்குடன் சேர்த்து முன்போலவே சீஷாவிலிட்டுத் திராவகமிறக்கிக் கார்க்குள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தவும், 1¼ வராகனெடை சுத்திசெய்து ரசத்தை ஒரு பீங்கான் கோப்பையில் விட்டு அது முழுகும்படியாக முன் திராவகத்தைவிட்டுக் கடு வெய்யிலில் வைத்துவர, அந்தரசமானது - 4-5 -தினத்தில் பூர்த்துப்போம்.

Koviloor Digital Library

பூர்த்துப்போகாமல் ஏதேனும், இரசம் எஞ்சிநின்றால், பூர்த்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு, எஞ்சினரசத்தில் முன்போல் அந்தத் திராவகத்தைவிட்டுப் பக்குவப் படுத்தினால் முற்றும் பூர்த்துப்போம். இவ்விதம் பூர்க்கவைத்து முன்சொல்லி யிருப்பதுபோல குப்பைமேனிச் சாற்றைவிட்டரைத்துக் குழம்புபதமாய் முட்டை யோட்டிற்குள்விட்டு மூடிமேற் சொன்னபடி புடமிட்டெடுத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்துகொள்வதே சிரேஷ்டமான குணத்தைத்தரும்.

மேற்கண்ட திராவகத்தைச் செய்துகொள்ளக் கூடாதபட்சத்தில் இங்கிலீஷ் மருந்து கடைகளில் விற்கும் காரமான வெடியுப்பு, திராவகத்தாலும் (Strong Nitric Acid) முன்கண்டபடி செய்துகொள்ள வேண்டும்.

(f) பின்பு அஸ்திமுதலியவைகளும் கருப்புவர்ணமுள்ள கருங்கோழியின் முட்டை அல்லது பின் சொல்லப்படும் முறைப்படி தீனிகொடுத்து வளர்க்கப்பெற்ற கோழியின் முட்டை-12, இவற்றையுடைத்து, மஞ்சட்கருக்களைமாத்திரம் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய்க்கலக்கி மிஸ்ரமித்து வைத்துக்கொண்டு முன் மருந்திற் சிறுகச்சிறுக விட்டரைக்கவேண்டும் இவ்விதம் கைவிடாமல் நான்குசாமமரைத்து, ஒரு தம்படி பருமனான சிறு பில்லைகளாகச் செய்து பீங்கானில் வைத்து வெய்யில் உலரவைக்க வேண்டும். ஈரப்பசையின்றி உலர்ந்தபின்பு, கல்வத்திலிட்டுப் பொடித்து சந்தில்லாமல் வாய்கள் பொருந்தும்படியான இரண்டு புதிய ஓடுகளைச் சித்தப்படுத்தி ஒன்றில் முன்பொடியைச் சமமாகப்பரப்பி மேலோடுமூடி வாய்க்கு ஏழுசீலைமண் செய்து சந்து பந்தனஞ்செய்து வெய்யிலில் நன்றாயுலர வைத்து ஒருபடி கொள்ளும்படியானதும் அடிகனமாயுள்ளதுமான ஒருபானையில், புடைத்துப் பெருமணல், நொய்மணல் ஆகியவைகளை நீக்கப்பெற்ற நடுத்தரமான மணலை நான்குவிரற்கனம் பரப்பி, அதன்மேல் முன் மணலைக்கொட்டி பானைவாய் மட்டமானபின், மனைவாயைச் சாணகியால் மூடி, இதற்கும்-4-அல்லது-5-சீலைமண்செய்து, சிந்தூர அடுப்பில்வைத்து வேப்பம்விறகு, ஆவாரைவிறகு, கருவேலன் விறகு என்னும் இவற்றுள் ஒருவகை விறகால் முதற்சாமம் தீபாக்கினியாகவும் இரண்டாம் சாமம் கமலாக்கினியாகவும்; மற்ற இரண்டுசாமமும் காடாக்கினியாகவும் எரித்து, அடுப்பின்மீதிருந்தபடியே ஒருநாளாறவிட்டு மறுநாள்பிரித்து, அதிக சாக்கிரதையுடன் எடுத்து, அகலிலுள்ளதைக் கல்வத்திற் பொடித்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும். இது ஒருவித கருஞ்சாயலான சிவப்பாயிருக்கும்.

குறிப்பு

சில சமயங்களில் சில இடங்களில் அசல்தரமான கருங்கோழி அகப்படுவது துர்லபமா யிருக்கிறபடியால் பின் காண்கிறபடியும் சித்தம் செய்துகொள்ளலாம்.

இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், கவுரிப்பாஷாணம், அரிதாரம், சாதிலிங்கம், மனோசிலை, வெள்ளைப் பாஷாணம், துரிசு, பால்துத்தம், படிக்காரம், வெடியுப்பு, வெண்காரம், இப்பன்னிரண்டு சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் முன்னர்

Koviloor Digital Library

அரைத்துத் தொந்தித்துப் பின்பு மற்றச் சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து, சிற்றாமணக்கெண்ணெயை அல்லது சேராங்கொட்டை யெண்ணெயைச் சிறுகச்சிறுகவார்த்து-2-சாமமரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து அப்பில்லைக ளொவ்வொன்றையும் பட்டுத்துணியில் தனித்தனியாக சுற்றி அவசியமானால், அதன்மேல் நூலாலும் சுற்றிக் கெட்டிப்படுத்தி, ஒரு அகலில் பில்லைகளைப்பரப்பி, மேலகல்மூடி சீலைமண் செய்யாமலே சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு சாண் சதுரமுள்ள குழிதோண்டி ஒருவிரற் கனமுயரம் மணலைப்பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின மருந்தைவைத்து அதன்மேல் குழிநிறைய மணலைக்கொட்டி, அதன்மேல்-6-பலமுள்ள பத்து வராட்டிகளையடுக்கிப் புடமிட்டாறின பின்னெடுத்து, ஓட்டிலுள்ள மருந்தைப்பொடித்து, ஒருபடி கருங்குருவை அரிசிமாவுடன் அல்லது அந்தத்தவிடுடன்சேர்த்து, முட்டையிடும் பருவத்திற்குச் சமீபித்திருக்கிற விடப்பெட்டைக் கோழிக்குப் பிரதிதினமும் சிறுகச்சிறுக, முன் சித்தப்படுத்தின மாவைக்குழைத்துத் தீனியாகக்கொடுத்து வரவேண்டும். கூடினவரையில் வேறுவகைத் தீனிகளைப்புசிக்க ஏதுவில்லாமல் அதனையொரு தனிக்கூட்டிலடைத்து வைப்பது உத்தமம். இத்தீனி முழுவதையும் கொடுத்தபின்பு அக்கோழியிடு முட்டைகளை சாக்கிரதையுடன் எடுத்து முன்முறையிற் சேர்த்துச் செய்வது அசல்தரமான கருங்கோழியின் முட்டைக்குச் சமானமானதென்பது அனுபவசித்தம். சந்தேகமுள்ளவர்கள் இதனைச்செய்து பரிட்சித்துக் கொள்ளலாம்.

துவாதச சிந்தூரத்தின் பிரமாணம் :- காற்பணவெடை அல்லது முக்காற் குன்றி மணியெடை உத்தமம்; அரைப்பணவெடை அல்லது -1½ குன்றிமணியெடை மத்திமம், முக்காற்பணவெடை அல்லது-2¼ குன்றிமணியெடை அதமம், ஒருபணவெடை அல்லது-3-குன்றிமணி யெடை அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- அசாத்திய குஷ்டங்கள் தவிர மற்றெல்லாவகைக் குஷ்டங்களும் அதனதன் அனுபானங்களிலிடத் தீரும்.

கவனிப்பு.

அசாத்திய குஷ்டங்கள் தவிர மற்றெல்லாவகைக் குஷ்டமும் அதனதன் அனுபானங்களிலிடத் தீருமென்றமையான், சாத்திய குஷ்டம் இவைகளெனவும், அசாத்திய குஷ்ட மிவைகளெனவும், அல்லது ஒவ்வொன்றின் அனுபானங் களிவைகளெனவும் தெரிந்துகொள்வது அவசியம். ஆகையால் அவற்றின் விபரங்களை எழுதுவோம்.

குஷ்ட ரோகப் பிறப்பும் பொது லக்ஷணமும்.

வழமைக்கு விரோதமான அன்னபானாதிகளாலும், மிகவும் இலேசான அல்லது மிகவும் கனமான அன்னபானாதிகளாலும், கடு வெய்யிலில் அடிக்கடியிருக்க

Koviloor Digital Library

நேரிடுவதாலும், மலம், மூத்திரம் ஆகியவைகளின் வேகத்தை யடக்குவதாலும், அடிக்கடி கடினமான நெருப்புக் காய்வதாலும், மிதத்திற் கதிகமாய் ஆகாரத்தை வழமையாய்ச் சாப்பிட்டு வருவதாலும், உஷ்ணம், சீதளம் என்பவைகளின் சுபாவத்தைத் தன் தேககசுபாவத்திற்கு விரோதமாக அதிகமாயாவது குறைவாயாவது அநுபவித்து வருவதாலும், பயம், சந்தோஷம் ஆகியவைகள் திடீரெனவுண்டாகி தேககசுபாவமானது அக்கிரமப் பட்டிருக்கும்போது குளிர்ந்த ஜலபானஞ் செய்வதாலும், அஜீரணத்தாலும், அஜீரணமாயிருக்கும்போது ஆகாரத்தைக் கொள்வதாலும், வாந்திக்கு அல்லது பேதிக்குச் சாப்பிட்டிருக்கும்போது அவபத்தியம் செய்வதாலும் ஆற்றுப் புதுஜலபானத்தாலும், எருமைத் தயிர், மீன்வகைகள், உவர்ப்புவஸ்துக்கள், தித்திப்பு வஸ்துக்கள், உளுந்து, முள்ளங்கி, மாத்தினுசுகள், மஞ்சள், எள்ளு முத்லிய வஸ்துக்களை தொடர்ச்சியாய் மிதமிஞ்சி சாப்பிட்டு வருவதாலும், பகல் தூக்கத்தாலும், பெரியோர்களின் சாபத்தாலும், பரம்பரை சம்பந்தத்தாலும், மிதமிஞ்சின ஸ்திரி சங்கமத்தாலும் துஷ்டரோகமாகிய குஷ்டரோகம் பிறக்கும்.

குஷ்டரோகத்திற்கு குறைநோயென்றும், பெரு வியாதியென்றும் சொல்லப்படும். ஆயுர்வேத சாஸ்திரிகளுள் பெரும்பாலார் கருத்தாவது இந்த ரோகம்-18-வகைப்படும். இது மிகவும் கெட்டரோகம், இது உறுப்புகளைக் குறையச்செய்து, அவற்றின் சுபாவ உருவத்தையழித்து அவலக்ஷணமாக்கிவிடும். தேகத்தை யழுகவைத்து விழுகச்செய்யும். முக்கியமாய்க் கை கால்களின் விரல்கள் குறைவதைக்காணலாம். துர்வாசனைத் தண்ணீர் கசிந்துக்கொண்டேயிருக்கும். கண்கள் சிறுத்துப்போம். முகமானது புலிமுகத்தைப் போல வட்டாகாரமாகிவிடும். சுருக்கிச்சொல்லின் அகத்தில் இராஜகருவிகள் வரையில் ஊடுறுவிச்சென்று அவற்றையும் நாசப்படுத்து மென்பதே.

இதன் பிரதான காரணமாவது :- வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று தோஷங்களும் தன் சுபாவ ஸ்திதியைவிட்டு மாறுபட்டு கெட்டுவிடுவதேயாகும். இவ்விதம் தனித்தனி கெட்டுப்போன சுபாவதோஷத்தாலும் இவ்வியாதி யுண்டாகும். இதுவே சத்தியமாம், மேற்கண்டபடி கெட்டுப்போன தோஷங்கள் ஒன்றோடொன்று தொந்தப்பட்டும் மேற்படி ரோகமானது உண்டாவதுமுண்டு. இவ்விதம் உண்டானதே அசாத்தியமாம்.

இன்னும் வேறு சில கிரந்தங்களிற் சொல்லப்பட்டிருப்பதாவது இந்த ரோகமானது முக்கியமாய் இலகு குஷ்டம் மகா குஷ்டமென இருவகையாய்ப் பிரிக்கப்படு மென்பதே.

முதலாவது : - வண்டலால்கனத்து அசுத்தமான இரத்தத்தால் உண்டாகும். இதன் லக்ஷணம் ஆரம்பத்தில் அவயவத்தின் உணர்ச்சி கெடுதல், அவயவங்கள் கெட்டு உருமாறுதல், இதில் ஆரம்பத்தில் அவயவங்கள் குறையாது, ஆனால் நாட் செல்லச்செல்ல அவயவங்களில் ரணம், குறைதல் முதலியவைகளுண்டாம். குரற்கம்மல் முதல் அல்லது குரலோசை மாறுபடுதல், மூக்கு சப்பட்டையாதல் கண்கள் வட்டாகாரமாதல் மயிர் உதிர்தல் என்னும் இந்த லக்ஷணங்களையுடைய

Koviloor Digital Library

குஷ்டரோகமானவை யிலகுவானவைகளாம். இவை மருந்திற்கு வசப்படும். தக்க சிகிச்சை செய்யின் கடவுளினது கிருபையால் சீக்கிரமும் குணமாகிவிடும்.

இரண்டாவது :- பித்ததோஷமானது, எரிந்துண்டாவது, அதன் லக்ஷணம் இது எந்த அவயவத்தையும் குறையச்செய்யாம லிருக்கவேமாட்டாது. இதன் ஆரம்பத்தில் கண், முகம் ஆகிய இவற்றின் வர்ணம் கருஞ்சாயலான சிவப்பாதல், கஷ்டசுவாசம், மூச்சு திக்குமுக்காடல், அதிகத்தும்மல், மூக்கில் நாற்றம், அதிகவியர்வை, மனக்கலக்கம், சப்தங் கீச்சிடல், மயிர்வளர்தல், அவை அதிகங்கறுத்தல், நகங்கள் வெடித்தல் உதடுதடித்தல், கட்டிகள், கொப்பிளங்களாகியவை உடைதல், என்னும் இக்குணங்களை யுடையவைகள் மகாகுஷ்டங்களாம். இது மருந்திற்கு வசப்படாது என்பதே.

இன்னும் வேறு சில கிரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கும் குஷ்டபூர்வ லக்ஷணம் பின் வருபவைகளாம்.

தேகமானது பளபளப்பாயிருக்கும், சரீரத்திலும் முக்கியமாய் முகத்திலும் பேதப்படுகிற நிறமுண்டாகும், தேகத்தின்மீதுள்ள தோலானது அதிகெட்டியாய்த் தடித்திருக்கும். அந்தத்தோலின்மீது தொட்டவிடத்தில் தினவுண்டாகும். சிலவேளை வியர்வையுண்டாகும்; சிலவேளை வியர்வை யுண்டாகாதிருக்கும்; தேகத்தில் நோவு, எரிச்சல், ரோமச்சிலிர்ப்பு ஆகியவைகளுண்டாகும், தேகத்திற் கொஞ்சமாய்க் காயம்படினும் பெரியரணமாகி அதில் கறுத்த இரத்தம் வடியும். பேசும்போது தொண்டை வரண்டுபோகும். எப்போதும் நித்திரையின் மீதே பிரியம். இந்தரோகிக்கு, சீக்கிரத்தில் பிறந்து நெடுநாட்கழித்தும் ஆறாத குழிகள்விழுந்து கெட்டிப்பட்டுக் குத்தலைத் தருகின்ற பலபல உபத்திரவமுள்ள ரணங்களுண்டாம். இந்த லக்ஷணங்களே குஷ்டரோகங்களுக்குப் பொதுவானவைகள் அல்லது பூர்வ மானவைகளாம்.

இந்த ரோகமானது முன்சொன்னது போலவே வாதம், பித்தம், சிலேஷ்மம், வாதபித்த சிலேஷ்மதொந்தம், வாதபித்த சிலேஷ்மதோஷம், என்னும் அசுத்தசத்துகளாற் பிறந்து, அவ்வவற்றின் அதிகங்குறைவிற்குத் தக்கபடி பற்பல விகற்பலக்ஷணங்களை யுண்டுபண்ணும்.

சாத்தியா அசாத்திய குஷ்டலக்ஷணம்

முன் சொல்லப்பட்டதுபோலவே, வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று தோஷங்களு ளொவ்வொன்றுந் தனித்தனி மேற்படி ரோகத்திற்குக் காரணமாயிருந்து அதனுடன் மற்றொரு தோஷமுஞ் சேர்ந்து தொந்தமாயினும், மூன்று தோஷமும் சேர்ந்து திரிதோஷமாயினும் அசாத்தியமாம். இன்னும் எவ்வித குஷ்டரோகிகட்கேனும் தேகமெல்லாம் அழுகும்படியான ரணங்கள்பிறந்து அவைகளில் கிருமிகள் நிறைந்து, இரண்டுகண்களும் கோவைப்பழம்போல சிவந்து வேற்றுக்குரலும் அக்கினிமந்தமும் அதிசாரமும் தாகமுமுண்டாகில் அசாத்தியமே.

இக் குணங்களில்லாதிருக்கில், சாத்தியமாம்.

Koviloor Digital Library

குஷ்டரோகப் பொதுசிகிச்சை

வியாதிக்குக் காரணமான அசுத்த தோஷத்தைப் பேதிக்குக் கொடுத்து வெளிப்படுத்த வேண்டும். இப்பேதிமருந்தை, தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்கேற்றவிதமாய் இடையிடையே விட்டுவிட்டுக்கொடுத்துச் தோஷத்தை நீக்குவது சுலபமார்க்கம். கூடுமானால் இரத்தங்குத்தியும் வாங்கலாம். தேகத்திலுள்ள வரட்சியை நீக்க முயற்சி செய்ய வேண்டும். இதற்காக பசுவின் வெண்ணெயையும் முலைப்பாலையும் மத்தித்துத் தேகத்தின்மீது பூசிவரலாம். மூக்கிலும்சொட்டிவரலாம். இலகுவாய் ஜீரணிக்கத்தக்கவைகளும் கொழுமையுமானவைகளுமான ஆகாரங்களை உபயோகித்து வரவேண்டும். இதற்காக, பசும்பால், சர்க்கரை ஆகியவைசேர்ந்த வாதுமைப்பருப்புப் பாயாசம், பட்சிகளின் இறைச்சி, அரைவேக்காடான முட்டைமஞ்சட்கரு, ஆகியவைகளும் இவைபோன்றவைகளும் ஏற்றவைகள். எல்லாவித ஆகாரங்களைப்பார்க்கிலும் வெள்ளாட்டுப்பால் மிகவும் சிரேஷ்டமானது. மாமிச வகைகளில் நல்ல பாம்பினிறைச்சி விசேஷமானதென ஆயுர்வேத பல சாஸ்திரங்கள் கூறுகின்றன. அசுத்த தோஷங்களை விர்த்திசெய்ய ஏதுவான மாட்டிறைச்சி, பருப்பினங்கள், உப்பினங்களாகியவைகளை அறவே நீக்கவேண்டியது.

இரண்டாவது வகையான மகாகுஷ்டரோக முற்றுந்தீருவது கஷ்டமாயினும், அசுத்த தோஷங்களைச் சுத்திசெய்து, நல்லிரத்த முண்டாகும்படியான வழியைத்தேடி கொழுமையையுண்டாக்கும் முறைகளை அனுசரிக்கவேண்டும். முற்றுந் தீரா்தேயென அதைரியத்துடன் எவ்விதசிகிச்சையும் செய்யாமல் விட்டுவிடுவது முறையன்று. தகுந்த சிகிச்சையால் ரோகமானது மீறாது சாந்தமாகவாவது ஏதுவாகு மென்பது திண்ணம்.

துவாதச சிந்தூரத்தின் அநுபானம்.

(1) பித்த தோஷத்தால் தேகத்தின் சருமமெல்லாம் உருத்தலுடன் சிவத்தல், சுறசுறப்பு, எண்ணெயைத் தடவினதுபோலிருத்தல், தேகம்வெளிறல், எரிச்சல், வேதனையுண்டாதல், சிவந்ததடிப்பு, முடிவில் கறுப்புநிறக் கொப்பிளங்கள் எழும்பிப் பின்பு ரணங்களாதல், அவற்றில் சினைத்தண்ணீ ரொழுகுதல், அதிக ஊரல் உண்டாதல், வயிற்றிசிவு, சஞ்சலம், கோபம் ஆகியவைகளும் உண்டாதல் என்னும் இக்குணங்களை யுடைய குஷ்டரோகத்திற்கு ¼-½-பலம் வல்லாரைச் சூரணத்துடன் மேற்படி துவாதச சிந்தூரத்தை சமயோசிதமாகப் பிரமாணப்படி சேர்த்துக் கொடுக்கத்திரும். இதனுடன் தேகத்தின்மீது இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் கீட்டக்குழித்தைலத்தை மேலுக்கும் உபயோகித்து முன்கண்டபடி பத்தியத்தையும் கையாடிவரில் கடவுளினது கிருபையால் மேற்கண்டரோகங்குணமாம்.

வல்லாரைச் சூரணம்

வல்லாரைச் சமூலத்தையும் செத்தை, அன்னிய ஜாதியிலை முதலியவை களில்லாமல் ஆராய்ந்து சுத்திசெய்து, நிழலிலுலர்த்தி, ஈரப்பசையின்றி உலர்ந்தபின்பு, முடிவிலொருநாள் நல்லவெய்யிலிலுலர்த்தி மரவுரலிலிடித்து வஸ்திரகாயஞ்செய்து

Koviloor Digital Library

மூடியுள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். இச்சூரணம் சீக்கிரங்கெட்டுப் போகும் சுபாவமுடைய தாகையால் குறைந்தபட்சம் இரண்டு வாரத்திற்கொருமுறை புதிதாய்ச் செய்து கொள்வது உத்தமம்.

(2) வாத சிலேஷ்ம அசுத்ததோஷத்தால், வெண்மை, பீதம், இரத்தம் என்னும் நிறங்களுடன் தடிப்பான ரணங்கள் பிறந்து அவைகளில் எரிச்சல், தினவு, முதலியவை உண்டாகும். இன்னும், தேகத்தில் கரடுகட்டல், சருமம் பாம்புத்தோலைப்போல் திரைந்து தொங்குதல், நாசி, கண், காது, கன்னம் ஆகிய இவைகளில் மிகுதடிப்பு, என்னும் இக்குணங்க ளுண்டாம். சிலருக்கு தேகத்தில் சிவந்தும், கறுத்தும், அடியகன்றும் அநேகக்கொப்பிளங்கள் எழும்பிச் சர்வாங்கத்திலும் பரவப்பட்ட ரணங்களுமுண்டாம். இந்த லக்ஷணங்களையுடைய குஷ்டரோகத்திற்கு ஷதாரு (Shathara) குஷ்டமெனப் பெயர். இதற்கு மேற்படி துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி சமயோசிதமாய்-1-2-வராகனெடை துராவாதிச் சூரணத்துடன் அநுபானித்துக் கொடுத்துவர வேண்டும். இக்கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற குட்டத்தெண்ணெயையும் மேலுக்குப்பூசிவர வேண்டும். இவ்விதம் செய்து முன் கண்ட பத்தியத்துடனிருக்கில் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகந்தீரும்.

துராவாதிச் சூரணம்

உலர்ந்த துராயிலைச்சூரணம் வராகனெடை -16 ½-சுத்திசெய்யப்பட்ட சிவதைவேர்த்தோற் சூரணம், தங்கம்விதைப் பருப்புச்சூரணம், மஞ்சட் கடுக்காய்த் தோல் சூரணம், தான்றிக்காய்த்தோல் சூரணம், நெல்லிமுள்ளிச் சூரணம், இவை வகை-1-க்கு வராகனெடை-16½, கார்போகரிசிச்சூரணம் வராகனெடை6 ½

செய்முறை :- சூரணங்களையெல்லாம் ஒன்றாய் மிஸ்ரமித்துக் மூடியுள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம் :- வராகனெடை-1-1½ இச்சூரணம் எல்லாவித குஷ்ட ரோகங்களுக்கும் உபயோகமாம்.

குறிப்பு

மேற்கண்ட சரக்குகளைக் சூரணஞ்செய்யாமற் சிதைத்துக்கலந்து, அதில் வரானெடை-5-7-எடுத்து, ஒரு ஆழாக்குசலத்திலிட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டினபின்னிறக்கி வடிகட்டிப் பானஞ்செய்விக்கலாம். இக்கிஷாயத்தைத் தனியாகவும் உபயோகிக்கலாம். இதனைக் குஷ்டத்திற்கான மருந்துகளுடன் உபயோகித்தால், விசேஷகுண முண்டாமென்பதிற் சந்தேகமில்லை.

(3) தனி அசுத்தபித்த தோஷத்தால் தோலானது மஞ்சள் நிறமாயும், சிவந்தநிறமாகவும், மீன்களின் சிதளையொத்துச் சுறசுறத்துத் தடித்துக் கிள்ளினால் உபத்திரவமில்லாமலும், காயம்பட்டால் தெரியாமலும் இருத்தல், சர்வாங்கத்திலும் அடிக்கடி வியர்வையுண்டாதல், சிலருக்குத்தோலானது பசுமை, வெண்மை,

Koviloor Digital Library

கருமையென்னும் இவ்வண்ணங்களாகித் தினவுடன் தடித்தல், அதில் சீழ்வடிதல், வயிற்றிலும், மர்மஸ்தானத்திலும் சொறியுண்டாதல், எரிச்சலுடன் காங்கை, வயிற்றில் துண்டுதுண்டாகிய தடிப்பு, என்னும் இந்த லக்ஷணங்களையுடைய குஷ்ட ரோகத்திற்கு திமிர்வாயு, மேகப்புடை, சர்மகுஷ்டம், ஏககுஷ்டம் நயெனப் பலநாமங்களாய் வழங்குகிறார்கள். இதற்கு, துவாதசசிந்தூரத்தைப் பிரமாணப்படி-3 ¼ வராகனெடை நிம்பபஞ்சாங்கச் சூரணத்துடன் அனுபானித்து உட்கொண்டு வருவதுடன், இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித்தைலத்தையும் மேற்பூச்சாகப் பூசிவரவேண்டும். தகுந்த பத்தியத்துடன் மேற்கண்ட பிரயோகங்களைச் செய்துவரின் கடவுளினது கிருபையால் முன்ரோகந்தீரும்.

நிம்பப் பஞ்சாங்கச் சூரணம்

முற்றின வேப்ப வேர்ப்பட்டை. மேற்படி வேப்பமரப்பட்டை, மேற்படி வேப்பிலை, மேற்படி வேப்பம்பூ, வேப்பவிதைப்பருப்பு, இவ்வைந்தையும் தனித்தனி யுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-3¼ மிளகுச்சூரணம், ஓமச்சூரணம், துராயிலைச்சூரணம் இவைவகை-1-க்கு வராகனெடை-7½ அரிசித்திப்பிலிச் சூரணம் வராகனெடை-3¾.

செய்முறை:- இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் மூடியுள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- வராகனெடை-3¼-4, இதனை யுட்கொண்டு அரைப்பலம் தேனையும் அவ்வளவு ஜலத்தையும் கலந்து அதன்மேல் பானம்செய்யவேண்டும்.

பிரயோஜனம்:- ஆரம்பமாயுள்ள எல்லாக் குஷ்ட ரோகங்களுக்கும் இதனைத் தனித்தனியாகவும், அதற்குரிய பிரதான அவுடதங்களுடன் அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

(4) கபமெரிந் துண்டான அசுத்தவாத தோஷத்தால் சரீரத்தின் சர்மமெல்லாம் யானைத் துதிக்கைச் சர்மம்போல் தடித்துக் கெட்டிப்பட்டு பிகுவுடன் சுறசுறத்துப் பார்ப்பதற்கு விகாரமாயிருத்தல், வியர்வையுண்டாதல், கைவிரல், கால்விரல், ஆகியவைகள் குறைதல், தேகமுழுவதுந் தோலுரிந்து சிவத்தல், வறவறப்பு, சொறி, தினவு, திமிர், கால்விரல்கள் கனத்தல், சர்வாங்கத்திலும் தடிப்பு, வீக்கம் என்னும் இக்குணங்களையுடையதற்குப் பதகரிகுஷ்டம் அல்லது ஏகசாம குஷ்டம் அல்லது கஜசர்ம குஷ்டமெனப் பெயர். இக்குஷ்டத்திற்கு இத் துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி இம்மூல கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் கந்தகரசாயனத்துடன் அனுபானித்துக் கொடுத்து வருவதுடன், இம்மூலகிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித் தைலத்தையும் மேற்பூச்சாக உபயோகித்து ஆங்காங்கு சொல்லப்படும் பத்தியக்கிரமங்களையும் அனுசரித்துவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகங் குணமாம்.

Koviloor Digital Library

(5) கபமெரிந்துண்டான அசுத்தவாத தோசத்தால், கொப்பிளங்கள் சுடுகையுடன் எழும்பி, ரணங்களாதல்; அவைகளில் அதிக நமைச்சலிருப்பதால் சொறிந்தவிடத்திற் காய்ப்பேறினதுபோலச் சுறசுறத்துத் தடிப்புகளுண்டாதல், அன்றியும் சர்வாங்கமும் பச்சை நிறம், கனத்தல், யானைத்தோலைப்போலிருத்தல், அடிக்கடி நீரிறங்கல் தேகத்தில் சினைத் தண்ணீர் வடிதல், நாற்றம் என்னும் இக்குணங்களை யுடையதற்கு கிடிப (Kitibha) குஷ்டமெனப் பெயர். இக் குஷ்டரோகத்திற்கு துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி, 1-வராகனெடை இதன் மூலகிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் இடிவல்லாதியுடன் அனுபானித் துட்கொண்டு வருவதுடன், இதன் மூலகிரந்த குட்டக்குழித் தைலத்தையும் மேற்பூச்சாகப் பூசி, தக்க பத்தியத்துடன் நடந்தால் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகந்தீரும்.

(6) கப மெரிந்துண்டான வாததோஷத்தால், அனேகம் புடைகள் பெரும் பான்மையும் ஊர்த்துவ காயமான நாபிக்குமேல் கொஞ்சம் வெளுத்த சிவப்புடன் பாலைப் பூவைப்போல பிறக்கும். அவைகளின்மேல் மினுமினுப்பும், சொறிந்தால். சருமத்தூள் விழுவதும், அவ்விடங்களில் வழுவழுப்பதும், காங்கையுண்டாவது மாயிருக்கும். சிலசமயம், சரீரமுழுவதும் சுரைப்பூ நிறமாகத் திமிருடன் தடிப்புக்காணும். மஞ்சள்நிறம் அதில் ரத்தங்கசிதல், சகிக்கவொண்ணாத திமிர், மற்தி என்னும் இக்குணங்களையுடைய அதற்கு ஸீத்ம (Seedhma) குஷ்டமெனப்பெயர். இந்த ரோகத்திற்கு மேற்படி துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி பனவெல்லத்திற்குட் பொதிந்துட் கொண்டு அதன்மேல் இலகு மஞ்சிஷ்டாதிக்கஷாயத்தைப் பானஞ்செய்ய வேண்டும். அதனுடன், இதன் மூலகிரந்த திமிர்ப்பிரயோகத்தையும் உபயோகித்துப் பத்தியமாய் நடந்துகொண்டால் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகந்தீரும்.

இலகுமஞ்சிட்டாதிக் கிஷாயம்.

மஞ்சிட்டி, கார்போகரிசி, முற்றின வேப்பமரப் பட்டை, மஞ்சட்கடுக்காய்த் தோல், மரமஞ்சள், நெல்லிமுள்ளி, ஆடாதோடை வேர்ப்பட்டை, சதாவேரிக்கிழங்கு, பொற்றலைக் கையாந்தகரைவேர், மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், இலுப்பைமரப் பட்டை, குட்டிவிளாவேர், விலாமிச்சவேர், மேற்புறணி நீக்கப்பட்ட சீந்திற்கொடி, செஞ்சந்தனம், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு இவை வகை-1-க்கு வராகனெடை 1¼. இவ்வளவும் ஒருவேளையின் அளவாகையால் கணக்கின்படி வேண்டியவரையில், சித்தம் செய்து கொள்ள வேண்டும்.

செய்முறை :- இவைகளெல்லாவற்றையும் சிதைத்து-1½-ஆழாக்கு ஜலத்தி லிட்டுக்காய்ச்சி- ½ -ஆழாக்காகச் சுண்டினபின்னிறக்கி யிளஞ்சூடாயிருக்கும்போதே வடிகட்டின கஷாயத்தில்-1-வராகனெடை நல்ல தேனைவிட்டுக்கலந்து பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் தினம் காலை மாலை இரண்டுவேளையும் அப்போதைக் கப்போது கஷாயத்தைப் புதிதாய்ச்செய்து கொள்ளவேண்டும். ஆனால் காலையில் காய்ச்சவேண்டிய கஷாயத்தை அதற்கு முன்னிரவிலும், மாலையிற்காய்ச்ச வேண்டிய

Koviloor Digital Library

கஷாயத்தை அக்காலையிலும் ஊறவைத்துக் கொண்டால் மிகவும் சிரேஷ்டமாக விருக்கும்.

உபயோகம் :- எல்லாவித குஷ்டரோகங்கள், இரத்தபித்த ரோகம் ஆகியவை தீரும்.

(7) கபமெரிந்துண்டான வாததோஷத்தால் கால்களிலும், கைகளிலும், சிவந்தநிறமாயும், கடினமாயும். அதிகக் கொப்பிளங்களுண்டாகி ரணங்களாதல், இவைகளில் மிகுந்த உபத்திரவமும், அற்ப நமைச்சலும் உண்டாயிருத்தல், இன்னும் சிலருக்கு, தேகத்தில் வெடித்தல், சகிக்கக்கூடாத அருவெருப்பு, மிருகாங்கை, கை, கால், கண், காது, கண்டம் என்னும் இந்த ஸ்தானங்களில் வெடிப்புடன் வீக்கம், சர்பத்தை யொத்த தேககாந்தி என்னும் இக்குணங்களையுடையதற்கு பீபாதிகா (Beepathika) குஷ்டமெனப் பெயர். இந்த ரோகத்திற்கு, மேற்படி துவாதச சிந்தூரத்தை பிரமாணப்படி- ½ -வராகனெடை இலகு சீனச்சூரணத்துடன் சேர்த்து தேன்விட்டிழைத் துட்கொண்டு வருவதுடன், இதன்மூலகிரந்த குட்டக்குழித் தைலத்தையும் மேற்பூச்சாகப் பூசிப் பத்தியங் காத்துவரின், கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகங் குணமாம்.

இலகுசீனச் சூரணம்

பாலில் வேகவைத்துச் சுத்திசெய்யப்பட்டப் பரங்கிப்பட்டை வராகனெடை- 7½ சிவனார்வேம்பு வேர்ப்பட்டை, சிறுகுறிஞ்சா வேர்ப்பட்டை, தலைச்சுருளி வேர்ப்பட்டை, உலர்த்தின சங்கங்குப்பியிலை, சங்க வேர்ப்பட்டை உலர்த்தின வெள்ளறுகு சமூலம், உலர்த்தின கையாந்தகரைச் சமூலம், செங்கத்தாரி வேர்ப்பட்டை இவ்வெட்டுவகையையும் தனித்தனியாயிடித்த சூரணம் வகை-1-க்குச்சமனெடை.

செய்முறை :- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மிஸ்ரைமித்து ஒரு சீஷாவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம் :- வேளையொன்றுக்கு வராகனெடை- ¼ -½ காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம். இந்த மருந்தையுட்கொண்டு அதன்மேல் கொஞ்சம் தண்ணீர் குடிக்கவேண்டும்.

உபயோகம் :- வெண் குட்டம், கருங்குட்டம், புண், சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

(8) பித்தமும் சிலேஷ்மமுங்கெட்டு ஆரம்பத்தில் மண்டலாகாரமான கொப்பிளங்கள் எழும்பிப் பின்பு நசுங்கிக் கறுப்பகத்திப்பூ நிறத்தைப் பெற்ற ரணங்களாகும். அவைகள் தேகமுழுவதும், அறுகம் புற்றணுக்களைப் போல் தூரந்தூரமாக பிறந்து அதிக நமைச்சலையுண்டாக்கிக் கொண்டேயிருக்கும். இன்னும் சிலசமயம் தேகத்திற் சிவந்ததடிப்பு, வெளிறல், அதிகரோமம் முளைக்கினும் அவைகள் சுருளுதல், ஊதலுடன் திமிர் என்னும் இக்குணங்களுடையதற்கு தாதுரு குஷ்டமெனப் பெயர். இந்த ரோகத்திற்கு மேற்படி துவாதச் சிந்தூரம் பிரமாணப்படி,

Koviloor Digital Library

கீழ்க்காணும் சுயம்புக் குளிகையுடன் அநுபானித்துட் கொண்டு, இதன் மூலகிரந்த குட்டக்குழித்தைலத்தை மேற்பூச்சாகப் பூசிவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகம் தீரும்.

சுயம்பு மாத்திரை.

கார்போகரிசி, சுத்திசெய்த குக்கில், பெருமரத்துப்பட்டை, வேப்பம் வேர்பட்டை, வேப்பமரப்பட்டை, வேப்பிலை, வேப்பம்பூ, வேப்பம்விதைப் பருப்பு இவை வகை-1-க்குப் பலம்-3. குச்சி முதலியவை நீக்கப்பட்ட சூரத்து நில ஆவாரை பலம்-2, சுத்தி செய்யப்பட்ட சீமைச்சிவதை வேர்த்தோல், உலர்த்தின சீந்திற்கிழங்கு, கோரைக் கிழங்கு சித்திர மூல வேர்ப்பட்டை இவை வகை-1-க்கு வராகனெடை-13¼, அயச்சத்து அல்லது அயச்செந்தூரம் வராகனெடை - 1¼, உலர்த்தின சிவகரந்தை வராகனெடை - 1¾, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், மரமஞ்சள், பெருலவுங் கப்பட்டை இவை வகை-1-க்கு வராகனெடை-6½, வெள்ளரிவேர்ப்பட்டை வராகனெடை -6½, (இது நஞ்சின் பாவமுடைய தாகையால், இதனைப் பாலில் வேக வைத்து நன்றாய்க் கழுவியெடுத்துலர்த்தி மறுபடியும் பாலில் வேகவைத்து முன்போலவே செய்துலர்த்த வேண்டும். இவ்விதம் மூன்றுதடவை செய்துகொள்வதே இதன் சுத்தியாம். (இதனை வேகவைத்த பால் முதலியவைகளைப் பூமியிற் பள்ளந்தோன்றி யூற்றிப்புதைத்துவிட வேண்டும்.)

செய்முறை :- இவற்றுள் உரலிலிடித்துத் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்து வடிகட்டியும், அம்மியில் அல்லது கல்வத்தில் அரைக்க வேண்டிய வைகளை அரைத்தும், எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து மிஸ்ரமித்து அம்மியில்வைத்துப் பசுவின் நெய்யைச் சிறுகசிறுகவிட்டு, வெண் ணெய்போல அரைத்துச்சிறு உருண்டைகளாக உருட்டிக் மூடியுள்ள சீஷாவிற்பத்திரப் படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை -1-1¼ -பசுவின் கோமியத்துடன் உட்கொள்ளவும். இஷ்டமில்லாதவர்கள் வெந்நீருடன் உட்கொள்ளவும்.

உபயோகம் :- எல்லாவித குஷ்டங்களும், ரத்தபித்தரோகம், பாண்டுரோகம், இரைப்பை சம்பந்த வியாதிகள், இந்திரிய இழிவு முதலியரோகங்கள் தீர்ந்து முதுமைநீங்கி இளமையுண்டாகும்.

குறிப்பு

இதற்காகவேண்டிய அயச்சத்து, அயச் சிந்தூரம் முதலியவைகளின் முறையை நமது இரசவாத சிந்தாமணியிற் பார்வையிடவும்.

(9) பித்ததோஷமும், சிலேஷ்மதோஷமும் கெட்டுப்போய், கொப்பிளங்கள் மிகவும் உயர்ந்தும், முனையில் இரத்தநிறமும், நடுவில் வெண்மைநிறமும், உள்ளதாய் அரிப்பை யுண்டாக்கிக்கொண்டே யெழும்பித் தாமரைப்புஷ்ப நிறத்தையொத்த

Koviloor Digital Library

ரணங்களால் அவைகளில், நோவு, எரிச்சல், நமைச்சல் ஆகியவை அதிகரித்தல், ரத்தமானது தாமரையிலை ஜலம்போல ஒட்டாமல் நிற்றல், குழம்பான சிலைத்தண்ணீர் ஒழுகுதல், பின்பு குபீரென்று இரத்தம் சொரிவதுமாயிருத்தல், இன்னும், சரீரம், முகம், கால் இவைகளில் பலவர்ணமான ரணம், தினவு, பன்னீர்போல ஜலம்வடிதல், என்னும் இக்குணங்களை யுடையதற்குப் படர்தாமரை யென்றும் புண்டரீக குஷ்டமென்றும் சொல்லப்படும். இது பற்றறத் தீருவது கஷ்டமாயினும் இங்குகாணும் சிகிச்சைகளால் அதிகப் பிரயோசன முண்டாகும். இத்துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி, கீழ்க்காணும் கந்தகர சாயனத்துடன் அநுபானித்துட்கொண்டு, இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் குட்டக் குழித்தைலத்தையும் மேலுக்குபயோகித்துவர, கடவுளினது கிருபையால் மேற்படி குஷ்டம் முதலியவை தீரும்.

கந்தக ரசாயனம்.

பழுப்பு நிறமுள்ள நெல்லிக்காய்க் கந்தகம்-பலம்-10. (1) இத்னையொரு இரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின்நெய்யும் விட்டு சிறுதீயிலுருக்கி அரைப்படி பசுவின்பாலிற் சாய்க்கவேண்டும், நன்றாய்க் குளிர ஆறினபின்பெடுத்து, முன்போலவே யிரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின்நெய்யும் விட்டுருக்கி, முன்பாலை நீக்கிவிட்டு, அந்தச் சட்டியிலேயே வேறு அரைப்படி பசும்பால்விட்டு, அதில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி பசுநெய்வார்த்துருக்கியுருக்கித் தடவைக்குத்தடவை புதியபாலில்-7-தடவை சாய்க்கவேண்டும்.

(2) பின்பு இவ்விதம் பாலில் சாய்த்து சுத்திசெய்ததை முன் போலவே-7-தடவைகள் பசுவின்நெய்விட்டுருக்கி யுருக்கித் தடவைக்குத் தடவை- ¼ -படி வெங்காயச்சாற்றில் சாய்த்துக்கொள்ள வேண்டும்.

(3) பின்பு இக்கந்தகத்தைத் தூளாக்கிவைத்துக் கொள்க. ஒரு வாயகண்ட மண்பாத்திரத்திற் காற்படி பசுவின்பாலைவிட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய சேலைத்துண்டை வேடுகட்டி, முன் கந்தகத் தூளைப்பரப்பி அதன்மேல் ஒரு சாணகியால் மூடி, சாணகியின் உதட்டின் சுற்றிலும் ஒரு அங்குலம் மறையும்படியாகப் பூமியிற்புதைத்துச் சுமார்-50-பலம் விராட்டியையடுக்கிப் புடமிட்டாறினபின்னெடுக்க, கந்தக மெல்லாமுருகிப் பாத்திரத்திற்குள்ளுள்ள பாலில் விழுந்திருக்கும். அதையெடுத்து அதிலுள்ள ஈரத்தை மெல்லியவஸ்திரத்தால் துடைத்து, மறுபடியும் தூளாக்கி முன்போலவே பால்விட்டு வேடுகட்டி முன்போலவே புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்துகொள்வதே கந்தகசுத்தியாம்.

குக்கில் அல்லது மைசாட்சி பலம்-5, இதனை ஒரு மெல்லிய வஸ்திரத்தில் தளரமுடித்து கட்டிக்கொள்க. ஒரு மண் பாத்திரத்தில்- ½ -படி கொள்ளை போட்டு அதனுடன் -1-படி ஜலத்தையும்விட்டு மேற்படி குக்கில் முடிச்சையும்போட்டு, கொள்ளானது நன்றாய் வெந்து மலர்கிறவரையில் வேகவைத்துக் கழுவி

Koviloor Digital Library

ஈரப்பசையில்லாமற் பக்குவம்செய்து மறுபடியும் மெல்லிய சேலைத்துண்டுக் முடிந்துகொள்க. ஒரு மண்பாத்திரத்தில்-10-பலம் முற்றின வேப்பம்பட்டையை நையநறுக்கிப்போட்டு, அதில்-1-படி ஜலம்விட்டுக்காய்ச்சி அரைப்படியாகச் சுண்டினபின்னிறக்கி யிளஞ்சூட்டுடன் வடி கட்டின கஷாயத்தை வேறொரு பாத்திரத்தில்விட்டு, முன் குக்கில் முடிச்சையும் போட்டு, மூன்றுகொதிகள் வருகிறவரையிற் காய்ச்சியெடுத்து நிழலில் ஈரப்பசையில்லாம லுலர்த்திக்கொள்வதே குக்கில் சுத்தியாம்.

தேவையான பறங்கிப்பட்டையையிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்துகொள்க. ஒரு மண்பாத்திரத்தில் தக்க பசுவின்பால்விட்டு, பாத்திரத்தின்வாய்க்கு மெல்லியவஸ்திரத்தால் வேடுகட்டி, அதன்மேல் முன் சூரணத்தைவைத்து மேற்சட்டிமூடி, அடுப்பேற்றி, சூரணம் வேகிறவரையில் எரித்துச் சூரணத்தை நிழலிலுலர்த்தி, நன்றாயுலர்ந்தபின்பு, மறுபடியும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்வதே பறங்கிப்பட்டைச் சுத்தியாம்.

கொடிவேலிவேர்ப் பட்டையையும் பறங்கிப்பட்டையைப் போலவே சுத்திசெய்து கொள்ள வேண்டும்.

இரசகர்ப்பூரம் ஒரேகட்டியாய் பலம்-1. இதனை ஓட்டிலிட்டுச் சிறுதீயாயெரித்து முலைப்பாலால்-2-சாமமும், முசுமுசுக்கைச்சாற்றால்-2-சாமமும் சுருச்கிட்டு, வில்வப்பழத்தைப் பொத்து அதற்குள் முன் கட்டியைச் செலுத்தி வாயை அந்த ஓட்டினால் மூடி-2-3-சீலைமண்செய்து அவிபுடமாகப் போடவும். நன்றாயாறினபின் கட்டியையெடுத்து, இன்னொருபழத்தைப்பொத்து முன்போலவே கட்டியைச் செலுத்திப் பந்தனஞ் செய்து அவிபுடமிடவும், இவ்விதம் மடக்கி மடக்கி-7-தடவைகள் வில்வப்பழத்தில் புடமிட்டெடுக்க சுத்தியாம். இதனை யெத்தனைதடவை வில்வப்பழத்தில் . அதிகமாய்ச் சுத்திசெய்து கொள்கின்றோமோ அவ்வளவு விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட கந்தகம்-பலம்-2, மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட குக்கில் அல்லது மைசாட்சி வராகனெடை-8. மேற்படிபாகப்படி சுத்திசெய்யப்பட்ட பறங்கிப்பட்டைச் சூரணம், மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட கொடி வேலிவேர்ச் சூரணம், மேற்படி பாகப்படி சுத்திசெய்யப்பட்ட இரசகர்ப்பூரம், இவை மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-6. அரிசித்திப்பிலி, மிளகு, இலவங்கம், ஏலரிசி, சாதிக்காய், சாதிபத்திரி, கோஷ்டம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, நற்சீரகம் கருஞ்சீரகம், கார்போகரிசி இப்பன்னிரண்டு சரக்குகளையும் தனித்தனி வெய்யிலில் காயவைத்துத் தனித்தனியிடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை-1க்கு வராகனெடை-2. பசுவின்நெய் பலம்-2 ½, நல்ல கெட்டித்தேன் பலம்-2 ½.

செய்முறை :- கந்தகத்தைக் கல்வத்திலிட்டு நன்றாய்ப்பொடித்து எடுத்துச் கொள்க. இவ்விதமே இரசகர்ப்பூரத்தையும் பொடித்தெடுத்துக் கொள்க. பின்ட

Koviloor Digital Library

இவ்விரண்டு தூட்க்களுடன் மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்து, குக்கிலையும்சேர்த்துப் பிசரிக் கல்வத்திலிட்டு, நெய்யையும் தேனையும் ஒன்றாய்க்கலந்து வைத்துக்கொண்டு சிறுகச்சிறுக வார்த்து-6-சாமமரைக்க மெழுகுபோலாம். இதனைப் பீங்காண் டப்பியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வராகனெடை- ¼ - ½, இதனைத் தேகசக்தி, வியாதிபலம் ஆகியவைகளுக் கேற்றவிதமாக குறைந்த அளவாகவும் நிறைந்த அளவாகவும் காலையில் ஒரு வேளையாகவும், காலை மாலை இரண்டுவேளையாகவும் உபயோகிக்கலாம்.

உபயோகம் :- அரிகிரந்தி, சொரிகிரந்தி, யானைக்கிரந்தி, முகக்கிரந்தி முதலிய-21-வகை கிரந்திகளும் முகவங்கு, புண்டரீக குஷ்டமென்னும் படர்தாமரை, கரப்பான் வகைகள், அரையாப்பு, பரங்கிப்புண், குஷ்டவகைகள், விஷபாகம், ஊறல், வெடிகூலை, விரைவாதம், அண்டவாதம், குடல்வாதம், அந்திரவாயு, யானைக் கால்வீக்கம், நாப்புற்று, வாய்ப்புற்று, லிங்கப்புற்று, தந்தவாயு, குன்மரோகம், மேகவெட்டை முதலியவை தீரும்.

இதற்குப்பத்தியம் :- பாசிப்பயறு, துவரம்பருப்பு, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, தகரைக்கீரை, அரைக்கீரை ஆகியவைகளாம்.

மாமிச பக்ஷணிகளானால் :- வெள்ளாட்டிறைச்சி, முயலிறைச்சி, கவுதாரி, காடை, உள்ளான் ஆகிய இப்பட்சிகளின் இறைச்சி ஆகியவைகளாம். இவற்றை உலர்த்தியும் உபயோகித்துக் கொள்ளலாம். திருக்கை, சுறா, கிளங்கான், பங்காலை, பன்னா, கற்றாழை, வரால், குரவை, உளுவை என்னும் மீன்வகைகளை உப்பிட்டுலர்த்தி உபயோகித்துக்கொள்ளலாம்.

குறிப்பு

மருந்தானது தேகபலம் முதலியவைகளுக் கேற்றவிதமாக-7-16-21 நாள்வரையிற் கொடுக்கலாம். ஒருமுறைகொடுத்து இடையில் ஒருவாரம் அல்லது பத்துநாள் விட்டுவிட்டும் சாப்பிடலாம். மருந்து எத்தனைநாள் சாப்பிட்டார்களோ அத்தனைநாள் மறுபத்தியம் வைத்து விளக்கெண்ணெயும் பசுவின்நெய்யும் சமமாய்க்கலந்து ஸ்நானம் செய்யவும் வேண்டும்.

(10) பித்தம், சிலேஷ்மம் என்னும் இரண்டுதோஷங்களும் அகற்றப்பட்டு. கொப்புளங்கள் சிவந்தும் வெளுத்தும் விஸ்தரித்து எழும்பி ரணங்களாதல், இந்த ரணங்களில் எரிச்சல், தினவு ஆகியவையுண்டாதல், இந்த ரோகத்தில் பிரதானமாய் தேகத்தின் தோலானது மிருதுவாயிருத்தல், சிலவேளை விஷ எரிச்சலை யொத்த எரிச்சல், சருமந்தடித்தலுடன் வெளிறல், சிலவேளை சிவத்தல், துக்கம் என்னும் இக்குணங்களையுடையதற்கு விஸ்போடக அதாவது பிஸ்போடக (Bisboataka)

Koviloor Digital Library

குஷ்டமெனப்பெயர். இந்த ரோகத்திற்கு இத்துவாதச் சிந்தூரத்தைப் பிரமாணப்படி, மகாமஞ்சிஷ்டாதிக் கஷாயத்துடன் சாப்பிட்டு, இதன் மூலகிரந்தத்திற் சொல்லப் பட்டிருக்கும் மேகக்குழித் தைலத்தையும் மேலுக்குபயோகித்து வருவதால். கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகங் குணமாம்.

மகாமஞ்சிஷ்டாதிக் கஷாயம்

மஞ்சிட்டி, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கடுகுரோகணி, சுட்டெரித்த வசம்பு, மரமஞ்சள், முற்றின வேப்பமரப்பட்டை, முற்றின சீந்திற்கொடி இவ்வெட்டுவகையும் வகை-1-க்கு விராகனெடை - 1½.

செய்முறை :- இவை யெல்லாவற்றையும் சிதைத்து ஒருமண் பாத்திரத்திலிட்டு பத்துப்பலம் ஜலம்விட்டு 3 - பலமாகக்காய்ச்சி வடிகட்டிப் பானஞ்செய்ய வேண்டும். மேற்கண்ட அளவு ஒருவேளைக்குரியதாகையால் இவ்வளவின்படியே ஒவ்வொரு வேளையும் சித்தப்படுத்திக்கொள்ள வேண்டும். காலையிற் சாப்பிடவேண்டியதை அதற்கு முதல்நாள் மாலையிலும், மாலையிற் சாப்பிட வேண்டியதை அன்று காலையிலும் ஊறவைத்துக்கொள்ள வேண்டும்.

உபயோகம் ;- இது எல்லாவித குஷ்டங்களுக்கும் உபயோகப்படும். முக்கியமாய் விசர்ச்சிக்குஷ்டம், பிஸ்போடககுஷ்டம் ஆகியவைகளுக்கு அதிகம் உபயோகமாம்.

(11) பித்தம், சிலேஷ்மம் என்னும் இத்தோஷங்கள் விகற்பமடைந்து, சுபாவஸ்திதியைவிட்டு நீங்குவதால், கொப்புளங்கள் சிறுத்தும், பருத்தும், கறுத்தும், சிவந்தும் அடர்த்தியடர்த்தியாக இரண்டு முன்கைகளிலும், முழங்கால்களிலும், தொடைகளிலும் எழும்பி ரணங்களாகும். அவ்விரணங்களில், நோவும், வறவறப்பும், மிகுந்ததினவும், சினைத்தண்ணீர்க் கசிவுமுண்டாகும். இன்னும் வெண்மையாய்த் தாமரைமுகிழை யொத்த கொப்புளங்கள் எழும்பி. அவைகளில் எரிச்சல், சருமம் விரித்தலுடன் வீக்கம், கால், கை ஆகியவை குறைதல் என்னும் இக்குணங்களை யுடைதற்கு பாமா அல்லது பாவுனகுஷ்டமெனப் பெயர். இதற்கு மேற்படி துவாதசசிந்தூரத்தைப் பிரமாணப்படி, கிஷ்வர்கோகிலத்துடன் அனுபானித்துட் கொண்டு வருவதுடன் பத்தியாலேபனத்தையும் மேற்பூசிவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்டரோகங் குணமாம்.

கிஷ்வர் கோகிலம்

முன்சொன்ன பாகப்படி சுத்திசெய்யப்பட்ட குக்கில் அல்லது மைசாட்சி-19- பலம், கொடிவேலிவேர்ப்பட்டை, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிமுள்ளி, மேல்தோல்சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், பெருலவங்கப்பட்டை, இந்துப்பு, அதிவிடயம், கோஷ்டம், முற்றின வேப்பவேர்ப்பட்டை, ஏலரிசி, அப்பளாக்காரம், வாய்விளங்கம், ஓமம்,

Koviloor Digital Library

கோரைக்கிழங்கு, தேவதாரம் இப்பதினாறையும் தனிதனியாயிடித்த சூரணம் வகை 1 - க்குப் பலம் - 1.

செய்முறை:- மேற்கண்ட எல்லாவற்றையும் அம்மியிலரைத்து, வெண்ணெய் போலானபின், பசுவின் நெய்யைச் சிறுகச்சிறுகவிட்டு அரைத்து சிறு உருண்டைகளாகச் செய்து, பீங்கான்பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும். நெய்விடாமலும் சூரணமாகச் செய்துவைத்துக் கொள்ளலாம். ஆனால் உட்கொள்ளும்போது பசுவின் நெய்யுடன் கலந்து சாப்பிடவேண்டும்.

பிரமாணம்:- விராகனெடை-1¾, ஆகாரத்துடன் சாப்பிடவேண்டும். பிரதிதினமும் காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம். தேகசுபாவத்திற் கேற்றதுபோல் காலையில் ஒருவேளை அல்லது மாலையில் ஒருவேளை மாத்திரமும் சாப்பிடலாம்.

உபயோகம்:- குஷ்டவகைகள், கிருமிரோகங்கள், சங்கிரகணி, மூலவகைகள், வயிற்றுக்கட்டிகள் முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியா லேபனம்

மஞ்சட் கடுக்காய்த்தோல், கடுகு, வெள்ளலரி வேர்ப்பட்டை, வேப்பவேர் பட்டை, கார்போகரிசி, இந்துப்பு இவை வகை - 1 - க்குச் சமனெடை.

இவற்றை அம்மியில் வைத்துப் பொடித்து பசுவின் கோமியத்தைச் சிறுகச் சிறுகவிட்டு மைபோலரைத்து மேற்பூசிவர மேற்கண்டரோகந் தீரும். இதனை மற்றவகைக் குஷ்டரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

(12) பித்தமும், சிலேஷ்மமும் தம்தாம் சுபாவத்தில் விகற்பப்பட்டுத் தொந்திப்பதால், கொப்புளங்கள் பிறக்குஸ்தானங்களில் சிவந்த நிறமும், அதிகத்தினவும், தொடக்கூடாத நோவும், உண்டாகிப் பின்பு கொப்புளங்கள் எழும்பி ரணங்களாகும். அந்தரணங்களில் குத்தலும், எரிச்சலும் உண்டாகும். இன்னும் சிலருக்கு தேகத்தில் கீற்றுக்கீற்றாய் வெடித்தல், தொடக்கூடாத வேதனை, அதில் இரத்தம் வடிதல், வயிற்றுவலி என்னும் இக்குணங்களையுடையதற்குச் சர்மதல குஷ்டமெனப் பெயர். இதற்கு மேற்படி துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி, அமிர்தபலாதிக் கிருதத்துடன் அநுபானித்துட்கொண்டு வருவதுடன், இதன் மூலகிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் மேகக் குழித்தைலத்தை மேற்பூச்சாக உபயோகித்து தேகபலம், வியாதிபலம் முதலியவைகளுக்குத் தக்கவிதமாய்ப் பத்தியமாய் நடந்துவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகங்குணமாம்.

அமிர்த பலாதிக் கிருதம்

மூக்குவெட்டிச் சாணிப்பாலில் வேகவைத்த சேராங்கொட்டை பலம்-60, இதனை-16-படி ஆற்று ஜலத்திலிட்டுக் காய்ச்சவேண்டும், காய்ச்சும்போது மேல் தோல்

Koviloor Digital Library

நீக்கப்பட்ட சீந்திற்கொடியைக் கறணை கறணையாகத் துண்டித்து உரலிலிடித்து அதிற்போடவேண்டும். நான்கிலொருபாகமாக அதாவது நான்குபடியாகச் சுண்டின வுடன் இறக்கி வடிகட்டிக்கொள்ள வேண்டும்.

பசுவின் நெய் பலம்-60, பசுவின்பால் படி-5- சீனாகற்கண்டு பலம்-60, கெட்டித்தேன் பலம்-20.

இந்நான்கு வஸ்துக்களையும் முன் கஷாயத்திற்சேர்த்துச் சிறுதீயாயெரித்துப் பதமானவுடன் இறக்கிக் குளிர ஆறவைத்து விடவேண்டும்.

கார்போகரிசி, வேப்பமரப்பட்டை, மஞ்சட்கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், இந்துப்பு, கோரைக்கிழங்கு, பெருலவங்கப்பட்டை, ஏலரிசி, நாகேசரம், துராயிலை, தாளீசபத்திரி, வெட்டிவேர், விளாமிச்சை, சந்தனம், நெருஞ்சி முள்ளு, கிச்சிலிக்கிழங்கு, செஞ்சந்தனம் இவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனியாயிடித்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2, தகரைவிதைச் சூரணம் வராகனெடை-13.

இச்சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மிஸ்ரமித்து, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் நெய்யைவிட்டு நன்றாய்க்கலக்கி பீங்கான்பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம் :- வராகனெடை-1½, காலையில் ஒரு வேளைமாத்திரம் சாப்பிடவும். தேகபலமுள்ளவர்களுக்கு வியாதிபலத்திற் கேற்றவிதமாக காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம் :- எல்லாவித குஷ்டங்கள். ரத்தபித்தரோகம், மூலரோகங்கள் முதலிய பலரோகங்கள் குணமாம்.

இம்மருந்திற்குப் பத்தியம் :- கடினவுழைப்பு, வெய்யிலில்திரிதல், நெருப்புக் காய்தல், புளிப்பு, இறைச்சிவகை, தயிர், எண்ணெய் வகைகள், நடத்தல் ஆகியவைகளை நீக்கவேண்டும்.

(13) பித்ததோஷம் எரிந்துண்டான வாததோஷத்தால், தேகத்தில் கொப்புளங்கள் பிறக்கும்போது சிவந்த நிறத்துடன்பிறந்து, பின்பு கறுப்பாகி, கிராம்பு மொக்கி னுருவத்தைப்பெற்று, உடைந்து ரணங்களாகும். அந்த ரணங்களில் அதிக எரிச்சலும் நோவும் உண்டாயிருக்கும். ஒவ்வொரு குஷ்டங்களும் பற்பல வர்ணங்களைப் பெற்றிருக்கும். ஆனால், இக்குஷ்டரோகத்தில் சிவந்தும் பின்பு கறுத்தும் போவதால் காகச அல்லது காகின் குஷ்டமெனப் பெயரிடப்பட்டது. இந்த ரோகத்திற்கு மேற்கண்ட துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி மகா பல்லாதகி லேகியத்தி லனுபானித்துட் கொண்டு வருவதுடன், இதன் மூலகிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித் தைலத்தையும் மேற்பூச்சாகப் பூசிவரின், கடவுளினது கிருபையால் மேற்கண்டரோகந் தீரும்.

Koviloor Digital Library

பல்லாதகி லேகியம்.

(a) வேப்பமரப்பட்டை, வேப்பவேர்ப் பட்டை, வேப்பம்பூ, வேப்பிலை, வேப்பம்பருப்பு, வெள்ளைக்கடுகு, மஞ்சிஷ்டி, கடுகுரோகணி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, கோரைக்கிழங்கு, துரா இலை, கார்போ கரிசி, செஞ்சந்தனம், மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு, சிறுதேக்கு, நிலவேம்பு, சிவதைவேர், ஆற்றுத் தும்மட்டிவேர், வாய் விளங்கம், விழலரிசி, சித்திர மூலவேர்ப் பட்டை, மேல்தோல் நீக்கப்பட்ட சீந்திற்கொடி, விரலிமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், அரிசித்திப்பிலி, சரக்கொன்றைப்புளி, பிரப்பங்கிழங்கு, மஞ்சிஷ்டி சரக்கொன்றை வேர்ப்பட்டை, சுத்தி செய்யப்பட்ட நேர்வாளப்பருப்பு, கையாந்தகரைச் சமூலம், வெள்ளைக் காக்கரட்டான்வேர், ஆடுதீண்டாப்பாளைவேர், ஆடா தோடைவேர், இலுப்பைவேர், ஆதொண்டைவேர், ஒதியமரப்பட்டை, வெள் ளெருக்கன் அல்லது முற்றின நாட்டெருக்கன்வேர், பிரப்பங்கிழங்கு, அப்பளாக்காரம், மயிர்மாணிக்கம், கீழ்காய்நெல்லிவேர், நுணாமரப்பட்டை, சங்கவேர், நஞ்சறுப் பான்வேர், முன்னைவேர் இவை வகை-1-க்கு வராகனெடை-13.

இவற்றுள் பட்டையினங்களையும், வேர் இனங்களையும், கிழங்கினங்களையும் சிதைத்து மற்றகொடி விதை முதலியவைகளையும் யிடித்துச்சிதைத்து-16-படி ஆற்று ஜலத்திற்போட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாளடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து நான்கிலொருபாகம் சுண்டவைத்து, இளஞ்சூட்டுடன் கஷாயத்தை இறக்கிப்பிழிந்து வடிகட்டித் திப்பிநீக்கித் தனியேவைத்துக் கொள்ளவேண்டும்.

(b) மூக்குவெட்டிச் சாணிப்பாலில் வேகவைத்துலர்த்தி சுத்திசெய்த சேராங் கொட்டை பலம்-40, இதனை-16-படி ஆற்று ஜலத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து நாலிலொறு கூறாக சுண்டினவுடன் இறக்கி, வடிகட்டித் திப்பிநீக்கி வைத்துக்கொள்க.

(a) யிலும் (b) யிலுமுள்ள இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து அதில்-70-பலம் வெல்லத்தைக்கரைத்துக் காய்ச்சிப் பாகுபதமாய் இறக்கிவைத்துக் கொள்ள வேண்டும்.

மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சித்திரமூலவேர்ப்பட்டை, இந்துப்பு, சந்தனம், கோஷ்டம், அஜ்மூதா ஓமம், பெருலவங்கப்பட்டை, தாளீசப்பத்திரி, நாகேசரம், ஏலரிசி இவைகளைத் தனித்தனியாயிடித்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை 9 ½.

இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பாகிற்சேர்த்துக் கிண்டிக்கிளறிப் பீங்கான்பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

Koviloor Digital Library

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-6-10-சாப்பிடலாம். காலையிலொரு வேளை அல்லது காலை மாலை இரண்டுவேளையும் சாப்பிடலாம். தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக் கேற்றவிதமாய் நிதானித்துக் கொடுக்க வேண்டும்.

உபயோகம்:- எல்லாவித குஷ்டங்களும் தீரும். மூலரோகங்கள், கிருமி ரோகங்கள், இரத்தபித்தரோகம், இருமல்ரோகம், சுவாசரோகம், பவுத்திரரோகம் முதலிய பல ரோகங்களைக் கண்டிப்பது மன்றி, தாது நஷ்டத்தை நீக்கி தாதுவிருத்தியை யுண்டாக்கும். தேகவசீகரம், முகவசீகரம் முதலியவைகளுண்டாகும். பசியை அதிகப்படுத்தும். இதன் குணம் இன்னும் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அநுபவத்தால் நிச்சயத்தறிந்து கொள்ளலாம்.

பத்தியம் :- புளிப்பு வஸ்துக்கள், உஷ்ண சம்பந்தவஸ்துக்கள், உஷ்ணசம்பந்த கிரியைகள் ஆகியவைகள் ஆகா. பெண்ணை அறவே நீக்கவேண்டும்.

(14) வாததோஷமானது அதிகங் கெட்டுப் போவதால், ரணக்கொப்புளங்கள் சிறிதுசிறிதாகக் சுபாவத்தினது காந்தியைப் பெற்றும் தடித்தும், கறுத்தும், சிவந்தும், சுறசுறத்தும் முகங்கள் வாடியும் ஒன்றையொன்றைச்சுற்றி அநேக கொப்புளங்க ளெழும்பி ரணங்களாகும். அவைகளின் விஸ்தாரம் குழிகள் விழுவதும் சினைத் தண்ணீர் ஒழுகுவதும், அதில் ரோமங்கள் முளைப்பதும், நோவுந் தினவும் பிரபலப் படுவதுமாக இருக்கும். இந்த ரோகம் விரைவில் விருத்தியாகும். இது கபாலத்தைப்போல் வெளுத்த நிறத்தைப் பெற்றிருப்பதால் இதற்கு கபால (Kapala) குஷ்டமெனப் பெயர். இது அசாத்தியம் ஆயினும் இதன் ஆரம்பத்தில் கீழ்க்காணும் பந்தமுசுட்டைச் சூரணத்தில் இத்துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி அனுபானித்துட் கொண்டு வருவதுடன், இதன்மூல கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித் தைலத்தையும் மேலுக்குப்பயோகித்து ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கும் பத்தியபாவனைகளையும் முறைப்படியும் கிரமப்படியும் கையாடிவரின் கடவுளினது கிருபையால் மேற்படி ரோகந்தீரும்.

பந்த முசுட்டைச் சூரணம்.

கட்டுக்கொடி சமூலத்தை யிடித்துப்பிழிந்து சேலையில் வடிகட்டின சாறுபடி-2, பேய்முசுட்டைச் சமூலத்தை யிடித்துப்பிழிந்து சேலையில் வடிகட்டின சாறுபடி-2, இவ்விரண்டையும் தகுந்த புதுச்சட்டியில்விட்டு, வெய்யிலிலுலர்த்திவர வேண்டியது. இதில் தூசு தும்பு முதலியவை விழாதபடியும் மெல்லியவஸ்திர முதலியவைகளைப் போட்டுக் கட்டியும் வைக்கலாம். இப்படிச் செய்துவர இரண்டுவகைசாறும் உறைந்து கட்டியாகி முடிவில் உலர்ந்துபோம். ஈரமின்றி உலர்ந்தபின் னெடுத்துப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து கற்காரக்குள்ள சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-1-முதல்-2. காலை மாலை இருவேளையும் உட்கொள்ளலாம்.

Koviloor Digital Library

பத்தியம்:- கைப்பான வஸ்துக்கள், புளிப்பான வஸ்துக்கள், கசப்பான வஸ்துக்கள், மாப்பண்டங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது. பெண்ணையறவே நீக்கவேண்டியது.

உபயோகம்:- எல்லாவகை மேகங்களும் பதினெட்டுவகை குஷ்டங்களும் தீரும்.

(15) பித்தமும் சிலேஷ்மமும் எரிந்துண்டான தோஷத்தால் கொப்புளங்கள் அத்திப்பழத்தை யொத்து விஸ்தரித்துச் சீக்கிரத்தில் பிறந்து நகுங்கிக்குழி விழுந்த ரணங்களாகும்; அவைகளில் வெளுத்த நரம்புகள் நிறையப்படுவதும்; சிவந்தரோமங்கள் முளைப்பதும், சினைத்தண்ணீரும் உதிரமும் ஒழுகுவதும், புழுக்கள் ஊருவதும், இதனால் தினவும், நோவும், எரிச்சலும் பிரபலப்படுவது மாகவிருக்கும். அன்றியும் சரீரம் உலர்ந்து கறுத்தல், உளைச்சல், சருமந்திரைந்து தொங்குதல், அதிகமயக்கம் என்னும் இக்குணங்களுடையதற்கு அன்ஜீர குஷ்டம் அல்லது அவுதும்பர குஷ்டம் அல்லது அத்திப்பழக் குஷ்டமெனப் பெயர். இதுவும் மகாகுஷ்டரோகங்களில் ஒன்றானதால் இது தீருவதும் கஷ்டமே. ஆனால் இதன் ஆரம்பத்தில் இத்துவாதச் சிந்தூரத்தைக் கீழ்க்காணும் காதககதாளக பஸ்பத்துடன் சேர்த்துக்கொடுத்து, இதன் மூல கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற குட்டக் குழித்தைலத்தை மேற்பூச்சாகப் பூசிவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகந்திரும்.

குறிப்பு

அனேகர் குஷ்டரோகத்திற்குத் தாளகபஸ்பத்தை உபயோகிக்கின்றார்கள். ஆனால், அதனால் ஒருவித பிரயோஜனமு முண்டாகாமற் போவதுடன் சில சமயம் நன்மைக்குப்பதிலாக தீமையே நேரிடுகிறது. அதன் காரணம் வியாதியின் தன்மை, தேககுபாவம் முதலியவைகளைத் தீர நிதானிக்காமல் அவுடதப்பிரயோகஞ் செய்வதே பிரதான காரணமாம். மேலும் தாளக பஸ்பமானது பாதகமுறை, பேதகமுறையென இருவகைப்படும். பேதகமுறையென்பது வேறு லோகத்திற் கொடுத்தவுடன் அதற்கு வர்ணத்தைக் கொடுத்துவிட்டுத் தான் பறந்துபோவது. இது பெரும்பாலும் வாதமுறைகளுக்கே உபயோகமாம். மற்றொன்று பாதகமுறையாம். இது வைத்தியத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. இதனால் கெடுதி நேரிடாது. வேதைக்கும் உபயோகப்படாது. ஆகையால் இதனை பயமின்றி உபயோகிக்கலாம். அம்முறையிது.

காதககதார பஸ்பம்

உயர்ந்த மடலரிதாரம் பலம்-5. இதனை மைபோலத்தூள் செய்து மெல்லிய வஸ்திரத் துண்டுகளில் 10-பொட்டலங்களாகக் கட்டிக்கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில்-1½ -படி புளித்த நீராகாரத்தைவிட்டு, அதில் மேற்படி பத்து பொட்டலங்களையும் கிளிக்கட்டித் தொளாந்திரமாகத் தொங்கவிடவும். பொட்டலங்கள் பாத்திரத்திற் படியாமலும் அந்த ஜலத்திற்குள் முழுகியும் இருக்க வேண்டியது, இவ்விதமே-2-ஜாமமும் எரித்து ஆறின பின்னெடுத்துக் கொ[illegible] இவ்விதமே-காடியில்-2-சாமமும், [illegible] வேப்பெண்ணெயில் 2 ஜாமமும்

Koviloor Digital Library

எரித்தெடுத்துக் கொள்க. மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, இம்மூன்றும் வகை 1-க்கு பலம் 10. இம்மூன்றையும் ஒரு மண்பாத்திரத்திலிட்டு-3-படி ஜலம்விட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாள் காய்ச்சி-1½-படியாகச் சுண்டிடிணபின்னிறக்கி யிளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டின கஷாயத்தில் முன் தாளக பொட்டலங்களை முன் மாதிரியே கிளிக்கட்டி-2-சாமம் எரித்துக் கொள்ளவேண்டும். பின்பு-10 பலம் புளியில்-2-படி ஜலத்தைவிட்டுக் கரைத்து-2-சாமம் தெளியவைத்துத் தெளிவிறுத்து, அதனால் முன் பொட்டலங்களிலுள்ள அரிதாரத்தைக் கசடறக்கழுவி வெய்யிலிலுலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் சுத்தி செய்யப்பட்ட அரிதாரம் வராகனெடை-32½, வெண்காரம் வராகனெடை-3¼, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு எலுமிச்சமரப் பட்டைச் சாற்றால்-19-சாமமரைத்துப்பில்லை தட்டி வெய்யிலில் வைத்து கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்பு சிவப்பு நிறமுள்ளதும் பருமனானதுமான ஒரு கத்தரிக்காயைச் சக்கரமா யறுத்தெடுத்துத் துளைத்து, அதற்குள் முன் சித்தப்படுத்தினப் பில்லையைச் செலுத்தி, துளையில் கத்தரிக்காய்ச் சதையைத் தினித்து அறுத்தெடுத்த பில்லையையும் வைத்து மெல்லிய கயிற்றால் கட்டி சிறு கல்யாண பூசனிக்காயை, மேற்படி கத்தரிக்காய்க் கொள்ளும்படியாகவும் செல்லும்படியாகவும் துளைத்து, உள்ளே செலுத்தி, துளைத்தெடுத்த பில்லையாலே மூடி துளைத்த வாய்க்கு மண் தடவி, பூசனிக்காய் எரிந்து போகும்படியான புடமிட்டாறின பின்னெடுக்க, மங்கலான வெளுப்பு பஸ்பமாம். பின் பிதனை யெடுத்துக் கல்வத்திட்டு, வெள்ளாட்டுப் பாலைச்சிறுகச் சிறுக விட்டு-4-சாமமரைத்து உருண்டையாகச் செய்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும்-3-படி கொள்ளும் படியான ஒரு மண் பானையில்-1 ½-படி மருதம் பட்டைச்சாம்பலைப் போட்டுச் சமமாக அழுத்திவிட்டு அதன்மேல் முன் சித்தப்படுத்தின உருண்டையை வைத்து, அதன் மேலும்-2-படி முன் சாம்பலைப்போட்டு மெதுவாய் அழுத்தி, பானைவாயை ஒரு சாணகியால்-மூடி-சீலை மண் செய்து அடுப்பேற்றி-12-சாமத்துக்குக் குறையாமல் எரித்து ஆறவிட்டுப் பார்க்கின் பஸ்பமானது வெண்மையாகவும் வைத்த நிறை குறையாமலு மிருக்கும். இந்த முறையானது பல தடவை செய்து அநுபவசித்தமானது குஷ்டரோகங்களைத்தீர்ப்பதில் இதுகை கண்டதும் பேர்பெற்றதுமாம். இதைச் செய்ய கொஞ்சம் பிரயாசையெடுத்துக்கொள்ள வேண்டியது நிச்சயமேயாயினும், இதனால் உண்டாகும் பயனும் அதிகமென்பதும் சத்தியமே. மேலும் இந்தப் பாகமானது கூடியவரையில் விபரமாய் எழுதப்பட்டிருக்கினும், இதனைச் செய்யும்போது சமயோசிதமாய் கிரந்தி, புத்தி, தந்திரோபாயம் ஆகியவைகளும் அவசியமே. ஆனால் அவை அநுபவத்தில் தனக்குத்தானே யுண்டாகிவிடும். அவையெல்லா வற்றையும் இங்கு எழுதியுமுடியா.

பிரமாணம் :- குன்றிமணியெடை-1. பனவெல்லத்தில் அல்லது சமயோசிதமான அநுபானத்திற் கொடுக்கவேண்டும். தேகபலத்திக் கேற்றவிதமாக-21-60-நாள் சாப்பிடலாம்.

உபயோகம் :- எல்லாவகைக் குஷ்டங்கள், பலவகைக் கிரந்திகள், பலவகை மேகரோகங்கள் முதலியவை தீரும்.

Koviloor Digital Library

குறிப்பு

இப்பஸ்பத்தை துவாதச சிந்தூரத்துடன் சேர்த்துக்கொடுப்பதாயிருந்தால், அதனெடையில் அரையளவும் இதனெடையில் அரையளவுமா யிருக்கவேண்டும். இது சாதாரணமானதும் பொதுவானதுமான அளவாயிருந்தாலும் சிகிச்சகர்கள் நோயின்பலம், காரணம் முதலியவைகளுக்கேற்க சமயோசிதமாக இரண்டின் எடையும் சமமாகவாவது அல்லது ஒன்றை அதிகப்படுத்தி மற்றொன்றைக் குறைத்தாவது உபயோகிப்பார்கள்.

(16) சிலேஷ்ம தோஷங்கெட்டுத் தேகத்தில் கொப்புளங்கள் நிலைபெற்றும் கனத்தும் வெளுத்தும் சிவந்தும் மினுமினுத்தும் வட்டவட்டமாகத் தாமதத்தின்மேல் நாளுக்குநாள் விருத்தியடைந்தும் துரிதமாக எழும்பி, உடைந்து ஒன்றோடொன்று சேர்ந்து கொண்டு வளையாகாரமான ரணங்களாகும். அவைகளில் புழுக்கள் நெளிவதும், நமைச்சலும் நோவும் அதிகரிப்பதும் கையால் ஸ்பரிசித்தால் வழுவழுப்பாகத் தோற்றுவதும், சீழ் ஒழுகுவதுமாக விருக்கும். அந்தரணத்தைச் சுற்றிலும் மஞ்சள் நிறமான சருமம் உண்டாகும். சிலருக்கு சிரசிலும், சர்வாங்கத்திலும் பச்சை வன்னமாயும், ரத்தவன்னமாயும் தோற்றல், ஒருவேளை சிரசில்மாத்திரம் வெளுப்பு, ரணங்கள் தடித்து கறுத்தல், அதில் ரத்தம்வடிதல் முதலிய குணங்களுண்டாகும். இக்குணங்களை யுடையதற்கு மண்டல குஷ்டமெனப்பெயர். இதுவும் மகா குஷ்டங்களில் ஒன்றாகையால் தீருவதும் கஷ்டமே. ஆனால் இதன் ஆரம்பத்தில் மேற்படி துவாதச சிந்தூரத்தைக் கீழ்க்காணும் இடிபல்லாதகியில் அனுபானித்துச் சாப்பிட்டு, இம்மூல கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிற குஷ்டத் தெண்ணய்யை மேலுக் குபயோகித்து வர, கடவுளினது கிருபையால் மேற்கண்ட குஷ்ட ரோகந்தீரும். அவ்விடிபல்லாதகியிது.

இடிபல்லாதகி.

சுத்திசெய்த ரசம், சுத்தி செய்த இரசகர்ப்பூரம், சுத்தி செய்த நெல்லிக்காய்க் கந்தகம், சுத்திசெய்த அரிதாரம், ஏழு ஊசிபிடிக்கும் காந்தம், சுத்திசெய்த துருசு, சுத்திசெய்த பால்துத்தம், சுத்திசெய்த மிர்தார்சிங்கி இவை வகை-1-க்கு பலம்-¼ மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, ஓமம், மஞ்சள், அரிசித்திப்பிலி, சிற்றரத்தை (சந்நராஷ்டம்), கோஷ்டம், வாலுழுவையரிசி சோம்பு(பெருஞ்சீரகம்) ஏலரிசி, சாதிக்காய், மிளகு, நற்சீரகம், கார்போகரிசி, கருங்கொள்ளு, மாசக்காய், தெசாவரம், கண்ட த்திப்பிலி, வாய்விளங்கம், சுட்டெரித்த வசம்புக்கரி, லவங்கம், சுத்திசெய்த பறங்கிச்சக்கை, மஞ்சட் கடுக்காய்த் தோல், நற்சீரகம், காட்டுசீரகம், சிறுதேக்கு, தாளிசப்பத்திரி, பிரப்பங்கிழங்கு, சுத்திசெய்த எட்டிக்கொட்டை, நீர்முள்ளிவிதை, உலர்த்தின சிறுசின்னிசமூலம், சங்கம் வேர்ப்பட்டைச் சூரணம், உலர்த்தின கொல்லன் கோவைக்கிழங்கு, கொடிவேலி வேர்ப்பட்டை இவற்றைத் தனித்தனி யிடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை - 1க்குப் பலம்-¼. திராக்ஷப்பழம், கழுவியுலர்த்தின எள்ளு இவை வகைக்குப் பலம் ¼; குழித்தைலமிறக்கின சேராங்கொட்டைத்தைலம் பலம்-½ முற்றின தேங்காயின் தனிப்பால் பலம்-5-பன வெல்லம் பலம்-12 ½- கோழிமுட்டை மஞ்சட்கரு-2.

Koviloor Digital Library

செய்முறை :- முன் எட்டுச் சரக்குகளையும் தனித்தனி கல்வத்திலிட்டு மைபோலப்பொடித்துப் பின்பு எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து முட்டை மஞ்சட்கருக்களைவிட்டு மறுபடியும் மசியும்படி நன்றாயரைத்து, அவற்றுடன் மற்றச் சரக்குகளின் சூரணத்தையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாயரைத்து சேராங் கொட்டைத் தைலத்தையும்சேர்த்து அரைத்தெடுத்துக்கொள்ளவேண்டும். பனவெல்லத்தில் தேங்காய்ப் பாலை விட்டுக்கரைத்து அவசியமானால் கொஞ்சம் தண்ணீரும் சேர்த்துக்கொண்டு காய்ச்சிப் பாகுபதமாயிறக்கி வைத்துக்கொண்டு முன் சித்தப்படுத்தின சூரணத்தை மர உரலிலிட்டு மேற்படி பாகைச் சிறுகச் சிறுகத்தெளித்து மர உலக்கையால் இடிக்கவேண்டும். (இதனை வேப்பனுலக்கையால் இடித்தால் சிரேஷ்டமாம்) இவ்விதம் அந்தப் பாகெல்லாம் சென்று லேகியபதமாகிவிட்டால் எடுத்துப் பீங்கான்பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டியது. இதனை யிடிக்காமல் கல்வத்திலும் அரைத்துக் கொள்ளலாம்.

பிரமாணம் :- வராகனெடை-½ / ¾-1 காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம்.

தீரும் வியாதி :- எல்லாவித குஷ்டங்களும் தீரும். முக்கியமாய் மண்டல குஷ்டந் தீரும். மேகரோகங்கள்; பவுத்திரங்கள்; பிளவைகள் முதலிய அனேக ரோகங்கள் தீரும்.

பத்தியம் :- புளிப்பு வஸ்துகள், உஷ்ணசம்பந்த வஸ்துகள், உஷ்ணசம்பந்தக் கிரியைகள்; பெண்; புகை ஆகியவைகளாகா.

(17) பித்தந் தோஷித்துப் போவதால் தேகத்தில் கொப்புளங்கள் முள்ளுகளைப் போல் மெல்லியதாய் நீண்டும் பிகுபிகுத்தும் சுறசுறத்தும் உள்ளில் கறுத்தும் முனையிற் சிவந்தும் நெருக்கமாக எழும்பி ரணங்களாகும். அவைகளில் புழுக்கள் நெளிதலும், நோவுதலும், எரிச்சலும் உண்டாம். சிலவேளை நோவுமாத்திரம் இருந்தாலுமிருக்கும். இக்குணங்களுடையதற்கு கடமை நாக்குஷ்டம் அல்லது ருச்ஜோ குஷ்டமெனப் பெயர். இதுவும் மகா குஷ்டங்களில் ஒன்றாதலின் முற்றுந் தீருவது கஷ்டமாயினும் இதன் ஆரம்பத்தில் மேற்கண்ட துவாதச சிந்தூரத்தை இம்மூலக் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் மகா பல்லாகியுடன் அநுபானித்துட் கொண்டு, அதில் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித்தைலத்தையும் மேற்பூச்சாகப்பூசி ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கும் பத்திய முறைப்படி நடந்துவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகந் தீரும்.

(18) வாததோஷமும் கபதோஷமும் அதிகரிப்பதால் தேகத்தில் சிறு கூழாங்கற்களைப் போன்று இரத்தநிறமான கொப்புளங்கள் விஸ்தாரமாகப்பிறந்து உடைந்து ரணங்களாகும். அவைகளில் அதிக நமைச்சலு முண்டாயிருக்கும். இக்குணங்களையுடையதற்கு ஆலசகுஷ்டமெனப்பேர். இத்துவாதச சிந்தூரத்தைப் பிரமாணப்படி, பொடுதலையிலையை நல்லெண்ணெயில் வறுத்துத் தூள்செய்து,

Koviloor Digital Library

அதற்கு சமனெடை பனவெல்லத்தைச் சேர்த்தரைத்தெடுத்த லேகியம் பலம்-½-யுடன் அநுபானித்துட்கொண்டு வருவதுடன் இம்மூல கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் குட்டக்குழித்தைலத்தையும் மேற்பூச்சாகப்பூசி தகுந்த பத்தியத்துடன் நடந்துவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்டரோகந் தீரும்.

குறிப்பு

இத்துவாதச சிந்தூரத்தால் குஷ்டரோகங்கள் தீருமென இவ்விடம் சொல்லியிருந்த போதிலும் மேகசம்பந்தரோகங்கள், கிரந்திரோகங்கள் முதலிய அனேக ரோகங்கள் தீருமென அறிந்திருக்க வேண்டியது, ஆனால் சிகிச்சர்களின் அநுபலம், யுக்திபுத்தி முதலியவைகளுக் கேற்றபடி அவ்வவ்வியாதிக்குத் தக்கபடி உபயோகித்து ஜெயமடையலாம்.

காப்புப் பருவம்
2. குன்மக்குடோரி

சுத்தி செய்யப்பட்ட சாதிலிங்கம் வராகனெடை-1 ¼ , சுத்தி செய்யப்பட்ட சவ்வீரம் வராகனெடை-2 ½, பொரித்த நாட்டுவெண்காரம் வராகனெடை-5, முலைப்பால் பலம்-10.

செய்முறை :- முன்னர் சாதிலிங்கத்தைக் கல்வத்திற் பொடிசெய்து பின்பு வீரத்தைச் சேர்த்துப் பொடிசெய்து எடுத்துக்கொள்ள வேண்டும். வெண் காரத்தைத் தனியேபொடி செய்து கொள்ளவேண்டும். ஒரு ஆழமான பீங்கான் கோப்பையில் முன்னிரண்டு தூளையும்போட்டு விரலால் சமமாயமுத்தி அதன்மேல் வெண்காரத்தூளைப்போட்டு முன்போலவே விரலால் சமமாயமுத்திவிட்டு, முலைப்பாலை சேலையில் மூன்று தடவைக்குக் குறையாமல் வடிகட்டிவிட்டு, தும்பு தூசு முதலியவை விழாதபடி பீங்கான்வாய்க்கு மெல்லியவஸ்திரத்தைக்கட்டி கடுவெய்யிலில் வைத்துவ்ரவேண்டும். பாலெல்லாம் சுண்டிக் கொஞ்சமும் ஈரப்பசையில்லாமலிருக்கவேண்டும். இவ்விதமாவதற்கு வெய்யிலின் தன்மைக்கேற்றதுபோல் சற்றேறக்குறைய-10-முதல்-16-நாட்கள்செல்லும்.. இந்தப்பதத்தில் பீங்கானிலுள்ளவற்றை சாக்கிரதையுடன் கத்தியால் சுறண்டி கல்வத்திலிட்டு நன்றாய்ப்பொடிசெய்து கற்காரக்குள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

குறிப்பு

மேற்சொல்லப்பட்டது அச்செய்யுளின் கருத்தாயினும் அநுபவமுறையானது பின் வருவதாம்.

சுத்திசெய்யப்பட்ட வீரம் வராகனெடை-1¼ , சுத்திசெய்யப்பட்ட லிங்கம் வராகனெடை-2 ½, பொரித்த வெண்காரம் வராகனெடை-5, முலைப்பால் பலம்-5.

செய்முறை :- வீரத்தையும் லிங்கத்தையும் சிறுதுண்டுகளாகத் துண்டித்துப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு முலைப்பாலை-3-தடவைக்குக் குறையாமல்

Koviloor Digital Library

வடிகட்டிவிட்டு மேற்சொன்னபடி வெய்யிலில் உலர்த்தியெடுத்துக் கல்வத்திற் பொடித்துப் பின்பு வெண்காரப் பொரியையும் சேர்த்துக் கைவிடாமல்-1-சாமமரைத்து சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

குன்மக்குடோரியின் பிரமாணம் :- அரை குன்றிமணியெடை உத்தமம். முக்காற் குன்றிமணியெடை மத்திமம். ஒரு குன்றிமணியெடை அதமம். 1 ½- குன்றிமணியெடை அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- எல்லாவிதக் குன்மரோகங்கள், பலவகை வாயுரோகங்கள், பலவகை அண்டவாதங்கள், பலவகை எலிகடி விஷங்கள், எலிவிஷத்தாலுண்டான ஈளை ரோகங்கள், கெண்டைக்கட்டி, அல்லது நீராமைரோகம், பேராம்பல், நீராம்பல் முதலிய ரோகங்கள், கிரந்தி ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு

வெள்ளை சர்க்கரையை அல்லது திராக்ஷப்பழத்தை அரைத்துருட்டிக் குகைபோலச்செய்து, அதற்குள் மேற்படி சிந்தூரத்தைப் பொதிந்து கொடுக்க வேண்டும். இது வேகமான மருந்தாகையால் வியாதியின் பலத்திற்கேற்றபடி மூன்றுவேளை முதல் ஏழுவேளைகளுக்கதிகம் கொடுக்கலாகாது. வியாதி நாட்பட்டதாகவும் சண்டித்தன முள்ளதாகவும் இருக்கும் பக்ஷத்தில் இடையில் ஒருவாரம் பத்துநாட்பொருத்துக் கொடுக்கலாம். இதற்குப் பத்தியம் இங்கு சொல்லப்படாவிட்டாலும் வியாதிக்குத் தகுந்ததுபோல் புளி, புகை, பெண், முதலியவைகளை நீக்கவேண்டு மென்பது அநுபவ சாலிகளுக்குத் தெரிந்தவிஷயமே. பால், நெய், உப்பு, முருங்கைப்பிஞ்சு, காரல், வெங்கணம் ஆகியவையாம். வெந்நீர் பாவிக்கவும்.

ஜன்னிகள், விஷபேதியிற்காணும் ஜன்னிகள், சூதக வயிற்றுவலி முதலிய அநேக ரோகங்களும் தீரும்.

இச்செய்யுளில் இதன் அநுபானம் சர்க்கரையும் திராக்ஷயுமெனச் சொல்லியிருக்கிறும் சமயோசிதமாக அந்தந்த ரோகங்களுக்கேற்ற அநுபானங்களிற் கொடுக்க, கஷ்டமான அநேகரோகங்களுந் தீரும்.

குன்மரோகங்களுக்கு இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் அண்டரசபற்பம், வாலைரச தாம்பிராதி, உப்புச்சிந்தூரம், யோகரசமாத்திரை, முனியாதிச் சூரணம், குலிகாதிச் சூரணம், கெந்தக ரசாயனம், வாயுவுண்டை, குக்குடலேகியம் ஆகியவைகளி லொன்றுடன் அந்தந்தநோயின் காரணம், லக்ஷணம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி அநுபானித்துக் கொடுக்கத் தீரும்.

இவ்விதமே மற்றரோகங்களுக்கும் வேண்டிய அநுபானாதிகளை இக்கிரந்தத்துடன் சேர்த்திருக்கும் ரோகசிகிச்சா அட்டவணைக் குறிப்பைப்பார்த்து சமயோசிதமாக நிதானித்துக்கொள்க.

Koviloor Digital Library

3. அண்டரசபற்பம்.

கோழிமுட்டை, வெள்ளையம்பிலி, வெள்ளெருக்கம்பால் அல்லது எருக்கம் பால், சுத்திசெய்த பாலரசம், அவயம்வைத்த கோழிமுட்டைத்தோல், (இதனையும் சுத்திசெய்து கொள்ளவேண்டும்) இந்நான்கும் வகை-1-க்கு வராகனெடை-1¼

செய்முறை:- குஞ்சு பொரிக்கப்பெற்ற கோழி முட்டையோடுகளை அப்பளாக்காரத்தைக்கரைத்த ஜலத்திற்போட்டுக் காய்ச்சி நான்கு கொதிகள் வந்தபின்னிறக்கி, ஓட்டிற்குள்ளிருக்கும் ஜவ்வுகளை நீக்கியுலர்த்தி யெடுத்துக்கொள்வதே முட்டையோட்டின் சுத்தியாம்.

ஆரம்பத்தில் இரசத்தையும் அண்ட ஓட்டையும் கல்வத்திலிட்டு இரண்டும் கலக்கும்படியரைத்துப் பின்பு வெள்ளையம்பிலியையும் எருக்கம்பாலையும் கலந்து வைத்துக்கொண்டு சிறுகச்சிறுகவிட்டு நான்கு சாமமரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து நன்றாய் வெய்யிலிலுலர்த்தி வைத்துக்கொள்க. எருக்கம் பாலும் அண்டக்கருவும் போதாவிட்டால் செல்லத்தக்க அளவு சேர்த்துக்கொள்ளலாம்.

பருமனான கோழிமுட்டையொன்றை ஒரு தம்பி கொள்ளத்தக்க துவாரமிட்டு அதிலுள்ள வெள்ளை மஞ்சள் என்னும் கருக்களை யூற்றிவிட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பில்லைகளைச் சிறு துண்டுகளாய்த் துண்டித்துப்போட்டு அதன்வாயில், வேறொரு முட்டைத்துண்டில் உளுந்துமாவை அல்லது கோதுமை மாவைக் குழைத்துப்பூசிப் பொருந்த ஒட்டவைத்து சந்து பந்தனம்செய்து வெய்யிலில் உலரவைத்துப் பின்பு முட்டைமுழுவதும் ஒன்றன்பின்னொன்றாய் ஏழு சீலைமண் செய்து கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்றாய் உலர்த்திக் கொள்ள வேண்டும். அம்பதுபலம் விராட்டியில் அல்லது கவசத்திற்குப் பத்துப்பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஒருநாளாறவிட்டு சாக்கிரதையுடன் கவசத்தைநீக்கி கூட்டிற்குள்ளிருக்கும் பற்பத்தையெடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம் :- முக்காற் குன்றிமணியெடை..உத்தமம்; 1 ½-குன்றிமணியெடை. மத்திமம்; 2¼ -குன்றிமணியெடை அதமம்; 3-குன்றிமணியெடை அதமாதமமாம். இப்பற்பத்தை வெல்லத்திலும், சர்க்கரையிலும், மற்றும் அநுபானங்களிலும் காலை மாலை இரண்டு வேளையும்-5-நாள் உட்கொள்ளலாம். அவசியமானால் அதிகநாட்களும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :- குன்மங்கள்; 36-வித வாயு ரோகங்கள்; 18-வித சூலைரோகங்கள்; குட்ட ரோகங்கள்; கிரந்திரோகங்கள்; பல்லைக்கிட்டிக்கொள்ளும் தாட்சூலை கண்ட சூலை முதலியவைகள் தீரும்.

பத்தியம் :- இதனை உபயோகித்து வரும்போது குளிர்ந்த ஜலபானம், குளிர்ச்சியான வஸ்துக்கள், உப்பு, புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது. ஆனால் வெந்நீரைக்குளிர ஆறவைத்துப் பானம் செய்யலாம். முருங்கைப்பிஞ்சு, நெய், பால் இன்னும் யோசிதமாக தகுந்த பதார்த்தங்களையும்

Koviloor Digital Library

சேர்க்கலாம். அஞ்சுநாள் மருந்தை உபயோகித்து மறு அஞ்சுநாளும் மறுபத்தியம் காத்து-11-ம் நாள் வெந்நீர்ஸ்நானம் செய்து ஒருநாளாறவிட்டு மறுநாள் ஆமணக் கெண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்விக்கவேண்டும். இவ்விதம் எத்தனை நாள் மருந்தை யுபயோகிக்கின்றோமோ அத்தனைநாள்கள் மறுபத்தியங் காத்து மறுநாள் ஆமணக்கெண்ணெய் ஸ்நானம் செய்விக்கவும். மறுபத்தியத்தில் சிற்றுப்பு, இலகுவாய்ச் சீரணிக்கத்தக்கவைகள் முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு

இம்முறையில் சுத்தரசத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக துவாதச சிந்தூரத்திற் சொல்லியிருக்கிறபடி ரசத்தை மலரவைத்துச் சேர்த்துக்கொண்டால், இந்த அண்டரசபற்பமானது விசேஷகுணத்தைத் தரும்.

4. அரிதார பஸ்பம்.

சுத்திசெய்த மடலரிதாரம் பலம்-1, இது ஒரே கட்டியாயிருக்கவேண்டும். கறியுப்பு பலம்-5. வெள்ளெருக்கம்பால் அல்லது நாட்டெருக்கம்பால் செல்லத்தக்க அளவு, முட்டை வெள்ளையம்பிலி செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கறியுப்பைக் கல்வத்திலிட்டுச் சிறுகச்சிறுக எருக்கம்பாலைவிட்டு-4-சாமமரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி-5-சீலைமண்செய்து-50-பலம் விராட்டி புடமிட்டாறினபின்னெடுத்து, முன்போலவே எருக்கம்பாலைவிட்டரைத்து முன்போலவே புடமிடவும். மூன்றாந்தடவையும் முன்போலவே புடமிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு கோழிமுட்டை வெள்ளைக்கருவைச் சிறுகச்சிறுகவிட்டு நான்குசாமமரைத்து தாரக்கட்டிக்கு எங்கும் சமமாகக் கவசித்துலர்த்தி அதன்மேல் ஏழு சீலைமண்செய்து உலர்த்திக்கொள்ளவும். ஒருபடி மணல் கொள்ளத்தக்க பானையில் நான்குவிரற்கன முயரம் மணலைப்பரப்பி, அதன்மேல் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கவசத்தைவைத்துப் பானைநிறைய மணலைக்கொட்டி பானைவாயை சாணகியால்மூடி வாய்க்கு-3-சீலைமண்செய்து அடுப்பேற்றிக் கமலாக்கினியாக ஒருசாமம் எரித்து அப்படியே ஒருநாளாறவிடவேண்டும். இதனைத் தென்னவோலையால் எரித்தால் உத்தமமாயிருக்கும். அப்படி யெரித்தால்-2-சாமம் எரிக்கலாம். தீயானது குறைந்தால் அவுடதமானது பக்குவமாயிராது. ஆகையால் மிதமாயிருக்க வேண்டும். பின்பு கவசத்தை நீக்கிப்பார்க்க தாரமானது உருகி சிவந்த வர்ணமாயிருக்கும். இதனைக் கல்வத்திற்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

அரிதாரபற்பத்தின் பிரமாணம்:- முக்காற் குன்றிமணியெடை உத்தமம்.1½-குன்றிமணியெடை மத்திமம். 2¼ -குன்றிமணியெடை அதமம். 3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

இப்பற்பத்தைப் பொதுவாகத் தேனிலனுபானித்துட் கொள்ளலாமெனினும், நோயின் சுபாவம், காரண முதலியவைகளுக்கேற்ற அநுபானத்திற் கொடுக்க விசேஷ குணமுண்டாம்.

Koviloor Digital Library

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சிற்றரத்தை(சுந்நராஷ்டம்) அக்கராகாரம் இவ்வைந்து சரக்கும் வகை-1-க்குச் சமனெடை. இவற்றை யிளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொள்க. இச்சூரணம் வராகனெடை-½-யுடன் இப்பற்பத்தை பிரமாணப்படி சேர்த்துத் தேன்விட்டுக் குழைத்துட்கொள்க. இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் ஏழுபொழுது அல்லது ஒன்பது பொழுது சாப்பிட காசம், சுரம், சோகை, தோஷம், சூலை, புண், கிரந்தி, யானைக்கால் வீக்கம் ஆகியவை தீரும்.

பத்தியம் :- உப்பு, பசுநெய், முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, கீரைமுளை ஆகியவைகளாகும். மருந்து முடிந்தபின் மறுபத்தியமிருந்து வெந்நீர் ஸ்நானம் பண்ணவும்; இடையிலொரு நாள்விட்டு மறுநாளும் வெந்நீர் ஸ்நானம் செய்யவும். மறுபடியும் ஒருநாள் விட்டு மறுநாள் வெந்நீர் ஸ்நானம் செய்யவும்; பின்பொருநாள் விட்டு முக்கூட்டெண்ணெய்தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும்.

5. மாலிங்க சிந்தூரம்

உலாந்தாலிங்கம் பலம்-1, இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். நெல்லிக்காய்க் கந்தகம் பலம்-1. இதனை நன்றாய்த் தூள்செய்து கொள்ளவேண்டும். வெள்ளெருக்கன் பால் அல்லது நாட்டெருக்கன் பால் படி ¼

செய்முறை:- வாயகண்ட ஒருசிறு சட்டியை அடுப்பேற்றி அதில் அரைப்பங்கு கந்தகத்தூளைப்பரப்பி அதன் மேல் லிங்கக்கட்டியைவைத்து அது மறையும் படியாக மறு பாதிப்பங்கு கெந்தகத்தூளைத்தூவி, கமலாக்கினியாக தீயெரிக்க, கெந்தகமுருகும். அந்தச்சமயத்தில் எருக்கம்பாலைச் சிறுகச்சிறுகவிட்டு சுருக்கிடவேண்டும். அடிக்கடி லிங்கக் கட்டியையும் கீழ்மேலாகப் புரட்டியும் கொடுத்துவரவேண்டும், இவ்விதம் நாலுசாமம் சுருக்கிட்டு அடுப்புடன் ஆறவிட்டு எடுத்து, கட்டியின் மீதுள்ள கசடுகளைத் தண்ணீர் விட்டுக்கழுவி மெல்லிய வஸ்திரத்தால் துடைத்து, சற்றுநேரம் வெய்யிலிலுலரவைத்துப் பின்பு கல்வத்திற்பொடித்து சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும். இதுவே மாலிங்க சிந்தூரமாம்.

மாலிங்க சிந்தூரத்தின் பிரமாணம் :-முக்காற்குன்றிமணியெடை உத்தமம். 1½ -குன்றிமணி யெடை மத்திமம். 2 ¼ -குன்றிமணியெடை அதமம். 3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

இச்சிந்தூரத்தைப் பிரமாணப்படி இஞ்சிச்சாற்றிற்கொடுக்க, ஜன்னிகள், தோஷங்கள் ஆகியவை தீரும்.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை இந்நான்கும் வகை-1-க்கு வராகனெடை- ½ . இவற்றை இளவறுப்பாய்வறுத்து-¾-ஆழாக்கு சலத்தைவிட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டின கஷாயத்தில் முன் சிந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொடுக்க, வாதரோகங்களும், சூலைரோகங்கள் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

இன்னும் ஜன்னி, சுரம் ஆகியவைகளுக்கு இச்சிந்தூரத்துடன் முன் தாளக சிந்தூரத்தையும் சேர்த்துக் கொடுக்க விசேஷ குணத்தைத் தரும்.

6. நாக பஸ்பம்.

பாகப்படுத்தின சிறுகண்ணாகம் பலம்-1. ஏழாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-1. இதனைத் தூள்செய்துகொள்ள வேண்டும். சவ்வீரம் தேவையான அளவு, பசுவின்நெய், வெள்ளாட்டுப்பால், எலுமிச்சம்பழச்சாறு இவை மூன்றும் செல்லத்தக்க அளவு.

நாகசுத்தி :- தேவையான அளவு சிறுகண்ணாகத்தை இரும்புக் கரண்டியிற் போட்டு, உலையில்வைத்து துருத்தியால் ஊதிக் கொஞ்சம் சூடு கண்டவுடனே கொஞ்சம் பசுவின் நெய்தெளித்து நன்றாயுருகினவுடனே வெள்ளாட்டுப்பாலில் சாய்க்கவேண்டும். இந்தப்பாலானது உருகிவிழும் நாகம் நன்றாய் முழுகும்படியாக யிருக்கவேண்டும். அந்தப்பாலை யூற்றிவிட்டு வேறு புதியபாலை வைத்துக்கொள்க. இரண்டாந்தடவையும் முன்போலவே நாகத்தையுருக்கிச் சாய்க்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி-4-தடவை சாய்க்கவும். பாலும் தடவைக்குத் தடவை புதிதாகவேயிருக்கவேண்டும். இதுவே இப் பற்பத்திற் கேற்றநாகசுத்தியாம். இவ்விதம் சுத்திசெய்த நாகம் பலம்-1-எடுத்துக்கொள்க.

செய்முறை:- சுத்திசெய்த ஒருபலம் நாகத்தை மண்சட்டியில்வைத்து அடுப்பேற்றி உருகினவுடன் வெடியுப்புத்தூளைச் சிறுகச் சிறுக கிராசங்கொடுத்துவரவேண்டும். ஒரு தடவை போட்ட உப்பானது எரிந்தடங்கினபின் மறுமுறை போடவேண்டியது. அடிக்கடி துழாவிக்கொடுத்தும் வரவேண்டியது. இவ்விதம்-2-சாமம் கிராசித்துவரின் நாகமானது மயில் நிறமான தூளாகும். சிலசமயம் தாமதப்படும். அப்போது எந்நேரமானாலும் மயில் நிறமாகிற வரையில் வறுக்கவேண்டியது. பின்பு ஆறவிட்டெடுத்து நிறுத்துக் கல்வத்திலிட்டு, கண்டயெடையில் நாலிலொருயெடை வீரத்தைச்சேர்த்து, சிறுகச் சிறுக எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு-4-சாமமரைத்துப் பில்லை செய்து வெய்யிலில் நன்றாயுலரவைத்து; புதிய ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி-50-பலம் விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்னெடுக்க பற்பமாம்.

நாகபற்பப் பிரமாணம்:- முக்கால் குன்றிமணியெடை உத்தமம், 1½ குன்றிமணியெடை மத்திமம். 2¼ -குன்றிமணியெடை அதமம், 3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- இப்பற்பத்தைப் பிரமாணப்படி தேன் முதலிய சமயோசித அநுபான விசேஷங்களிலுட்கொண்டால், எலிகடிவிஷம், எலிகடியாலுண்டான ஈளை, கேவியிழுக்கும் மேல் மூச்சுகள், வயிற்றிலுள்ள பலரோகங்கள், பிரமேகங்கள், ஆசனக்கடுப்பு, மூலக்கடுப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இம்மூன்றும் சமனெடை. இவற்றை யிளவறுப்பாய் வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்

Koviloor Digital Library

கொள்ளவும். இந்தச் சூரணம் வராகனெடை ½ -யுடன் இந்த நாகபற்பத்தைப் பிரமாணப்படி சேர்த்துத் தேன்விட்டு மத்தித்து உட்கொள்க. இவ்விதம் காலை மாலை-2-வேளையும்-15-பொழுது உட்கொண்டு வந்தால், ஈளையிருமல், எலிகடி, வாதகாசம், அரிகுரல் சிலேற்பனரோகம், உஷ்ணகோபம் ஆகியவை தீரும்.

ஆவாரன் வேர்ப்பட்டை, அதின் மரப்பட்டை, அதன்கொழுந்து, அதன்பூ, அதன்காய், இந்த ஐந்து வகைகளையும் தனித்தனியுலர்த்திச் சமமாய்நிறுத்திடித்து வஸ்திரகாயம் செய்துகொள்க. இதுவே ஆவாரைப்பஞ்சாங்கமாம். இந்தச் சூரணம் வராகனெடை- ½ -யுடன் மேற்படி நாகபற்பத்தைப் பிரமாணப்படி சேர்த்து பசுவின்நெய்விட்டுக் குழைத்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமாக-17-வேளை சாப்பிட, மேகவகை-21-ம், நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, துன்மாங்கிஷம், இரத்தப்பிரமேகம், உள்ளுருக்கி, எலும்புருக்கி ஆகியவை தீரும்.

கொடிவேலிவேர்ப் பட்டையைப் பாலிலவித்துலர்த்திப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தில் தேனைவிட்டு லேகியபதமாய்ப் பிசைந்து வைத்துக் கொள்க. இந்த லேகியம் வராகனெடை- ¼-½-யுடன் மேற்படி நாகபற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துட்கொண்டுவரின், சத்திகுன்மம், எரிகுன்மம் முதலிய அட்டகுன்மங்கள்-80-வகை வாதரோகங்கள், குட்டங்கள், கரப்பான், கிரந்தி, கீழ்க்கவுசை, மேற்கவுசை ஆகியவைகள் தீரும்.

பத்தியம் :- வறுத்தஉப்பு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு ஆகியவையாம். மருந்தானபின் முக்கூட்டெண்ணெய் ஸ்நானம்செய்ய வேண்டியது.

குறிப்பு

மேற்கண்ட பாகப்படியே பெருங்கண்ணாகத்தையும் பற்பஞ்செய்து கொள்ளலாம். அதற்கும் மேற்கண்ட குணங்களெல்லா முண்டு.

7. கருவங்க பஸ்பம்

கீழ்க்காணும் முறைப்படி சுத்திசெய்யப்பட்ட காரீயம் பலம்-1, ஏழாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-1, மனோசிலை பலம்- ¼ இவ்விரண்டையும் சேர்த்துப் பொடிசெய்துகொள்க. அமுக்கராக்கிழங்கு செல்லத்தக்க.அளவு. இதையும் இடித்துத் தூள்செய்து வைத்துக்கொள்க.

கருவங்கசுத்தி, பசுவின்கோமியம், பசுவின்பால் இவை யிரண்டையும் சமமாய்க்கலந்து வைத்துக் கொள்க. தேவையான அளவு வங்கத்தையுருக்கி முன் கலவையில் சாய்க்கவேண்டும். மறுபடியும் உருக்கி முன்போலவே சாய்க்கவேண்டும். இவ்விதம் நான்கு தடவைகள் மடக்கி மடக்கிச் செய்யவும். தடவைக்குத்தடவை முன்கலவையைப் புதிதாய் எடுத்துக்கொள்க. ஒருதடவை யுருக்கிச் சாய்த்த

Koviloor Digital Library

கலவையில் மறுதடவை சாய்க்கலாகாது. அந்தக் கலவையானது உருக்கிச் சாய்க்கும் வங்கமானது நன்றாய் முழுகியிருக்கும்படியான அளவு இருக்கவேண்டியது. இதுவே கடுகுவங்கசுத்தியாம். இவ்விதம் சுத்திசெய்து ஒருபலம் எடுத்துக்கொள்ள வேண்டியது.

செய்முறை:- மேற்படி கருவங்கத்தைச் சட்டியிலிட்டுருக்கி நன்றாயுருகினவுடனே, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் வெடியுப்பு மனோசிலைக் கலவையைச் சிறுகச்சிறுகக் கிராசங்கொடுத்துத் தேய்த்துவர வங்கமானது நொறுங்கித் தூளாகிப்போம். பின்பு அதில் அமுக்கராச் சூரணத்தைத் தூவித்தேய்த்து வரவேண்டும். போட்டதூள் எரிந்துபோனவுடன் மறுபடியும் தூள்போட்டு வறுக்கவேண்டும். இவ்விதம் ஏமாறாமல் சாக்கிரதையுடனும் கைபாகத்துடனும்-2-சாமம் வறுத்தெடுக்க, ஒருவிதச் சிவப்புத்தூளாகிவிடும். இந்தத்தூளை ஒருசிறு சட்டியிற் குவித்துவைத்து மேல்சட்டிமூடி-5-சீலைமண்செய்து, அடுப்பேற்றிக் காடாக்கினியாக-2-சாமம் எரித்து அடுப்புடன் ஆறவிட்டெடுக்கச் சிந்தூரமாகியிருக்கும். இதனைக் கல்காரக்குள்ள சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

கருவங்கச் சிந்தூரப் பிரமாணம் :- முக்கால் குன்றிமணியெடை உத்தமம். 1½-குன்றிமணியெடை மத்திமம். 2 ¼-குன்றிமணியெடை அதமம்-3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

தீரும் நோய்கள்:- முன் சொல்லப்பட்டிருக்கிற ஆவாரை பஞ்சாங்கத்துடன், இச்சிந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்து, பசுவின் வெண்ணெயிற் குழைத்துட் கொண்டுவர 20-வகை மேகங்கள், மேகவரட்சி, பித்தவரட்சி, கை கால் காந்தல், தேகங்காந்தல், கிரந்திகள், சூலைகள் முதலியவைகள் தீரும். இன்னும் இதனைச் சமயோசிதமாக பற்பல பானங்களில் பற்பல ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

குறிப்பு

இக்கருவங்கச் சிந்தூரத்தையும் நாகபற்பத்தைப்போலவே அதனதன் அனுபான விசேஷங்களில் உபயோகிக்கலாம்.

8. வெள்வங்க பற்பம்

*சுத்திசெய்த வெள்ளீயம் பலம்-1, சிகைக்காயிட்டுத் தேய்த்துக் கழுவியுலர்த்தப்பட்ட நரையில்லாத கருப்பு ரோமம் பலம்-1. இதனைச் சன்னமாய்க் கத்தரித்துக் கொள்ள வேண்டும். அரிதாரம் பலம்-¼, இதனை மைபோலப்பொடித்து முன்ரோமத்துடன் கலந்தரைத்துக் கொள்க. ஆடாதோடை இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- வெள்ளீயத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி, அது நன்றாயுருகினவுடன் ரோமம்தாரம் என்னும் இரண்டையும் கலந்திருப்பதை, ஒரு சிம்டாவால்

* இதன் சுத்திக்கிரமங்கள் நமது இரசவாத சிந்தாமணியில் அனேகஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்று னொன்றைத் தெரிந்து செய்துகொள்க.

Koviloor Digital Library

எடுத்துக் கிராசங்கொடுக்க வேண்டும். இத்தூளைத்தூவி-4 சாமம் வரையில் கிராசங்கொடுக்க வேண்டியதாயிருப்பதால், அதற்குத் தகுந்ததுபோலவே குறைந்த அளவாகக் கிராசித்து வரவேண்டியது. அப்போதைக்கப்போதும் வங்கத்தையும் தேய்த்து வறுத்தும் வரவேண்டியது. இவ்விதம் நான்கு சாமம் கைவிடாமற் செய்யின், வங்கமானது மாவைப்போலாகிவிடும். பின்பு இம்மாவைக் கல்வத்திலிட்டு முன் ஆடாதோடைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு-4-சாமமரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து, ஈரமின்றிக் காய்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடுமூடி-7-சீலைமண்செய்துலர்த்தி-50-ப்லம் விராட்டியிற் புடமிட்டு ஒருநாளாறவிட்டெடுக்க, வெண்மையான பற்பமாயிருக்கும்.

வெள்வங்கபற்பப்பிரமாணம்: முக்கால் குன்றிமணியெடை உத்தமம், 1 ½-குன்றிமணியெடை மத்திமம், 2 ¼-குன்றிமணியெடை அதமம், 3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

தீரும் நோய்கள்:- அந்தந்த ரோகங்களுக்குத் தகுந்த அனுபான விசேஷங்களிற் கொடுத்துவர 20-மேகவகைகள், குட்டரோகங்கள், பரங்கிப்புண்கள், யானைச்சொறி முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு

கருவங்கபற்பம், நாகபற்பம், வெள்வங்கபற்பம் இம்மூன்றையும் சமபாகமாகச்சேர்த்து, தகுந்த அனுபானங்களில் அல்லது மேல் சொல்லப்பட்டிருக்கிற அநுபானங்களிற் கொடுக்க, மேற்கண்ட ரோகங்களும் இன்னும் அநேகரோகங்களும் தீரும்.

9. வாலைரச தாம்பிராதி.

சுத்தியான தாம்பிர அரபொடி பலம் 12, மடலரிதாரம், பாலரசம் அல்லது சுத்தியான ரசம், நெல்லிக்காய்க் கந்தகம் இம்மூன்றும் வகை-1-க்குப்பலம்-8. *புளிச்சாரணைக் கிழங்கின்சாறு அதாவது புளிநறளைக் கிழங்கின்சாறு செல்லத்தக்க அளவு.

---

*சாரணை என்பது வெள்ளைச்சாரணை, கறுப்புச் சாரணை என இருவகைகள் பிரசித்தமானவை. எனினும் இதுவே சாறடை, சாரணத்தி, சாறுவேகம் எனவும் வழங்கப்படுகின்றது. இக்கவியின் விளக்கத்தின்படி சக்திசாரணைக் கிழங்கின் சாற்றால் பாகஞ் செய்வதில் அவ்வளவாய் விசேஷ குணங் காணப்படவில்லை. தென்தேசத்தில் பெரும்பான்மையும், இவ்விடங்களில் சிறுபான்மையும் இச்சாரணையானது புளிச்சாரணை, புளிச்சாறுவேளையெனச் சொல்லப்படுகிறது. இன்னும் சிலர் புளிநறளையைக் கண்டுச் சாரணையெனவும் வழங்குகிறார்கள். இக்கிரந்தம் தென் தேசத்திலுண்டானது. நறளையானது சிறு நறளை, பெரு நறளை, புளி நறளையென்னும் மூவகைகளில் புளி நறளையொன்றே செம்மைச் சுத்தி

Koviloor Digital Library

செய்முறை :- தாம்பிர அரப்பொடியை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு அதன்மேல் நாலங்குலம் நிற்கும்படியாக மேற்படி புளிநறளைக்கிழங்கின் சாற்றைவிட்டு மூன்றுநாள் வைக்கவேண்டும். இதனைப் பிரதிதினமும் வெய்யிலில் வைத்து நன்றாய்க் கிண்டிக்கொண்டு வரவேண்டும். சாறு சுவறச்சுவற புதியசாற்றை யூற்றிக்கொண்டும் வந்தால் உத்தமம். தாளகத்தைத் தனியே மைபோலத் தூள்செய்துகொள்க. இரசத்தையும், கந்தகத்தையும் நன்றாய் மசிந்து நற்கருப்பாகிற வரையில் அரைத்துக்கொள்க. இதன்பின் இதனுடன் தாளகத்தையும் சேர்த்தரைத்துக்கொள்க.

நான்காம் நாள் கல்வத்தில் முன் சித்தப்படுத்தின தாம்பிரப்பொடி, பின் சித்தப்படுத்தின சரக்குகள் ஆகிய நான்கையும் ஒன்றாய்ச்சேர்த்து புதிதாகப் புளிநறளைக் கிழங்கின்சாற்றை சிறுகச்சிறுகவிட்டு-4-சாமமரைத்துப் பில்லைசெய்து வெய்யிலில் ஈரமில்லாமல் நன்றாயுலர்த்தி ஓட்டில்வைத்து-7-சீலைமண்செய் துலர்த்திக்கொள்க.

ஒருமுழ ஆழம் ஒருமுழ அகலமுள்ள குழியொன்றுதோண்டி, அதில் அரைவாசிவரையில் காட்டெருவையடுக்கி, அதன்மேல் கவசத்தைவைத்துக் குழி நிறைய காட்டுவிராட்டியையடுக்கித் தீப்போட்டெரித்து, குளிர ஆறினபின் னெடுத்துப் பொடித்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

வாலைரச தாம்பிராதியின் பிரமாணம் :- முக்காற் குன்றிமணியெடை உத்தமம், 1 ½-குன்றிமணியெடை மத்திமம், 2 ¼ குன்றிமணியெடை அதமம், 3-குன்றிமணியெடை அதமாதமமாம்.

செய்வதில் சாரணையைப் பார்க்கிலும் விசேஷமானது. இவ்விஷயம் அநுபவ சாலிகளுக்கு வெளிப்படையானதே. மேலும் இதில் காணும் கவியிலும், புளி நறளையின் கிழங்கோ பொன் போலச் செம்பைத் தெளிவாகச் சுத்தியது செய்யும் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தியாதி காரத்திலும், இக்கவியின் அசல் கருத்து புளி நறளையை அநுபவத்தில் வைத்து யூகிக்க ஏதுவாகிறது. அவ்விதமே, முன்னதைப் பார்க்க பின்னது அதிகம் சித்திக்கதக்கதாகவே காணப்படுகிறது. அனுபவத்தையொட்டி நமது கருத்தை எழுதியிருக்கின்றோமாயினும், இனி இப்பாகத்தைச் செய்பவர்களின் கருத்தையுஞ் செலுத்தி ஆராய்ந்து தத்தம் இஷ்டம்போல் சாரணைக் கிழங்கின் சாற்றில் அல்லது நறளைக் கிழங்கின் சாற்றில் அப்பாகத்தைச் செய்து அநுபவத்தில் இரண்டிலொன்றின் சிறந்த குணத்தை நிச்சயித்துக் கொள்ளலாம். மேலும் புளி நறளையின் இலைக்கும் செம்பைச் சுத்தி செய்யும் குணமுண்டு. ஆகையால் இப்படிக் கிழங்கிற்குப் பதிலாய் இலையைச் சேர்த்துக் கொள்ளலாமெனினும், கிழங்கே விசேஷமென இதிலமைத்திருக்க வேண்டியது. இந்த அவுடதம் பின் சொல்லப்படும் அநேக முறைகளில் பயன்படும் பிரதான மருந்தாகையால், இந்த பற்பத்தைக் கவனிக்க வேண்டியது அவசியமான ஒவ்வொருவருக்கும் கடமையாம்.

Koviloor Digital Library

தீரும்நோய்கள் :- குன்மரோகங்கள், 36-வகை வாயுக்கள், சோகை, கவிசைக்கட்டி, கெண்டைக்கட்டி, சூலை, மூலரோகங்கள் ஆகியவை தீரும். பொதுவாக இதன் அநுபானம் தேன் எனவும், இதனைத் தனியே உபயோகிக்கலா மெனவும் சொல்லப்படினும் அந்தந்த ரோகங்களுக்காக சொல்லப்படும் அவுடதங்களுடன் சேர்த்துச்செய்தும் பிரத்தியேக அநுபானங்களுடன் சேர்த்தும் உபயோகிக்கின் விசேஷ குணங்களுண்டாம்.

10. உப்புச் சிந்தூரம்.

தேவையான கறியுப்பைக் கல்வத்திலிட்டு, எருக்கம்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து-2-சாமமரைக்கவேண்டும். பின்பு பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி-5-சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் பத்தெடை வராட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்து, முன்போலவே எருக்கம்பாலை விட்டரைத்து முன்போலவே புடமிடவேண்டும்.

இவ்விதமே திருகுகள்ளிப்பாலில் இரண்டுபுடமும், சிறு தும்பையிலைச்சாற்றில் இரண்டுபுடமும், மருதம்பட்டைச் சாற்றில் இரண்டுபுடமும், கற்றாழைச்சாற்றில் இரண்டுபுடமும் ஆகக்கூடிய பத்துப்புடமிட்டெடுத்துக்கொள்க.

இதன்பின் எலுமிச்சம்பழச்சாறு, பொடுதலைச்சாறு இவ்விரண்டும் சமமாகக்கலந்து முன்சித்தப்படுத்திவைத்திருக்கிற உப்பைக் கல்வத்திலிட்டுச் சிறுகச்சிறுக முன்சாற்றைவிட்டு நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தினெடைக்கு-12-பங்கு விராட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கச் சிந்தூரமாம். இதனை சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- 2 ¼-குன்றிமணியெடை உத்தமம், 4 ½-குன்றிமணியெடை மத்திமம், 6¾-குன்றிமணியெடை அதமம், 9-குன்றிமணியெடை அதமாதமமாம்.

தீரும்நோய்கள்:- குன்ம ரோகங்கள், வயிற்று நோய், க்ஷயம், சூலை, வீக்கம், பைத்தியரோகம், வாயுக்கள், பித்தக்கிராணி முதலியரோகங்கள் தீரும்.

இதன் அநுபானம் பொதுவாய்த் தேனாயினும் சமயோசிதமாக வேறு தகுந்த அநுபானங்களிலும், கொடுக்க, சிறந்த குணமுண்டாம்.

11. சிந்தாமணிக் குளிகை.

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம், சுத்திசெய்த ரசம், சுத்தி செய்த அரிதாரம், பொரித்த வெண்காரம் இவை வகை-1-க்கு வராகனெடை-1¼-சுத்திசெய்த கருநாபி, சுத்திசெய்த நெரிவிஷம், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், கருஞ்சீரகம், கார்போகரிசி இவற்றைத் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-1¾

Koviloor Digital Library

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, வேப்பங்கொட்டைப் பருப்பு இவை வகைக்கு வராகனெடை-1¼, முன் சொல்லப்பட்டிருக்கிற வாலைரச தாம்பிராதிபற்பம் வராகனெடை-5, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- (a) முன்னர் ரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க்கருத்த் தூளான பின்னெடுத்துத் தனியே வைத்துக்கொள்க. (b) அரிதாரத்தை மைபோலப்பொடித்து நன்றாய்த்தூளானவுடன் வெண்காரத்தையும் சேர்த்துத் தூள்செய்து வேப்பம்பருப்பை ஒவ்வொன்றாய்ச் சேர்த்தரைத்து எல்லாம் அரைபட்டபின் கொஞ்சம் கையாந்தகரைச் சாற்றைவிட்டு அரைத்து மைபோலான பின்னெடுத்துக்கொள்க. (அரிதாரத்துடன் வேப்பம்பருப்பைச் சேர்த்தரைப்பதால், அதன் துர்க்குணங்களெல்லாம் நீங்கிவிடும், (c) நேர்வாளப்பருப்பைக் சுல்வத்தி லிட்டுத் தூள்செய்து, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இம்மூன்று தூட்களையும் கூடசேர்த்து கையாந்தகரைச் சாற்றைவிட்டு மைபோல அரைத்து அதனுடன் மற்ற சூரணங்களையும் சேர்த்து-1-மணிநேரம் அரைத்தானபின், முறையே (a) (b) (c) யிலுள்ளவையாவையும் சேர்த்து-3-சாமம் மேற்படி கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்துக் கைவிடாமலரைத்து, குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம்:- மாத்திரை உத்தமம், 1 ½ -மாத்திரை மத்திமம், 2-மாத்திரை அதமம், 3-மாத்திரைகள் அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- இதனை இஞ்சிச் சாற்றிலும் சமயோசிதமாக மற்றும் அனுபானங்களிலுமிட, பலவகை சுரங்கள், பலவகை ஜன்னிகள், பலவகை தோஷங்கள் முதலிய பற்பல ரோகங்கள் தீரும்.

இஞ்சியை மேல்தோல்சீவி யிடித்துப்பிழிந்து சுண்ணாம்பு நீக்கி, அதற்குச்சமன் முலைப்பாலும் சேர்த்துக்கலந்து, இந்த மாத்திரையைப் பிரமாணப்படியிழைத்துக் கொள்க. பின்பு மேல்தோல் சீவப்பட்ட சுக்குத்தூள், வறுத்த மிளகுத்தூள், வறுத்த அரிசித்திப்பிலித்தூள், இம்மூன்றும் சமமாய்க்கலந்து, அதில் ஒரு வராகனெடைத் தூளை முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் கலவையிற்போட்டுக் கலக்கி உட்கொள்ளவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் செய்ய, எல்லாவித ஜன்னிகளும் தீரும்.

தனி இஞ்சிரசத்திலும் மேற்கண்ட திரிகடுகுத் தூளைச்சேர்த்து இந்த மாத்திரையைப் பிரமாணப் படி யனுபானித்துக்கொடுக்க, பற்பல ஜன்னிகள் தீரும்.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, வறுத்த மிளகு வறுத்ததிப்பிலி, வறுத்த அக்கிராகாரம், வறுத்த நராஷ்டம் (சிற்றரத்தை). இவற்றைத் தனித்தனித்து வஸ்திரகாயம்செய்த தூள் வகை-1-க்குச் சமனெடை., இவற்றை யொன்றாய்க்கலந்து வைத்துக் கொள்ளவும். ஆடாதோடையிலை, தூதுவேளையிலை, துளசியிலை இம்மூன்றும் வகை-1-க்கு தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக் கேற்றதுபோல

Koviloor Digital Library

சமபாகமாயெடுத்துப் பிட்டவியலாகச்செய்து சாறெடுத்துக் கொள்ளவும். இந்தச் சாற்றிற்குச் சமனளவு இஞ்சிச்சாறு, முலைப்பால், தேன் இந்தத் திரவங்களை யொன்றாய்க்கலந்து- ½ - ¾-வராகனெடை முன் சூரணத்தையும் கலந்து இந்தச் சிந்தாமணி மாத்திரையையும் பிரமாணப்படியிழைத்து, அதனுடன், சமயோசிதமான அளவு, மாலிங்க சிந்தூரம், அரிதாரசிந்தூரம் ஆகியவைகளும் கலந்து கொடுக்க, காசசம்பந்தமான ஜன்னிகள், சுரங்கள், கபசம்பந்தமான சுரங்கள், ஜன்னிகள், கபசீதள ரோகங்கள் ஆகியவை தீரும்.

தேன், முலைப்பால் ஆகியவைகளையும் சேர்த்து. இச்சிந்தாமணி மாத்திரையைப் பிரமாணப்படி யிழைத்து அதனுடன் அரிதாரபற்பம், பின் சொல்லப்படும் விஷ்ணுச்சக்கரக் குளிகை ஆகியவைகளையும் கொஞ்சம் சேர்த்துக்கொடுக்க கிராணி சம்பந்தமான ஜன்னிகள், அதிசாரசம்பந்தமான ஜன்னிகள் ஆகியவைகள் தீரும்.

இவ்விதமே சமயோசிதமாக எந்தெந்தக்காரணங்களால் உண்டாகிறதோ அந்தந்த ஜன்னிகளுக்கேற்ற அனுபானங்களிலிட அனேகவித ஜன்னிகள் தீரும். இவையெல்லாம் அநுபவத்தால் நிச்சயித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பத்தியம் :- உப்பு, அரைக்கீரை, கொத்துக்கீரை முதலியவைகளும், தேகசுபாவம், வியாதியின் காரணம் ஆகியவைகளுக்கேற்ற பதார்த்தங்களும் ஆகும். இன்னின்ன பதார்த்தங்கள் ஏற்கும் ஏற்காதென்பதை அநுபவத்தாலும், புத்தி நுட்பத்தாலும் அறிந்து நீக்கவும் கூட்டவும் வேண்டும்.

12. விஷ்ணு சக்கரம்.

சுத்திசெய்து இடித்து வஸ்திரகாயம்செய்த கரு நாபிச்சூரணம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த காந்தம், இந்துப்பு, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த லிங்கம், ரசதாம்பிரபற்பம், மேல்தோல் சீவியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சுக்குச்சூரணம், வறுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்த மிளகுச்சூரணம், வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த அரிசித்திப்பிலிச் சூரணம், வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த கடுகுரோகணிச் சூரணம் இப்பதின்மூன்று வகைகளும் வகை-1-க்கு வராகனெடை-6 ¼. பக்குவப்படுத்தின பலகறை (கவடி) வராகனெடை-1 ¼. எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- தேவையான அளவு கவடிகளை ஒரு பீங்கான் கோப்பையிற் போட்டு, அதன்மேல் நாலங்குலம் நிற்கும்படியாக எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு வெய்யிலில்வைத்து வரவேண்டியது. சாறெல்லாம் சுண்டினபின் ஒரு ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலைமண் செய்யாமலே கனத்தபுடமும் போடலாம் அல்லது கொல்லன் உலையில் வைத்து நன்றாய் ஊதியும் எடுத்துக்கொள்ளலாம். இவ்விதம் செய்து ஒருநாள் வைத்திருந்தால் அப்படியே மலர்ந்து வெளுத்திருக்கும். இதுவே

Koviloor Digital Library

க்வடியின் பக்குவமாம். இவ்விதம் பக்குவம்செய்து மேற்கண்ட அளவு எடுத்துக் கொள்க. இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து நன்றாய்க்கறுத்துத் தூளானவுடன் தனியே யெடுத்துவைத்துக் கொள்க. மற்றச் சரக்குகளையும் தனித்தனியே அரைத்து மைபோலத் தூள் செய்துகொள்ளவும். முடிவில் எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து கல்வத்திலிட்டு ஒருசாமமரைத்து நன்றாய் மிஸ்ரமித்தபின் எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு-3-சாமம் கைவிடாம லரைத்து குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- 1-மாத்திரை உத்தமம், 1 ¼ -மாத்திரை மத்திமம். 1 ½ -மாத்திரை அதமம். 2-மாத்திரை அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- இதனைப் பிரமாணப்படி யிஞ்சிச்சாற்றி லனுபானித்துக் கொடுக்க, பலவகை வலிகள், ஜன்னிகள், தனுர்வாதம், விறையல், (குளிர்ச்சியால் தேகம் மரத்துப்போதல்), விக்கல் முதலிய பல ரோகங்கள் தீரும். இன்னும் இதனை சமயோசிதமாக மற்றும் மருந்துகளுடனும் அனுபானங்களுடனும் சேர்த்துப் பலரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

குறிப்பு

இந்தப் பாகத்தில் சொல்லியிருக்கிறபடி இந்துப்பைச்சேர்த்தால் மாத்திரைகள் நிகழ்ந்துபோகின்றதாகையால் சிலர் இந்துப்பை நீக்கிச்செய்துகொள்வதுமுண்டு. இந்துப்பை நீக்காமலே பழச் சாற்றுடன்கொஞ்சம் கருவேலம்பிசினைச் சேர்த்து அரைத்து மாத்திரைகள் நிகழாமற்செய்து கொள்வது முண்டு. இவ்விருவகைகளிலும் அநுபவசித்தமாய் அதிக வித்தியாசங் காணப்படவில்லை.

விஷ்ணுச் சக்கரம் (வேறு)

சுத்திசெய்த காந்தம் பலம்-1, கொடிவேலிவேர் பட்டைச்சூரணம் பலம்-1. ஆலாத்திக் கர்ப்பூரம் அல்லது சூரத்துக்கர்ப்பூரம் பலம்- ½-(இது இப்போது சுத்திசெய்யப்பட்டு பில்லைபில்லையாக இங்கிலீஷ்மருந்து ஷாப்புகளில் விற்கப்படுகிறது) சுத்தியான ரசம், சுத்தியான கந்தகம், சுத்தியான வீரம், சுத்தியான லிங்கம், சுத்தியான ரசசிந்தூரம், கார்போகரிசிச்சூரணம், கடுகுரோகணிச் சூரணம், மஞ்சட் கடுக்காய் தோல் சூரணம், மேற்புறணி நீக்கி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த அதிமதுரச் சூரணம், இவை வகை-1-க்கு வராகனெடை-1. கொடிவேலிவேர்ப்பட்டைக் கஷாயம் செல்லத்தக்க அளவு. இதற்காக-3-பலம் கொடி வேலி வேர்ப்பட்டையைச் சிதைத்து-1-படி ஜலம்விட்டு எட்டிலொரு பாகமாய்ச் சுண்டவைத்திறக்கி வடிக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

செய்முறை :- கல்வத்தில் முன்னர் ரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கறுத்தபின். வீரத்தையும்சேர்த்து நன்றாயரைத்தெடுத்து வைத்துக்கொள்க. லிங்கத்தையும், ரசசிந்தூரத்தையும் நேகப்பொடித்து எடுத்துவைத்துக் கொள்க. பின்பு

Koviloor Digital Library

காந்தத்தை நேகத்தூள் செய்து அதனுடன் கொடிவேலிவேர்ப்பட்டைச் சூரணத்தைச் சேர்த்து நன்றாய்க் கலக்கும் படி-1-மணி நேரம் அரைத்துப்பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் சூரணங்களையும் சேர்த்து முன் கிஷாயத்தைச் சிறுகச்சிறுக விட்டு-4-சாமமரைத்துக் கடலைபோல் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம் :- 1-மாத்திரை உத்தமம். 1¼-மாத்திரை மத்திமம் ; 1 ½-மாத்திரை அதமம்-2-மாத்திரை அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- சமயோசிதமாக அந்தந்தரோகங்களுக்குத் தகுந்த அநுபானங்களிலிட, 13-வகை ஜன்னிகள், புறவிசிவுஜன்னிகள், சூலை ரோகங்கள், தனுர்வாதம், பாரிசவாய்வு, பக்கவாயுகள் முதலியவை தீரும்.

குறிப்பு

இந்தப்பாகமானது மேற்கண்ட பாகத்துடன் எழுதப்பட்டிருப்பதாலும், முன்சொல்லப் பட்டிருக்கிற சிந்தாமணிக் குளிகையுடன் சேர்த்து, கிராணிசம்பந்தமான ஜன்னிகள், அதிசார சம்பந்தமான ஜன்னிகள் ஆகியவைகளுக்குக் கொடுக்க வேண்டியது இந்த முறை யெனக்குறிப்பிட்டிருப்பதாலும், இம்முறையானது அநுபவத்திலும் சிரேஷ்டமாய்க் காணப்படுகிறபடியாலும் இப்பாகத்தையும் அசல் கிரந்தமுறைப்படியே இதனுடன்சேர்த்து எழுதப்பட்டது. வைத்தியபாகங்களுக்குக் கறையுமில்லை துறையுமில்லை யென்பது அனுபவசாலிகளான ஒவ்வொரு பண்டிதர்களுக்கும் தெரிந்தவிஷயமே. ஆகையால் இம்முறையானது பலரிடத்தில் பலவிதமாகக் காணப்பட்டும், கேள்விப்பட்டு மிருக்கினும் மூலகிரந்தத்தை யனுசரித்து இங்கிது எழுதப்பட்டிருக்கிறது.

13. கறுத்த பூபதிமாத்திரை.

சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், சுத்தி செய்த லிங்கம்; சுத்திசெய்த கருநாபிச்சூரணம், சுத்தி செய்த நெரிவிஷச் சூரணம், வறுத்திடித்த கருஞ்சீரகச் சூரணம், வேப்பம்விதைப் பருப்பு, (இதனைக்கொஞ்சம் நெய்விட்டு வறுத்துக்கொள்ளவும்) இரசதாம்பிராதிபற்பம், மேல் தோல் சீவப்பட்ட சுக்குச் சூரணம், வறுத்திடித்த மிளகுச் சூரணம், வறுத்திடித்த அரிசித் திப்பிலிச் சூரணம், மஞ்சட் கடுக்காய்த் தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம், நெல்லி முள்ளிச்சூரணம், இப் பதினான்கும் வகை-1க்கு வராகனெடை-1¼. சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு வராகனெடை-8¾, (இதனையும் கொஞ்சம் நெய்விட்டு வறுத்தெடுத்துக் கொள்க). கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னர் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க்கருத்தவுடன் லிங்கத்தையும் சேர்த் தரைத்து ஒன்றாய்க் கலந்தவுடன் மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்க் கலந்து அதனுடன் சேர்த்து-1-மணி நேரம் அரைத்து

Koviloor Digital Library

எடுத்து வைத்துக் கொள்க. பருப்பினங்களை ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய்ப் பொடியாக்கி முன்சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணத்தை யெல்லாம் சிறுகச் சிறுகத்தூவி, கையாந்தகரைச் சாற்றையும் சிறுகச் சிறுகவார்த்து முடிவில்-3-சாமம் கைவிடாமலரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி, சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- 1 மாத்திரை உத்தமம். 1 ¼-மாத்திரை மத்திமம். 1 ½ மாத்திரை அதமம். 2-மாத்திரை அதமாதமமாம்.

தீரும்நோய்கள்:- இஞ்சிச்சூரணம், சுக்குக்கிஷாயம் முதலிய அநுபானங்களிலிட, ஜன்னி வகைகள், சுரங்கள், கூகை வீக்கம் (பொன்னுக்கு வீங்கியென்னுங்கட்டி; இன்னும் அதைப்போன்றது) முதலிய பற்பல ரோகங்கள் தீரும்.

குறிப்பு

முன் சொன்ன சிந்தாமணிக் குளிகையை உபயோகிக்கும்போது மலபந்தமாயிருந்தால், அப்போது இந்தக் சூளிகையைப் பிரமாணப்படி உபயோகிக்கலாம்.. சமயோசிதமாக வேறு அவுடதங்களுடனும் சேர்த்துக் கொடுக்கலாம்.

14. யோகரச மாத்திரை.

இரசதாம்பிராதிபற்பம், பாகப்படுத்தின கிட்டப் பொடி இவ்விரண்டும் வகை-1-க்குப் பலம்-2. சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த கருநாபிச்சூரணம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, இந்நான்கும் வகை-1-க்கு வராகனெடை-1. மஞ்சட் கடுக்காய்த்தோல் ஊறற் கிஷாயம் *பருத்திப் பூச்சாறு இவ்விரண்டையும் சமனாய்ச் சேர்த்தகலவை செய்யத்தக்க அளவு.

செய்முறை:- முன்னர் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கருக்கிறவரையிலரைத்துப் பின்பு வாளத்தைச் சேர்த்தரைத்து மற்றவைகளையும் சேர்த்தரைத்து நன்றாய்க்கலந்தபின், முன் சித்தப் படுத்திவைத்திருக்கிற கடுக்காய்க்கஷாயம் பருத்திப்பூச்சாறு ஆகிய இரண்டின் கலவையைச் சிறுகச்சிறுக வார்த்துக் கைவிடாமல் மூன்று சாமமரைத்து, குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி,.சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

கடுக்காய் ஊறற் கிஷாயம் :- அஞ்சுபலம் மஞ்சட் கடுக்காய்த்தோலை அரைப்படி ஜலத்திற் போட்டு இரண்டுநாள் ஊறவைத்து மூன்றாம்நாள் நன்றாய்ப் பிசைந்து வடிகட்டிக்கொள்வதே கடுக்காய் ஊறற்கிஷாயமாம்.

---

*பருத்திப்பூ அகப்படாவிட்டால், அதன் பிஞ்சுன்சாறாம், அதுவும் அகப் படா விட்டால் அதனிலைச் சாற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

கிட்டப்பக்குவம், வல்லத்துப் பழங் சிட்டத்தையுரலிலிடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு பீங்கான்பாத்திரத்திற் போட்டு அதன்மேல் நாலங்குலம் நிற்கும் படியாகக் காரமான சீமைக்காடியை வார்த்து ஊற வைத்துக் காடி ஊறின பின்பு வெள்ளைப்பூண்டிதழ்களை யிடித்துப்பிழிந்தசாற்றை முன் போலவே விட்டு ஊறவிட்டு, விட்டசாறு சுண்டினபின், வாதுமை நெய் அல்லது பசுவின்நெய் வார்த்து, முன் கிட்டத்தை நன்றாய் வறுத்துப் பொடித்து எடுத்துக் கொள்வதே கிட்டத்தின் பக்குவமாம்.

யோகரச மாத்திரையின் பிரமாணம் :- ஒரு மாத்திரை உத்தமம். 1¼-மாத்திரை மத்திமம். 1½ மாத்திரை அதமம். 2-மாத்திரைகள் அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- தேன், இஞ்சிச்சாறு, சர்க்கரை ஆகிய இவைகளுள் சமயோசிதமாய்த் தனித்தனியில் அல்லது, தேனும் இஞ்சிச்சாறும் அல்லது சர்க்கரையும் இஞ்சிச்சாறும், என்னும் இரண்டிரண்டில் பிரமாணப்படி முன் மாத்திரையை அநுபானித்துக் கொடுத்தால், ஜன்னிவகைகள், சுரங்கள், தோஷங்கள், க்ஷயரோகங்கள், ஈளைரோகங்கள், வலிப்பு ரோகங்கள், குன்ம ரோகங்கள், கிரந்திகள், சூலைகள், உள்வீச்சு ஜன்னி, புறவீச்சு ஜன்னி, விறைப்பு ரோகங்கள் (சீதளத்தால் தேகம் மரத்தல்) உட்குத்து, உட்குத்துப் புறவீச்சு முதலிய பலரோகங்கள் தீரும்.

பத்தியம் :- வியாதியின்சுபாவம், ரோகியின் தேகசுபாவம், காலசுபாவம் முதலியவைகளுக் கேற்றது போல பத்தியம் வைக்கவேண்டியது. அவை எல்லாவற்றையும் இங்கெழுத முடியாதாயினும் சிகிச்சகர்கள் தம்தம் அநுபவ சித்தமாய் நிதானித்து ஏற்பாடுசெய்ய வேண்டியது.

15. சூரியப் பிரபை.

(a) நெல்லிக்காய்க்கந்தகம், இரசம், துரிசு, துத்தம் சாதிலிங்கம், வெள்ளைப்பாஷாணம், கவுரிப்பாஷாணம், தொட்டிப்பாஷாணம், மனோசிலை, அரிதாரம், கருநாபி, இப்பதினொறு சரக்குகளையும் தனித்தனி கிரமப்படி சுத்திசெய்து வகை-1-க்கு வராகனெடை 1¼, (b) இந்துப்பு, பொரித்த வெண்காரம், பொரித்த சீனக்காரம், நாலாங்காய்ச்சல்வெடியுப்பு, சவுக்காரம், இவ்வைந்தும் வகை-1-க்கு வராகனெடை -1¼. (c) மேல்தோல் சீவப்பட்ட சுக்குச் சூரணம், வறுத்திடித்த மிளகுச் சூரணம், வறுத்திடித்த அரிசித்திப்பிலிச்சூரணம், வறுத்திடித்த கருஞ்சீரகச் சூரணம், வறுத்திடித்த வெந்தயச் சூரணம், வறுத்திடித்த குறாசானியோமச் சூரணம், உரித்துத் தோல்போக்கின வெள்ளைப்பூண்டிதழ்; இவ்வேழும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

செய்முறை :- (a) இல் உள்ளவற்றில் இரசத்தையுங் கெந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கறுத்துப்போகிற வரையில் அரைத்துக்கொள்ளவும். பின்பு மற்ற ஒன்பது சரக்குகளையும் தனித்தனி பொடித்து; முடிவில் பதினொறுசரக்குகளையும் ஒன்றாய்ச்சேர்த்து; அவுரியிலைச் சாற்றை விட்டு -2-சாமமரைத்து வில்லை செய்து

Koviloor Digital Library

வெய்யிலில் நன்றாயுலரவைத்துக் கொள்ளவும். பின்பு அவுரியிலையை யரைத்த விழுது பலம்-10-இதனை மேற்படி வில்லை மீது சமமாகக் கவசித்து; அதன்மேல் அவ்விதமே எருமைச் சாணியை கவசித்து; இந்தக் கவசத்தினெடைக்கு-5-பங்கு கொண்ட வராட்டிகளிற் புடமிட்வேண்டும். புடம் எரிந்து புகையடங்கினவுடன் புடத்தைக் கலைத்துக் கவ்சத்தைத் தனியே யெடுத்து வைத்துவிட வேண்டும். பின்பு ஆறினபின் கவசத்தை நீக்கி பில்லையை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதற்குக் கருக்குப்புட மெனப்பெயர். (இதுவே நீலிபாகமுமாம்). இது சற்று கவனமாகவும் கைபாகமாகவும் செய்யவேண்டியது. இரண்டொருதடவை செய்யின் அநுபவத்தால் தானே தெரிந்துபோகும்.

பின்பு இந்தவில்லையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து (b) யிலுள்ள ஐந்து சரக்குகளையும் தனித்தனி வெவ்வேறாகப்பொடித்து, இதனுடன் சேர்த்துக் கொள்ளவும். (c) யிலுள்ள பூண்டிதழைத் தனியேயரைத்து அதனுடன் மற்றச் சூரணங்களையும் சேர்த்தரைத்து முன் மருந்தோடுசேர்த்து-1-மணிநேரம் அரைத்து எல்லாம் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மசிந்தபின்பு முதல்நாள் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு-4-சாமமரைக்கவேண்டும். இரண்டாம் நாள் வெண்ணொச்சிக் கொழுந்தையிடித்துப் பிழிந்தசாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு-4-சாமம் அரைக்க வேண்டும். மூன்றாம்நாள் குப்பைமேனியிலையை யிடித்துப்பிழிந்த சாற்றால் முன்போலவே-4-சாமமும், நாலாம்நாள் எலுமிச்சம் பழச்சாற்றால் முன்போலவே நான்குசாமமும், ஐந்தாம்நாள் வெங்காயச் சாற்றால் முன்போலவே-4-சாமமும் அரைத்து ஆறாம்நாள் குன்றிமணியளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- ஒருமாத்திரை உத்தமம். 1½ -மாத்திரை மத்திமம். 2- மாத்திரைகள் அதமம். 3- மாத்திரைகள் அதமாதமமாம்.

தீரும்நோய்கள்:- இம்மாத்திரையைப் பிரமாணப்படி தகுந்த அனுபானங்களிலிட குன்மரோகங்கள், மந்தாக்கினிரோகங்கள், சூலைரோகங்கள், வாயுரோகங்கள், கிரந்திரோகங்கள்; சுரரோகங்கள்; மேகசுரங்கள், ஜன்னிகள், இசிவு ஜன்னி; புறவீச்சு ஜன்னி; உள்வீச்சு ஜன்னி, பக்கநோவு; வயிற்றுப்பொருமல்; வயிற்றுப்பிசம் முதலிய அனேகரோகங்கள் தீரும்.

இந்த மாத்திரையுடன் சிந்தாமணி மாத்திரை விஷ்ணுசக்கரமாத்திரை யென்னும் இவ்விரண்டையுஞ் சேர்த்துக் கொடுத்தால் எல்லாவித ஜன்னிகளும் கண்டிப்பாய்த் தீரும்.

வெள்ளைச் சாரணைவேர் வராகனெடை-31; வெள்ளைப்பூண்டிதழ் வராகனெடை-3¼, கொள்ளு பலம்-1; இவற்றை-¼-படி ஜலம் விட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சின கஷாயத்தில் மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி யிழைத்துக் கொடுக்க, உத்ரவாயு, கெர்ப்பவாயு, கோறைவாயு, தேகத்தில் (பள்ளம் விழச் செய்யும் வாயுகள்) சூதகவாயு முதலியவைகள் உடனே தீரும்.

Koviloor Digital Library

16. மகாமிருத்துவாதி.

துளையிடாத நன்முத்து வராகனெடை-1¼, இதனை நன்னிக்கல் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து-4-சாமமரைத்துப் பில்லைசெய்து உலர்த்தி யெடுத்துக் கொள்க. இவ்விதமே-1¼-வராகனெடை செந்நிறமுள்ள நற்பவழத்தையும், 1¼ -வராகனெடை இராவின கலைமான் கொம்புத்தூளையும் அரைத்து சித்தஞ்செய்து கொள்ள வேண்டும். இரச தாம்பிராதி பற்பம், சுத்திசெய்த லிங்கம், கோரோசனை ருத்திராக்ஷ சூரணம், தங்க அரபொடி, வெள்ளி அரபொடி, (தங்கரேக்கு, வெள்ளி ரேக்கு ஆகியவைகளையும் சேர்த்தால் நன்மையே. ஆனால் அரைக்கும் போது தனித்தனி ஒற்றையொற்றை ரேக்காகச் சேர்த்து அரைக்கவேண்டும்) கஸ்தூரி, பச்சைக் கர்ப்பூரம், *குங்குமப்பூ, அதிமதுரச் சூரணம், மேல்தோல் சிவப்பட்ட சுக்குச் சூரணம், மிளகுச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், திராக்ஷப் பழம், மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், மாசிக்காய்த்தோற் சூரணம், நெல்லிவற்றற்சூரணம், சுட்டெரித்தவசம்பு சாம்பல், நிலவேம்புச் சூரணம், முசிற்று முட்டை, குந்திரிக்கச் சூரணம், உலர்த்தின பூலாமரப்பட்டைச் சூரணம், செஞ்சந்தனச் சூரணம், வெளிச்சம்பிசின் சூரணம், இவை வகை-1-க்கு வராகனெடை-1¼.

செய்முறை:- முன்னர் நன்னிக்கல் கல்வத்தில் குங்குமப் பூவையிட்டு பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டரைத்து நன்றாயரைபட்டபின், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி, முசிற்று முட்டை, திராக்ஷப்பழம் என்னும் இவற்றை ஒன்றன்பின் னொன்றாகச்சேர்த்தரைத்து நன்றாய் மசிந்தபின்பு முத்துமுதல் வெளிச்சப்பிசின் ஈறாகவுள்ள மற்றச் சரக்குகளையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு கைவிடாமல்-8-சாமம் அரைக்கவேண்டும். இதன்பின்பு கோழி முட்டை மஞ்சட் கருவையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் சமபாகமாய்ச் சேர்த்து நன்றாய்க்கலக்கி வைத்துக்கொண்டு, சிறுகச்சிறுக விட்டு-4-சாமமரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரமாய் வைத்துக்கொள்ள வேண்டும்.

பிரமாணம் :- ஒரு குன்றிமணி யளவு உத்தமம்; 2-குன்றிமணி யளவு மத்திமம், 3-குன்றிமணியளவு அதமம்; 4-குன்றிமணியளவு அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- இதனைப் பிரமாணப்படி முலைப்பாலில் அநுபானித்துக் கொடுக்க, ஜன்னிகள்; தோஷங்கள்; நாவரட்சியினாலுண்டான நாமுள் தோஷம், தீராத நாவரட்சி; தீராதவாந்தி; சித்தப்பிரமை; மயக்கம்; மனக்கிலேசம், அசதிஜன்னி; சோர்வு; முதலியவை நீங்கும். இருதயத்தின் துர்ப்பலத்தை நீக்கி, மன உற்சாகத்தையும் மனக்களிப்பையு முண்டாக்கும். நரம்புகளின் தளர்ச்சி; சோர்வு முதலியவைகளை நீக்கித்தென்பையும் தைரியத்தையு முண்டுபண்ணும். இதனைத் தாது நஷ்டப்பட்ட வர்களுக்கும் உபயோகித்து அதிகப் பிரயோசனமுங்கண்டதுண்டு. இதன்

* இது மூலத்தில் சொல்லப்படவில்லை யாயினும் இம்மாதிரியான மற்ற முறைகளில் அநுபவ சித்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

பிரயோசனத்தை யவரவர்கள் தாம் தாமே அநுபவத்தால் கண்டு நிச்சயித்துக் கொள்ளலாம்.

இவ்வரிய மருந்தைப் பொதுவாக அனேக வியாதிகளுக்குத் தனியாகவும், மற்ற மருந்துகளுடன் சேர்த்தும் உபயோகிக்கலாம். இம்மருந்தானது வைத்தியர்களாகிய ஒவ்வொருவரிடத்தும் கட்டாயம் முன்னதாகவே சித்தமாயிருக்கத் தக்கது.

17. க்ஷய குலாந்தகன்.

சுத்திசெய்த சாதிலிங்கம்;பொரித்த நாட்டு வெண்காரம்; சுத்தி செய்த கரு நாபிச் சூரணம்; இரசதாம்பிராதிபற்பம்; மேல்தோல் சீவப்பட்ட சுக்குச் சூரணம்; வறுத்த மிளகுச் சூரணம்; வறுத்த அரிசித்திப்பிலிச்சூரணம்; இவ்வேழுவகையும் வகை-1-க்கு வராகனெடை-1½. இஞ்சிச்சாறு; குப்பைமேனி யிலைச்சாறு; இவை இரண்டுவகையும் தனித்தனி செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னர் கல்வத்தில் லிங்கத்தைத் தூள் செய்து; அதனுடன் மற்ற வைகளையும் சேர்த்து நன்றாய்-1-மணி நேரம் அரைத்து எல்லாம் ஒன்றாய்க் கலந்தபின் இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு-4-சாமமரைக்கவேண்டும். இதன் பின்பு; முன்போலவே குப்பைமேனிச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு-4-சாமமரைத்து; பருமனான குன்றிமணி யளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- ஒரு மாத்திரை உத்தமம். 1 ½-மாத்திரை மத்திமம். 2- மாத்திரைகள் அதமம். 2 ½-மாத்திரைகள் அதமாதமமாம்.

தீரும்நோய்கள்:- இந்த மாத்திரையைப் பிரமாணப்படி தேனிலிழைத்துக் கொடுத்து; அதன்மேல் கீழ்க்காணும் பரந்தாதிநீர்ப் பானத்தைப் பானஞ்செய்ய காசரோகங்கள்; க்ஷயரோகம்; ஈளைரோகங்கள் முதலிய கபசம்பந்தமான அநேகரோகங்கங்கள் தீரும்; ஆனால் அந்தந்த ரோகங்களுக்கேற்ற அநுபான விசேஷங்களுடன் உபயோகித்தால் வியாதியானது சீக்கிரம் தீர்ந்து போவதுடன் பலவித நன்மைக்கு ஏதுவாகும்.

பரந்தாதி நீர்ப்பானம்

துளசியிலை (இதுகருந்துளசியாயின் அதிசிரேஷ்டம்) தூதுவேளையிலை, ஆடாதோடாயிலை, கண்டங்கத்தரியிலை, இண்டிலை (புனல்தண்டு; ஈகைக்கொடி) சங்கிலை இவ்வாறுவகை யிலைகளும் வகை-1-க்குப் பலம்-1. இவற்றைப் பிட்டவியலாக அவித்துப்பிழிந்து ரசமெடுத்துக்கொள்க. தாளீசப்பத்திரி, சந்நராஷ்டம், ஏலம், சிறுநாகப்பூ, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி இவை வகை-1-க்கு வராகனெடை-1/8, இவற்றை யிளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்து முன் சித்தப்படுத்தின ரசத்தில்தூவி கொஞ்சம் தேனும்விட்டுப் பானஞ்செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

குறிப்பு.

மேற்கண்ட பரந்தாதி நீர்ப்பான முறையிலுள்ள இலைதினுசுக்ளிலும், சரக்குகளிலும் சமயோசிதமாக சிலவற்றைச்சேர்த்தும், சிலவற்றைநீக்கியும் உபயோகித்துக்கொள்ளலாம். அதிகப்படுத்தவும் குறைக்கவும் சிகிச்சகர்கள் அநுபவத்தால் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த க்ஷயகுலாந்தக மாத்திரையை, தாளீசப்பத்திரிச்சூரணம், அசுவகந்தாதிச் சூரணம், ஆடாதோடைக்கிருதம் முதலிய அவுடதங்களுடனும் சேர்த்துக் கொடுக்கலாம்.

பத்தியம்:- வியாதியின் சுபாவம், தேசம், காலம், ரோகியின் தன்மை ஆகியவைகளைக் கவனித்து லகுவாய்ச் சீரணிக்கத்தக்க சத்துள்ள ஆகாரங்களை சிகிச்சகர்கள் ஏற்பாடுசெய்ய வேண்டியது. ஏனெனில் இந்த ரோகிகளுக்கு முக்கியமாய்க் கபரோகிகளுக்கு இருவகையாலும் கெடுதியுண்டாம். ஆகாரம் அதிகப்படுவதாலும் கெடுதியே; ஆகாரங் குறைந்துபோவதாலும் கெடுதியே. ஆகையால் ஆகாரவிஷயத்தை அதிக சாக்கிரதையுடன் கவனித்துவர வேண்டியது.

18. அமுதபலாதிச் சூரணம்.

நன்னாரிவேர், கோரைக் கிழங்கு, *விலாமிச்ச வேர், வெட்டிவேர், சந்தனம், வால்மிளகு, சந்நராஷ்டம்(சிற்றரத்தை) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, நெற்பொரி, *ஏலரிசி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாகேசுரம், மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், கொத்துமல்லிவிதை, நெல்லிவற்றல், இப்பதினெட்டு சரக்குகளையும் தனித்தனி வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்குப் பலம்-¼, விதைநீக்கி, காம்பு முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த திராக்ஷப்பழம் பலம்-¼, விதை நீக்கப்பட்டதும் கெட்டியானதுமான பேரீச்சங்காய் பலம்-¼, சீனிசருக்கரை பலம்-5.

செய்முறை:- பேரீச்சங்காயைக் கொஞ்சம் பசும் பாலில் ஊறவைத்து அம்மியில் வெண்ணெய்போல் அரைத்துக் கொள்க. திராக்ஷப்பழத்தையும் அம்மியில் வெண்ணெய்போல அரைத்துக் கொள்ளவும். இவ்விரண்டையும் மற்றச் சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து, அதில் கலந்துவிடவேண்டும். அதன் பின்பு ஒரு மண்பாத்திரத்தில்-¼-படி பசுவின் பாலும்-¼-படி ஜலமுமாக கலந்துவிட்டு, பானைவாய்க்கு வேடுகட்டி, சூரணத்தைவைத்துப் பிட்டவியலாக அவித்து நிழலில் உலர்த்தி மறுபடியும் தூள்செய்து சீனி சருக்கரையையும் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

---

* இவையிரண்டும் மூலத்திற் சொல்லப்படவில்லை.

Koviloor Digital Library

பிரமாணம்:- வராகனெடை-1¼-முதல் 2-வரையில் காலை மாலை இரண்டுவேளையும் உட்கொள்ளலாம்.

தீரும்நோய்:- சுரவகைகள், க்ஷயரோகங்கள், காசரோகங்கள், உளமாந்தை, (வயிற்றிற்குள் உண்டாகும் ஒருவகை விப்புருதிக்கட்டி) ஓங்காரபித்தம், பைத்திய ரோகம், அசதி, தேககாந்தல், கைகாலெரிச்சல், அரோசிகம், அன்னத்துவேஷம், கணரோகங்கள் பலவகை பித்தரோகங்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஆகியவை தீரும்.

மேற்கண்ட க்ஷயகுலாந்தகனுடன் இந்த அமுதபலாதிச் சூரணத்தையும் உபயோகித்துவரின் மேற்கண்ட ரோகங்களுள் கடினமானவைகளாயினும் தீரும்.

19 சுரமாத்திரை.

சுத்திசெய்த இரசம்; சுத்திசெய்த நெல்லிக்காய்க்கந்தகம், இரசதாம்பிராதிபற்பம், சாதிக்காய்த்தூள், ஆலாத்திக்கர்ப்பூரம் (இது சீமையில் சுத்திசெய்யப்பட்டு இங்கு இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் (Purified Camphor) என விற்கப்படுகிறது. இதுவே மருந்திற்கு விசேஷமாய் உபயோகப் படத்தக்கது) இவ்வைந்தும் வகை-1-க்கு வராகனெடை-2½ , சுத்தி செய்யப்பட்ட நேர்வாளப்பருப்பு வராகனெடை-5. இதனைச் கொஞ்சம் வாதுமை நெய் அல்லது பசுவின் நெய் தெளித்து சற்று வறுத்துக்கொள்க சோற்றுக் கற்றாழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- முன்னர் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கருத்து தூளாகிறவரையில் அரைத்துக் கொள்ளவும். பின்பு வாளத்தைக்கல்வத்திலிட்டுப் பொடித்து, கற்றாழைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நன்றாயரைத்து அதனுடன் முன் சித்தப்படுத்தின ரசகெந்தியையும் மற்ற மருந்துகளையும் சேர்த்து-3-சாமமரைத்து, உளுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- 1-மாத்திரை உத்தமம். 1¼-மாத்திரை மத்திமம். 1½-மாத்திரை அதமம். 2-மாத்திரைகள் அதமாதமமாம்.

தீரும் நோய்கள் :- இம்மாத்திரையைப் பிரமாணப்படி சர்க்கரை முதலியவைகளில் அனுபானித்துக் கொடுக்க, 64-சுரங்களும்-3-நாளில் தீரும்.

குறிப்பு

சுரரோகச் சிகிச்சையில் அதிக சாக்கிரதையும் கவனமும் அவசியம். சுர ஆரம்பத்தில் லங்கனம், இலகு ஆகாரம், இலகு சிகிச்சை ஆகியவைகளைச்செய்து பின்பு வேகமானமருந்துகளை உபயோகிக்க வேண்டியது, 64-சுரமுந் தீருமென்பது வாஸ்தவமே யாயினும், அந்தந்த சுரத்திற்குத் தகுந்த அநுபானங்களிற் கொடுத்தால் விசேஷகுணமுண்டா மென்பதிற் சந்தேகமில்லை. இதற்காக நமது வைத்திய

Koviloor Digital Library

சிந்தாமணியில் பலவகை சுரங்களுக்குப் பற்பலவகை கஷாயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அந்தக் கிரந்தத்தைப் பார்வையிட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

20. பட்டை ரசாயனம்.

சுத்திசெய்த பறங்கிப்பட்டைச் சூரணம் பலம்-8. சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகத்தூள் பலம்-4, சுத்திசெய்த குக்கில் (மைசாட்சி) பலம்-4. மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாகேசுரம், அதிவிடையம், நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குறோசானியோமம், உள்நரம்பு, மேற்புறணி முதலியவைகளை நீக்கிப் பாலில் வேகவைத்து சுத்திசெய்த சிவதைவேர், கொடிவேலி வேர்ப்பட்டை, கடுகுரோகணி, இவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-5. *சுத்திசெய்த அரிதாரத்தூள், நவச்சாரத்தூள், பொரித்த வெண்காரத்தூள், குந்திரிக்கத்தூள் இவை நான்கும் வகை-1-க்கு வராகனெடை-5. சீனிசருக்கரை பலம்-26 ½.

பறங்கிப்பட்டைச்சுத்தி-16-பலம் பறங்கிப்பட்டையை யிடித்துத் தூள்செய்து, ஒரு பானையில் ஒருபடி பசுவின்பாலையும் ஒருபடி ஜலத்தையும் கலந்தூற்றி, பானை வாய்க்கு வேடுகட்டி, அதன்மேல் முன் சூரணத்தைவைத்து மேற்சட்டி மூடி பிட்டவியலாக அவித்தெடுத்து உலர்த்தி யெடுத்துக்கொள்வதே பறங்கிப்பட்டை சுத்தியாம். இவ்விதம் சுத்திசெய்து மேற்கண்ட நிறை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

கெந்தகச்சுத்தி-குக்கில் சுத்தி- இம்முறைகள் முன் சொல்லப்பட்டிருக்கும் கந்தக ரசாயனத்தில் கண்டிருக்கிறபடி சுத்திசெய்து மேற்கண்ட நிறை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

அரிதாரசுத்தி-இதனை காதகதாரபஸ்பமுறையிற் சொல்லியிருக்கிறபடி அல்லது தாரமாத்திரமுறையிற் சொல்லியிருக்கிறபடி சுத்திசெய்து மேற்கண்ட நிறையெடுத்துக்கொள்ள வேண்டியது.

செய்முறை :- மேற்கண்டபடி சுத்திசெய்தெடுத்த குக்கிலைக் கொஞ்சம் பசுவின் நெய் தெளித்து வறுத்திடித்துத் தூள் செய்து கொள்ளவும். மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாயரைத்து சீனிசர்க்கரையையும் சேர்த்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்க.

பிரமாணம் :- வராகனெடை-1 ½-2-ஆக காலை மாலை இரண்டுவேளையும் சாப்பிடலாம்.

---

* இதற்குப்பதிலாக முன்சொல்லப்பட்டிருக்கும் அரிதார பற்பத்தைச் சேர்த்துச் செய்தால் உத்தமமாயிருக்கும்.

Koviloor Digital Library

தீரும் நோய்கள் :- பவுத்திரங்கள், குட்டரோகங்கள், தேகத்திலுள்ள சிட்டங்கள் முதலிய பல ரோகங்கள் தீரும். இன்னும் கிரந்தி, சூலை, மேகவாயு, கீல்வாயு முதலியவைகளும் தீரும். இன்னும் இதனைப் பல மருந்துகளுக்கும் அநுபான மாகவும், உபயோகிக்கலாம். இதனை வேறு மருந்துகளுடன் சேர்த்துங் கொடுக்கலாம். இவை யெல்லாம் புத்தி கூர்மையான பண்டிதர்களுக்கு அநுபவத்தால் தனக்குத்தானே தெரிய வந்துவிடும்.

பத்தியம் :- உறைப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகிய வஸ்துக்களும், இஞ்சி, கடுகு, கறிமஞ்சள், நல்லெண்ணெய், மிருக மாமிசம், வாளைமீன், கோலாமீன், மடவை, சன்னை, வெளவால் முதலிய மீன்களும் கொஞ்சமும் ஆகா.

21. புண்புகை.

இரசம், கருவங்கம், நெல்லிக்காய்க் கந்தகம், அரிதாரம், மனோசிலை, சாதிலிங்கம், காந்தம், துருசு, துத்தம், மிளகுச் சூரணம். இலுப்பைக்கட்டித்தூள், கருஞ்சீரகச் சூரணம். இப்பன்னிரண்டு சரக்குகளும் வகை-1-க்குச் சமனெடை.

செய்முறை :- முன்னர் கருவங்கத்தை உருக்கி இரசத்தோடு தெர்ந்தித்துக் கொள்ளவேண்டும். அதனுடன் கந்தகத்தைச் சேர்த்தரைத்துக் கொள்க. தார முதலான மற்ற ஆறு சரக்குகளையும் தனித்தனிப் பொடித்து முன்னரைத்த ரசவங்கத்துடன் ஒன்றன் பின் ஒவ்வொன்றாய்ச் சேர்த்து அரைத்து முடிவில் மற்ற மூன்று சூரணங்களையும் சேர்த்து இரண்டு மணி நேரம் நன்றாயரைத்து, நான்கு விரலகலமுள்ளதும் அரைசாண் நீளமுள்ளதுமான ஒரு துணியில் ஒருநெற்கனம் எங்கும் சமமாயிருக்கும்படி பரப்பித் திரியாகத் திரித்து பிரிந்து போகாமல் நூல் முதலியவைகளால் பந்தோபஸ்து செய்யவேண்டியது. இவ்விதமே எத்தனை திரிகளாகின்றனவோ அத்தனை திரிகளையுஞ் சித்தப்படுத்திப் பத்திரமாய் வைத்துக் கொள்க.

உபயோகம் :- இந்தத்திரியைக் கொளுத்தி, அதிலுண்டாகும் புகையைப் புண்வாயில்-வியாதி பலத்திற்குத் தகுந்ததுபோல-3-முதல்-5- நிமிஷம் வரையில் காண்பிக்கவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும்-7-வேளை அல்லது அதிகமாய்க் காண்பிக்க, பறங்கிப்புண், மேகப்புண், கிரந்திப்புண், பிளவை, புரையோடும் புண் முதலிய எவ்வித புண் ரோகமும் தீரும். புண்ணில்லாத சூலை முதலிய ரோகங்களுக்கும் இந்தப்புகையைத் தூரமாகவைத்து, சுவாசிக்கச் செய்யலாம். மேலுக்கும் ஆவிபிடிக்கலாம். சிகிச்சகர்கள் சமயோசிதமாக தக்கவிதமாகச் செய்யின், பல நன்மைகளுண்டாம்.

பத்தியம் :- வியாதியின் சுபாவம், ரோகியின் சுபாவம் முதலியவைகளுக் கேற்றபடி இலகு பத்தியமாகவும் கடினபத்திய மாகவும் வைக்கவேண்டியது.

Koviloor Digital Library

22. இடிவல்லாதி.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம்; வறுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்த கருஞ்சீரகச் சூரணம், இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-1¼, கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த ஓமச் சூரணம், பழைய வெல்லம்; இவை மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-2½. மூக்கு வெட்டி சாணிப்பாலில் வேகவைத்துலர்த்தின சேராங்கொட்டை-20.

செய்முறை:- முன்னர் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க்கறுத்துத்தூளானவுடன் மற்ற சூரண்ங்களுடன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்பு சேராங்கொட்டையை மரவுரலிலிட்டு மெதுவாக இடித்துத் தூளானவுடன் எடுத்து கல்வத்திலிட்டு மைபோல அரைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாமல் உரலில் எவ்வளவிடித்தாலும் ஓட்டின் நொறுக்குகள் காணப்படுகின்றன. எல்லாச் சரக்குகளையும் சேர்த்து இடித்தாலும் அப்போதும் ஓட்டுத்துண்டுகள் மசியப்படாமற் காணப்படுகின்றன. ஆகையால், இதனை முன்னர் தனியாகயிடித்து அரைத்துக் கொள்வதேசுலபம்; மேற்படி சேராங்கொட்டை மைபோலானபின்பு வெல்லத்தைச் சேர்த்தரைத்துக் கொண்டு; அதனுடன் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணங்களைச் சிறுகச்சிறுகத் தூவி மைபோலரைத்துக் கொள்ள வேண்டும்; அல்லது சேராங்கொட்டைகளைக் கல்வத்திலரைத்து மைபோலானபின் னெடுத்து உரலிலிட்டு முன் சூரணத்தைச் சிறுகச்சிறுகத் தூவி யிடித்துங் கொள்ளலாம். எவ்விதமாயினும் சேராங்கொட்டையின் ஓடு தெரியாமற் செய்து கொள்வதே பிரதானம்.

பிரமாணம்:- வேளையொன்றுக்கு சிறு நெல்லிக்காயளவாக காலை மாலை இரண்டு வேளையும் -9-வேளை சாப்பிடவும். இந்த அளவு இங்கு சொல்லப்படினும் தேககுபாவத்திற் கேற்றது போல அளவைக் குறைத்துங் கொடுக்கலாம். இரண்டுவேளைக்குப் பதிலாக ஒருவேளையும் கொடுக்கலாம்.

தீரும்நோய்கள்:- படர்தாமரை சூலைகள்; பரங்கிப்புண்; குட்டரோகங்கள்; கிரந்திப் புண்கள் ஆகியவை தீரும்.

பத்தியம்:- இதனைச் சாப்பிட்டு வரும்போது பிரதி தினமுங் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்துவரவேண்டும். புளிப்பு வஸ்துகள்; உஷ்ணசம்பந்தமான வஸ்துகள்; உஷ்ணசம்பந்தமான கிரியைகள்; மற்றவைகள் ஆகா.பெண்ணையறவே நீக்க வேண்டியது.

விண்ணப்பம்.

இந்த முறையானது பல்லாதகி வகைகளில் மிகவும் சூக்ஷுமமானது. ஆனால் இதனைச் செய்யும் வகையில் அநுபவப்படி செய்து கொண்டால் மிகவும்

Koviloor Digital Library

சிரேஷ்டமாகவும் அதைச்செய்வதற்கு அதிக சுலபமாகவுமிருக்கும். சேராங் கொட்டையை அரைத்தாவது இடித்தாவது ஓட்டனுக்களை இல்லாமற் செய்வது அதிககஷ்டமான வேலை மேலும் ஓட்டினால் அதிகப்பிரயோசனமுமில்லை. ஆகையால் (1) இக்கொட்டைகளைக் குழித்தைலமாக இறக்கிச் சேர்ப்பதே சிரேஷ்டமான சுலபமார்க்கம். இதனால் குணம் விசேஷமே யொழிய எவ்வித குறைவும் கிடையாது. (2) இம்முறையில் முதன்மையானது சேராங்கொட்டை யாகையால், சுகுமார தேகிகளுக்கும் வேறு சில தேகிகளுக்கும் ஒவ்வாமல் வீக்கம் பைத்தியரோகம் முதலியவைகள் உண்டாக ஏதுவாகு மாகையால் அதன் வேகத்தைத் தணிக்க எல்லாச் சரக்குகளின் மொத்த எடை வெல்லத்தையும், அவ்வளவே, கழுவி மேல்தோல் நீக்கப்பட்ட எள்ளையும், அவ்வளவே, தேங்காய்ப்பாலையும் சேர்த்துக்கொண்டால் எல்லாத் தேகிகளுக்கும் பொருந்தும். இப்பாகத்தை பின்வருகிற விதமாய்ச்செய்து கொள்ளலாம்.

எள்ளைக்கொஞ்சம் ஜலம் வார்த்து வெண்ணெய் போல அரைத்துக்கொள்ள வேண்டும். வெல்லத்தில் தேங்காய்ப்பாலை விட்டு அவசியமானால் கொஞ்சம் ஜலம் சேர்த்துக் கரைத்துப் பாகுசெய்து, அதில்சேராங்கொட்டைத் தைலத்தை விட்டுக் கலந்து, முன்சித்தப்படுத்தி வைத்திருக்கிற எள், முன்சொல்லப்பட்டிருக்கின்ற சூரணங்கள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக்கிளறிக் கல்வத்திலரைத்துங் கொள்ளலாம். ஆனால் இப்பாகத்தை அவரவர்கள் இஷ்டம்போல் சமயோசிதமாகச் செய்து அநுபவிக்கலாம்.

23. ஜன்னிப் புகை.

பொன்னரிதாரம்; (இதனை மைபோலத் தூள்செய்து கொள்க) பசுவின் பாலில் அல்லது பசுவின் மோரில்-2-சாமம் போட்டுவைத்து மண் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்து உலர்த்தின செம்மண் பூமி நாக்குப்பூச்சி (இதனையும் தனியே தூள்செய்து கொள்க, இவ்விரண்டும் வகை-1-க்குச் சமனெடை; வெள்ளெருக்கம் பால் அல்லது நாட்டெருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு மேற்படி பாலைச் சிறுகச்சிறுக வார்த்து-2-சாமம் கைவிடாமலரைத்து அரைச்சாண் சதுரமுள்ள சேலைத்துண்டுகளில் பூசி வெய்யிலில் உலரவைத்துக் திரியாகத்திரித்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்க.

உபயோகம் :- அவசியமானபோது இத்திரிகளிலொன்றைக்கொளுத்தி நாசியிற் புகையைச் சுவாசிக்கவேண்டும். வியாதியின் மும்முரத்திற்குத் தகுந்த படி-3-5-நிமிஷம் பிடிக்கலாம். இப்படிச்செய்தால்-13-வித ஜன்னிகள்; தோஷங்கள், முகவலி, முயல்வலிப்பு; குதிரைவலிப்பு; காக்கைவலிப்பு; குமரகண்டன்; நரம்பிழுப்பு; பேசிச்சதையிழுப்பு; தனுவாதம் முதலிய பலவித வாதரோகங்கள் தீரும்.

குறிப்பு

சிலபிரதிகளில் "பூமியின்நாகம் என வெளிப்படையாகவே எழுதப் பட்டிருக்கிறது." பூமிநாகம், என பூநீறுக்கும் ஒரு பெயருண்டு.

Koviloor Digital Library

மேற்கண்டவகை ரோகங்களுக்குக் காலதாமதமின்றி யுடனே சிகிச்சை செய்ய வேண்டியது அவசியமானபடியாலும்; இந்தச் சமயங்களில் கண்ணிற்குக் கலிக்கமிட்டு ரோகியைத் தொந்திரவு படுத்துவதேயொழிய பிரதானமான வேறு பிரயோஜன மில்லாதபடியாலும் கலிக்கமுதலியவைகளைப் பார்க்கிலும் நாசியிற் புகைபிடிப்பது இலேசானபடியாலும்; இப்படிச் செய்வது மற்றச்சிகிச்சைகளைப் பார்க்கிலும் அதிசீக்கிரம் குணத்தைத் தர ஏதுவாயிருப்பதாலும் மேற்கண்ட முறையைச் சிகிச்சகர்கள் கட்டாயம் முன்னதாகவே சித்தப்படுத்தி வைத்திருக்கவேண்டும். அப்படிச்செய்வதனால் உற்ற சமயங்களில் உடனே உபயோகித்து வியாதியைநீக்கிக் காப்பாற்ற உபயோகமாம்.

24. முனியாதிச் சூரணம்.

(a) கறிமிளகு பலம்-1, இதனை யொருமண் பாத்திரத்திலிட்டு, அதில் ஒரு படி சிறுதும்பைச் சமூலத்தை யிடித்துப் பிழிந்து வடி கட்டின சாற்றை விட்டு நிழலில் வைத்து, அதிலுள்ள சாறெல்லாம், கொஞ்சமும் ஈரப்பசையின்றி யுலர்ந்தபின்பு அதை முறத்திற்போட்டு, அதிக சாக்கிரதையுடன் மெதுவாய்ப்புடைத்து மிளகின் மீதுள்ள தோல்களை சேகரித்துக் கொள்ள வேண்டும். சில மிளகின்மீது தோல்கள் வெளிப்படாமல் ஒட்டிக் கொண்டிருப்பதுமுண்டு. அவ்வகையானவைகளை முறத்தில் வைத்து சிறு குழவியால் தேய்த்துப் புடைத்துத் தோல்களை யெல்லாம் எடுத்து நைட்பில்லாதிருக்க, மறுபடியும் இரண்டொரு நாள் நிழலில் வைத்துலர்த்தி தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதனை ஜாக்கிரதையுடனும் சமயோசிதமாகவும் செய்யாவிடின் சரக்கு சேதமாகிப் பிரமாணத்திற் குறைந்துபோக நேரிடும். ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவாய் ஜாக்கிரதையுடன் செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவாய் மருந்து சேதமாகாமலும் எடையில் குறைந்துபோகாமலும் இருக்கும்.

(b) பின்பு நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த பொற்றலைக் கையாந்தகரைச் சூரணம், நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சிறு செருபடைச் சூரணம் (இது அகப்படாத சமயங்களில் பெருஞ்செருப்படையும் சேர்த்துக் கொள்ளலாம்), மிளகை இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம், இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

செய்முறை :- முன் (a) யில் சொன்னபடி சித்தப்படுத்தி வைத்திருக்கும் மிளகுத்தோற் சூரணத்தையும், (b) யில் சொன்னபடி சித்தப்படுத்தி வைத்திருக்கும் மூவகைச் சூரணத்தையும், ஆகக்கூடிய நான்குவகைக்களையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மிஸ்ரமித்து, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- மேற்கண்ட சூரணத்தைச் சமமாக ஆறுபங்கு செய்து, வேளை-1-க்கு ஒவ்வொரு பங்காகக் காலை மாலை இரண்டுவேளையும் உட்கொள்க.

தீரும்நோய்கள்:- அஜீரணம், மந்தாக்கினி, புளியேப்பம், வயிற்றிரைச்சல், அரோசகம், வாந்தி, வயிற்றுப்போக்கு முதலிய இதரரோகங்களும், சூளை, குன்மம்,

Koviloor Digital Library

ரத்தகுன்மம், குன்மக்கட்டி, முதலிய பலவகை குன்ம ரோகங்களும் தீரும். இது கல்பமுறைகளி லொன்றாதலால், தேஜஸு, தேககாந்தி, தேகதிடம், மனோற்சாகம், மனோதிடம் முதலியவைகளு முண்டாம்.

குறிப்பு

(1) இதிற் சொல்லியிருக்கிற பிரமாணம் எல்லாத் தேகிகளுக்கும் ஏற்றுக்கொள்வ தரிதாகையால்; அவரவர்கள் தேக சுபாவத்திற் கேற்றதுபோல இதன் பிரமாணத்தை அநுபவத்தால் கிரமப்படுத்தி கொள்ள வேண்டும். (2) இதில் சாப்பிடவேண்டிய கணக்கு-6-வேளை மூன்றுநாளெனச் சொல்லப்பட்டிருக்கிறது; அந்த நாள்களுக்குள் எல்லோருக்கும் முற்றும்பற்றறத் தீர்ந்து போமெனபதும் சாத்தியமான காரியமல்ல; இங்கு நிதானமாக இத்தனை நாள் சாப்பிடவேண்டுமெனக் குறிப்பாயெழுதி யிருந்தபோதிலும் தேக சுபாவம்; வியாதியின் தன்மை, வியாதியின் வயது முதலியவைகளுக் கேற்றதுபோல அதிகநாளுங் கொடுக்கலாமெனத் தெரிந்திருக்கவும் வேண்டும்.

பத்தியம்:- இலகுவான சத்துள்ள பதார்த்தங்களைக் காலக்கிரமப்படி ஒருவேளையும் தப்பாமல் ஒழுங்காய்ச் சாப்பிடவேண்டியது. ஆகாரவிஷயங்களில் ஜீரணசக்திக்குத் தகுந்தவாறு கிரமேணுவாய் ஆகாரத்தின் அளவை படிப்படியாய் உயர்த்த வேண்டும். இரண்டு போஜனங்களுக்கிடையில் குறைந்தபக்ஷம் ஆறுமணிநேரம் கால அவகாசம் கொடுக்கவேண்டும். மருத்தின்மீதே பாரத்தை யெல்லாம் போட்டு விடாமல்; பத்தியபாவனைகளையும் முறைப்படி கையாடிவரின் கடவுளினது கிருபையால் கடினமான வியாதிகளுந் தீரும்.

25. குலிகாதிச் சூரணம்.

அரைப்பு அல்லது இலுப்பைப் பிண்ணாக்கு பலம்-5-அன்னபேதித்தூள், கடுகுரோகணிச் சூரணம், குறோசானியோமச் சூரணம் இவை மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-2½, பனவெல்லம் பலம்-5-(1) பிரண்டையை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு, (2) குப்பைமேனி யிலையை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு, (3) தைவேளை சமூலத்தை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு, இம்மூன்று வகைச்சாறும் வகை-1-க்குப் படி-½. இச்சாறுகளை, அவசியமானபோது அப்போதைக் கப்போது புதிதாய் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டியது.

செய்முறை:- அரைப்பை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து புது ஓட்டில் வறுக்கவேண்டும். தீயைமெதுவாயெரிப்பதுடன் அடிப்பிடித்துப்போகாமல் அடிக்கடி கிளறியும் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்து அந்தத்தூளானது மயில்கழுத்தின் வர்ணமாகிறவரையில் வறுத்து இறக்கி; நன்றாய்க்குளிர ஆறவைத்து முன் மூன்றுசரக்குகளையும் சேர்த்துக்கலந்து (1) பிரண்டைச்சாற்றில் போட்டுக் காற்றாடவைத்துச் சாறெல்லாவற்றையும் சுவறவைக்க வேண்டியது. இப்படிச்செய்யும் போது பிரதிதினமும் இதனை யொரு குச்சியால் கிளறிக் கொடுத்துவர வேண்டியது.

Koviloor Digital Library

தூசு தும்பு முதலியவை விழாதபடி பாத்திரத்தின் வாய்க்கு வேடுகட்டியும் வைக்கவேண்டியது. இவ்விதம் செய்து இந்தச்சாறு சுவறினபின் (2) குப்பைமேனிச் சாற்றைவிட்டு முன்போலவே செய்து அந்தச்சாறெல்லாம் சுவறின பின் (3) தைவேளைச்சாற்றை விட்டு முன்போலவே சுவறவைத்து முடிவில் இரண்டொரு நாள் வெய்யிலில் வைத்துக் காயவைத்து பனவெல்லத்தைச் சேர்த்து இடித்து லேகியபதமாகச் செய்து கொள்ளவேண்டியது.

பிரமாணம்:- வராகனெடை-1-1½-காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம்.

தீரும் நோய் :- குன்மரோகங்கள், பெருவயிறு, பீலிகை, கெண்டைக்கட்டி முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:- புளி, புகை, பெண் முதலியவைகளையும் இன்னும் அவரவர்கள் தேகப்பிரகிருதிகளுக்கு ஒவ்வாத பதார்த்தங்களையும் நீக்க வேண்டியது.

குறிப்பு

இம்மருந்தானது அதிகக் கசப்பாயிருக்கிறபடியாலும் லேகியபதமாகாமல் தூளாகவே யிருக்கிறபடியாலும் இதிற் சொல்லி யிருக்கிற-5-பலம் பனவெல்லத்திற்குப் பதிலாகப் பத்துப் பலம் வெல்லம் சேர்த்துக் கொண்டால் சாப்பிடக் கொஞ்சம் விருப்பமாகவிருக்கும். இது சிகிச்சகர்கள் நோயாளியின் தன்மையை நிதானித்து, அதற்குத்தக்கபடி செய்து கொள்ள வேண்டியது.

26. கர்ப்பக் குழம்பு

பொரித்த வெண்காரம், பொரித்த சீனக்காரம், பொரித்த பெருங்காயம், ஏழுசி பிடிக்கிற *காந்தம் *முற்றின தேங்காயின் தனிப்பால், இந்த ஐந்தும் வகை-1-க்கும் பலம்-1 பனவெல்லம் பலம்-1 ¼. எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னுள்ள நான்கு சரக்குகளையும் தனித்தனி மைபோலப் பொடித்துப் பின் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு, சுமார்-4-பலம் எலுமிச்சம்பழச் சாற்றில் வெல்லத்தைக் கரைத்து வடிக்கட்டி, திப்பி நீக்கி, தேங்காய்ப் பாலையும் கலந்து முன் மருந்தில் சிறுகச் சிறுகவிட்டுக் கைவிடாமல் மூன்று சாமமரைத்து

---

*இது இங்கு தப்பாய் காந்தமென அச்சிடப்பட்டிருக்கிறது.

*இங்கு தேங்காயெனச் சொல்லப்பட்டிருப்பினும் அனுபவத்தில் தேங்காய்ப் பாலே சேர்க்கப்படுகிறது. அதுவே சுலபமும் சுகுணமுமுள்ளதாம். இந்தப்பாலை இங்கு சொல்லப்பட்டிருக்கும் அளவைப்பார்க்கிலும் மூன்று அல்லது நாலுபங்கு அதிகமாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

எடுத்துக் கொள்க. நேர்வாளப் பருப்பில் கொஞ்சம் வாதுமை நெய்யை அல்லது பசுவின் நெய்யைத்தெளித்து மணம் எழும்புகிறவரையில் வறுத்து எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து, எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு மைபோல அரைத்துப் பின்பு முன் சித்தப்படுத்தின மருந்தையும்சேர்த்து, முன் சித்தப்படுத்தின வெல்லங் கரைத்த எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு அரைக்கவேண்டும். அந்தச்சாறு இல்லாவிட்டால் தனி யெலுமிச்சம்பழச்சாற்றை விட்டு மறுபடியும்-1-சாமமரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம்:- இரண்டு முதல் மூன்று குன்றிமணியெடை தக்க அநுபானத்திற் கொடுக்கவும். காலையிலொருவேளை போதுமானது; இம்மருந்தானது முக்கியமாய் ஸ்திரீகளுக்கு உபயோகப் படுத்தப் படுகின்ற படியால் அவர்களுள் பெரும்பாலார் புருஷர்களைப்பார்க்கிலும் நுண்மையான சுபாவமுடையவர்களாகையாலும், இது பேதியாகிற மருந்தாகையாலும், சிகிச்சகர்கள் முன் ஜாக்கிரதையுடன் அவரவர்களின் தேகசுபாவப் பிரகிரதிகளை நிதானித்துப் பிரமாணத்தைத் தக்கபடி ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஆகையால் ஆரம்பத்தில் குறைந்த அளவாகக்கொடுக்கின்ற இரண்டொரு தடவையில் அவரவர்களுக்கேற்ற பிரமாணத்தை அநுபவத்தால் நிச்சயித்து விடலாம்.

தீரும் நோய்கள்:- கர்ப்பச்சூலை, கர்ப்பக்கட்டி, கர்ப்பக்கிருமி, கர்ப்பவிட் புருதி, சூதகவாயு, முதலிய கர்ப்ப சம்பந்தமான பல ரோகங்களும் தீர்ந்து, கடவுளினது கிருபையால் புத்திரசந்தானமுமுண்டாகும்.

குறிப்பு

இம்மருந்தானது சில சுகுமாரதேகிகளுக்கு உஷ்ணத்தை யதிகப்படுத்து மாகையால், இதனைத் தகுந்த அனுபானங்களுடன் கொடுக்கவேண்டியது. இதற்காக கொத்துமல்லியைக் கஷாயம் செய்து அதில் பசும்பாலைவிட்டுப் பனவெல்லம் போட்டுக் கரைத்து அதனுடன் இந்த மெழுக்கைக் கொடுக்கலாம் அல்லது இந்த மெழுக்கில் சொல்லப்பட்டிருக்கும் வெல்லத்தின் அளவை இரண்டு மூன்று பங்கு அதிகப்படுத்தி யரைத்துக் கொள்ளலாம்.

ஸ்திரீகள் வீட்டிற்குத் தூரமாக சுமார்-3-4-நாட்களுக்கு முன்னாவது அல்லது வீட்டுத்தூரம் நின்று ஸ்நானஞ்செய்து பின்னாவது இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும். இவ்விதம் பிரதிமாதமும் மும்மூன்றுநாள் அல்லது நன்னான்கு நாட்களாக மூன்றுமாதம் சாப்பிடவேண்டும். இப்படிச்செய்வதால் கருப்பத்திலுள்ள தோஷங்களெல்லாந் தீர்ந்து புத்திரப் பேறுண்டாகும்.

27. பால கபஹாரி.

மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், கோஷ்டம், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, லவங்கப்பட்டை. லவங்கபத்திரி, நாகேசரம், கடுகுரோகணி, சந்நராஷ்டம், (சிற்றரத்தை), அக்கராகாரம், வெள்ளிச்சப்பிரின். இந்துப்பு, தேற்றான்விதை,

Koviloor Digital Library

இப்பதினாறு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-1¼. ஆடாதோடைச் சாறு செல்லத்தக்க அளவு.

இவற்றுள் முன் பதினான்கு சரக்குகளையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ் செய்தபின் முன் கண்ட எடைநிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இந்துப்பைத் தூள்செய்து கொள்ளவேண்டும். தேற்றான் கொட்டையை நைய நறுக்கி முன்னிரவே ஆடாதோடைச் சாற்றிலூறவைத்துக் கொள்க.

செய்முறை:- முன்னர் ஊறவைத்திருக்கிற தேற்றான் கொட்டையைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து மற்றச் சூரணங்களையும் அதனுடன் சேர்த்து ஆடாதோடைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டுக் கைவிடாமல் மூன்று சாமமரைத்து, தூதுளங்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- மாத்திரை அரைமுதல் ஒன்று வரையில் தேனிலிழைத்துட் கொள்க.

தீரும் நோய்கள்:- பாலர்களுக்குண்டாகும் இருமல், குத்திருமல், கணரோகங்கள், ஈளைரோகங்கள் முதலிய பாலகபரோகங்கள் தீரும்.

குறிப்பு

இந்த அவுடதத்தால் கணரோங்கள் தீருமெனப் பொதுவாய்ச் சொல்லப் படினும், கணரோகம் எட்டினுள் சூலிகணம், ஆமக்கணம், சுழிகணம், வறள்கணம் ஆகியவைகள் தீருமெனத் தெரிந்திருக்க வேண்டியது. இன்னும் இதனையே மேற்கண்ட கணங்களுக்குத் தகுந்த அனுபானங்களிலிட விசேஷ குணமுண்டா மென்பதிற் சந்தேகமில்லை.

28. மதுரவேலாதி மாத்திரை.

மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், கோஷ்டம், அரிசித்திப்பிலி, இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, நாகேசரம், சந்தனம், சாஸ்திரபேதி, இலவங்கம், பற்பாடகம், சாதிப்பத்திரி, இப்பதினொறு சரக்கினுள் ஒவ்வொன்றையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை 1. திறமான கோரோசனை வராகனெடை-7, இளநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கல்வத்தில் கோரோசனையைத்தூள் செய்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாய்க் கலந்து சேர்த்து, இளநீரைச் சிறுகவிட்டு-4-சாமமரைத்து; குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- மாத்திரை- ½ சர்க்கரை முதலிய அநுபானங்களில் கொடுக்கலாம்

Koviloor Digital Library

தீரும் நோய்கள்:- கணரோகங்கள், கணரோகத்தில் உண்டாகும் அசதி, கணரோகத்தில் உண்டாகும் பேதி, இரத்தபேதி, தோஷங்கள் முதலியவை நீங்கும்.

குறிப்பு

இந்த மதுரவேலாதியால் கணரோகங்கள் போகுமெனினும் கணரோகம் எட்டினுள் முக்கியமாய் மூக்குகணம், தேரைகணம், மகாகணம்; சுழிகணம் ஆகியவைகள் தீரும். இம்மருந்தையும் அதற்கினமான அநுபானத்துடன் உபயோகிக்கின் விசேஷமான குணத்தையே தரும்.

பாலகபஹாரி, மதுரவேலாதி யென்னும் இவ்விரண்டு முறைகளையும் இங்கு தொடர்ச்சியாய்ச் சொல்லப்பட்டிருப்பதால்; இவ்விரண்டும் கணரோகங்களுக் கெல்லாம் உதவும். ஆகையால் சிகிச்சகர்கள் இவ்விரண்டுபாகங்களையும் முன்னதாகவே சித்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

29. புள்ளடிப் பிரயோகம்.

தேற்றான்கொட்டை, இலவங்கம், மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், நற்சீரகம், சங்குத்தூள் (பாற்சங்கை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்க). இவ்வைந்தும் வகை-1-க்கு வராகனெடை-1¼. சிறுபுள்ளடி சமூலம் ஒருபிடி, பசுவின்பால் ஆழாக்கு-1½.

செய்முறையும்; உபயோகமும் :- தேற்றாங்கொட்டையை நறுக்கி முன்னிரவே கொஞ்சம் ஜலத்தை விட்டு ஊறவைத்துக் கொள்ளவேண்டும். இலவங்கத்தையும், சீரகத்தையும் ஓட்டில் இளவறுபப்பாய் வறுத்துக் கொள்ள வேண்டும்.

அதிமதுரத்தை முன்னர் பஞ்சுபோல் சிதைத்துக் கொஞ்சம் மேற்படி பால்விட்டரைத்து அதனுடன் லவங்கம், சீரகத்தையும் வைத்து அரைத்துப் பின்பு அதனுடன் இலையையும்வைத்து மேற்படி பால்தெளித்து வெண்ணெய்போல அரைத்துப் பாக்கிப் பாலில் கரைத்து முன் சித்தப்படுத்தின சங்குத்தூளையும் போட்டுக் கலக்கிக் காலையில் ஒருவேளைமாத்திரம் பானஞ்செய்விக்கவும். இவ்விதமே ஐந்துநாள் காலையில் மாத்திரம் பானஞ்செய்து, உப்பு; புளி, புகை, பெண் முதலியவைகளைநீக்கி, இலகுவாய் சீக்கிரம் சீரணிக்கத்தக்க ஆகார பானாதிகளைக் கையாடிவரின், மஞ்சட்காமாலை, மஞ்சட்சோபை, தலைநோய், பைத்தியம், வாயுக்கள், பித்தமயக்கம், பிரமை, உட்சுரம், தேகஅழலை முதலியவை தீரும்.

குறிப்பு

இதில் சொல்லியிருக்கிற சரக்குகளின் அளவு சில சுமாரதேகிகளுக்கும். வேறு சிலருக்கும் ஏற்காதாகையால், அவர்களின் தேகப்பிரதிக் கேற்றவிதமாக, மேற்படி

Koviloor Digital Library

சரக்குகளின் அளவைக்குறைத்தும் கொள்ளலாம் அல்லது தேககபாவத்திற் கொவ்வாத இரண்டொன்றை நீக்கியும் விடலாம். இவ்விதமே பாலின் அளவையும் தேககபாவத்திற் கேற்றதுபோலவே குறைத்துங் கொள்ளலாம். அதிகப்படுத்தியுங் கொள்ளலாம்.

இம்முறையிற் சொல்லப்பட்டிருக்கிற சிறுபுள்ளடிக்குப்பதிலாக, கீழ்காய் நெல்லியிலை, கரிசலாங்காணியிலை என்னும் இவற்றுளொன்றையும் உபயோகிக்கலாம்.

மேற்கண்ட ஐந்துநாள்களுக்குள் திராவிட்டால், இடையில் ஐந்து நாள் விட்டு மறுமுறையுங் கொடுக்க அவசியம் குணமுண்டாகும்.

30. கணைப்பிரயோகம்.

கல்முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த வெந்தயம், மேல்தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் இவ்விரண்டும் வகை-1-க்குப் பலம்-½. சோற்றுக்கற்றாழைவேர், முடக்கொற்றானிலை இவ்விரண்டும் வகை-1-க்குக் கைப்பிடி-1, ஊற்றின சிற்றாமணக்கெண்ணெய் ஆழாக்கு-1.

செய்முறை :- வெந்தயத்தை முன்னதாக ஒருமணிநேரம் ஊறவைத்துப் பின்பு அம்மியிலரைத்துக் கொள்க. மற்ற மூன்று வகைகளையும் தனித்தனியே அம்மியில் வெண்ணெய்போல அரைத்து முடிவில் எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாய் மசியும்படியாக அரைத்து எண்ணெயைப் பீங்கானில்விட்டு அதிற்கலக்கி, தூசு முதலியவை விழாபடி சாக்கிரதை செய்து கடுவெய்யிலில் வைக்கவேண்டியது. பிரதிதினமும் இரண்டு மூன்று தடவைகள் பீங்கான் கரண்டியால் அல்லது மர அகப்பையால் கிளறிக்கொடுத்துவர வேண்டும். இவ்விதம் கடும் வெய்யிலானால் ஆறுநாளும், வெய்யில் மத்திமமான காலங்களில் வெய்யிலின் தீட்சண்யத்திற்கு தகுந்தபடி 8 அல்லது 10 நாளும் வைக்க வேண்டியது. அறவே வெய்யிலில்லாத காலங்களில் அல்லது ஊர்களில் இதனைக் கரிநெருப்பின்மீது-10-அல்லது-15-நிமிஷம் வரையில் வைத்துச் சூடுகாட்டவேண்டும். இவ்விதம் பிரதிதினமும்-4-அல்லது-5-நாள் செய்யின் போதுமானது. அப்படிச் செய்வதெல்லாம் எண்ணெயிலுள்ள நீர்சுண்டி சரக்குகளின்சாரம் எண்ணெயில் இறங்கவேண்டியதே பிரதானமாம். மேற்கண்ட வகைகளில் சமயோசிதமாய் ஒருவிதமாக சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். எண்ணெயிலுள்ள சரக்குகளை யெடுத்துவிடாமல் போட்டபடியே ஊறிக்கொண்டிருக்க வேண்டியது. அவசியமானபோது எண்ணெயை மாத்திரம் இறுத்து உபயோகிக்க வேண்டியது.

பிரமாணம் :- வராகனெடை-1 ¼-2-வரையில் கொடுக்கலாம்.

தீரும்நோய்கள் :- வரட்கணை முதலிய கணரோகங்கள், கணரோகத்தாலுண்டாகும் அரட்டல் புரட்டல், கணசுரம் முதலிய கணசம்பந்தமான அனேக ரோகங்கள் தீரும்.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44779

குறிப்பு

கணத்தெண்ணெய் வகைகளில் இது சிறந்ததும் மிகவும் சுலபமானதுமாம். இந்த எண்ணெயை யிறுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு, அதில் ரஸ்தாளிப் பழத்தை அல்லது பேயன்பழத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து போட்டுப் புரட்டி, அதனுடன் கொஞ்சம் சீனாக்கற்கண்டையும் பொடித்துத் தூவி பிரதி காலையும் ஒவ்வொரு துண்டைக் குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுத்து வந்தால், இளைத்த சரீரம் புஷ்டியாகும். அஸ்திச்சூடு, வெட்டைச்சூடு முதலியவைகள் தீரும்.

31. மேகப் பிரயோகம்.

மருளுமத்தன்விதை, நற்சீரகம், கருஞ்சீரகம், திறமான ஓமம், குறாசானியோமம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாகேசரம், அரிசித்திப்பிலி, இந்த 9-வகைகளையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை- 1¼- திறமான காந்தம், சுத்திசெய்த சாதிலிங்கம், பாற்கருடப் பச்சைக்கல், இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-1¼-, இம்மூன்றையும் தனித்தனி நுண்மையாகத் தூள்செய்து கொள்ளவேண்டும். அபினி வராகனெடை-5. திறமான தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- கல்வத்தில் அபினியையிட்டுத் தேனைவார்த்து அரைத்து, அது அரைப்பட்டபின், முன்-12-வகை சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து-வைத்துக்கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாகத் தூவி தேனையும் சிறுகச் சிறுகவிட்டு அரைத்து, சூரணமெல்லாமானபின்-3-சாமமரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- குன்றிமணியெடை-6-10-தேனிற்குழைத்துச் சாப்பிடவும். காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

தீரும்நோய்கள் :- நீரிழிவு, நீரிழிவிற்காணும் கடுப்பு முதலியவை தீரும்.

குறிப்பு.

மேற்கண்ட பிரயோகத்தைக் கீழ்க்காணும் கஷாயங்களுடன் அனுபானித்துக் கொடுத்தால் விசேஷகுணமுண்டாம்.

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, ஆவாரம்பட்டை, கடலழிஞ்சிப் பட்டை, இவை-வகை-1-க்கு சமனெடை, இவற்றை இடித்து வைத்துக்கொண்டு-1-1 ½ பலம் தூளில் ஆழாக்கு ஜலத்தை விட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி முன் மருந்தைப் பிரமாணப்படி யுட் கொண்டு, அதன் மேல் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் ஒரு மண்டலம் செய்துவரின், மதுமேகம், நீரிழிவு, மதுமேக தாகம், சுரம், அனத்தல்,

Koviloor Digital Library

அழலை, நாவரட்சி, சோபம் முதலியவை தீரும். இன்னும் இதற்காக வேண்டிய அநுபானங்கள் நமது சரபேந்திர மேகநிவாரண போதினியில் அனேகஞ் சொல்லப்பட்டிருப்பதால், அவசியமானவர்கள் அவற்றுளொன்றை சமயோசிதமாகத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டியது.

பத்தியம் :- உப்பு, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, அத்திப்பிஞ்சு, வாழைப்பூ, வாழைக்கச்சல், நெய், வெள்ளாட்டிறைச்சி, வெள்ளாட்டுப்புக் கண்டம், முதலியவைகளாம். நீரை யதிகப்படுத்தும் பதார்த்தங்களும், தேககுபாவத்திற் கேற்காத பதார்த்தங்களும் ஆகா. பெண்ணையறவே நீக்கவேண்டும்.

32. ஏலாதி மாத்திரை.

மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், வங்காளப்பச்சை, தேவதாரம், சடாமாஞ்சில், கோரைக்கிழங்கு, இலவங்கம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சந்தனம், ஏலரிசி, லவங்கப்பத்திரி, நன்னாரி, கடுகுரோகணி, நற்சீரகம், நெல்லிவற்றல், வால்மிளகு, கொம்பரக்கு, இப்பதினேழு சரக்குகளுள் ஒவ்வொன்றையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-1¼.

சாஸ்திரபேதி, கல்நார், கோரோசனை, இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-1¼. இவைகளைத் தனித்தனி மைபோலப் பொடித்துக் கொள்ள வேண்டும்.

குச்சி, காம்பு, விதை முதலியவைநீக்கிச் சுத்திசெய்யப்பட்ட திராக்ஷப்பழம், விதை நீக்கப்பட்ட கெட்டி பேரீச்சங்காய், இவை யிரண்டும் வகை-1-க்கு வராகனெடை-1¼. இவற்றுள் திராக்ஷப் பழத்தைத் தனியே அரைத்துக் கொள்க, பேரீச்சங்காயை அரைப்பதற்கு மூன்றுமணிக்கு முன்னதாகவே முலைப் பாலில் ஊறவைத்தெடுத்தரைத்துக் கொள்ளவும்.

(1) முலைப்பால், (2)கருப்பஞ்சாறு, (3)இளநீர். இவை மூன்றும் தனித்தனி செல்லத்தக்க அளவு.

செய்முறை :- முன்சித்தப்படுத்தி யிருக்கிற எல்லாச்சரக்குகளையும் ஒன்றாய்க் கலந்து கல்லத்திலிட்டு (1) முலைப்பாலைச் சிறுகச்சிறுக விட்டு-4-சாமமரைக்க வேண்டும். (2) பின்பு கருப்பஞ்சாற்றைச் சிறுகவிட்டு-4-சாமமரைக்க வேண்டும். (3) இதன் பின்பு முடிவாய் இளநீரைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமமரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி, சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:- மாத்திரை- ½-1-அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களில் இடவும்.

தீரும்நோய்கள்:- பித்தாதிக்கம், வாந்தி, அரோசகம், நெஞ்செரிவு, வயிற்றிலெரிவு, கைகாலெரிவு, தேக படபடப்பு, பித்தமயக்கம், தலைசுழற்றல்,

Koviloor Digital Library

கிறுகிறுப்பு, அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை, அஸ்திசுரம், நாட்ப்பட்ட சுரங்கள், விஷ சுரங்கள், இருமல், காசம், க்ஷயம், அக்கினிமந்தம், உப்பிசம், வயிற்றுவவலி, கெர்ப்பணியின் ரோகங்கள், பாலரோகங்கள் ஆகியவை தீரும். இன்னும் தகுந்த அநுபானங்களில் பொதுவாய் எல்லாவியாதிகளுக்குங் கொடுக்கலாம்.

குறிப்பு

இந்த ஏலாதி மாத்திரையானது எல்லாவியாதிகளுக்கும் தனியாகவும், வேறு அவுடதங்களுடன் சம்பந்தப்படுத்தியும் உபயோகிக்கலா மாகையால் இக்கவியில் இன்னின்ன வியாதிகள் தீருமெனக் குறித்துக் காட்டாமலே விடப்பட்டிருக்கிறது ஆகையால் சிகிச்சைகள் மேற்கண்ட வியாதிகளுக்குபயோகப்படுத்துவது மன்றி தங்களிஷ்டம்போல யுக்தியானுசாரம் சமயோசிதமாக மற்ற அனேக வியாதிகளுக்கும் பிரயோகித்து அநுபவத்தால் இதன் குணத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

33. இரத்தபித்தப் பிரயோகம்.

வெங்காயத்தைத் தோலுரித்துக் காம்பையரிந்து நீக்கி, இடித்துப்பிழிந்த சாறு ஆழாக்கு-1, ஆவாரையின் மலராதமொக்கு பலம்- ½. இதனை வெண்ணெய்போல அரைத்து முன்சாற்றிற் கரைத்துப் பானஞ்செய்யவும். இவ்விதம் காலையில் ஒருவேளை மாத்திரம் பானஞ்செய்யவும். புழுங்கலரிசியை வறுத்து மாவாக்கித் தேவையான சீனிசருக்கரையைச் சேர்த்து பசுவின்நெய்யும் தளரவிட்டு லேகியம்போல் செய்து ஜீரணசக்திக்கேற்றதுபோல சாப்பிட்டும் வரவேண்டியது. இரவிலும் இந்த ஆகாரத்தையே சாப்பிடலாம். அது இஷ்டமில்லாவிடில், காரமில்லாத ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். இவ்விதம்-3, நாட்கள்செய்யின் வாயால் இரத்தங்கக்கல், இரத்த வாந்தி, மூலத்தில் இரத்தம் விழுதல், மர்மஸ்தானவழியாய் இரத்தம் வெளிப்படுதல் ஆகியவை தீரும். தேகம் வஸ்திரக்காயமாகி இலக்குமிவிலாசமுமுண்டாம். இன்னும் கண், செவி, நாசி என்னும் வழியாக வெளிப்படும் இரத்தமும் கட்டுப்படும். ஜலத்துவராம், ரோமத்துவாரம் வழியாகப் புறப்படும் இரத்த பித்த ரோகங்களுக்கும் நன்மையைச் செய்யும்.

குறிப்பு

இந்தப் பிரயோகத்தை உபயோகித்தபின் இடையில்-3-நாள்விட்டு, 4-ஆம் நாள் முக்கூட்டெண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

இப்பாகத்தில் வெங்காயச்சாற்றின் அளவானது ஒரு ஆழாக்கெனக் காணப்பட்டிருக்கிறது. இது சுமார் அஞ்சுபலமாகும். இதன் சாதாரணப் பிரமாணமானது முக்கால்பல முதல் ஒரு பலமாம். ஆகையால் இந்தப் பிரமாணமானது எல்லோருக்கும் ஏற்காது. ஆகையால் சிகிச்சகர்கள் வியாதியஸ்த்தர்கள் தேககபாவ முதலியவைகளை நிதானித்தே, மேற்கண்ட அளவை உபயோகிக்க வேண்டியது. இதற்காக ஆரம்பத்தில் குறைந்த அளவா உபயோகித்துப் பின்பு கிரமேணுவாய் அதிகப்படுத்திக் கொள்வதே

Koviloor Digital Library

சுலபமும் அபாயமு மற்ற மார்க்கமாம். ஏனெனில் சிலதேகிகளுக்கு இது அளவில் அதிகமாயின், வயிற்றுப்பிசம், தாகம், மறதி, ரோகம் ஆகியவைகளை யுண்டாக்கு மென்பதே பிரதானகாரணம். மேலும் இது ஏற்காத சுபாவமுடையவர்களுக்கு இதனுடன் தேனைக்கலந்து கொடுக்கவேண்டும். இன்னும் இதில் மூன்று நாளெனக் காணப்பட்டிருப்பதும் ஆக்ஷேபத்திற் கிடமானதே. ஏனெனில் வியாதியானது சொற்ப காரணத்தா லுண்டாயிருக்கின் மேற்கண்டபடி-3-நாளில் சொஸ்தமாகலாம், கடினமானதாயின் அதிகநாள் சாப்பிடவேண்டியதாயிருக்கும். ஆனால் இவ்விடம் மூன்று நாளெனக் குறிப்பிட்டது ஒரு முறைக்கு மூன்று நாளைக்கதிகம் உபயோகித்தல் கூடாதெனக் காண்பிக்கிறது. ஆகையால் இடையில் சமயோசிதமாக-4-5-நாள் விட்டு முக்கூட்டெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இவ்விதமே இடையில், மும்மூன்று, நன்னான்கு நாட்கள் விட்டு விட்டு ஸ்நானம் செய்து ஆரம்பிக்க வேண்டியது. இதில் இரத்த பித்தரோகம் போமெனப் பொதுவாய்ச் சொல்லப்பட்டிருப்பதால், மர்மஸ்தான இரத்த சிராவகரோகமுந் தீருமென ஏற்படும்; அப்படிச் சொல்லியிருப்பது ஸ்தீரீகளுக்குக் காணும் பெரும்பாடல்ல. ஏனெனில் இது ருதுரக்த சம்பந்தமானது. வெங்காயமோ ருது இரத்தத்தை விர்த்திசெய்யுங் குணமுடையது. ஆகையால் மர்மஸ்தானத்தில் ஸ்தீரீகளுக்குக் காணும் மேகசம்பந்தமான இரத்தப் போக்கிற்குக் கொடுக்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டும்.

இந்த பிரயோகத்தை உபயோகித்து, இந்தக் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும், மேகசஞ்சீவி நெய், இரத்தமூலப் பிரயோகம் முதலியவைகளிலொன்றையும் சமயோசிதமாக வியாதிக்குத் தகுந்தது போல உபயோகித்துவரின் விசேஷ பலனுண்டாம். இப்படிச் செய்வதெல்லாம் சிகிச்சர்களின் யுக்தி, புத்தி, அனுகூலம் ஆகியவைகளைச் சார்ந்ததேயாம்.

34. தார மாத்திரை.

சுத்திசெய்த மடலரிதாரம் வராகனெடை-7½. இது ஒரேகட்டியாக இருக்கவேண்டும். புகையூறல் அதாவது ஒட்டடை, தாளித்து, ஈரமில்லாமல் உலர்த்தி வஸ்திரகாயஞ்செய்த கற் சுண்ணாம்புத்தூள், இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை 3¾ முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- அரிதாரக் கட்டியை மெல்லிய வஸ்திரத்தில் வைத்து ஒரு சுற்று சுற்றி ஆழாக்கு தாளிக்காத கற் சுண்ணத்தை ஒரு சிறு வாயகண்ட சட்டியில் பரப்பி அதன்மேல் வைத்து, அது மறையும் படியாக மேலும் ஒரு ஆழாக்கு மேற்படி கற்சுண்ணத்தைப்போட்டு மூடி, ஆரம்பத்தில் கொஞ்சம் பனங்கள்ளைத் தெளித்து அப்பாத்திரத்தை மூடி விடவேண்டும் புகையடங்கினபின், திறந்து, கால் அல்லது அரை ஆழாக்குப் பனங்கள்ளைவிட்டு சற்று நேரம் மூடிவைத்துப் பின்பெடுத்துச் சட்டியில் ஈரமில்லாமல் துடைத்துவிட்டு, முன்போலவே கற்சுண்ணத்தில் வைத்தெடுக்க வேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி-11-தடவைகள் செய்து கொள்ள வேண்டும். சக்தியுள்ளவர்கள் எத்தனை தடவைகள் செய்து கொண்டபோதிலும்

Koviloor Digital Library

அவ்வளவுக் கவ்வளவு சிரேஷ்டமே பனங்கள் அகப்படாவிட்டால் தண்ணீரை முழுக் கூராகச் சுடவைத்து மேற்கண்டபடி செய்து கொள்ளலாம். இப்படி முன்னதாக ஒரு சுத்திசெய்யாமல் இச்செய்யுளில் சொல்லியிருக்கிறபடி செய்வதால் சிலருக்கு, வாந்தி, அன்னத்துவேஷம் முதலிய துற்குணங்களுண்டாகிறது. முன்னதாக மேற்கண்டபடி செய்வதால் எவ்வித தோஷமு மில்லாமலிருப்பதுடன், குணத்திலும் விசேஷமாகவே காணப்படுகிறது. இப்படிச்செய்து கொள்வதே அரிதாரத்தின் சுத்தியாம்.

பின்பு மேற்படி சுத்திசெய்த கட்டியை மெல்லிய வஸ்திரத்தில் தளர முடிந்து, கயிற்றில் கட்டி, ஒரு சிறு குச்சியில் தொங்க விட வேண்டும். தாளித்து நீற்றின அரைப்படி கற்சுண்ணத்தில், ஒரு படி பனி அல்லது குளிர்ந்த ஜலத்தை விட்டுக் கலக்கி அதிலுள்ள கற்கரடு முதலியவைகளை அரித்து நீக்கிவிட்டு, அந்த ஜலமானது முக்கால்வாசி யிருக்கும்படியான மண்பாத்திரத்திலூற்றி, முன்சித்தப்படுத்தி வைத்திருக்கிற கட்டியைக் கிளிக்கட்டித் தொங்கவிட வேண்டும். இம் முடிச்சானது அப்பாத்திரத்துக்குள், அடியிற்படாமல்-3-அங்குலத்திற்கு மேலாக இருக்கும்படியாகத் தொங்கவைத்து, அடுப்பேற்றி மெதுவாகத் தீயெரித்து, அந்தச் சுண்ணாம்பு ஜலமெல்லாம் சுண்டினபின் குளிர ஆறவிட்டுக் குளிர்ந்த ஜலம் விட்டு நன்றாய்ச் சுத்தமாய்க் கழுவி மெல்லியதுணியில் துடைத்து வெய்யிலில் வைத்து ஈரப்பசையின்றி உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்பு கல்வத்திலிட்டுப் பொடித்துப் மைபோல் தூளானபின் மற்றிரண்டு சரக்குகளையும் சேர்த்து-1-மணி நேரமரைத்து, எல்லாம் நன்றாய் கலந்து மிஸ்மித்தபின்பு முலைப்பாலைச் சிறுகச்சிறுக விட்டுக் கைவிடாமல்? சாமமரைத்து, சித்த்குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

தாரமாத்திரைப் பிரமாணம் :- ஒரு மாத்திரை உத்தமம். 1 ¼-மாத்திரை மத்திமம். 1 ½-மாத்திரை அதமம். 2-மாத்திரை அதமாதமாம். வெல்லத்திலும் மற்றும் அந்தந்த வியாதிகளுக் கேற்ற அனுபானங்களிலும் கொடுக்கலாம்.

தீரும்நோய்கள்:- நடுக்கல் ஜுரமுதலிய எல்லா வகை சுரங்கள், ஜன்னிகள், தோஷங்கள், க்ஷயகாச சுவாசம், குஷ்டரோகம், துஷ்டவிரணம் முதலியவைகள் தீரும்.

குறிப்பு

மேற்படி தாளகத்திற்குப் பதிலாக, முன்னர்-4-ஆவது நம்பரில் சொல்லப் பட்டிருக்கும் அரிதாரபற்பத்தைச் சேர்த்து, மேற்படி பாகப்படி செய்தால், முன்னிலும் விசேஷகுணத்தைத்தரும். தனித்தாளகத்தையேனும், தாளக சம்பந்த முறையை யேனும் தொடர்ச்சியாய் உபயோகிக்கின், சிலருக்குத் தாமதமாகவும் சிலருக்கு சீக்கிரமாகவும் அது விஷமித்துத் துர்க்குணங்களை யுண்டாக்கும். ஆகையால் அது விஷமித்தலக்ஷணத்தையும் அதன் மாற்றையும் தெரிந்து கொள்வது அவசியம்.

தாளகம் விஷமித்த லக்ஷணம் :- வயிற்றில் சதா எரிச்சலுண்டாதல் அடிவயிற்றிற் கொஞ்சம் வீக்கக் குறிப்பு காணுதல், இடப்பக்கத்தில் வலியுண்டாதல்

Koviloor Digital Library

அன்னத்துவேஷம் காணுதல், வாய்லைத்தல், தொனிமாறுபடல், சுவாசத்தை அதிகப்படுத்தல், ஒருவேளை அதைப்பந்தித்தல்; தலையில் தினவுண்டாதல், தலைமயிர் முனைசிவந்து அக்கினிக் கொழுந்துபோலிருத்தல், பிரமையாயிருத்தல், மூக்கில் சரசரவென இரத்தம் வடிதல்; நகக்கண்களில் உதிரம் சுவறிப் பக்குக்கட்டிப் புண்ணாகிச் சீழுண்டாய் உபத்திரவம் செய்தல் எனும் இக்குணங்களுண்டாவதேயாம்.

இதற்கு முறிப்பு அல்லது மாற்று :- மிளகு வராகனெடை-2 ½; சித்திரமூல வேர்ப்பட்டை கறியுப்பு இவை வகை-1-க்கு வராகனெடை-1 ¼. இம்மூன்றையும் ஒரு புதுப்பாண்டத்திற்போட்டு-1 ½-ஆழாக்கு ஜலத்தை விட்டுக் காய்ச்சி; ½-ஆழாக்காகச் சுண்டினபின் னிறக்கி வடிகட்டிப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாக தவறாமல் கால்மண்டலம்; அரைமண்டலம்; முக்கால் மண்டலம்; ஒரு மண்டலம்; என்னும் கணக்கின்படி வியாதிபலத்திற்குத் தகுந்தபோற் செய்யின், தாளக விஷமுறிந்து; தேகசவுக்கிய முண்டாம்.

35. பூவேர்க் கிருதம்

அவுரியிலையை இடித்துப் பிழிந்து வடிகட்டித் திப்பி நீக்கின தனிச்சாறு படி-¼; முற்றின தேங்காயின் தனிப்பால் படி-½-சுத்திசெய்த செம்மண்தரை நாக்குப்பூச்சி பலம்-7 1,2-10.

செய்முறை:- செம்மண்பூமியிலுள்ள நாக்கப்பூச்சிகளை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதன் மேல் நாலாங்குலம் நிற்கும்படியாக பசுவின் மோரை அல்லது பசுவின் பாலை விட்டு-3-4-மணிநேரம் மூடிவைத்திருந்து, பின்புயெடுத்து அதிலுள்ள மோரை அல்லது பாலை யூற்றிவிட்டு; நல்ல தண்ணீரைவிட்டுக் கழுவவேண்டும். மறுபடியும் சலம் விட்டு நன்றாயலசிக் கழுவவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஜலம் விட்டு-5-6-தடவைகள் கழுவினால் பூச்சி வயிற்றிலுள்ள மண் முதலியவைகள் வெளிப்பட்டு சுத்தியாகிவிடும். இதுவே நாக்குப்பூச்சி சுத்தியாம். பின்பிதனை மெல்லிய துணியில்வைத்து மெதுவாய்ப் பிழிந்து; ஈரமில்லாமற் சுவற வைத்து மேற்கண்ட எடையெடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து முன்னிரண்டு திரவத்தையும் கலந்து அதிற்கரைத்து மண்சட்டியிலிட்டு அடுப்பேற்றி சிறு தீயாயெரித்து நீர்சுண்டி கடுகுதிரண்டு நெய்யானவுடன் இறக்கி கடுகுடன் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது. கடுகு திரண்ட பதமாவது திரியை நனைத்துக் கொளுத்தினால் சடசடப்பு இல்லாமல் எரிவதேயாம்.

பிரமாணம்:- வராகனெடை-2-½-முதல்-1- வரையில்; காலை மாலை இரண்டுவேளையும் கொடுக்கலாம் நெய்யுடன் கடுகையும் கலந்து சாப்பிடவும்.

தீரும்நோய்கள்:- க்ஷயரோகம்; ஈளைரோகம்; காசரோகம் ஆகியவை தீரும்.

பத்தியம்:- அன்னாசிப்பழம், இலந்தைப்பழம்; எலுமிச்சம்பழம்; கடாரம்பழம்; கிச்சிலிப்பழம்; கொடிமுந்திரிப்பழம்; கோவைப்பழம்; சூரைப்பழம்; திராக்ஷைப்பழம்

Koviloor Digital Library

(பச்சை), நறுவிலிப்பழம், நாரத்தம்பழம், நாவற்பழம்; பனம்பழம்; பிரப்பம்பழம்; புல்லாஞ்சிப்பழம்; புளியம்பழம்; புளி; மணக்கத் தக்காளிப்பழம்; மாதுளம்பழம்; மாம்பழம்; விளாம்பழம்; வெள்ளரிப்பழம்; ஆகியவைகளும் இவை போன்றவைகளும், இவற்றின் ஊறுகாயும்; இவை சம்பந்தமான எப்பதார்த்தமும் ஆகா.

அரசங்காய், அரிநெல்லிக்காய்; ஆலங்காய்; இச்சிக்காய்; இரும்பிலிக்காய்; உளுந்துகாய்; கக்கரிக்காய்; களாக்காய்; கடுக்காய்; காராமணி; சுண்டைக்காய்; துவரங்காய்; தூதுவளங்காய்; தேற்றான்காய்; நாரத்தங்காய்; பயற்றங்காய்; பனங்காய்; பனநொங்கு; பறங்கிக்காய்; பாவட்டங்காய்; பாகற்காய்; புளியங்காய்; புடலங்காய்; பூசனிக்காய்; பெரும்பயறு; தேங்காய்; மாவடு; முத்துச்சோளம்; மொச்சை, வெள்ளரிக்காய்; வெள்ளரிப்பிஞ்சு; வெங்காயம்; ஆகிவைகளும்; இவை போன்றவைகளும்; இவை சம்பந்தமான எந்தவகைப் பதார்த்தங்களும் ஆகா.

அகத்திக்கீரை கற்பூரவள்ளிக்கீரை காச்சொரிக்கீரை சுக்கங்கீரை தண்டுக்கீரை தரக்கீரை பசலைக்கீரை பாகற்கீரை புளியாரைக்கீரை பொன்னாங்காணிக்கீரை; முள்ளங்கிக்கீரை, முள்ளங்கிக்கிழங்கு; முன்னைக்கீரை வசலைக்கீரை; வெந்தயக்கீரை ஆகியவைகளும்; இவைபோன்றவைகளும்; இவை சம்பந்தமான எவ்வகை பதார்த்தங்களும் ஆகா.

தயிர்; தயிர்க்குழம்பு; ததியோதனம்; புளியோதனம்; மோர்; மோர்க்குழம்பு; புளித்தகாடி; சுழுநீர்க்குழம்பு; சாராயம்; தென்னங்கள்ளு; ஈச்சங்கள்ளு; பனங்கள்ளு; அபின்; கஞ்சா புகையிலை ஆகியவைகளும்; இவை போன்றவைகளும்; இவை சம்பந்தமான எவ்வகைப் பதார்த்தங்களும் ஆகா.

ஆகையால் மேல் சொல்லப்படாத வஸ்துகளும் அவரவர்களின் தேக சுபாவத்திற்கு ஏற்ற பதார்த்தங்களைச் சேர்த்து கொள்ளவும்.

குறிப்பு

இங்கு நான்கு தேங்காய்களின் பாலெனச்சொல்லி உடனே ஒரு படியென அளவையும் சொல்லிருப்பதால், தேங்காய்கள் அதிகப்பருமனானவைகளாகவும் பாலுள்ளவைகளாகவும் இருக்கின்ற, நான்கே போதும் அப்படிக்கில்லாத பக்ஷத்தில் எத்தனை தேங்காயினும் தனிப்பாலாக மேற்கண்ட அளவு எடுத்துக் கொள்ள வேண்டியதே பிரமாணமாம். பூநாகம் மாங்காயிளைவெனச் சொல்லப்பட்டிருக்கிறது. மாங்காயானது தேங்காயைப்போல பருமனாகவும்; கொட்டைப்பாக்கைப்போல சிறுசாகவுமிருக்கும். ஆகையால் அதிகப்பெரிதும் அதிக சிறிதுமல்லாத நடுத்தரமான மாங்காயின் அளவென்பதே கருத்து. ஆகையால் மேற்கண்ட இரண்டு வகைகளின் கணக்கிற்குத்தக்கபடி; 7½-முதல்-10-பலம் என பிரமாண சாஸ்திரப்படி எடை யேற்படுத்தப் பட்டது. பத்துநாளெனத் திட்டம் சொன்னபோதிலும் வியாதியின் பலத்திற்குத் தகுந்ததுபோல ஒருமுறைக்குப் பத்து நாளாக; ஒருமுறை இருமுறை மும்முறை கொடுக்க வேண்டியது.

Koviloor Digital Library

36. சூலைப் பிரயோகம்.

(a) பூச்சி, பொட்டு, வேறுசாதியிலை முதலியவைகளை நீக்கி ஆய்ந்த கழற்சியிலை மேற்கண்டபடி ஆய்ந்த இலுப்பையிலை மேற்கண்டபடி செய்த கையாந்தகரையிலை மேற்கண்டபடி சித்தப்படுத்தின வெண்ணொச்சியிலை மேற்கண்டபடி சுத்திசெய்த நீர்முள்ளியிலை, இவ்வைந்தும் வகை-1-க்கு கைப்பிடி-1. இப்படியானது நடுத்தரமானதா யிருக்கவேண்டியது.

(b) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, விறலி மஞ்சள் என்னும் கறிமஞ்சள், தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை 1 ¼.

செய்முறை :- (a) யிலுள்ள அஞ்சு வகையிலைகளையும் தனித்தனி பொடியாக அரிந்து, எல்லாவற்றையும் ஒரு மண்பாத்திரத்திற்போட்டு, ஒரு படி நல்ல தண்ணீரை விட்டுக் காய்ச்சி, அரைப்படியாகச் சுண்டினபின் னிறக்கி, சற்று ஆறி யிளஞ்சூட்டுடன் வடிகட்டித் திப்பியை நீக்கிக் கஷாயத்தை வைத்துக் கொள்க.

(b) யிலுள்ள சரக்குகளைத் தனித்தனி யரைத்து முன் கஷாயத்திற் கரைத்து மறுபடியும் காய்ச்சி நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கிப் பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் மூன்று நாள்குடிக்கவும்.

தீரும் நோய்கள் :- சூலை, கை கால் முடக்கு, கை கால் பிடிப்பு, தேகக்குத்து, தேகவுளைச்சல், உஷ்ணம் முதலிய பலரோகங்கள் தீரும்.

பத்தியம் :- இதற்குப் பத்தியம் பிரத்தியோகமாகச் சொல்லப்படவில்லை யாயினும், இங்கு சொல்லப்பட்ட ரோகங்கள் கஷ்ட சுபாவ முடையவைகளாகையால் அவற்றிற்குத் தகுந்ததுபோலவே, புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கி, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வறுத்துடைத்த துவரம்பருப்பு, வெள்ளாட்டுப்புக்கண்டம், காடை, கவுதாரி, உள்ளான் முதலியவைகள்போன்ற பறவைகளின் இறைச்சி முதலியவைகளைச் சேர்க்கவேண்டியது. இன்னும் அதிக உஷ்ண சம்பந்தமான பதார்த்தங்களையும் தள்ள வேண்டியது. அதிகக் குளிர்ச்சியான வஸ்துகள், அதிகச் குளிர்ச்சியானகாற்று, அதிகக் குளிர்ச்சியான பானங்கள் ஆகியவைகளையும் அறவே நீக்கவேண்டியது.

குறிப்பு.

கஷாயவகைகளில் நுண்மையான இலைகளையடுப்பில் வைத்துக் காய்ச்சுவதைப் பார்க்கிலும், வெந்நீரை நன்றாய்க் கொதிக்கவைத்து, அதில் இலைகளையரிந்து போட்டு-10-நிமிஷம் மூடிவைத்துப் பின்பு வடிக்கட்டிக்கொள்வது உத்தமம்; இன்னும் இங்குசொல்லப்பட்டிருக்கிற அளவானது எல்லாத் தேகிகளுக்கும் பொருந்தாது; ஆகையால் தேககுபாவத்திற்குத் தகுந்ததுபோல அளவைச் சமப்படுத்திக் கொள்ளவேண்டியது. எப்படிச்செய்யினும் இதைப் பானஞ்செய்ய நேரிடும் ரோகிகளுள் பெரும்பாலார்க்கு இதனைப பருக அதிக கஷ்டமாகவேயிருக்கும்; ஆகையால் இச்சரக்குகளைக் கணக்காக, நிறுத்தெடுத்து வாலையிலிட்டுத் திராவகமாக

Koviloor Digital Library

இறக்கி உபயோகித்தால், சுகுமார தேகிகளுக்கும் மற்றவர்களுக்கும் இதைப்பானஞ் செய்ய எள்ளளவு கஷ்டமும் வெறுப்புமிராது. ஆனால் திராவமானால் அதிகநாள் பானஞ்செய்ய வேண்டியதாயிருக்கும்.

37. ஈளைப் பிரயோகம்

பருமனான வசம்பை இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம், இடித்து வஸ்திரகாயஞ்செய்த மஞ்சட் கடுக்காய்த்தோல் சூரணம், வறுத்திடித்து வஸ்திரகாயம் செய்த அரிசித்திப்பிலிச் சூரணம், தேற்றான் விதை, நன்றாய்ப்பழுத்த பூவந்திப் பழத்தோல், இவ்வைந்தும் வகை-1-க்கு வராகனெடை-2½-குப்பைமேனியிலையை இடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- அரைப்பதற்கு முதல் நாளே தேற்றான் விதையைப் பஞ்சுபோல் நைய நறுக்கி, ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு, கொஞ்சம் குப்பைமேனி சாற்றை விட்டு ஊறவைத்தெடுத்துக்கொள்க. இவ்விதமே பூவந்திக்கொட்டைத் தோலையும் மேற்படி சாற்றில் ஊறவைத்துக் கொள்ளவும். பின்பு முன்னர் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றை வார்த்து நன்றாயரைத்து வெண்ணெய் போலானவுடன், முன் சூரணங்களை யொன்றாய்க்கலந்து சேர்த்து, அவற்றுடன் கல்வத்திற்சேர்த்து முன் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு மைபோலாகிறவரையில் அரைத்துக் குழம்பாய்ச்செய்து கொண்டு, மெல்லிய சல்லாத்துண்டை அதில் நனைத்து, நிழலில் கொஞ்சமும் ஈரப்பசையில்லாமல் நன்றாயுலர்த்திப் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- மேற்கண்ட வஸ்திரத்தில், விரல் அகலமும் அவ்வளவே நீளமும் உள்ளதாகக் கிழித்து, இளஞ்சூடான வெந்நீரிற் கசக்கிசத்தெல்லாம் ஜலத்தில் இறங்கினவுடன் வ... திரத்தை நீக்கிவிட்டு, வெந்நீரைமாத்திரம் பானஞ்செய்விக்க வேண்டும். தேககுபாவத்திற் கேற்றவிதமாக காலையில் ஒருவேளைமாத்திரம், அல்லது காலை மாலை யென்னும் இரண்டுவேளையுமாக, ஏழுபொழுது உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள் :- ஈளை ரோகம், இருமல் ரோகம், முதலிய கப சம்பந்தமான ரோகங்கள் தீரும்.

பத்தியம் :- கத்திரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, கண்டங்கத்தரிக்காய்வற்றல், கருணைக்கிழங்கு, வெங்காயம், முருங்கைக்கீரை, மணலிக்கீரை, முளைக்கீரை, சுண்டைவற்றல், மணத்தக்காளிவற்றல், வெள்ளாட்டிறைச்சி; காடை, கவுதாரி முதலியவைகள் அவரவர்கள் தேககுபாவத்திற் கேற்றவைகளைச் சேர்த்து மற்றவைகளை நீக்க வேண்டியதே. இங்கு சொல்லப்படாத வஸ்துக்களாயினும் சரியே, சாதாரணமாகக் கபரோகத்திற்கு ஏற்காதாயினும் சரியே, அந்த பதார்த்தத்தால் எந்தரோகிக்கு அநுபவத்தில் சுகுணமுண்டாவது வழமையோ அவ்வித பதார்த்தங்களை அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

Koviloor Digital Library

குறிப்பு

இந்த மருந்தானது வாந்தியை யுண்டாக்கும் சுபாவமுடையதாகையால் இதனை ஆரம்பத்தில் குறைந்த அளவாகக் கொடுக்கவேண்டியதுந்தவிர அவரவர்களின் தேககுபாவம் பிரகிரதிக் கேற்றதுபோல் நிதானிக்கவும் வேண்டியது. ஆகையால் இங்கு விரலளவை சதுரமெனச் சொல்லி யிருப்பதால்; விரற்கள் சிறிதும் பெரிதுமாக இருப்பதாலும்; எப்போதும் இந்த அளவை வைத்துக்கொள்வது இசைவான காரியமல்லாதபடியாலும்; இந்த அளவை சுமார் அரை அங்குலச்சதுரமெனச் சொல்ல வேண்டும். அதன்மேல் அவரவர்கள் தேக சுபாவத்திற் கேற்றதுபோல; குறைத்தும் அதிகப்படுத்தியும் உபயோகித்துக் கொள்ளலாம்.

ஈளைரோக மென்பது சுவாசரோகம் (இரைப்பு ரோகம்), காசரோகம்; க்ஷயரோகம் மூன்றிற்கும் பொதுவாகவும், கஷ்ட சுவாசத்தை யுண்டாக்கும் எவ்வகைக் கபசம்பந்தமான ரோகத்திற்கும் பெயராய் வழங்கப்படுகிறது.

ஜீவரக்ஷாமிர்த கிரந்தத்தில் க்ஷயரோகத்தின் பல நாமங்களுள், ஈளை யென்பதும் ஒன்றெனச் சொல்லப்படுகிறது.

ஆனால் அந்தக் கிரந்தத்திலேயே சுவாசரோகத்திற்கு வமன மருந்தை உபயோகிக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சாரசங்கிரகம் முதலியவைகளில் சுவாசரோகமானது ஸ்பரிச நரம்பைப் பற்றிக்காண்கிறது; சுவாசக்குழலின் கிளைகளில் சிறிய கிளைகள் சுருங்கி இந்தவியாதி பிறக்கின்றது; இரைப்பு கண்டிருக்கும்போது, அது தணிய வாந்திக்குக் கொடுத்து வயிற்றிலுள்ள துர்மலத்தை நீக்கிவிடவேண்டியதெனவுங் கண்டிருக்கிறது.

ஆகையால் இக்கிரந்த கர்த்தாவின் கருத்தானது இங்கு "ஈளையென்பது சுவாசரோகம் (இரைப்புரோகம்) என வெளிப்படையாய் ஏற்படுகிறதென்பது அடியேன் கருத்து. ஆக்ஷேபனையுள்ளவர்கள் அநுபவத்தால் நிச்சயித்துத் தெளிந்து கொள்ளலாம்.

38. மூலப் பிரயோகம்

தேவையான அளவு:- ஒருவீசை கரணைக் கிழங்குடன்; 10-ஆமணக் கிலைகளையும் போட்டு சலம்விட்டு அரை வேக்காடாக வேகவைத்து மேல்தோலை நீக்கி; சிறு துண்டுகளாகத் துண்டித்து; வெய்யிலில் உலரவைத்து; கொஞ்சமும் ஈரப்பசையில்லாமல் உலர்ந்தபின் சட்டியில் இளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் பலம்-2.

லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி; நாகேசுரம்; ஓமம்; குறோசானியோமம்; ஏழுதடவை ஜலத்தில் கசக்கித் தேய்த்துக்கழுவி யுலர்த்தின சடைக்கஞ்சா; பெருங்காயம்; இவ்வேழு சரக்குகளையும் தனித்தனியிளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை 2 ½-அபின் வராகனெடை- 2 ½

Koviloor Digital Library

செய்முறை:- சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து கொள்ள வேண்டும். கல்வத்தில் அபினை வைத்துக்கொஞ்சம் சூரணத்தையும் சேர்த்தரைத்து அபின் அரைபட்ட பின்பு சிறுகச்சிறுக முன் சூரணத்தைத் தூவி எல்லாம் ஒன்றாய்க்கலக்கும் படி நன்றாயரைத்துப் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை ¼-முதல்-1. காலை மாலை இரண்டுவேளையும் தேனிலும் மற்றும் அநுபானங்களிலும்-21-நாள் சாப்பிடவும்.

தீரும் நோய்கள்:- ஆறுவகை மூலரோகங்களும் தீர்ந்து, மூலமுளைகள் கருகிப்போம்.

பத்தியம்:- புளி; உப்பு; புகை, பெண் முதலியவைகளையும், உஷ்ண சம்பந்தமான வஸ்துகளையும்; உஷ்ணமான கிரியைகளையும்; கண்விழித்தல்; வெய்யிலில் திரிதல் முதலியவைகளான இந்தச் செய்கைகளையும் நீக்க வேண்டியது.

குறிப்பு

இந்த மருந்தால் ஆறுவகை மூலரோகங்களும் தீருமெனச் சொல்லப்படினும்; அந்தந்த மூலரோகங்களுக் கிசைந்த அநுபானங்களுடன் சேர்த்துக்கொடுக்க வேண்டியது அவசியம்; ஏனெனில் இதில் சேர்க்கப்பட்ட சரக்குகளுள் பெரும்பான் மையானவைகள் மலத்தைக்கட்டக் கூடியவைகள். மூலரோகிக்கோ பெரும்பாலும்மலபந்தப்பட்டிருத்தல் அல்லது அங்கிரம மலமாயிருத்தல் சகஜம். அத்தகையினர்களுக்கு இம்மருந்தை உபயோகப்படுத்தினால் நன்மைக்குப் பதிலாக, தீமையுண்டாக ஏதுவாகும். அத்தகையினர்கள் இந்த மருந்துடன் இராக்காலங்களில் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெய்யை அல்லது கீழ்க்காணும் முனியாதி யெண்ணெயை உபயோகித்து வருவதால் அதிக குணமுண்டாகும். இரத்தம்; மலம்; முதலிய போக்குள்ளவர்களுக்கும் மூல சம்பந்தமான போக்குள்ளவர்களுக்கும் இது அதிககுணத்தை தரும்.

முனியாதி யெண்ணெய்.

அகத்திக்கீரைத்தனிச்சாறு படி-1, சிற்றாமணக்கெண்ணெய் படி-½, நற்சீரகம் பலம்-1.

செய்முறை :- எண்ணெயுடன் சாற்றைக்கலந்து அதில் சீரகத்தைப் பசும்பால் வார்த்தரைத்துக் கலக்கி, கடுகு திரன் பதமாயெரித்து எடுத்துக் கடுகுடன் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:- வராகனெடை-1-2- காலை மாலை இரண்டுவேளையும் பானஞ்செய்யலாம். இதனைத்தனியாகவும் உபயோகிக்கலாம். மற்ற மருந்துகளுடன் சேர்த்துங் கொடுக்கலாம். மேற்கண்ட மருந்தைச்சாப்பிடும்போது இராக்காலங்களில்

Koviloor Digital Library

அரை அல்லது முக்கால் வராகனெடை மேற்படி எண்ணெயை யுட்கொண்டு வருவதால் எல்லாவித மூலரோகங்களும் தீரும். இன்னும் நமது வைத்திய சிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கிற மூலரோக நிவாரண முறைகளையும் செய்து மேற்கண்ட சூரணத்துடன் சேர்த்து உபயோகித்தால் விசேஷ குணமுண்டாம். இன்னும் இந்தச் சூரணத்துடன் அவரவர்களுக்கு அநுபவமானவைகளில் தங்களிஷ்டமானதையும் செய்து உபயோகிக்கலாம்.

39. பீனிசப் பிரயோகம்

(a) மிதிபாகல் சமூலத்தை யிடித்துப் பிழிந்து வடிகட்டினசாறு. கருந்துளசியிலையை யிடித்துப் பிழிந்து வடிகட்டினசாறு, வெண்ணொச்சிக் கொழுந்தையிடித்துப் பிழிந்து வடிகட்டினசாறு, எருக்கிலையையிடித்துப் பிழிந்து வடிகட்டினசாறு, ஆலம் பழுப்பை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு; இவ்வைந்து வகைச்சாறும் வகை-1-க்கு ஆழாக்கு-1, எள்ளெண்ணெய் படி-½.

(b) இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நாகேசுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், மிளகு, மேல்தோல்சீவப்பட்ட சுக்கு, மேற்புறணி நீக்கப்பட்ட அதிமதுரம், அதிவிடையம், தேவதாரம், தும்பைப்பூ, அபின், இப்பன்னிரண்டு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

செய்முறை:- முன்சாறுவகைகளை ஒன்றாய்க்கலந்துகொள்க. (b) யில் முன்னுள்ள பத்துச்சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்திடித்து நுண்மையான தூளானபின் எடுத்து அம்மியில்வைத்து மேற்படி சாற்றை சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய்போலானபின் வழித்து, மேற்படி யெண்ணெய்யிற் கலக்கி மிஞ்சின சாற்றையும் மேற்படி யெண்ணெய்யிற் கலந்துவிட வேண்டும். தும்பைப்பூவைத் தனியே அரைத்து மேற்படி யெண்ணெய்யிற் கலக்கிவிட்டு, அடுப்பேற்றி ஒரு சாதி விறகால் மெதுவாய்த் தீயெரித்து ஒருமணிநேரம் சூடுகாட்டி அடுப்புடன் விட்டு விடவும். மறுநாளும் முன்மாதிரியே யெரித்து விட்டுவிடவும். மூன்றாம் நாள் தீயை மெதுவாயெரித்து மெழுகானது திரள் பதத்திலிறக்கி யிளஞ்சூட்டுடன் கருப்புக்கம் பிளியில் வடிகட்டி, அபினியை மெல்லிய வஸ்திரத்தில் வைத்து கட்டிக்கொண்டு மேற்படி தைலத்திற் பிசைந்து கசக்கிக் கரைத்துவிட வேண்டும். பின்பிதனை ஒரு ஜாடியில்விட்டு வாய்பந்தனம் செய்து, நெல்லில் புதைத்து வைத்து-20-நாட்சென்றபின்னெடுத்து உபயோகிக்க வேண்டும்.

இந்தத்தைலத்தை நான்கு நாளைக்கொரு தடவை சிரசு, தேகம் முதலிய ஸ்தானங்களில் முறைப்படி தேய்த்து, சிகைக்காய் தேய்த்துக்கொண்டு, இளவெந் நீரில் ஸ்நானம் செய்ய வேண்டியது. இதனைப் பெரும்பாலும் காலை நேரத்தில் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

தீரும் நோய்கள் :- இவ்விதம் செய்து வருவதால், கண்டத்திற்கு மேல்வரும் எல்லாரோகங்களும் தீரும். முக்கியமாய்ப் பீனிசரோகங்கள், கபாலவாயு, மண்டையிடி, மண்டைக்குத்து முதலிய அனேகரோகங்கள் தீரும்.

Koviloor Digital Library

பத்தியம் :- அவரைப்பிஞ்சு, உடும்பு, ஏலம், கருவேப்பிலை, கவுதாரி, காடை, சருக்கரை, சாதிக்காய், சிறுகீரை, சிறுபயறு, சீரகம், துவரை, தூதுளங்காய், பசுநெய், பொன்னாங்காணி, மணத்தக்காளிவற்றல், மிளகு, முருங்கைப்பிஞ்சு, லவங்கம், லவங்கப்பட்டை, வயற்பயறு முதலியவை ஆம்.

அகத்திக்கீரை, அறுகீரை, உளுந்து, எள்ளு, கசப்புத்திரவியம்; கடமான்; கடலை கடுகு; கத்தரிக்காய்; கனிவகைகள்; காற்று (அதிகமான); கீரைத்தண்டு; குளிர்ந்தஜலம்; கொத்தவரைக்காய்; கொள்ளு; சேப்பங்கிழங்கு; தயிர்; தேங்காய்; நண்டு; பகல் நித்திரை பறங்கிக்காய்; பன்றி; பால்; புகையிலை புளி; பெண்; மாங்காய்; மாப்பண்டம்; மீன்; மொச்சை; வெங்காயம்; வெய்யில்; வெல்லம்; வெள்ளைப்பூண்டு முதலியவை ஆகா.

40. கணைக் கிருதம்.

பசுவின்நெய் ஆழாக்கு-1. தூதுவளைவேர்ப்பட்டை தூதுவளையிடை தூதுவளைப்பூ; தூதுவளங்காய்; தூதுவளம்பழம், சிறுகீரைவேர்ப்பட்டைட் மேல்தோலுரித்ததும் ஈரமானதுமான தண்ணீர்விட்டான் கிழங்கு, மேல்தோல் போக்கின வெங்காயம்; மேற்புறணி நீக்கப்பட்ட அதிமதுரத்தூள் இவ்வொன்பது சரக்கும் வகை-1-க்கு வராகனெடை-1 ¼

செய்முறை :- சரக்குகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து வெண்ணெய்போல அரைத்து காலணாப் பிரமாணம் சிறுபில்லைகளாகத்தட்டி நெய்யில்விட்டு, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து பில்லைகள் பொன்னிறமாகச் சிவந்த பக்குவமாய்க்காய்ச்சிப் பில்லைகளுடனே பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம் :- நெய் மாத்திரம் வராகனெடை-1 ¼, 2-சாப்பிடலாம். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடவும்:

தீரும் நோய்கள் :- கண்ரோகங்கள்; கணரோகத்தாலுண்டாகும் அரட்டல் புரட்டல், தோஷங்கள், வறட்சோகை, இருமல், காசரோகம், கபரோகம், குத்திருமல்; வாயுகள் ஆகியவை தீரும்.

41. காசப் பிரயோகம்.

இலவங்கப்பட்கை, இலவங்கப்பத்திரி, நாகேசுரம், மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கோஷ்டம், வெட்டிவேர், சிற்றரத்தை (சந்நராஷ்டம்); சடாமஞ்சில், ஏலரிசி, வால்மிளகு, நற்சீரகம்; வாய்விளங்கம்; சிறுநாகப்பூ, வெள்ளைமிளகு, வலம்புரிக்காய், கர்க்கடகசிங்கி, தேவதாரம், வெள்ளைக்குந் திரிக்கம்; இந்த இருபத்திமூன்று சரக்குகளையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2 ½

Koviloor Digital Library

செய்முறை:- இச்சூரணங்க ளெல்லாவற்றையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மிஸ்ரமித்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-1¼ முதல்- 1½ தேனையும் நெய்யையும் சமனாய்க்கலந்து அதில் இந்தச்சூரணத்தை அநுபானித்துட்கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிகலாம். இதனை யின்னும் வேறு அநுபானங்களுடனும் சேர்த்துக் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள் :- எல்லாவகையான ரோகங்களும் தீரும்.

குறிப்பு.

இங்கு "தக்கமிளகு" என்பதற்கு வெள்ளைமிளகெனச் சொல்லவேண்டிய தேதுக்கெனில், மிளகானது பெரும்பாலும் மூன்றுவகைகள் மருந்துகளுடன் சேர்க்கப்படுகிறது; கறிமிளகு, வால்மிளகு, வெள்ளை மிளகு என்பவைகளே. இவற்றுள் முக்கடுகு என்பதால் கறிமிளகும், "தாக மகற்றும் வால்மிளகு" என்பதில் வால்மிளகும் சொல்லப்பட்டன. மூன்றாவதும் "தக்க மிளகு" என்றிருப்பதால் பாக்கியாயுள்ள வெண் மிளகை யெடுத்துக்கொள்ளப் பட்டது. இவ்விதம், முப்பலையில் தான்றிக்காய் வந்துவிட்டது. மறுபடியும் தான்றியெனச் சொல்லப்பட்டிருப்பதால் காட்டுத் தான்றியென்னும் வலம்புரிக்காயை யெடுத்துக் கொள்ளப்பட்டது.

காசம் என்பது காசரோகம்; க்ஷயரோகம்; சுவாசரோகம்; கண்ணிலுண்டாகும் ஒரு வகை ரோகம் ஆகிய நான்கு வகைக்கும் பொதுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் காசரோகமானது இன்னலக்ஷண முடையதெனத் தெரிந்திருந்தால் இந்த மருந்தை யுபயோகிக்க மிகவும் சாதகமாயிருக்கும். ஏனெனில், அநேகருக்குக் காசரோக மின்னதென்பதும், க்ஷயரோக மின்னதென்பதும், சுவாசரோக மின்னதென்பதும் தெரியாமலிருக்கிறது. மேலும் இம்மூன்றின் விகற்பங்களு மின்னதெனத் தெரியாது; ஆனால் காசரோக வகைகளின் லக்ஷணங்களையும், அவற்றின் விகற்பங்களையும் யெழுவதானால் இச்சிறு புத்தகம் விரிவெய்தும்; ஆயினும் அதன் பூர்வ லக்ஷணத்தைமாத்திரம் ஒருவாறு சுருக்கமாய் எழுதலாம். அவசியமானவர்கள் பெரிய கிரந்தங்களைப் பார்வையிடவும்.

காசரோகப் பூர்வ லக்ஷணம்.

இந்த வியாதியின் ஆரம்பத்தில் கண்டத்துட்புறத்தில் நமைச்சலுடன் முட் சொருகல் போலிருத்தல், அரோசகம், இருமல், அவயவங்க ளெல்லாவற்றிலும் நருக்கித் துவைத்ததுபோன்ற வேதனை; கண்களில் மின்மினிப்பூச்சி பறப்பதுபோலிருத்தல், முதுகு, மார்புவிலாப்பக்கம், ஆகிய இவற்றில் நோவு; ஒட்டை வெண்கலத் தொனியைப்போல் கண்டத்தில் தொனிவாயினால் உபுக்கலுபுக்கலாகக் கோழை வெளிப்படல் ஆகியவைகளாம். இதற்கெல்லாம் வாயுவே பிரதான மானதாம்.

Koviloor Digital Library

வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம், இரத்தகாசம், க்ஷயகாசம், என ஐந்து வகையுண்டு. இவற்றின் லக்ஷணங்களை யெல்லாம் நமது "*சரபேந்திர கப மருந்து மஞ்சரி" யிலும் சொல்லப்படும். அவசியமானவர்கள் அந்தக் கிரந்தத்தைப் பார்த்துக் கொள்ளலாம். இன்னும் மேற்கண்ட வியாதிகளின் சிகிச்சைகளெல்லாம் அக்கிரந்தத்தில் வகை விபரமாகவும் சொல்லப்படும்.

42. பித்தக்கிருதம்.

பசுவின்நெய்-படி-½-சோற்றுக் கற்றாழைச் சாறு. மேல்தோல் நீக்கி இடித்துப்பிழிந்த சீந்தில் தண்டுச்சாறு; இடித்துப்பிழிந்த பொன்னாங்காணிச்சாறு, இடித்துப் பிழிந்த பாக்கின் பூம்பாளைச்சாறு, இந்நான்கும் வகை-1-க்குப் படி-½.

மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், கூகைநீறு(காட்டெருமைப்பால்), வெண்சந்தனம், இம்மூன்றின் தனித்தனிச் சூரணம் வகை-1-க்குப் பலம்-1. விதை நீக்கி, குச்சி முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த திராக்ஷப்பழம்-பலம்-1.

செய்முறை :- முன் சாறுகளை யொன்றாய்க் கலந்துகொள்ளவும்; சரக்குகளை அம்மியில்வைத்து, முன் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து மைபோல அரைத்து நெய்யில் கரைத்துவிடவும். திராக்ஷப்பழத்தைத் தனியே அரைத்து நெய்யில் கரைத்துவிடவும்; பின்பு எஞ்சின சாறுகளையும் நெய்யிற்கலந்து, அடுப்பேற்றிச்சிறு தீயாயெரித்து, நீர்சுண்டித் திரள்பதத்திலிறக்கி யாறினபின், கடுகுடன் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-இரண்டு முதல் மூன்று. இந்த நெய்யைக் கடுகுடன் உட்கொள்க. காலை மாலை இரண்டுவேளையும் அல்லது ஒருவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :- பித்தரோகங்கள், பித்தக்கிறுகிறுப்பு, பித்தமயக்கம், முதலிய பித்தாதிக்கத்தாலுண்டாகும் பலவகை துர்க்குணங்களும் தீரும்.

பத்தியம் :- வெள்ளரிக்காய், மிதிபாகற்காய், கொம்பு பாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய், அவரைக்காய், கத்தரிக்காய், கல்யாணப்பூசினிக்காய், முருங்கைப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, வெங்காயம்; வாழைப்பூ, வாழைத்தண்டு, விளாம்பழம், புளியாரைக்கீரை, பசலைக்கீரை; சிறுகீரை மணக்கத்தக்காளிக்கீரை சுண்டைவற்றல்; மணத்தக்காளிவற்றல்; தாமரைப்பூ வற்றல்; பச்சமிளகு ஊறுகாய்; இஞ்சியூறுகாய்; நெல்லிக்காயூறுகாய்; நாரத்தங்காயூறுகாய்; மாவடுவின் ஊறுகாய்; விளாம்பிஞ்சின் ஊறுகாய்; முதலியவைகளும் இவைபோன்றவைகளும் ஆம்; எனினும், ஒவ்வொரு தேகிக்கு ஒவ்வொன்று சுத்தமாய் ஏற்காததாகையால்; அநுபவத்தில் அவரவர்கட்கு ஏற்பதைச் சேர்த்துக் கொள்வதும், ஏற்காததைத் தள்ளிவைத்தும் மிகவும் முக்கியமான விஷயம்.

---

* இது இப்போது அச்சிடப்படுகின்றது.

Koviloor Digital Library

43. மந்தார காசப்பொடி.

பசுவின் மூத்திரம் படி-1-மஞ்சட் கடுக்காய்த் தோலை இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம்; தேற்றான்பழச்சதையை உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் இவ்விரண்டும் வகை-1-க்குப் பலம்-2. வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த அரிசித்திப்பிலிச் சூரணம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நீரை ஒரு மண்பாத்திரத்தில் விட்டு; கடுக்காய்ச் சூரணம் தேற்றான் பழச் சூரணம் இவ்விரண்டையும் அதில் கலந்து, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து நீரானது சுண்டிக்குழம்பு பதமானபின்; அதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வழித்துப்போட்டு வெய்யிலில்வைத்து நன்றாயுலர்ந்தபின் மறுபடியும் பொடித்து, நிறுத்து, அது கண்ட எடைக்கு மூன்றிலொரு பங்கெடை மேற்படி திப்பிலிச் சூரணத்தைக்கலந்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-1-முதல்-1 ½-வரையில் வெள்ளாட்டுப் பாலில் அநுபானித்துச் சாப்பிடலாம். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள்:- தொனியுடன்கூடின இருமல், மந்தாரகாசம்; காசரோகம்; கபரோகம்; இளைப்பு, உளைமாந்தைரோகம்; முதலியரோகங்கள் தீரும்.

குறிப்பு

இச்செய்யுளில், "வில்ளுஞ மகிதப்பொடி சேர்த்து" என்பதில் மகிதப்பொடிக்கு திப்பிலிப்பொடியென இங்குச் சொல்லப்பட்டது. மாகதி யென்பது திப்பிலியின் பெயர். இது குறுக்கல் விகாரம்பெற்று மகதியெனவாயிற்று. பின்பு மதுரை என்பது மருதையென வழங்குகிறது போல் மகதி என்பது மகிதவென வழங்கப்படுகிறது என்பது பலர் கருத்து.

இன்னும் "மகித" என்பது கோரைக்கிழங்கிற்குமாம்; மா + ஹிதம் = பன்றிக் கினியது அதாவது கோரைக்கிழங்கு; மாஹிதம் என்பது தமிழில் மாகிதம் எனத்திரிந்து, குறுக்கல் விகாரம் பெற்று மகித வானது என்பது சிலர் கருத்து. இவ்விருகட்சியிலும் கபத்தை ஹிரிக்கிற சக்தி திப்பிலிக்குள்ளதுபோல் கோரைக் கிழங்கிற்குக் கிடையாது. கபரோகச் சிகிச்சையில் திப்பிலி உபயோகப் படுவதுபோல கோரைக்கிழங்கு உபயோகப் படுகிறதில்லை. இந்த விஷயம் சாஸ்திராநுபவமாய் யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையால் திப்பிலியைச் சேர்ப்பதே யுக்தமானதாகக் காணப்படுகிறது.

வேறொரு பிரதியில் "வில்ளும் ரசிதப்பொடி சேர்த்து" என எழுதப் பட்டிருக்கிறது. அதன்படி வெள்ளி பஸ்பத்தைச்சேர்த்து உபயோகிக்க வேண்டுமென ஏற்படுகிறது. அந்தப்பற்பத்தைச் சேர்த்தும், மேற்கண்ட ரோகத்திற்குபயோகிக்கலா மெனினும் இக்கிரந்தத்தில் ஆதிமுதல் அந்தம்வரையில் அந்தப்பாகம் சொல்லப்பட வில்லை தாம் முன்சொல்லாத முறையைப் பின்னொன்றில் சேர்க்கச்சொல்வது

Koviloor Digital Library

வழக்கமுமில்லை. இன்னும் அரிசித்திப்பிலியானது கபரோகச்சிகிச்சையில் வெள்ளியைப்பார்க்கிலும் விசேஷமானதாகக் காணப்படுகிறது. இம்முறையில் அநுபவமாகத் திப்பிலியே சேர்க்கப்பட்டும் வருகிறது. இத்தியாதி காரணங்களால் வெள்ளியை நீக்கி திப்பிலியையே இங்கு யெடுத்துக் கொள்ளப்பட்டது.

"வேடன் முலைப்பால்" என்பது வெள்ளாட்டுப் பாலே. இதில் எவ்வித சந்தேகமுமில்லை. பாகடம் என்பது வாகடம் எனச் சொல்லப்படுவது போல் (பேடம்; பேடன்) என்பது "வேடன்" எனச் சொல்லப்பட்டது. (பேடம்; பேடன்) என்பது வெள்ளாடு. வேடன்பால் என்பதை நாயின்பாலெனச் சொல்வாருமுண்டு; ஆனால் முன்னர் நாய்ப்பால் அகப்படுவது கஷ்டம்; அப்படி யகப்பட்டாலும் மனிதர்கள் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்து அதனைப் பானஞ் செய்வது அருவருப்பான காரியம். மேலும் வெள்ளாட்டுப் பாலுக்கு சுவாசரோகமுதலிய கப சம்பந்த ரோகங்கள் தீரும். இந்த ரோகச் சிகிச்சையில் வெள்ளாட்டுப் பால் உபயோகப் படுவதுபோல மற்றப்பால் அவ்வளவாய் உபயோகப்படாது. ஆகையால் அதையும் நீக்கப்பட்டது.

இங்கு நமது ஆராய்ச்சிக்கும் நமது சிற்றறிவிற்கும் எட்டினவரையில் எழுதியிருக்கின்றோ மாகையால் இதனுண்மையை நிச்சயமாகவும் அநுபவ சித்தமாகவும் தெரிந்தவர்கள், யாவருக்கும் உபயோகப் படும்படியாக, ஜீவகாருண்யத்துடனும் தெரியப்படுத்துவதால் பெயரும், புகழும், புண்ணியமு முண்டாமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மேற்கண்ட வகைகளில் ஆக்ஷேப முடையவர்கள் தங்களுக்கிஷ்டமானபடி செய்து அநுபவத்தால் நிச்சயித்துக் கொள்ளலாம்.

44. மூலபாண்டுப் பிரயோகம்.

உலர்த்தின கண்டங்கத்தரி சமூலம், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், கற்கடகசிங்கி, கோஷ்டம், சிறுதேக்கு; சடாமாஞ்சி, இப்பதினொறு சரக்கையும் தனித்தனி இளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்குப் பலம்¼; இந்துப்பு, பொரித்த சீனாக்காரம் விதைநீக்கிக் குச்சி முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த திராக்ஷப்பழம் இம்மூன்றும் வகை-1-க்குப் பலம்-¼.

செய்முறை:- இந்துப்பையும், சீனக்காரத்தையும் தனித்தனி பொடித்துக் கொள்ள வேண்டும். திராக்ஷப்பழத்தைத் தனியாய் வெண்ணெய்போல அரைத்துக் கொள்ள வேண்டும். பின்பு எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை 1¼-முதல்-1 ½-வரையில் உட்கொள்ளலாம். இவ்விதம் காலை மாலை இருவேளையும் தேனில் அல்லது நெய்யில் அல்லது ஒருவேளை தேனிலும் மறுவேளை நெய்யிலும் அநுபானித்துக் கொள்ளவும். சமயோசிதமாக வேறனுபானங்களிலும் உபயோகிக்கலாம்.

Koviloor Digital Library

தீரும் நோய்கள்:- மூலரோக சம்பந்தமான பாண்டு, விஷபாண்டு, வீக்கங்கள், பீலிகைரோகம், சூலைரோகம், சிலேஷ்மரோகம் முதலியரோகம் தீரும்.

குறிப்பு

இந்த அவுடதத்தைத் தனியாய் உபயோகப்படுத்துவதால், மேற்கண்ட ரோகங்கள் இலேசானவைகளாயிருக்கின் அவை குணப்படும். ஆனால் மேற் கண்டவைகள் நாட்பட்டவைகளாகவும் கடினமானவைகளாகவும் இருக்குமாயின் இந்தரோகங்களுக்காக முன் சொல்லப்பட்டிருக்கும் அவுடதங்களை, இந்த அவுடதத்தில் அநுபானித்துக் கொடுத்தால் விசேஷ குணமுண்டாம்.

45. பச்சைக் குழம்பு

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கந்தகம், நாலாங்காய்ச்சல் வெடியுப்பு, இந்துப்பு, வாலை ரச தாம்பிராதி பற்பம், பொரித்த சீனக்காரம், பொரித்த பெருங்காயம், இவ்வேழு சரக்குகளும் வகை-1-க்கு-வராகனெடை-2½. எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இவற்றுள் தாம்பிராதியைத்தவிர மற்றவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனி மைபோலப் பொடித்துக்கொள்ள வேண்டும். பின்பெல்லாவற்றையும் ஒன்றாய்க்கலந்து, ஒரு பீங்கானில் வைத்து எலுமிச்சம்பழச்சாற்றை, மருந்தின்மீது நாலங்குலம் நிற்கும்படியாக விட்டு வெய்யிலில்வைத்து, கடுவெய்யிலானால் மூன்றுநாளும், மந்தவெய்யிலானால் அதிக நாளும் வைத்து, சாறெல்லாம் சுண்டினபின்னெடுத்துக் கல்வத்திலரைத்து மெழுக்குப்பதமான பக்குவத்தில் பீங்கான் சிமிழில் அல்லது தந்தச்சிமிழில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு-1-குன்றிமணியெடை உத்தமம். 1½-குன்றிமணி யெடை மத்திமம். 2-குன்றிமணியெடை அதமம். 3-குன்றிமணியெடை அதமமாம். இதனைத் தேனில் குழைத்துட்கொள்ள வேண்டும். சமயோசிதமாக மற்ற அநுபானங்களிலும் கொடுக்கலாம். காலை மாலை இரண்டுவேளையும் அஞ்சரைநாட்கள் கொடுக்கவும்.

தீரும் நோய்கள்:- கவிசைரோகம், குன்மரோகம், சுரம், பாவை (அசைவற்றிருக்கச்செய்யும் ரோகம்) ஆகியவை தீரும்.

பத்தியம்:- குளிர்ந்த ஜலபானம் முதலியவைகளை நீக்கி வெந்நீரையே குடிக்கவேண்டும். கை, கால் முதலியவைகளைக் கழுவவும் வெந்நீரையே உபயோகப்படுத்தவேண்டும். வியாதி கடினமானதாகவும், வியாதியஸ்தன் பலமுள்ளவனாகவும் இருக்கும் பக்ஷத்தில் வெந்நீர்ச் சாதமே கொடுக்கலாம். அதாவது, உப்பு, புளி முதலியவைகளை நீக்கவேண்டுமென ஏற்படும்; ஆகையால், இலகு பத்தியம் வைப்பதும், கடின பத்தியம் வைப்பதும் சமயோசிதமாக ஏற்படுத்தப் படவேண்டும். ஆகையால் இங்குகுறிப்பாய் எழுதப்பட்டது.

Koviloor Digital Library

குறிப்பு

இங்கு "செம்பென்றது" தனித்தாம்பிரமல்ல. ஆனால் இதற்கு முன் சொல்லப்பட்டிருக்கும் தாம்பிராதி யென்பதற்குக் குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. முன் பாகங்களில் இது சேர்க்கப்பட்டது போலவே இங்கும் சேர்க்கப்பட வேண்டும். தனிச்செம்பிலும், இரச தாம்பிராதியிலும் முள்ள விதம் அநுபவசாலிகளுக்குத் தெரியாமலிராது. இதில் ஆட்க்ஷேபமுடையவர்கள் தங்களிஷ்டம்போற் செய்து அநுபவத்தால் நிச்சயித்துக் கொள்ளட்டும்.

வெய்யிலில் மூன்றுநாள் வையெனச்சொல்லப்படினும் சாறெல்லாம் சுண்டுகிறவரையில் வைக்க வேண்டியது முறை. ஆகையால் சாறானது வெய்யிலின் தீக்ஷண்ணியத்திற்குத் தகுந்ததுபோல், மூன்று நாட்களுக்குமேல் அதிகம் செல்லுமாகையால், அவசியமான நாட்கள் சாறெல்லாம் சுண்டுகிறவரையில் வைத்துக் கொள்ளலாம்.

இம்மருந்தை-5½-நாள் உபயோகிக்க வேண்டியதென காணப்படினும், ரோகபலம், தேகபலம் முதலியவைகளுக்கேற்றதுபோலவே அதிகநாளும் உபயோகிக்கலாம் அல்லது இடையில் சிலநாள் விட்டு விட்டு, ஒவ்வொரு முறைக்கு-5½-5½-நாளும் சாப்பிடலாம். இதுவும் சமயம்போல் நிதானித்துச் செய்ய வேண்டியது.

46. சுரத் தைலம்

எள்ளெண்ணெய் படி-½. சிற்றரத்தை (சந்நராஷ்டம்); அமுக்கராக்கிழங்கு; சதகுப்பை, கோட்டம், மரமஞ்சள்; கொம்பரக்கு; மேல்தோல்சீவப்பட்ட சுக்கு; மிளகு, அரிசித்திப்பிலி; மேற்புறணி நீக்கப்பட்ட அதிமதுரம், தேவதாரம், அகில், அகர், கடுகுரோகணி, கோரைக்கிழங்கு, இப்பதினைந்து சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-2½..

செய்முறை:- சரக்குகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்தை, எண்ணெயிற் கலக்கி, தைலபாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி இளஞ் சூடு காட்டி வைக்கவேண்டும். இவ்விதம் மூன்றுநாட்.. செய்து நாலாம்நாள் காய் [illegible] ப் பதத்திலிறக்கி, இளஞ்சூட்டுடன் கம்பிளியிற் வடிகட்டிச் சீஷாவிலடைத்துத் தானியபுடம் வைத்துக்கொள்ள வேண்டும்.

உபயோகம் :- இதனை நான்கு நாளைக் கொருதடவை அல்லது எட்டுநாளைக்கொரு தடவை முறைப்படி தேய்த்து, முறைப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். இதற்கு முன்சொல்லப்பட்டிருக்கும் "பீனிசப் பிரயோகம்" என்னும் தைலமுறையிற் சொல்லப்பட்டிருக்கும் பத்தியம் முதலியவைகளையும் கவனித்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்துவரின், சுரரோகந் தீர்ந்து, அதற்குப் பின் உண்டாகும்; பலஹீனம், சிரங்கு; சொறி; தினவு; கைகால் அசதி; [illegible] அரோசகம்; [illegible]

Koviloor Digital Library

புறச்சூடு; அஸ்திச்சூடு; கணைச்சூடு; பித்தச்சூடு; இரத்தச்சூடு; கண்ணெரிச்சல்; கைகாலெரிச்சல்; தேக அழலை வயிற்றெரிச்சல்; உள்ளெரிச்சல்; புறவெரிச்சல்; சுரம்விட்டும் எப்போதும் தேகம் கதகதவென சூடாக விருத்தல் முதலியவைகள் தீர்ந்து, தேகங் குளிர்ந்து, தேகதிடமுதலியவைகளுண்டாம்.

குறிப்பு

சுரரோகத்திற்குப்பின் ஸ்நாநம்செய்து வைக்கச் செய்யும் அரக்கு சந்தனாதி; அரக்குத்தைலம் முதலிய பாகங்களைப் பார்க்கிலும் இந்த முறையானது செய்வதற்குக் கஷ்டமின்றி அதிக சுளுவாகவும்; குணத்திற் விசேஷமானதாகவும்; செலவில் மிகவும் குறைந்ததாகவும் காணப்படுகிறது.

"திரிதாரம்" என்பதற்குப் பதிலாக ஒரு பிரதியில் "திரிசாதம்" எனக் காணப்பட்டிருக்கிறது. ஆனால் "திரிதாரம்" என்பதே பலகிரந்தங்களின் சம்மதமும் அநுபவசித்தமுமாம்.

47. எறிவாதத் தைலம்.

பசுவின்நெய்; எள்ளெண்ணெய்; சிற்றாமணக்கெண்ணெய்; வேப்பெண்ணெய்; இந்நான்குவகைகளும் வகை-1-க்கு ஆழாக்கு-½. இவற்றை ஒன்றாய்க் கலந்து கொள்க.

கப்பமஞ்சள் அல்லது கொச்சிமஞ்சள்; நாட்டு வெண்காரம்; வசம்பு; வில்வவேர்ப்பட்டை இந்நான்கையும் தனித்தனி ஜலம்வார்த்தரைத்தெடுத்த விழுது தனித்தனி வகை-1-க்கு நடுத்தரமான எலுமிச்சங்காயளவு.

செய்முறை:- மேற்படி எண்ணெய்யில் மேற்படி சரக்குகளைக் கரைத்து; அடுப்பேற்றி சிறுதீயாயெரித்து; நீர்சுண்டித் திரள்பதத்திலிறக்கி; இளஞ்சூட்டுடன் வடிகட்டி; சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:- இந்தத்தைலத்தைச் செல்லத்தக்க அளவெடுத்து; நோயுற்ற விடத்தில்; தடவித்தேய்க்கவேண்டும். தடவி நெருப்பிலுங் காய்ச்சலாம். இப்படி தினம்-1-க்கு-3-4-தடவைகள் சமயோசிதமாக உபயோகித்து வரவேண்டும். இவ்விதம் அடுத்தடுத்து மூன்றுநாள் செய்து, நாலாம்நாள் சிறுபயற்றை யரைத்துத் தேய்த்து ஸ்நாநம்செய்ய வேண்டும். இதனால் எரிவாதம்; உதருவாதம்; நடுக்குவாதம்; கடுப்புவாதம்; வாயுப்பிடிப்பு; கைகால்முடக்கு; கைகால்பிடிப்பு; கீல்வாதம்; முதலிய பலவகை வாதரோகங்கள் தீரும்.

பத்தியம்:- வியாதி; ரோகி முதலிய சுபாவத்திற் கேற்றதுபோல பத்தியம் வைத்தும், பத்தியம் வைக்காமலும், உபயோகிக்கலாம்.

குறிப்பு

இதில் சரக்குகளின் அளவு எலுமிச்சங்காய்ப் பிரமாணமெனச் சொல்லப் பட்டிருக்கிறதை நோக்கு மிடத்து, இது மேற்பூச்சு மருந்தாகையால் மேற்கண்ட

Koviloor Digital Library

சரக்குகளின் பிரமாணம் கொஞ்சம் மிகினுங் குறையினும் பாதகமில்லை யென்பதாகக் காணப்படுகிறது. கடினமான வாதரோகங்களுக்கு இந்த மேற்பூச்சுப் பிரயோகத்துடன் வியாதிக்குத் தகுந்த உட்பிரயோகமும் செய்துவரின் விசேஷகுணமுண்டாம். இதனைத் தொடர்ச்சியாய் உபயோகித்து வருவதாயிருந்தால்; மேற்கண்டபடி-3-நாளைக்கொரு தடவை சிறுபயிற்றைத் தேய்த்து ஸ்நாநம் செய்தும் வரவும் வேண்டியது.

48. மேக சஞ்சீவி நெய்.

பசுவின்நெய் படி-¾, கருந்துளசியிலை சீதேவியார் செங்கழு நீர்க்கிழங்கு; சுரைக்காய்; வல்லாரையிலை; தோலுரித்த வெங்காயம்; கர்ப்பூரவல்லி யிலை வில்வ இலை இந்த ஏழுவகைகளுள் ஒவ்வொன்றையும் தனித்தனியிடித்துப் பிழிந்து வடிகட்டினசாறு வகை-1-க்கு ஆழாக்கு-2.

கூகைநீறு(காட்டெருமைப்பால்), இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி; பாற் கருடப் பச்சைக்கல்; மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம்; நற்சீரகம்; கருஞ்சீரகம்; வெண்சந்தனம்; செஞ்சந்தனம்; ஏலரிசி; இப்பத்து வகைகளுள் ஒவ்வொன்றையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை-1-வராகனெடை-2 ½.

செய்முறை:- சாறுகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்க. சூரணங்களை யெல்லாம் ஒன்றாய் மிஸ்ரமித்து; அம்மியில்வைத்து முன்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து, மைபோல அரைத்து; நெய்யிற் கரைத்து மீந்தசாற்றையும் அதில்விட்டு அடுப்பேற்றி சிறுதீயாயெரித்து ஒரு கொதி வந்தவுடன் எரிப்பை நிறுத்திவிடவேண்டும். மறுநாளும் இப்படியே யெரித்து நிறுத்தி விடவேண்டும். மூன்றாம் நாளும் இப்படியே செய்ய வேண்டும். நாலாம் நாள் அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து, சாறெல்லாம் சுண்டித் திரள் பதத்திலிறக்கிக் கம்பிளியில் வடிகட்டி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-1½ முதல்-2-வரையில் சாப்பிடலாம். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடவும்.

தீரும்நோய்கள்:- சுரம், மேகம், அழலைரோகம், இரத்த பித்த ரோகம், முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு

' இங்கு பித்த ரத்தம் எனச் சொல்லப்பட்டது ரத்தபித்த ரோகமாம். ஆகையால் இது (1) ஊர்த்துவ முகரத்த பித்தரோகம் அதாவது கண், செவி, நாசி, வாய் என்னும் இந்நான்கு வழிகளால் ரத்தம் வெளிப்படல், (2) அதோமுக ரத்த பித்தம் அதாவது ஜலத்துவாரம், மலத்துவாரம், ரோமத்துவாரம் என்னும் மூன்று வழிகளால் இரத்தம் வெளிப்படல், (3) உபயமுக ரத்த பித்தம் அதாவது மேற்கூறிய ஊர்த்துவ முகத்திலும், அதோ முகத்திலும் ஏக காலத்தில் ரத்தம் வெளிப்படல் ஆகிய இந்த ரோகங்களும் தீருமென அறியவேண்டியது. ஆனால் சாத்தியமானவைகள் மாத்திரம் தீரும். இக்கவியிலுள்ளபடியே பித்தரத்த ரோகம் அதாவது பித்தத்தால் உண்டாகும்.

Koviloor Digital Library

ரத்தரோகமென எடுத்துக்கொள்வது அவ்வளவாய்ப் பொருந்தினதாகக் காணப்படவில்லை. ஏனெனில் வாத பித்த, சிலேஷ்மம் என்னும் மூன்றில் எந்த தோஷத்தால் இரத்தம் வெளிப்படினும் அதுவும் ரத்த பித்தரோக வகைகளில் சேர்க்கப்படுமென்பதே காரணமாம்.

49. அண்டசூலை யெண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இவ்விரண்டும் வகை-1-க்கு ஆழாக்கு-1, முருங்கைப்பட்டை, புளியனிலை கழற்சியிலை கோழியவரையிலை சங்கிலை எருக்கன் பழுப்பு; மாவிலிங்கப்பட்டை முக்கரட்டைக் கிழங்கு; வெள்ளைச் சாரணைக் கிழங்கு; நிலவிளா இலை இப்பத்து வகைகளையும் தனித்தனியிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு வகை-1-க்கு ஆழாக்கு-½.

தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், கடுகு, மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, வசம்பு, அரிசித்திப்பிலி இவ்வைந்து சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-2½.

செய்முறை:- எண்ணெய்களை ஒன்றாய்க்கலந்து கொள்ளவும். சாறுகளையும் தனியே ஒன்றாய்க்கலந்து கொள்ளவும். சரக்குகளை யெல்லாம் உரலி லிட்டு இடித்துத் தூளாக்கி, அம்மியில் வைத்து; முன்சாற்றை விட்டு மைபோல அரைத்து முன் எண்ணெய்யிற் கலக்கி மீந்த சாறுகளையும் எண்ணெயுடன் கலந்து கொண்டு; 3-நாள் வரையில் பிரதி தினமும் கொஞ்சம் சூடு காட்டி வந்து; நாலாம் நாள் சிறு தீயாயெரித்து; நீர் சுண்டி மெழுகுபதமானவுடன் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டி சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை 2½-முதல்-5-வரையில் காலையில் மாத்திரம் ஒரு வேளை உட்கொள்க.

தீரும்நோய்கள்:- பீஜவீக்கம்; பீஜத்தில் நோவு, பீஜவாயு, பீஜவீக்க சம்பந்தமாயுண்டாகும் சுரம்:; அடிக்குடலில் சுழலுகின்ற வாயு, தேகத்தில் வாயுவால் உண்டாகும் வீக்கம், யானைக்கால் வீக்கம்; அதனாலுண்டாகும் சுரம் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:- பழம்புளி, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, மணத்தக்காளி வற்றல், துவரை, வயற்பயறு; நெய்; சருக்கரை வெள்ளாட்டிறைச்சி முதலியவைகளும் இவை போன்றவைகளு மாகுமெனினும் தேகசுபாவப் பிரகிரதியை யனுசரித்து ஏற்றவைகளைச் சேர்த்தும் ஏற்காதவைகளை நீக்கியும் விடவேண்டியது.

குறிப்பு

இச்செய்யுளில் "விளாத்தி" என்பதைச் சிலர் பீச்சுவிளாத்தி யென்கிறார்கள். இஷ்டமானவர்கள் அதைச்சேர்த்துச் செய்து கொள்க.

அண்டரோகம் தீரும் எனச் சொலலப்பட்டிருப்பதால், குடல் அண்டம், குமுறல் அண்டம், நீர் அண்டம்; தசை அண்டம், என்னும் நான்கு வகைகளும்

Koviloor Digital Library

தீருமென ஏற்படுகிறது. ஆயினும் இந்தக் கொடிய ரோகங்களுக்கு இதனை ஆரம்பத்திலேயே உபயோகித்தால் குணமுண்டாகும். அப்படிக்கில்லாமல், இந்த வியாதிகள் தேகத்திலும் ஊறி முதிர்ச்சியும் அடையுமாகில், வசப்படுவது அரிதாம். தேகதிடமும், மனதிடமு முள்ளவர்கள் ஆயுதச் சிகிச்சைகள், காரசார சிகிச்சைகள் ஆகியவைகளைச் செய்து நிவர்த்தித்து சுகமடையலாம்.

50. பூதச் சக்கரப் பொடி

வெளிச்சப்பிசின், மிளகு; கருஞ்சீரகம், அரிசித் திப்பிலி இந்நான்கையும் தனித்தனி யிளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குச் சம்னெடை.

செய்முறை:- இந்நான்கையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்க.

பிரமாணம் :- வேளை-1-க்கு குன்றிமணியெடை-8-முதல்-10-வரையில் காலை மாலை-2-வேளையும் தேனையும் வெள்ளைப்பூண்டின் தைலத்தையும் சமபாகமாய்ச் சேர்த்து, அதில் அநுபானித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள்:- குழந்தைகளுக்குக் காணும் இளைப்பு, இருமல், ஈளைரோகம், கபரோகங்களிற் காணும் ஈளை முதலியவைகள் தீரும். இன்னும் இக்குழந்தைகளுக்குக் காணும் அபாயகரமான பலவியாதிகளையும் நீக்கித் தப்பவைத்து ரட்சிக்கிறபடியால் இது தேவாமிர்தத்திற்கு ஒப்பானதெனச் சொல்லப்படுகிறது; ஆகையால் குழந்தைகளுக்குக்காணும் அள்ளுமாந்தம்; முதலியவைகளுக்குங் கொடுக்கலாம்.

குறிப்பு

இந்தப்பாகத்திற்கு முக்கிய அநுபான திரவியமாகிற வெள்ளைப்பூண்டுத் தைலம் அனேகருக்குத் தெரிந்தே யிருக்கும். ஆனால் சிலருக்குத் தெரியாமலுமிருக்கலாம். இன்னும் வேறு சிலர் ஒவ்வொரு பாகமும் பலவகைகளாயிற்றே அப்படியே இதுவும் எந்தப் பாகப்படி செய்கிறதோவென சில சமயம் மலைக்கவும் ஏதுவுமாகும். ஆகையால் அடியில் அதன் முறையையும் எழுதுவோம்.

வெள்ளைப்பூண்டுத் தைலம்

தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் தேவையான அளவு. இவற்றை ஒன்றிரண்டாய்ச் சிதைத்து நடுத்தரமாக அரைத்துத் தாம்பிர பாத்திரத்தில் வைத்து அடுப்பேற்றி வறுத்து கொஞ்சம் சிவந்த தருணத்தில் அழுத்தமான வஸ்திரத்துண்டை விரித்து; அதில் உமியைப் பரப்பி அதன் மத்தியில் வைத்து; வஸ்திரத்துண்டின் இரு பக்கத்தையும் முறுக்கிப்பிழிய தைலம் வடியும். இவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாகப் பக்குவமாகச்செய்ய தைலமானது நன்றாய் வெளிப்படும். இவ்விதம் தேவையான

Koviloor Digital Library

வரையில் எடுத்துகொள்ளவும் அதில் சிலவேளை ஜலமும் சேர்த்திருக்குமாகையால் ஒரு மண்பாத்திரத்தில் விட்டு அடுப்பில்வைத்து சிறுதீயாயெரித்து; சலத்தைப்போக்கி; சிசாவில் பத்திரப்படுத்தவும். வெய்யிலில் வைத்தும் நீரைப்போக்கிவிடலாம்; இந்தத்தைலத்தையே தனியாக வேறு அநுபானங்களில் பலவியாதிகளுக்குக் கொடுக்கலாம். மேலுக்கும் மேற் பூச்சாகவும் உபயோகிக்கலாம். அவைகளாவன.

சந்நிரோகம், வாதரோகம், தலைநோவு, தாளின்வலி, நீர்க்கோவை, சீதபேதி, மூலரோகம், குழந்தைகள் வலிப்பு, மாந்தம் ஆகியவைகளாம்.

51. காசக்குடி நீர்.

மிளகு, அரிசித்திப்பிலி, கீழ்காய்நெல்லிவேர், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, சிறு தேக்கு, கண்டங்கத்திரிவேர்; சங்கவேர், நெல்லி வேர்ப்பட்டை இந்த எட்டுவகையும் வகை 1-க்கு வராகனெடை-2½ சுத்த ஜலம் படி-1.

செய்முறையும் பிரமாணமும்:- மேற்கண்டவைகளில் வேரினங்களைப் பஞ்சுபோல் சிதைத்தும், மற்றவைகளை இரண்டொன்றாய்ப் பொடித்தும், மேற்படி ஜலத்திற் போட்டு, காய்ச்சி எட்டொன்றாய்ச் சுண்டின பின் னிறக்கி வடிகட்டிப் பானஞ் செய்யவும். இவ்விதமே, இந்தப் பிரமாணமாகவே ஒவ்வொரு வேளையும் செய்துகொள்ள வேண்டும். இப்படிக் காலை மாலை இரண்டுவேளையுமாக-7-நாட்கள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள்:- அஞ்சுவகைச் சுவாச ரோகங்களும் தீரும். தேகந்தெளிந்து இரத்த புஷ்டியுண்டாகி தேகம் பலக்கும்.

பத்தியம்:- புளி, புகை, பெண் ஆகியவைகளையும், இந்த ரோகத்தை உண்டாக்குங் காரணங்களையும் தவிர்ப்பதேயாம்.

குறிப்பு

சுவாச ரோகமானது (1) க்ஷுத்திர சுவாசரோகம் (அற்பசுவாசம்), (2) தமக சுவாசரோகம் (மந்தாரகரசம்), (3) விச்சின்ன சுவாசரோகம், அறுபட்டதுபோலத் திணறலுடன் (கூடினசுவாசம்) (4) மகாசுவாசம் (பெருமூச்சு=பெருஞ்சுவாசம்), (5) ஊர்த்துவ சுவாச ரோகம் (மேல் மூச்சு) என்னும் ஐந்து வகையாம்.

இந்தக் குடிநீரைத் தனியா யுபயோகிப்பதைப் பார்க்கிலும், முன் சொல்லப் பட்டிருக்கிற நாகபற்ப முதலியவைகளுக்கும், இன்னும் இந்த ரோகத்திற்கான வேறு அவுடதங்களுக்கும், இதனை அநுபானமாகச் சேர்த்து உபயோகித்தால் விசேஷ குணமுண்டாம்.

இது பார்வைக்கு மிகு சுலபமான முறையா யிருந்தாலும் அநுபவத்தில் அநுபானத்திற்கு அதிகம் பிரயோஜனமுள்ளதாய்க் காணப்படுகிறது. ஆகையால்

Koviloor Digital Library

வியாதியின் பலம், தேககுபாவம் முதலியவைக் கவனித்துத் தக்கமருந்துகளை, இந்தக்கசாயத்தில் அநுபானித்துக் கொடுத்தால் பெரும்பாலும் சுகுணத்தையே உண்டாக்கும்.

இதனுடன் மேற்கண்ட சரக்குகளைச்சேர்த்து முன் மாதிரியே காய்ச்சின கஷாய ஆவியை, குழாய் மூலமாகப் பக்குவமாய்க் குடித்தால் சுவாசரோகத்தைத் தக்ஷணம் நிறுத்தும். ஆனால் இதனை கைபாகமாகவும் பக்குவமாகவும் செய்யின், அதன் ஆச்சரியமான குணத்தை யுடனே காணலாம்.

52. இரத்தமூலப் பிரயோகம்.

சிவகரந்தையை யரைத்த விழுது, நடுத்தரமான வில்வப்பழத்தளவு, பசுவின் வெண்ணெய் படி- ¼, புதிதான எள்ளுப்புண்ணாக்குத் தூள் பலம்-4.

செய்முறை:- இம்மூன்றையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய்ப் பிசைந்து மெழுகு பதமாகப் பீங்கானில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:- வேளை-1-க்குப் பலம்-1¼-1½ இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் அஞ்சு நாள் சாப்பிடவும்.

தீரும்நோய்கள்:- இரத்த மூலம், மூலவேதனை, மூலப்புண், மூலக்கடுப்பு, மூலத்தினவு, முதலிய இரத்தமூல சம்பந்த சங்கட்டங்க ளெல்லாந் தீரும்.

பத்தியம்:- வெந்நீரையே குடித்து, வெந்நீரையே புழங்கவேண்டும். குளிர்ந்த ஜலம், குளிர்ச்சியான வஸ்துக்கள், அதிக உஷ்ணமான வஸ்துக்கள், ஆகியவைகளாகா.

குறிப்பு

இந்த மருந்தை இதிற் சொல்லி யிருக்கிறபடி ஒரே தடவையாய்ச் செய்து வைத்துக் கொள்வதில், கஷ்டக்குறை வென்றாலும், அதில் ஒருவித வாசனையுண்டாகி, சாப்பிடுகிறதற்குச் சிலருக்கு அருவெருப்பாயிருக்கிறது. ஆகையால் அன்றாடம் இருவேளைக்குத் ஒரேதடவையாய் அல்லது வேளைக்கு வேளையாய் சித்தப்படுத்திக் கொள்வது, கொஞ்சம் கஷ்டமாயினும் சாப்பிட விருப்பமாகவும் குணத்தில் சிரேஷ்டமாகவும் காணப்படுகிறது. அம்முறை பின்வருகிற விதமாம்.

சிவகரந்தையை யறைத்த விழுது, பசுவின் வெண்ணெய், இவை யிரண்டும் வகை-1-க்குப் பலம் ½. புதிய எள்ளுப் புண்ணாக்குத் தூள் பலம்-¼. இம்மூன்றையும் கலந்து உட்கொள்ளவும். இவ்விதமே வேளைக்கு வேள்ளை புதிது புதியாய்ச் சித்தப்படுத்திக் கொள்ளவும்.

இந்தப்பாகத்துடன் கீழ்க்காணும் சிலாசத்துப் பற்பத்தைச் சேர்த்து சாப்பிடுவதால் முன்னிலும் சிரேஷ்டமான குணமுண்டாம்.

Koviloor Digital Library

சிலாசத்துப் பற்பம்.

சிலாசத்து தேவையான அளவு. இதனைச் சிறுதுண்டுகளாயுடைத்து; ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு; அதற்குமேல் நாலங்குலம் நிற்கும்படியாக இளநீரைவிட்டு; ஒருநாள் வைத்து மறுநாள் நன்றாய்க் கழுவி சுத்திசெய்து உலர்த்தி; கல்வத்திலிட்டுப் பொடித்து; சிவகரந்தைச் சாற்றை விட்டு-2-சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி, ஒட்டிலிட்டு மேலோடு மூடி-5-சீலை மண் செய்துலர்த்தி; கவசத்தி னெடைக்குப் பத்து பங்கு விராட்டியிற் புடமிட்டாறவிட்டெடுத்துப் பொடித்து சீஷாவில் பத்திரப் படுத்த வேண்டும்.

பிரமாணம்:- குன்றிமணியெடை-8-10.

தீரும்நோய்கள்:- இரத்தமூலம்; மூலக் கிராணி; சீதபேதி; இரத்தபேதி; உஷ்ணபேதி; மூலச்சூடு; வெட்டைச்சூடு; முதலியவைகள் தீரும்.

சிலாசத்தை வேறெந்த விதமாகப் பற்பம் செய்து கொள்ளினும் மேற்கண்ட மருந்துடன் உபயோகிக்கலாம்.

53. கெந்தக ரசாயனம்.

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம் பலம்-3, சுத்திசெய்யப்பட்ட எட்டிக்கொட்டை மேல்தோல் சீவப்பட்ட சுக்கு; மிளகு; அரிசித்திப்பிலி; வாய்விளங்கம்; இலவங்கப்பத்திரி; சுத்திசெய்த கொடிவேலி வேர்ப்பட்டை, இந்த ஏழுசரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை-1-க்குப் பலம் ½; சுத்திசெய்த சேராங்கொட்டை பலம்-½. சீனிசர்க்கரை பலம்-7.

செய்முறை:- கந்தகத்தைக் கல்வத்திலிட்டு நுண்மையானப் பொடியாகச் செய்து எடுத்துக்கொள்க. சேராங்கொட்டையைக் கல்வத்திலிட்டு; சாக்கிரதையுடன் மைபோல அரைத்து கந்தகமுள்பட எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து; கல்வத்திலுள்ளதுடன் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்த்து முடிவில் நன்றாய்ச்சேர்த்து-2-சாமமரைத்து எடுத்து சர்க்கரையைச் சேர்த்து, கல்லுரலில் நன்றா யிடித்துக்கொள்ளவும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-½ முதல்-1-இதனை வாழைப்பழம்; நெய்; தேன் முதலியவைகளில் அநுபானித்து, காலை மாலை இரண்டுவேளையும் உட்கொள்ளலாம்.

தீரும் நோய்கள்:- குஷ்டரோகங்கள்; படைகள்; மூலரோகங்கள், குறை நோய்கள்; குன்மரோகங்கள் ஆகியவை தீரும்.

பத்தியம்:- மற்ற கந்தகரசாயன முறைகளித் சேர்க்கப்படுவதுபோல இம்முறையில் ரசகர்ப்பூரம்; பறங்கிப்பட்டை முதலிய கொடிய சரக்குகள் இதில்

Koviloor Digital Library

சேர்க்கப்படவில்லை யாகையால் இதனைக் கடினபத்தியமின்றி இச்சா பத்தியத்துடனே கொடுக்கலாம். ஆனால்; வியாதிபலம்; தேகபலம் முதலியவைகளுக் கேற்றபடி கடினபத்தியம் அவசியமானால் அப்படியும் செய்யலாம். இவ்விதியானது சிகிச்சகர்களைச் சேர்ந்தது.

குறிப்பு

கந்தகம்; கொடிவேலி வேர்ப்பட்டை இவ்விரண்டின் சுத்தியும் முன்னமே "கந்தகரசாயனம்" என்னும் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

சேராங்கொட்டையின் சுத்தி:- தேவையான சேராங்கொட்டைகளை மூக்குவெட்டி சாணிப்பாலில் வேகவைத்துலர்த்தியும்; மறுபடியும் பசும்பாலில் வேகவைத்துலர்த்திக் கொள்வதே ; சேராங்கொட்டையின் சுத்தியாம்.

எட்டிக்கொட்டையின் சுத்தி:- தேவையான அளவு எட்டிக் கொட்டைகளை ஒரு இரவும் பகலும் தண்ணீரில் ஊறவைத்து மேல்தோலை நீக்கி, அரத்தால் ராவி, தூள்செய்து சீமைக்காடியில் ஒரு இரவும் பகலும் ஊறவைத்தெடுத்து உலர்த்தியும் கொள்ளலாம்; அல்லது அந்தத் தூளைப் பொட்டலமாகக் கட்டிப் பசும்பாலிற்போட்டு நன்றாய்க் கொதிக்கவைத்தெடுத்துத் தண்ணீர்விட்டு சுத்தமாக அலம்பிக் கழுவி யுலர்த்தியும் கொள்ளலாம். இந்தப் பாலானது நஞ்சின் சுபாவமுடையதாகையால், இதையுடனே ஒரு குழி தோண்டி அதில் ஊற்றி மறைத்துவிட வேண்டும். இவ்விதம் உலர்த்தின தூளை மறுபடியும் இடித்து வஸ்திரகாயம் செய்த எடுத்து உபயோகிக்க வேண்டும்.

அல்லது இக்கொட்டைகளை ஒன்றும் செய்யாமலே நன்றாய்ச் சுட்டுக் கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயம் செய்தும் உபயோகித்துக் கொள்ளலாம்.

54. எலிகடிப் பிரயோகம்.

வெள்ளெருக்கன் வேர்ப்பட்டையை அரைத்த விழுது, *சுத்திசெய்த செம்மண் பூமி நாக்குப்பூச்சியை யரைத்த விழுது இவை யிரண்டும் வகை-1-க்கு நடுத்தரமான கடுக்காயளவு; இவ்விரண்டையும் நன்றாய் மிஸ்ரமித்து பச்சையரிசித் தவிட்டிற் புரட்டி உருண்டையாகச் செய்து விழுங்கச் செய்யவும். இதனை ஒரே உருண்டையாய்ச் செய்வதைப் பார்க்கிலும்-3-4-உருண்டைகளாகச் செய்து ஒவ்வொன்றையும் மேற்படி தவிட்டிற் புரட்டி, பல தடவைகளாக விழுங்கச்செய்வது சில சமயங்களில் சிலருக்கு அநுகூலமாயிருக்கும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் ஆறுபொழுது மூன்றுநாட் பிரயோகிக்க வேண்டும்.

* இதன் சுத்தி முன் சொல்லப்பட்டிருக்கிறது. செம்மண் நாக்குப்பூச்சி அகப்பட்டால் அதுவே சிரேஷ்டம். அது அகப்படாவிட்டால் கிடைத்ததை உபயோகிக்கவும்.

Koviloor Digital Library

பச்சையரிசியுடன் தேங்காய்ப்பாலை சேர்த்துப் பொங்கி, சாப்பிடவேண்டும் அல்லது கஞ்சியாய்ச் செய்து பானஞ்செய்ய வேண்டும்; புளி, உப்பு, புகை ஆகியவைகளாகா.

இவ்விதம் செய்யின் பதினெட்டு வித எலிகடி விஷமுந் தீரும். இன்னும் பல்லாற்கடிக்கும் விஷ ஜெந்துக்களின் விஷமுந் தீரும்.

குறிப்பு

வெள்ளெருக்கன் வேர்ப்பட்டையானது புதிதாய் ஈரமாயிருக்க வேண்டும்; அதுவே இச்சிகிச்சைக்கு சிரேஷ்டமானது; அது அகப்படாத காலங்களில் உலர்ந்ததை உபயோகிக்கலாம்; ஆனால் அதுவும் புதிதாயிருப்பதே நன்மை பயக்கும்; இவ்விதமே நாக்குப்பூச்சியும் புதிதானதாகவே இருக்கவேண்டும். இதையும் சுத்திசெய்து உலர்த்தியும் வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம்.

இங்கு சொல்லியிருக்கிற அளவை, அவரவர்களின் தேகபலம் முதலியவைகளுக் கேற்றபடி குறைத்தும் அதிகப்படுத்தியும் கொள்ளலாம். மருந்து வேகமுள்ள தாகையால் சமயம்போல் ஒவ்வொரு வேளையும் கொடுக்கலாம். ஆனால் பத்தியமானது வெகு கடினமானதாகையால் அப்படிச் செய்பவர்களுக்கு முதல் மூன்று நாள் கொடுத்து, இடையில் ஒரு வாரம் பத்து நாள் விட்டு மறு மூன்றுநாளுங் கொடுக்கவேண்டும்.

இதில் கடின பத்தியமா யிருப்பதால் இதனை உபயோகிப்பது கஷ்டமெனத் தோன்றும், ஆனால் எலிகடிவிஷத்தால் அவரவர்கள் ஆயுள்முழுவதும் படுங்கஷ்டத்தைப் பார்க்கிலும் இந்தச் சில நாட்கள் கொஞ்சம் வருத்தப்படுவது கஷ்டமாகுமா? மேலும்-18-வகை எலிகளில் எந்த வகையெனக் கண்டுபிடிப்பது கஷ்டம். கண்டபின் அதற்குச் சரியான சிகிச்சை கண்டுபிடிப்பது அதனிலும் கஷ்டம். அப்படிக்கில்லாமல் எந்த வகையாயிருந்தாலும் ஒரேவகை சிகிச்சையாயிருப்பது எவ்வளவோ அநுகூலமான விஷயம். இன்னும் எலியல்லாத வேறு விஷமாயிருந்தாலும் அதற்கும் சந்தேகமின்றி இதனை உபயோகிக்கலாம். இக்காரணங்களால் இந்தப் பாகமானது அதி சிரேஷ்டமென்பது ஒருவரெடுத்துச் சொல்லாமலே தானே விளங்கும். எலிகடி விஷத்தால் வருந்துபவர்கள் அனேகராகையாலும், மேற்கண்ட பாகத்தில் கடும்பத்தியமென மலைப்பவர்கள் சில ரிருப்பார்க ளாகையாலும், அத்தகையினர் களுக்கும் உபயோகப்படும்படியாக வேறு சில முறைகளையும் இங்கெழுதுவாம். அவை பின் வருகிறவிதமாம்.

(1) அழிஞ்சில் வேர்ப்பட்டையை வெந்நீர் தெளித்து அரைத்தவிழுது புன்னைக்காய்ப் பிரமாணம்; இதனைப் பச்சையரிசித் தவிட்டிற்புரட்டி யுட்கொள்க. இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் எட்டுநாள்செய்யின், இருமல், இரைப்பு, கோழைவாந்தி முதலிய துர்க்குணங்களை யுண்டாக்கும் எலிகடிவிஷந் தீரும். இதற்கு உப்பில்லாப்பத்தியம்.

Koviloor Digital Library

(2) எட்டுத்துளி எருக்கம்பாலை, இலந்தைக் காயளவு பனவெல்லத்திற் சொட்டி மத்தித்து உட்கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமாக ஏழு நாட்கள் செய்யின், குறட்டையெலி, சண்டையெலி ஆகிய இவ்வெலிகடி விஷந்தீரும். இதற்கும் உப்பில்லாப்பத்தியமே.

(3) அவுரிவேரைப் பசும்பாலிலரைத்த விழுது நெல்லிக்காயளவு. இதனை அரை ஆழாக்குப் பசும் பாலில் கரைத்துப் பானஞ்செய்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமாக எட்டுநாள் உபயோகித்தும் இந்த இலையையரைத்து மேலுக்குத் துவாலையிட்டும் வரினும்; அல்லது நீலக்காக்கணம் வேரையரைத்த விழுது சிறிய கொட்டைப்பாக்களவு. இதனைக் காலையில் மாத்திரம் உட்கொள்ள வேணும்; இவ்விதம் அஞ்சு நாட்கள் செய்யினும், வயிற்றில் இரத்தப்பாய்ச்சலையும், பல்லுகளில் குடைச்சலையுந் தருகின்ற எலிகடிவிஷந் தீரும். இதற்கும் உப்பில்லாப் பத்தியமே.

இங்கு எல்லா எலிகடி விஷமுந் தீருமெனப் பொதுவாய்ச் சொல்லிவிட்டாலும் அசாத்திய எலிவிஷம் தீராதாகையால் அந்த லக்ஷணங்களையும் தெரிந்திருப்பது அவசியமே.

அசாத்திய எலிவிஷ லக்ஷணம்:- எந்த எலியினாலாவது மூர்ச்சை, மேகவீக்கம், மாறுருவம், வியர்வை, காதுமந்தம், சுரம், தலைநோவு, வாய்நீருறல், ரத்தவாந்தி என்னும் இக்குணங்களுண்டானால் அதற்கு அசாத்திய எலிவிஷமெனப் பெயர். இவ்வகை எலிவிஷம் தீருவது கஷ்டம்.

55. குட்டக்குழித் தைலம்

(a) நீரடிமுத்துப்பருப்பு படி-1, வாலுழுவையரிசி, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுகரணையாகத் துண்டித்த விறலிமஞ்சள், மிளகு, சிறுகாணையாகத் துண்டித்த கொடிவேலி வேர்ப்பட்டை, இந்த ஆறுவகைகளும் வகை-1-க்குப் படி-½ சுத்திசெய்தசேராங் கொட்டை *சுத்திசெய்த எட்டிக்கொட்டை இவ்விரண்டுவகையும் வகை-1-க்கு-10-எண்கள், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு-20-எண்கள், (b) நெல்லிக்காய்க் கந்தகம், மடலரிதாரம் இவ்விரண்டும் வகை-1-க்குப் பலம்-½. வெண்ணொச்சி யிலைச்சாறு படி-2 ½-முதல்-5. (c) சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த மடலரிதாரம், சுத்திசெய்த சாதிலிங்கம், சவுக்காரம், நாட்டு வெண்காரம் (இதனைப் பொரித்துக்கொள்க). இந்த அஞ்சு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

---

* எட்டிக்கொட்டியை ஒருநாள் தண்ணீரில் ஊற வைத்துத் தோல்போக்கிப் பசும் பாலில் வேகவைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். முன்பாகத்தில் சொல்லியிருப்பது போல அரத்தால் இராவித் தூள்செய்தல் இப்பாகத்தில் அவசியமில்லை. ஆயினும் ஒவ்வொரு கொட்டைகளையும் சிறு தூண்டுகளாகத் துண்டித்துக் கொள்ள வேண்டியது

Koviloor Digital Library

செய்முறை:- (b) யிலுள்ள இரண்டுசரக்குகளையும் முன்னர் தனித்தனி மைபோலப் பொடி செய்து பின் பிரண்டையும் சேர்த்தரைத்து நன்றாய்க் கலந்தபின் கொஞ்சம் வெண்ணொச்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு-1-சாமமரைத்து வழித்து மேற்படி சாற்றிற்கரைத்து, (a) யில் உள்ள சரக்குகளை அதிற்போட்டு, இரண்டொரு நாள் ஊறவைக்க வேண்டும். பிரதிதினமும் மூன்று நான்கு தடவைகள், நன்றாய்க் கிளறியும் வரவேண்டும். சாறெல்லாம் சுவறினபின்பு, காற்றோட்டத்திற்போட்டு உலரவைத்து முடிவில் வெய்யிலில் இரண்டொருநாளும் காயவைத்து இளம் பதமாயிராமலும், முருகிப்போகாமலும் பதமாய்ச் செய்து கொள்ள வேண்டும்.

பின்பு சுமார் ஆறுபடி கொள்ளத்தக்க வாய் சிறுத்த மண்பானையின் அல்லது தோண்டியின் அடியில் சக்கராகாரமாய் ஒன்பது பத்து சிறு துவாரங்களிட்டு அவற்றில் தலை சுருட்டப்பட்ட இரும்புக்கம்பிகளை அப்பாத்திரத்திற் குள்ளாகத் தொங்கவிட்டு, அப்பாத்திரத்திற்குள் முன் சித்தப்படுத்தின சரக்குகளைப் போட்டு, அதன் வாய்க்கு அகலிட்டு, 7-மண் சீலை செய்து, சதுராகாரமான குழியொன்று தோண்டி அதன் நடுவில் வேறொரு சிறுகுழி அகழ்ந்து அதில் வேறொரு சிறு பாத்திரத்தை வைத்து, முன் சித்தப்படுத்தின பெரிய பாத்திரத்தை அதன் கீழுள்ளது வாரங்களெள்ளாம் அதன் கீழுள்ள சிறு பாத்திரத்தில் அடங்கி யிருக்கும் படியாக வைத்துப் பொருத்தி, இரண்டொரு சீலை மண் செய்து, கீழ்ப்பாத்திரத்தின் வாய்க்குமேல் ஒன்று ஒன்றரை அங்குலம் உயரம் மண்ணைத் தள்ளிச் சமப்படுத்தி விடவேண்டும். கீழுள்ள சிறுபாத்திரமானது சுமார்-1½-2-படி கொள்ளத் தக்கதாயிருக்க வேண்டும். சரக்குள்ள பாத்திரத்தைச் சுற்றிலும், அதன் மேலும் சுமார் முக்கால் அடி யளவு விசால மிருக்கவேண்டும். பின் குழி நிறைய வராட்டியை யடுக்கித் தீயிட்டுக் குளிர ஆறினபின் மெதுவாய்ப் பிரித்து, மண், சாம்பல் முதலியவைகளை விழ வொட்டாமல் ஜாக்கிரதையுடன் கீழ்ப்பாத்திரத்தையெடுக்க அதில் தைலமிறங்கியிருக்கும். இதுவே குழித்தைலமாம்.

பின்பு (c) யிலுள்ள சரக்குகளில் ரசத்தைத் தவிர மற்றவைகளை முன்னர் தனித்தனியாக மைபோல் பொடித்து ரசத்துடன் தாரம், லிங்கம் ஆகிய இவற்றின் பொடியைச் சேர்த்தரைத்து முன் குழித்தைலத்தில் கொஞ்சம் வார்த்தும் நன்றாயரைத்து ரசம்மடிந்த பின்னர் மற்றச்சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து முன் குழித்தைலத்திற் கலக்கி, கற்காரச்குள்ள சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம்:- வராகனெடை-1-1¼-தேனில் அநுபானித்துட்கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் சாப்பிடலாம். மேலும் இத்தைலத்தை மேற்பூச்சாகவும் பூசிவரவும் வேண்டும்.

தீரும் நோய்கள்:- கிரந்திகள், சூலைகள், குட்டங்கள், புள்ளிவண்டு முதலான பலவகை வண்டு கடிவிஷங்கள், சில்விஷங்கள், திமிர்கள், எட்டுவகைக் கரப்பான்கள், அரைப்புற்று, பேய்ச்சொறி; நாய்ச்சொறி முதலிய பலவகை சொறிகள், தேகவெழுப்பு, முகவெழுப்பு, முதலிய வெண்குஷ்டங்கள், பலவகை படர் தாமரை ரோகங்கள், கைகால் வெடிப்பு, தேக வெடிப்பு முதலிய பலவகை வெடிப்பு ரோகங்கள், இன்னும் இதிற் சொல்லப்படாத அனந்த ரோகங்கள் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

பத்தியம்:- பசுவின்பால், பசுவின்நெய், தேன்; பாற்சாதம், நெய்ச்சாதம் ஆகியவைகளாம். புளி, உப்பு, புகை, பெண், முதலியவைகளாகா. மேற்சொல்லப்பட்ட பதார்த்தங்களை வேளைக்கு வேளை மாற்றி மாற்றிச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மற்றப்பதார்த்தங்களை யெல்லாம் நீக்கி வைப்பதே உத்தமம்.

குறிப்பு

இந்தக் குட்டக்குழித் தைலமானது அனேக வியாதிகளுக்கு முக்கியமாய் குஷ்டரோகங்களுக்கு அதிகமாய் உபயோக மாகிறபடியாலும், இவ்வித முறைகளில் இது மிகவும் சுலபமானதும் விசேஷ குணத்தைக் கொடுக்கத்தக்கது மாகையாலும் சிகிச்சகர்கள் இதனைக் கவனித்துக் கைபாகமாகவும் சாக்கிரதையாகவும் முடித்துச் சித்தமாய் வைத்திருக்க வேண்டும். இந்தப் பாகமானது கற்றோர் மற்றோர் அநுபவசாலிகள், அநுபவமில்லாதவர்கள் முதலிய யாவருக்கும் பிரயோசனப் படும்படியாகக் கூடினவரையில் வகைவிபரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் இப்பாகத்தை விங்கெழுதி யிருக்கிறபடி செய்யினும் சிலசமயம் இடையிலுண்டாம் நினையாச் சில அசந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி பரிகாரம் செய்து கொள்ளும்படியான புத்தி யுத்தி முதலியவைகளும் இருக்கவேண்டியது அவசியம். ஒருபாகத்தைச் செய்யும்போது பலவித இடையூறுகள் நேரிடுவது சகஜமே. அவை யெல்லாவற்றையும் இங்கெழுதியும் முடியாது. இங்கு இது எழுதப்பட்ட முக்கிய கருத்தாவது இந்தப் பாகத்தை ஆதியிலிருந்து அந்தம்வரையில் அதிக ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டுமென்பதே காரணம்.

இச்செய்யுளில் ஒரு பிரதியின் பிரகாரம் "கடுகவிடி குன்றியின் சாற்றில்" யென அச்சிடப்பட்டிருக்கிறது. வேறு சில பிரதிகளில் "குண்டியென" காணப்பட்டிருக்கிறது. குன்றியென்பது குன்றுமணியிலை யென அர்த்தமாம். குண்டி அதாவது நிர்க்குண்டி யென்பது வெண்ணொச்சியென அர்த்தமாம். அந்தப பாகத்தில் அநுபவமாகச் சேர்க்கப்படுவது மேற்கண்ட வெண்ணொச்சியேயாம். ஆகையால் இங்கு பெரும் பாலார்களின் கருத்து, அநுபவம் முதலியவைகளை யனுசரித் தெழுதப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபமுள்ளவர்கள் தங்களிஷ்டம்போல ஒருமுறை குன்றிமணி யிலைச் சாற்றைச் சேர்த்துச் செய்தும் மறு முறை வெண்ணொச்சி யிலைச் சாற்றைச் சேர்த்துச் செய்தும், உபயோகித்து அநுபவசித்தமாக மேற்கண்ட இரண்டின் வித்தியாசங்களையும் கண்டு தெரிந்து கொள்ளலாம்.

56. விஷபேதி மாத்திரை.

(a) மிளகு, சாதிக்காய், கருவேலம்பிசின்; வெந்தயம், லவங்கம், பெருங்காயம் இந்த ஆறு சரக்குகளையும் தனித்தனி வறுத்து தனித்தனி யிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-1 ¼ (b) தீபகர்ப்பூரம், சுத்திசெய்த இரசக்கர்ப்பூரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம், அபின் இந்நான்கும் வகை-1-க்கு வராகனெடை-1 ¼, கஞ்சா இலைச்சாறு அல்லது உலர்ந்த கஞ்சாக் கஷாயம் செல்லத்தக்க அளவு.

Koviloor Digital Library

செய்முறை:- (a) யிலுள்ள சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்ளவும். (b) யிலுள்ள முன் மூன்று சரக்குகளையும் தனித்தனி தூள்செய்து முன் சூரணக்கலவையுடன் கலந்து கொள்ள வேண்டும். அபினியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றை அல்லது கஷாயத்தைக் கொஞ்சம் வார்த்து மைபோல் அரைத்து, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணத்தையும் கொஞ்சங் கொஞ்சமாக முழுவதும் சேர்த்து முன் திரவத்தையே சிறுகச்சிறுக வார்த்து-1-சாமமரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி, சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- ஒரு மாத்திரை உத்தமம். 1¼-மாத்திரை மத்திமம். 1½-மாத்திரை அதமம். 2-மாத்திரைகள் அதமாதமமாம். தேனில் அல்லது சாராயத்தில் அநுபானித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள்:- விஷபேதியில் கொம்பன் என்னும் வகைதவிர மற்றெல்லாவகை விஷபேதிகளும் தீரும். விஷபேதியால் உண்டான தோஷங்கள், ஜன்னிகள், சுரங்கள், அரட்டல், புரட்டல் முதலிய விஷபேதி சம்பந்தமான எல்லாத் துர்க்குணங்களும் நீங்கும்.

குறிப்பு

அகஸ்தியர் பெருநூல்-12000 -சதுர்காண்டத்தில் கொம்பன், படுவன், அக்கரன் என மூன்று வகை விஷூசியெனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அமிர்த சாகரம், ஜீவரக்ஷாமிர்தம் முதலிய கிரந்தங்களில், வாத, பித்த, சிலேஷ்ம விஷூசியெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் முன்னூல் கருத்தின்படியே கொம்பன் என்னும் வகைதவிர மற்றிரண்டு வகையும் தீருமெனச் சொல்லியிருக்கிறார். ஆனால் அக்கிரந்தத்தில் சொல்லியிருக்கிறபடி மேற்கண்ட இரண்டு வகைகளின் லக்ஷணம் அவைகளுக்கு ஏற்ற அநுபானம் ஆகியவைகளையும் இங்கெழுதுவாம். ஏனெனில் அந்த அநுபானங்களில் இந்த மாத்திரையைக் கொடுத்தால் அதிக குண முண்டாமென்பதே காரணம்.

(1) படுவன் என்னும் விஷூசி; இதன் லக்ஷணம்:- குடலைப்பற்றித் தங்காமல் பேதியாதல், வாந்தியாதல், காதடைத்தல், மூர்ச்சையுண்டாதல், வயிற்றில் வலி, தேன் போன்ற கழிச்சல், சீதம் விழுதல், நரம்பிழுத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:- அரைப்பலம் விறலிமஞ்சளை நையச் சிதைத்து, புது சட்டியிற் போட்டெரித்து நன்றாய் நெருப்பானபின், கால் படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டின கஷாயத்தில் மேற்படி மாத்திரையை அநுபானித்துக் கொடுக்க மேற்கண்ட படுவன் தீரும். அல்லது,

நுண்மையாகப் பொடித்த-½-பலம் விறலிமஞ்சட் பொடியை இரண்டு ஆழாக்கு முழுக்கூறு காய்ச்சி வெந்நீரில் போட்டு-½-மணி நேரம் வைத்து தெளிவாயிறுத்து சுமார் கால் ஆழாக்குக் கஷாயத்தில் முன் மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க மேற்படி படுவன் தீரும்.

Koviloor Digital Library

(2) அக்கான், இதன் லக்ஷணம்:- சேறுபோல் பேதியாதல், பேதியில் சோறுவிழுதல், தேகங் குளிர்தல், தாகம், தேகம், கை, கால் முதலிய ஸ்தானங்களில் நோவு, தேகத்தில் விரைப்பு, மரத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:- மிளகு பலம்-½, இதனைப் புதுச்சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்து, இரண்டாழாக்கு ஜலத்தைவிட்டுக் காய்ச்சி-½-ஆழாக்காகச் சுண்டவைத் திறக்கி, அதில் மேற்படி மாத்திரையை அநுபானித்துக்கொடுக்க, மேற்கண்ட அக்கரக்கழிச்சல் தீரும்.

(3) கொம்பன். இதன் லக்ஷணம் :- ஒருதடவை பேதியானவுடன் கழுத்து சோர்ந்துபோதல், தேகமெல்லாம் பிசிபிசித்த வியர்வையுண்டாதல், தேகங்குளிர்ந்து ஜில்லிடல், இரத்தமெல்லாம் முறிந்து நீராய்ப்பிழிதல் முதலியவைகளாம். இதனை யுடனே கவனிக்காவிட்டால், 30-நாழிகைக்குள் சேதமுண்டாக்குமாகையால் இதற்குடனே அவுடதப் பிரயோகஞ் செய்ய வேண்டியது.

இங்கு இந்நூலாசிரியர், இந்தரோகந் தீராதெனக் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கினும், மற்றும் பெரியோர் அனேகர் இதற்காகப் பலவித சிகிச்சைகளையும் சொல்லியிருக்கின்றனர். மேலும் முன்கண்ட அகஸ்தியர் பெருநூலிலும், சஞ்சீவிக்குளிகை, நஞ்சுக்கொடி சுன்னக்குளிகை, கஸ்தூரிக்குளிகை முதலிய பாகங்கள் இதற்குமாகுமென சொல்லப்பட்டி ருக்கின்றன. அவைகளால் அனேகரும் மேற்கண்ட துஷ்டரோக இலக்கிற்கும் தப்பித்துப்பிழைத்து இருக்கின்றார் களாகையால், அம்முறைகளையெல்லாம் சமயம் வாய்க்கும்போது தனியே ஒரு கிரந்தமாக எழுதுவாம்.

இம் முறையில் கஞ்சாக் கிஷாயம் விட்டரைக்க வேண்டிய தாகையால் அதன் விபரம்.

ஏழுதடவை கழுவி சுத்திசெய்துலர்த்தின கஞ்சா பலம்-1, இதனை யிரண்டாழாக்கு ஜலத்திற்போட்டு எட்டிலொருபாகமாய்ச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்வதேயாம்.

இன்னும் இந்தக் கஷாயத்திற்குப் பதிலாக இங்கிலீஷ் முறையான "கஞ்சாபாவனத் திரவம்" (Tincture of Indian Hemp) என்னும் திரவத்தை விட்டரைப்பதால் விசேஷகுண முண்டாகும்.

இவ்விதமே இங்கு சொல்லப்பட்டிருக்கும் இரசகர்ப்பூரத்திற்குப் பதிலாச "ரசபஸ்பம் என்னும் கெலோமெலை (Calomel) உபயோகித்துக் கொள்ளலாம்.

இச்செய்யுளில் "மேவும் ரசகர்ப்பூரம் நெல்லி" என்பதில் நெல்லியென்பதற்கு நெல்லி வற்றலென சிலர் அருத்தஞ் செய்கின்றார்கள். இதில் இரசகர்ப்பூரம் சேர்ந்திருப்பதால் அதன் வேகத்தைமாற்ற நெல்லிக்காய்க் கந்தகமே சிரேஷ்டமானது, நெல்லிக்காய்க்கு அவ்வளவு சக்திகிடையாது, மேலும் கந்தகமே இங்கு சொல்லப்பட்ட

Koviloor Digital Library

ரோகங்களுக் கேற்றதாம். நெல்லிவற்றலோ அவ்வளவு ஏற்றதல்ல. ஆகையால் நெல்லி என்பதை நெல்லிக்காய்க் கந்தகமெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ரோகத்தில் பெரும்பாலார்களால் "குளோர்டைன்" என்னும் அவுடதம் உபயோகப்படுத்தப் படுகிறது. அந்தப் பாகத்தைப் பார்க்கிலும் இந்தப் பாகம் அதிக சிரேஷ்டமானது. ஏனெனில் அதில் சாதாரணமாய்ச் சேர்க்கப்படும் பல மருந்துகள் இதில் சேர்க்கப்பட்டிருப்பதுமன்றி, ஆயுர்வேத முறைப்படி வேறு சில பலமான சரக்குகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்பதே காரணம்.

இதில் பத்தியமுறைகள் சொல்லப்படவில்லை ஆயினும் கீழ்க்காணும் முறைப்படி ஆகாரத்தைக் கொடுப்பது உத்தமம்.

பழம் புழுங்கலரிசி ஆழாக்கு ½, இதனை நன்றாய்க்கழுவி சுத்திசெய்து ஒரு பானையிற்போட்டுக் கருகாமல் வறுத்துப்பொரித்து, அதில் இரண்டாழாக்கு ஜலத்தைவிட்டு வேகவைத்து பூப்போலமர்ந்து நவநீதப்பதத்தில் வடித்துக் கொள்ளவும். கருவேப்பிலை, மிளகு, இவ்விரண்டையும் வறுத்துத் தக்க உப்பும் வைத்துத் தூள்செய்துகொள்ள வேண்டும். முன் சாதத்தை யித்தூளின் உதவியால் உட்கொள்ள வேண்டும். இவ்விதம் சரிப்படாவிட்டால் அந்தத் தண்ணீரைப் பானஞ்செய்விக்கலாம். தாகத்திற்குக் கேட்கும்போதெல்லாம், இந்தக் கஞ்சியின் தெளிவையிறுத்துக் கொடுத்துக் கொண்டு வரலாம். அப்படிக் கொடுக்காவிட்டால் அதிகமாய்க் குடல்சுருண்டு உபத்திரவம் அதிகப்பட ஏதுவாகும்.

சிலருக்கு அபின் சேர்ந்த மருந்து ஏற்காதாகையால் அத்தகையினர்களுக்கும் உபயோகப்படும்படி யானவைகளும் அநுபவ யுத்தமானவைகளுமான சில அரிய முறைகளையும் இங்கெழுதுவாம்.

பேதிக் கபாடம்.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, மஞ்சட்கடுக்காய்த்தோல், ஓமம், கருவேப்பிலை, வெந்தயம், பெருங்காயம் இந்த எட்டுச் சரக்குகளையும் தனித்தனி யிளவறுப்பாய் வறுத்துத் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1 க்கு பலம்-1, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் பலம்-1. சங்கிலைச் சாறு, செல்லத்தக்க அளவு.

செய்முறை:- சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்க. பூண்டைக் கல்வத்திலிட்டு முதல் முதல் தனியாய் வெண்ணெய்போல அரைத்துப் பின்பு முன் சூரணங்களைச் சிறுகச்சிறுகச் சேர்த்தரைத்து சூரணங்களெல்லாஞ் சென்றபின்பு, முன் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டே, 2-சாமமரைத்து மைபோலானபின்பு, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணமும்; உபயோகமும்:- மாத்திரை-1-கொடுக்கலாம். முக்காவேளை, தும்பைவேர் = ஆகிய இரண்டும் சமனெடை இவற்றைக் கஷாயம் செய்து அதில்

Koviloor Digital Library

இழைத்துக்கொடுக்க மூன்றுவகை விஷூசியும் தீரும். இதனை வெந்நீரிலும் கொடுக்கலாம். 1-மணிக் கொரு தடவையாக-9-மணி வரையிற் கொடுக்கலாம். அல்லது பேதிகட்டுகிற வரையிலும் கொடுக்கலாம்.

அபின் சேர்ந்த மாத்திரைகள் இந்த வியாதியில் சிலருக்குச் சில சமயங்களில் நன்மைக்குப் பதிலாக தீமையையே யுண்டாக்கும்; ஆகையால் மேற்கண்ட பேதிக்கபாடத்தை எந்தத்தேகிக்கும் பயமில்லாமற் கொடுக்கலாம். எவருக்கும் இதனால் நன்மையுண்டாகுமே தவிர தீமையுண்டாக ஏது விராது.

லிங்கக்கட்டு

தீபகர்ப்பூரம்; சாம்பிராணி இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை-1-இவ்விரண்டையும் சேர்த்து அரைக்க மெழுகைப்போலாம்; அதனை யொரு துணித்துண்டில் தடவி-4-துண்டுகளாகச் செய்துகொள்ளவேண்டும். இவற்றுள் ஒரு துண்டை, ஒரு வராகனெடை லிங்கக்கட்டிக்குக் கவசம்செய்து கொளுத்தி விடவேண்டும். ஆறின பின் கருக்கை நீக்கி, மறுதுண்டைச் சுற்றி முன்போலவே கொளுத்தி முன்போலவே செய்யவும். இவ்விதம் மடக்கி மடக்கி யின்னும் இரண்டு தடவைகளும் செய்து கருக்கை நீக்கிச் சுத்திசெய்து பொடித்து வைத்துக்கொள்ளவும். மூன்று குன்றிமணி யெடை இத்தூளை முன் சொல்லப்பட்ட முக்காவேளை, தும்பைவேர் கஷாயத்திலும், இதற்கு முன் சொல்லப் பட்டிருக்கிற விறலிமஞ்சள் கஷாயம், அதன் பக்குவம், மிளகுக்கஷாயம் முதலிய வைகளிற் கொடுக்க முறையே அந்தந்த ரோகம் தீரும். இம்மருந்தை சமயோசிதமாக ஒரு மணிக்கு அல்லது அரைமணிக்கு ஒரு தடவை கொடுத்துக் கொண்டு வர வேண்டும்.

இன்னும் இந்த வியாதிக்கே அதிக உபயோகப்படத்தக்கதும், சுலபமானதும் அநுபவமானதுமான முறை யொன்றையும் இங்கெழுதுவாம்.

பட்டை மாத்திரை.

முற்றின முருங்கைப்பட்டை பலம்-1. இதனை அம்மியில் வெண்ணெய்போல அரைத்துக் கொள்ள வேண்டும். தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் பலம் -½ இதனையும் அம்மியில் வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ள வேண்டும். மிளகை வறுத்திடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம், ½, இம்மூன்றையும் சேர்த்துக் கல்வத்தில், கொஞ்சம் தண்ணீர் தெளித்து-1-சாமமரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக்கொள்க. முன் சரக்குகளை யரைக்கும்போது அவசியமானால் தண்ணீர் தெளித்துக் கொள்ளலாம்.

பேதிகண்டவுடனே இந்த மாத்திரையைக் கொடுத்தால் உடனே பேதி நிற்கும். அப்படி நிற்காவிட்டால் மறுதடவை கொடுக்க வேண்டும். இவ்விதம் பேதி கட்டுகிறவரையில்-1-மணிக் கொருதடவை கொடுத்துவர வேண்டும். முன் சொல்லப்பட்ட முக்காவேளை, தும்பைவேர்க் கஷாயம் முதலிய வேறு தகுந்தகஷாயம் ஆகியவைகளிலும் கொடுக்கலாம்.

Koviloor Digital Library

இந்த மாத்திரையால், அஜீரணபேதி, மாந்தபேதி, அக்கினிமந்தம், அஜீரணம் முதலியவைகளுந் தீரும்.

இந்த ரோகத்தில் வாந்தி யதிகமாயிருந்தால் பின் வரும் வமனசஞ்சீவியை உபயோகிக்கவும்.

வமனசஞ்சீவி.

ஒரு எலுமிச்சம் பழத்தையிரண்டாய் அறுத்து இரண்டு துண்டுகளிலும் கொஞ்சம் கொஞ்சம் ரசம் பிழிந்து தனியே வைத்துக்கொண்டு, ஒரு வராகனெடை ஏலக்காய் விதையைப் பொடித்து, முன் துண்டுகளில் நிறைத்து, அவற்றைக் கரிநெருப்பின் மீது வைத்து, தோல் வெந்து கறுத்தவுடன் எடுத்துப் பொடித்து முன்னெடுத்து வைத்திருக்கிற பழச்சாற்றையும் விட்டு மைபோல அரைத்து-3-மாத்திரை செய்து ஒவ்வொன்றாய்க் கொடுக்கவும். வாந்தி யுடனே நிற்கும். எந்த வாந்தியானாலும் தக்ஷணம் நிற்கும்.

இந்த ரோகத்தில் சிலருக்குச் சோறு சோறாக வாந்தியாவது முண்டு. அதற்குப் பின்காணும் சுண்ணக் கஷாயத்தைக் கொடுக்கவும்.

சுண்ணக் கஷாயம்.

உள்ளங்கையளவு சதுரமான-11-வெள்ளைத்துணித் துண்டுகளில்; கற்சுண்ணத்தை யல்லது கிளிஞ்சிற் சுண்ணத்தை குழைத்துத்தடவி, அடையைப் போல, அடுக்கடுக்காய் அடுக்கி, புதுச்சட்டியின் மத்தியில் வைத்து அடுப்பேற்றி யெரித்து, நெருப்பாகிச் சிவந்து சாம்பலானபின், அதில் இரண்டாழாக்குத் தண்ணீரைவிட்டு, எட்டிலொரு பாகமாய்க்காய்ச்சி சீலை வடிகட்டிப் பானஞ் செய்விக்கவும். உடனே வாந்தி நிற்கும்; களைப்புதீரும்; இந்தக் கஷாயத்தில் கோரோசனை மாத்திரை, கஸ்தூரிமாத்திரை, மேற்படி வமனசஞ்சீவி ஆகியவைகளையும் அநுபானித்துக் கொடுக்கலாம். அஜீரணவாந்தி, கிருமியால் உண்டாகும் வாந்தி முதலிய பலவமன ரோகங்களும் தீரும்.

இந்த ரோகத்தில் சிலருக்கு விக்கலும் காண்பது சகஜமாகையால், பின்வரும் விக்கல்பானுவை உபயோகிக்கலாம்.

விக்கல்பாநு.

நற்சீரகம் வராகனெடை-3, அரிசித்திப்பிலி வராகனெடை-1½, நெற்பொரி வராகனெடை-1. இம்மூன்றையும் வறுத்துத் தூள் செய்து கொள்க முக்காவேளைவேர், தும்பைவேர், இவ்விரண்டையும் சமமாகச்சேர்த்துக் கஷாயம் செய்து, அதில் வெருகடி, முன் சூரணத்தைக்கலந்து பானம்செய்துவர, விக்கல் நிற்கும்.

இதில் சிலருக்கு மலங்கட்டுப்பட்டால் வயிறு பொருமி வருத்தமுண்டாவது முண்டு. அதற்குப் பின்வரும் சிவதைச் சூரணத்தைக் கொடுக்கவும்.

Koviloor Digital Library

சிவதைச் சூரணம்.

சுத்திபண்ணின சிவதைவேர்ச் சூரணம் வராகனெடை-1¼-மிளகு, ஏலம், இவ்விரண்டையும் தனித்தனி வறுத்து இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை- ¼. மூன்றையும் ஒன்றாய்க்கலந்து இளவெந்நீரிற் கரைத்துக் குடிப்பாட்டவும். மலக்கட்டு தீர்ந்து உப்பிசம், பொருமல் உடனே தீரும்.

இதில் வயிற்று நோய் கண்டாலும், நீர்கட்டுப்பட்டாலும் பின்வரும் சாரக்குளியைக் கொடுக்கலாம்.

சாரக்குளிகை.

மிளகுச் சூரணம், நவச்சாரத்தூள், இவ்விரண்டையும் சமபாகமாய்ச் சேர்த்துக் கல்வத்திலிட்டு கொஞ்சம் தண்ணீர் தெளித்து-1-சாமமரைத்து, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இந்த மாத்திரை யொன்றைத் தகுந்த கஷாயத்தில் அல்லது இளவெந்நீரில் கொடுக்க உடனே வயிற்றுநோய் தீரும். நீரும் தாராளமாய்ப் பிரியும்.

இந்த ரோகத்தில் வியர்வை அதிகப்பட்டுத் தேகங் குளிர்ந்து ஜில்லிட்டால், பின்வரும் பூதிகாரைப் பிரயோகத்தைச் செய்யவும்.

பூதிகாரைப் பிரயோகம்.

வராட்டியின் சாம்பலைப் பொடித்து மெல்லிதாய்த் தெள்ளி, ஒரு பாயின்மீது கனமாய்ப் பரப்பி, அதன்மேல் ரோகியைக் கிடப்பாட்டி, அதிகநாட்பட்ட சுண்ணாம்புப் பழங்காரையை யிடித்துத் தெள்ளி, அதனுடன் கொஞ்சம் ஆலாத்திக் கர்ப்பூரத்தூளையும் சேர்த்து புதுச்சட்டியில் வறுத்து, வெள்ளைத்துணியில் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு தேகத்தின் முகந் தவிர, மற்றவிடங்களிலெல்லாம் ஒற்றிடமிடவும். இதற்காக, முன் காரைத்தூளை இரண்டு பாகமாகச் செய்து, ஒன்றை வறுத்து ஒற்றிடங் கொடுத்துக் கொண்டிருக்கும்போது மற்றொன்றை வறுத்துக் கொண்டிருக்க வேண்டியது. முன்னது ஆறிளவுடன் இதைவறுக்கவும். பின்னதை யொற்றிடமிடவும். இவ்விதம் மாற்றி மாற்றிச் செய்துகொண்டிருக்கவேண்டியது. தேகத்தில் சூடேறி, துர்க்குணங்கள் நீங்கி சவுக்கியமுண்டாம்.

இந்தச் சிகிச்சையானது பட்டணவாசிகளுள் சிலருக்கு விருப்பமாயிராது. ஆயினும் அத்தகையினர்களும் மேற்கண்ட ஒற்றிடத்தை மாத்திரமேனுமிட வெறுப்பாகார்கள் என நம்பப் படுகிறது.

இதில் ஜன்னி, சயித்தியங் கண்டால் கீழ்க்காணும் விதமாய் கஸ்தூரியை உபயோகிக்கலாம்.

Koviloor Digital Library

கஸ்தூரிப் பிரயோகம்.

மூன்று குன்றிமணியெடை முதல் தரமான கஸ்தூரியை இளவெந்நீரில் அல்லது மேற்கண்ட கஷாயங்களில் கரைத்துப் பானஞ்செய்வித்து வர, விஷபேதியிற் காணும் ஜன்னி; சயித்தியம் முதலிய சீதளந் தீரும்.

இந்தச் சமயங்களில் கொடிச்சுன்னம், கற்பூரச்சுன்னம் ஆகியவைகளி லொன்றைத் தனியாகவும் அல்லது மேற்கண்ட கஸ்தூரியுடன் கலந்தும் கொடுக்கலாம். இவ்விதமே குங்குமப்பூவையும் அரைத்துத் தனியாகவும் அல்லது கலந்தும் கொடுக்கலாம்.

விண்ணப்பம்.

இதுவரையில் மேற்கண்ட விஷூசி ரோகத்தில் முக்கியமாக வேண்டிய அவுடதங்களிற் சுருக்கமானவைகளும் செய்வதற்கு இலேசானவைகளுமான சிலபாகங்களை யெழுதினோம். கடவுளினது கிருபையால் இந்த வியாதியைப் பற்றி தனியே ஒரு கிரந்தம் எழுத உத்தேசித்திருப்பதால், அதில் இந்த வியாதியைப் பற்றிய எல்லா விப்ரங்களும், இங்கிலீஷ், ஆயுர்வேதம், யூநாநி முதலிய மூவகைச் சிகிச்சைகளும் எழுதப்படும்.

57. சுந்தரிப் பிரயோகம்.

நடுத்தரமான கவடி (பலகரை)-5-இதனை யொரு அகலில் வைத்து மேலகல் மூடி ஒரு சீலைமண் செய்து-10-வராட்டியிற் புடமிட்டாலும் சரியே அல்லது முன்சித்தப்படுத்தின அகலைக் கொல்லுலையில் வைத்து, அகலானது நன்றாய்ச் சிவக்கிறவரையில் ஊதியாறவைத்தாலும் சரியே. அவை நீற்றுப்போம். இதுவே கவடி பஸ்பமாம்.

நாட்டு வெண்காரத்தைப் பொரித்துத் தூள்செய்தது வராகனெடை-1¼-பசுவின் வெண்ணெய் பெருங் கொட்டைப்பாக்களவு.

இம்மூன்றையும் ஒரு ஆழாக்கு எலுமிச்சம் பழச்சாற்றில் கரைத்துப் பானம் செய்விக்கவும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமாக ஆறுவேளை மூன்று நாட்கள் செய்யவும்.

தீரும் நோய்கள் :- இரத்தப் பிரமேகம், கல்லடைப்பு, தந்திமேகம், நாட்பட்ட பிரமேகம், நீர்ப்பை தாபிதம், நீர்ப்பையிரணம் ஆகியவைகளெல்லாம் திரும்.

குறிப்பு

இந்த முறையானது மிகவும் சுலபமானதும், அதிக குணமானதுமாம். இதனால் பலவகைப் பிரமேகங்கள் போகின்றன. இந்த மருந்தை யுபயோகித்து எந்தப் பிரமேகம்

Koviloor Digital Library

தீரவில்லையோ அந்தரோகமானது, அந்தரோகியின் ஆயுள்முழுவதும் போகாதெனக் கண்டிப்பாய்ச் சொல்லலாம். ஆனால் இந்த முறையில் கவடி பஸ்பத்தின் அளவும், எலுமிச்சம்பழச்சாற்றின் அளவும் மிதமிஞ்சினதாய்க் காணப்படுகிறது. இந்த அளவானது அனேக சுகுமார தேகிகளுக் கேற்காதாகையால், அவரவர்களின் தேகசுபாவம், காலம், தேகம் முதலியவைகளின் தன்மையாகியவைகளை நிதானித்து மேற்கண்ட அளவைக் குறைத்துக் கொடுக்கலாம்.

இவ்விதமே இதனை காலை மாலை யிரண்டுவேளையும் கொடுக்கலாமெனச் சொல்லப்பட்டிருப்பினும், மேற்கண்டபடியே தேகசுபாவ முதலியவைகளுக்கேற்ப, காலையில் ஒருவேளை மாத்திரம் உபயோகிக்க வேண்டும்.

பத்தியம் :- இங்கு சொல்லப்படவில்லை யாயினும், இந்த வியாதியில் பத்தியம் பிரதானமாகையால் அறிக்கையின் பொருட்டுக் குறிப்பாய் எழுதுவாம். சம்போகம், சாராயபானம், காரமானவும் சூடானவும் பதார்த்த போஜனம், கத்தரிக்காய், மிளகாய், பச்சைமிளகாய், புளி, கோழியிறைச்சி, மீன் வகைகள் முதலியவைகளும் இவை போன்றவைகளும் ஆகா.

சுரைக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய், வெள்ளரிக்காய், கெக்கரிக்காய், வெந்தயக்கீரை, காசினிக்கீரை, பசலைக்கீரை, ஆட்டிறைச்சி, பால், நெய் முதலியவைகளும் இவைபோன்றவைகளும் ஆகும். ஆயினும் அவரவர்களின் தேகசுபாவத்திற்கு ஏற்றுக்கொள்வதைச் சேர்த்தும், ஏற்காதவைகளை நீக்கியும், நடந்துவருவதே முக்கிய பத்தியமாம்.

58. அமிர்தமிருத்துவாதி.

ஏலரிசி, நற்சீரகம், இலவங்கப்பட்டை, செங்கழுநீர்க் கிழங்கு, மேல்தோல்சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், வெண்சந்தனம், அக்கராகாரம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், இலவங்கம், கடுகுரோகணி, கோரைக்கிழங்கு, கொத்துமல்லிவிதை, இந்தப் பதினேழு சரக்குகளையும் தனித்தனி வறுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2.

சுத்திசெய்தகல்நார், சாஸ்திரபேதி, பச்சைக்கற்பூரம் இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை-2. இம்மூன்றையும் தனித்தனி மைபோலப் பொடித்துக் கொள்ள வேண்டும். விதை முதலியவை நீக்கிச் சுத்திசெய்த பேரீச்சம்பழம், விதை நீக்கி குச்சி முதலியவை ஆயப்பட்ட திராக்ஷப்பழம் இந்த இரண்டும் வகை-1-க்கு வராகனெடை-2. இளநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ளவும். பின்னுள்ள இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு வெண்ணெய்போல் அரைத்த பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணம் முழுவதையும் சிறுகச்சிறுகச்

Koviloor Digital Library

சேர்த்து இளநீரைவார்த்து-2-சாமமரைத்து, தூதுளங்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- மாத்திரை-½-1. முலைப்பாலில் அநுபானித்துக் காலை மாலை யிரண்டுவேளையும் உட்கொள்ளலாம். இன்னும் சமயோசிதமாக வேறனுபானங் களிலும் இதனைத் தனியாகவும், முன் சொல்லப்பட்டிருக்கும் அவுடதங்களுள் இதற் கிணமானவைகளுடன் சேர்த்தும் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்:-அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை, பித்தச்சூடு, பித்தவெட்டை முதலிய உஷ்ண சம்பந்தமான எல்லாவகை சுரங்களும் தீரும்.

குறிப்பு

இச்செய்யுளில் "சூடன்" எனச்சொல்லப்பட்டிருப்பது பச்சைக்கர்ப்பூரமே என்பது பலர் அபிப்பிராயம்; எப்படியெனில் சூடன் என்பதற்குச் சாதாரணமாய்க் கர்ப்பூரமெனவும் சொல்லப்படுகிறது; ஆனால் கர்ப்பூரமானது பச்சைக்கர்ப்பூரம், இரசகர்ப்பூரம், தீபகர்ப்பூரம், சூரத்துக்கர்ப்பூரம், சீனாகர்ப்பூரம்; பத்தாயிகர்ப்பூரம் முதலிய பலவகைகளுண்டு. தீபகர்ப்பூரமானது உஷ்ணசம்பந்தமானது. பச்சைக்கர்ப்பூரமோ சீதளசம்பந்தமானது. இந்த முறையும் உஷ்ணரோகத்திற்காகச் சொல்லப்பட்ட சீதள காரிமுறையாகையால் பச்சைக்கர்ப்பூரமே இங்கு ஏற்றது. இவ்வாசிரியர் தம் சாதுரியத்தால் சூடன் எனச் சிலேடையா யுரைத்திருக்கிறார் என்பதே.

வேறு சிலர் கருத்தாவது இங்கு சூடன் என்பது தீபகர்ப்பூரமா யிருக்கலாம். அது உஷ்ணகாரியாயினும், சமனகாரி, ஸ்வேதகாரி முதலிய குணங்களுமிருப்பதால், துர்ப்பல சுரம் முதலியவைகளில் உபயோகப்படுகிறதென்பதே.

ஆயினும் பின்னதைப் பார்க்கிலும் முன்னதே பலமான தாகையாலும் அநுபவ சித்தமாய்ப் பச்சைக் கர்ப்பூரமே சேர்க்கப்பட்டு வருகின்ற படியாலும் இதுவே பெரும்பாலர் சம்மதம். ஆக்ஷேபமுள்ளவர்கள் தங்களிஷ்டப்படி இவ்விருவகையாகச் செய்து ஒவ்வொன்றின் குணத்தையும் அநுபவத்தால் நிச்சயித்துத் தெளிந்து கொள்ளலாம்.

59. மேகக் குழித் தைலம்.

(a) நிலவாகை வேர்ப்பட்டை, முற்றின வேப்பமரப்பட்டை, உலர்த்தின வெள்ளறுகுசமூலம், சிவன்வேம்பு, வெண்ணொச்சி மரப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை; பூவரசமரப்பட்டை இவ்வேழுவகையும் வகை-1-க்கு வராகனெடை பலம்-10.

(b) சுத்திசெய்த மடலரிதாரம்; சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த சாதிலிங்கம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம்; பொரித்த நாட்டுவெண்காரம் இவ்வைந்தும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

Koviloor Digital Library

செய்முறை :- (a) யிலுள்ள சரக்குகளை சிறு துண்டுகளாகத் துண்டித்து ஒன்றாய் மிஸ்ரமித்து (55) ஆம் பாகத்திற் சொல்லியிருக்கிறபடி குழித்தைல மிறக்கிக் கொள்ள வேண்டும். பின்பு (b) யிலுள்ளவைகளில், முன்னர் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க் கருத்தவுடன் எடுத்துக்கொள்ளவும். மற்றச் சரக்குகளையும் தனித்தனிப் பொடித்துக் கொள்ளவும். பின்பு எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்து அரைமணிநேரம் அரைத்து, முன் சித்தப்படுத்தின தைலத்தைக் கொஞ்சம் விட்டு-1-மணிநேரம் அரைத்து மைபோலானபின்பு வழித்து, முன் தைலத்திற் கலக்கி நன்றாய் மிஸ்ரமிக்கும்படி செய்து, ஒரு சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- இதனை வேளை-1-க்கு வராகனெடை-1-1¼; அவ்வளவு தேனுடன் கலந்துட் கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிப்பதுடன், இத்தைலத்தைத் தேகத்தின் மீதும் பூசிவரவும் வேண்டும்.

தீரும் நோய்கள் :- பலவகை சிரங்குகள்; குட்ட ரோகம்; படைகள்; முதலிய பல மேக ரோகங்கள் போம்.

பத்தியம் :- இதற்குமுன் (55) பாகமாகிய குட்டக் குழித்தைலத்திற் சொல்லியிருப்பதே யிதற்குமாம்.

குறிப்பு

குட்டக்குழித் தைலமானது இம்முறையைப் பார்க்கிலும் அதிக வேகமான தாகையால், சில சுகுமாரதேகிகளுக்கு அது அவ்வளவாய் ஏற்காது. ஆகையால் அத்தகையினர்களுக்காக இம்முறையானது சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தேகசுபாவம்; வியாதிபலம் ஆகியவைகளுக் கேற்றவிதமாக இவ்விரண்டு பாகங்களி லொன்றை அல்லது பின் சொல்லப்படும் குட்டத்தெண்ணெய் முதலியவைகளி லொன்றை உபயோகித்துக் குணப்படுத்த வேண்டும்.

60. அமுதாதி யெண்ணெய்

தேவையான அளவு சிற்றாமணக்கு முத்தைக்காடியிற் போட்டு அரை வேக்காடாக வேகவைத்து வெய்யிலில் நன்றாயுலர்த்திப் பின் புடைத்துப் பருப்பையெடுக்கவேண்டும். இதை மறுபடியும் காடிவிட்டு அரைத்துக் காடியிற் கலக்கிக் காய்ச்சி யெண்ணெய் வெளிப்படும் சமயத்தில் இறக்கிக் குளிர்ந்த விடத்தில் வைத்து மறுநாள் பார்க்கில் எண்ணெய் மிதந்துகொண்டிருக்கும்; அதைவழித்து ஒரு பாத்திரத்திற் சேர்த்து மறுபடியும் காய்ச்சி அதிலுள்ள ஜலத்தைப்போக்கிவிடவும். இவ்விதம் செய்தெடுத்த எண்ணெய்க்குக் காடி சிற்றாமணக் கெண்ணெய் எனப்பெயர்.

மேற்கண்டபடி பக்குவப்படுத்தின சிற்றாமணக் கெண்ணெய், உசிலம்பட்டை (சிக்கிரான்பட்டை) யையிடித்துப் பிழிந்தசாறு; ஈரவெங்காயத்தை யிடித்துப்பிழிந்து வடிகட்டினசாறு; வெண்ணிறப் பசுவின்பால்; வியாதியில்லாத செந்நிற மாதர் முலைப்பால் இவ்வைந்தும் வகை-1-க்கு ஆழாக்கு-1.

Koviloor Digital Library

செய்முறை :- இவற்றை யொன்றாய்க்கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து கடுகு திரள்பதத்திலிறக்கி வடிகட்டி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-1½-2-தனியாயேனும்; தக்க அநுபானத்திலேனும் உட்கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள்:- பித்தரோகங்கள், பித்தவெறி, பித்தவாயு; பித்தச்சூடு; மூலத்தில் இரத்தம் விழுதல் முதலிய பித்தசம்பந்தமான எல்லா ரோகங்களும் தீரும்.

குறிப்பு

உசிலம் என்பது உசிரம் என மாற்றப்பட்டுப் பின்பு உசிரம் என்பது உரிசம் என மாற்றப்பட்டிருக்கிறது. உசிரம்; உசீரம் என விலாமிச்சம் வேருக்கும் மறுபெயருண்டு. ஆனால் இங்கு பட்டையெனச் சொல்லப்பட்டிருப்பதால், உசிலம்பட்டை யென்பதேயாம்.

61. பாதிரிக்குழம்பு என்னும் விஷாக்கிராணம்

(a) கருவங்கம், இரசம்; நெல்லிக்காய்க் கந்தகம்; மடலரிதாரம்; மனோசிலை இவற்றைத் தனித்தனி சுத்திசெய்துலர்த்தி தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்க. கருஞ்சீரகம்; பெருங்காயம் இவ்விரண்டையும் வறுத்துத் தனித்தனி தூள் செய்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், இப்பத்தும் வகை-1-க்கு வராகனெடை-1¼. வேலிப்பருத்தி யென்னும் உத்தாமணிச் சமூலத்தை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு, முற்றின தேங்காயின் தனிப்பால், இவ்விரண்டும் தனித்தனி வகை-1-க்குச் செல்லத்தக்க அளவு.

(b) பனைவெல்லம், கொட்டாங்கச்சியைச் சுட்டெரித்த கரி, (இதனைப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து நிறுத்தெடுத்துக் கொள்க) இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

(c) நஞ்செடுத்து சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு வராகனெடை-1¼. இதனை ஓட்டில் மணம் எழும்பும்படியாக வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை:- (a) யில் உள்ளசரக்குகளில் முன்னர் கருவங்கத்தை யுருக்கி ரசத்துடன் தொந்தித்துக் கல்வத்திலிட்டு கெந்தகத்தையும் சேர்த்து நன்றாய் அரைத்துக்கொள்க. அடுத்த இரண்டு சரக்குகளையும் தனித்தனி மைபோல அரைத்துக்கொள்க. இவ்விருவகைகளையும் அடுத்த நான்கு சரக்கின் சூரணங் களையும் ஒன்றாய்க் கலந்தரைத்துக் கொள்க. பூண்டைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து முன் சூரணங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து உத்தாமணிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து-12-சாமமும், தேங்காய்ப்பாலை அவ்விதமே வார்த்து-12-சாமமும் அரைத்தான பின் (b) யிலுள்ள இரண்டையும் சேர்த்து-2-சாமமரைத்து, அகலமான

Koviloor Digital Library

பீங்கான் தட்டையிற் பரப்பி வெய்யிலில்வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இதன் பின்பு (C) யில் உள்ள வாளத்தைக் கல்வத்திலிட்டு மைபோல அரைத்து, முன் சித்தப்படுத்தின மருந்து முழுவதையும் சிறுகச்சிறுகச் சேர்த்தரைத்து எல்லாம் நன்றாய் மிஸ்ரமித்த பின்பு கற்காரக்குள்ள சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- ஒரு சிறுபயறளவு, இதனை நாசியில் ஆக்கிராணிக்கச்செய்யின், எல்லாவகை ஜன்னிகளுந் தீரும். மேற்கண்ட அளவே கண்ணில் கலிக்கமிட, எல்லாவித பேய்க்கணங்களும் பறக்கும். நல்லபாம்பின்கடி விஷமுந் தீரும்.

குறிப்பு

இங்கு இம்மருந்தைக் கண்ணில் கலிக்கமிடும்படி சொல்லி யிருந்தாலும், இது வேகமான மருந்தாகையால் அப்படிக் கண்ணிலிடுவது யுத்தமமானதாய்க் காணப்படவில்லை. ஆனால் நாசியில் ஆக்கிராணிக்கச் செய்வதால் அவ்வளவாயக் கெடுதி நேரிடாது. அதுவும் குறைந்த அளவாகவே உபயோகிக்க வேண்டும்.

இச்செய்யுளில் "தாளிநீர்" என்பதை உத்தாமணிச் சாறென எடுக்கப் பட்டிருக்கிறது. தாளியென்பது பொதுவாய் எல்லாவகைப் படர் கொடிகளுக்குப் பெயர். ஆயினும் பலர் மேற்கண்ட உத்தாமணிக்குச் சொல்வது வழக்கமாயிருப்பதால், அநுபவத்தில் மேற்கண்ட மூலிகையே இதில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் தாளியானது பலவகைகளுண்டு. அவை கம்பந்தாளி, காட்டுத்தாளி, குறுகுற்றாளி, செந்தாளி, தேவதாளி, சிறுதாளி, நாகதாளி, நெரலைத்தாளி, நறுந்தாளி, பெருந்தாளி என்பவைகளாம். இன்னும் தாளி என்பது தாளிப்பனைக்கும் (சீதாளத்திற்கும்) சொல்லப்படுகிறது.

இதற்குப் பாதிரிக்குழம்பு அல்லது பாதிரியார்க் குழம்பு எனப் பெயரிட்டிருப்பதின் காரணம் விளங்கவில்லை. இதில் பாதிரிசம்பந்தம் ஒன்றுமே இல்லை. பாதிரி என்பதற்கு இளஞ்சிவப்பென ஒரு அருத்தமுண்டு, அப்படியாயினும் இந்த மருந்தானது இளஞ்சிவப்பு வர்ணமுள்ளதாய்க் காணப்படவில்லை. ஒரு வேளை யாரேனும் பாதிரியார் மூலமாய் வெளிப்பட்டதோ, அல்லது அவருக்காகச் செய்யப்பட்டதோ தெரியவில்லை. இந்நூலாசிரியருக்கேயிதன் கருத்துத் தெரிந்திருக்கலாம். பெயர் எப்பெயராயினும் நமக்கு குணமே பிரதானமாம்.

62. விஷத் தூள்.

ஒரு பருமனான மூஞ்சுறு (Musk-rat) 1. இதனைக் கொன்று, அதன் வயிற்றைக் கீறி, அங்குள்ள குடல் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்து வெய்யிலில் உலர்த்தி, இடித்துத் தூளாகும் பக்குவத்தில் கல்லுரலிலிட்டு இரும்புலக்கையாலிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ளவும்.

பருமனான வசம்பு, பொரித்த பெருங்காயம், மிளகு, இம்மூன்றையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவேண்டும். துரிசு, இதனையும் தூள்செய்து

Koviloor Digital Library

கொள்ளவும். புகையூறல் (ஒட்டடை), இவ்வைந்து சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-1¼.

செய்முறை:- மேற்கண்ட எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய்க்கலந்து, கல்வத்தில்-1-சாமமரைத்து இரண்டாந்தடவையும் வஸ்திரகாயம் செய்து சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

உபயோகம்:- இதில் மூன்று குன்றிமணியெடை யெடுத்து நாசியில் ஆக்கிராணிக்க, நல்லபாம்பு விஷ முதலிய பலவகைப் பாம்பு விஷங்கள், வேறு பல விஷங்கள் ஆகியவை தீரும். விஷமானது, தசை, அஸ்தி முதலிய விடங்களைப்பற்றி மண்டைக்கேறி, மயக்கமுண்டாகி, வாயில் நுரை யொழுகி, தேகங்குளிர்ந்து ஜில்லிட்டு, இருகண்ணும் கறுத்துப் பஞ்சடைந்து போயிருந்தாலும், இம்மருந்தால் தீர்ந்து விடும்.

குறிப்பு

மா + இன் + நிகர்பாம்பு = பன்றியைப்போன்ற பாம்பு = அதாவது மூஞ்சுறு என அர்த்தமாம். மூஞ்சுறு என்னும் ஜந்து வசிக்குமிடத்தில் நல்லபாம்பு முதலியவைகள் வாசஞ்செய்கிறதில்லையாம். நல்லபாம்புவிஷத்திற்கு மூஞ்சுறு மலத்தை உள்ளுக்கு கொடுத்தாலும் அதனைப் பொடித்து மூக்கில் ஆக்கிராணித்தாலும் தீர்ந்து விடுகிறதாகக் காணப்பட்டிருக்கிறது. இதனைக் குழித்தைலமாக இறக்கியும் உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப் படுத்துவதாலும் பாம்பு விஷந் தீருகிறதாம். மேற்கண்ட பாகத்திலுள்ள சரக்குகளை கணக்கின்படி சேர்த்து சீஷாவிலிட்டுக் குழித்தைலமிறக்கி உபயோகிப்பதாலும் மேற்கண்ட குணங்களுண்டாகும். இதற்கு நல்லபாம்பு அதிகமாய்ப் பயப்படுமாம். இந்த விஷயத்தில் நமக்கு அதிக அநுபவமில்லாதபடியால் கேள்வியுற்றவரையில் வெளிப்படுத்தினோம். ஆகையால் இது விஷயத்தை அதிகத்தெளிவாய்த் தெரிந்தவர்கள் யாவருக்கும் பிரயோசனப்படும்படி வெளிப்படுத்தலாம்.

63. விஷமை.

திறமான பெருங்காயம் பலம்-1. இது ஒரேகட்டியாயிருக்கவேண்டும். பருமனான தில்லைமரத்தின் அடிப்பாகத்தில் ஒரு முழத்திற்குமேல்-4-அங்குல சதுரமுள்ள ஒரு பள்ளங் குடையவேண்டும். ஆனால் ஆரம்பத்தில் சிற்றுளியால் சதுரமாக வெட்டி, மறுபடியும் அந்த வாயை மூடத்தக்க ஒரு முழுத்துண்டைப் பேர்த்துக்கொள்ள வேண்டும்; இப்படிச் செய்யக்கூடாவிட்டால் மரத்தில் தோண்டும் குழியின் வாயைச் சரியாய் மூடத்தக்க அம்மரத்தின் வேறு புதிய பச்சைத் துண்டில் ஒரு மூடி சித்தஞ்செய்து கொள்ள வேண்டும்; முன் வகையைப் பார்க்கிலும் பின்வகையே சுலபமானதும் திருத்தமானதுமாம்; அந்தக்குழியில், முன்காயத்தை வைத்து, முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற மூடியாலடைத்து, வாய்க்கு ஈரமண்ணை யல்லது ஈரச் சாணியைத்தடவி விட்டுவிடவேண்டும். இதை யொருவரும் எடுத்துக்

Koviloor Digital Library

கொண்டுபோய் விடாமலும், அதற்கு வேறேதேனும் பின்னம் நேரிடாமலும் அதிக சாக்கிரதையுடன் பாதுகாத்து வரவும் வேண்டும். இவ்விதம் நாற்பதுநாட்கள் சென்றபின் நாற்பத்தோறாம் நாள், அம்மரத்தில் அக்குழியின் மீதுள்ள மண் முதலியவைகளை நீக்கி, அங்குள்ள மூடியை அதிக சாக்கிரதையுடன் நீக்கிப்பார்த்தால் முன்வைத்த சரக்கானது அம்மரத்தின் பாலுடன் சேர்ந்து உறவாகிப் பழம்புளியைப் போன்ற வருணமும் பிசுபிசுப்பு முள்ளதாயிருக்கும். இதனை சாக்கிரதையுடன் எடுத்துப் பீங்கான் சிமிழில் அல்லது தந்தச்சிமிழில் பத்திரப்படுத்தவேண்டும்.

உபயோகம் :- இந்த மெழுகில் சிறுபயறளவு, வெந்நீரில், அல்லது வெற்றிலைச் சாற்றிலிழைத்து உள்ளுக்குங்கொடுத்துக் கண்ணிலுமிடவேண்டும், எந்தவகைப் பாம்பேனும் கடித்து, விஷந் தலைக்கேறி, எட்டுவேகமும் தாண்டி நின்றாலும் விஷம் மீளும்.

விஷவேகம் எட்டின் விபரம். எந்தவிஷமாயினும் அது ஏறும்போது எட்டுவித வேகமுண்டாகும்; அவை யாவன் :- 1-வது மூர்ச்சையும், மிகுந்த வியர்வையும் உண்டாதல். 2-வது சரீரம் வெதும்புதல், 3-வது கண்சொருகுதல், 4-வது செவியை அடைத்தல்; 5-வது நெஞ்சில் கபங்கட்டுதல், 6-வது அறிவு மாறுதல், 7-வது மேல்மூச்சு வாங்குதல். 8-வது உயிர்நீங்குதல் என்பனவாம். இவை வாயு விஷவேக நிதானம் எனப்படும். இன்னும் தேயுவிஷவேகம், வருணவிஷவேகம் என்பவைகளுண்டு.

இந்நூலாசியர், எட்டுவேகமுந்தாண்டி நிற்கிற விஷமுந்தீர்ந்து விடுமெனத் தேற்றப்பொருளுடன் சொல்லினும் கூடியசீக்கிரம் விஷங் கடித்தவுடன் கால தாமதமின்றி சிகிச்சைசெய்வதே உத்தமமாம்.

இந்த ஒரு மருந்தைச் சித்தப்படுத்திக்கொண்ட ஒருவன் "விஷவைத்தியன்" ஆகிவிடலாமெனச் சொல்லி யிருப்பதால் அத்தகையினர்கள் விஷத்தைப்பற்றிய எல்லா விபரங்களையுந் தெரிந்திரா விட்டாலும் இயன்றவரையில் விஷசாத்தியாசாத்திய லக்ஷணங்கள், உயிர்பரீக்ஷை நிதானம், விஷபத்தியா பத்தியங்கள் முதலியவைகளை மாத்திரமேனும் ஒருவாறு தெரிந்திருக்க வேண்டியது அவசியம். அவை பின்வரும் விதமாம்.

அசாத்திய விஷக்குறி நிதானம்.

ஏறின விஷமானது மேற்கண்ட மருந்து முதலிய மந்திரதிகளினால் திரும்பாதிருக்கையில், நகமும், உதடும், உள்ளங்கையும் கரியைப்போல கறுக்குமாயின் அசாத்தியமே. இன்னும் எந்த சர்ப்ப விஷத்தினாலாவது தலையில் இருக்கின்ற ரோமம் உதிரல், மூர்ச்சை, மேற்சுவாசம், விக்கல், இருமல், வாந்தி, மார்பு கனத்தல், நடுக்கல், விகாரவேதனை, முடிசோருதல், கண்சிவத்தல், தொண்டையடைப்பு, நாவற்பழம் போல் பற்கள் கறுத்தல், ஆமை யோட்டைப்போல் முதுகு உயருதல், நவத்து வாரத்திலும் இரத்தம் ஒழுகுதல் என்னும் இக்குணங்களுண்டாயினும் அசாத்தியமாம்.

Koviloor Digital Library

கடிபட்டவிடத்தில் வீக்க முண்டாகியிரத்தங்கம்முதல், நாசி மெலிந்து சிறுத்து அமுந்திச் சில்லிடுதல், முதுகும் ஆண்குறியும் கோணுதல், முகம் சில்லிட்டுக் கருத்துக் கோணுதல், ரோமமுஞ் சில்லிடல், கீல்கள் தளருதல், மலம் நழுகல் முதலிய லக்ஷணங்களையும் அசாத்தியமெனச் சிலர் சொல்கின்றார்கள்.

இதனுடன் உயிர்ப்பரீக்ஷை நிதானமுந் தெரிந்திருப்பதும் முக்கியமே. ஏனெனில் அவுடதப்பிரயோகம் செய்யும் நிலைமை, செய்யக்கூடா நிலைமை இன்ன தென்பதைத் தெரிந்து கொள்வதற்கே யாம்.

உயிர்ப்பரீக்ஷை நிதானம்.

விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்பால் அடித்தால் அடித்த விடத்தில் தடித்தாலும், அல்லது அங்கு வெதும்பலோடு சிவந்தாலும், பிணத்தைத் தண்ணீரில் போட்டால் அமுந்தினாலும், தண்ணீரை தேகத்தின்மீது ஊற்றினால் குளிர்கண்டு உரோமங்கள் சிலிர்த்தாலும், கைவிரல்கள் கால்விரல்கள் ஆகியவைகளில் நெட்டம் முறிந்தாலும், தலைமயிரைப் பிடித்திழுத்தால் சொற்ப வலி, அருக்களிப்பு ஆகியவை யிருந்தாலும், நாடிஸ்தானங்களில், மூன்று தாதுக்களில் மூன்றாவது சொற்ப நடையுடன் இருந்தாலும், கண்ணில் குடோரியிட்டால் அங்கிருந்து சிவந்த ரத்தம் ஒமுகினாலும், உயிர் அடங்கி நிற்கின்றதென நிதானித்துப் பலவித சிகிச்சைகளையும் தாமதமின்றிச் செய்யில், விதிபலமுமிருக்கில், மரணத்தினின்று தப்பித்துக் கொள்ள ஏதுவாகும்.

விஷத்திற்கு ஆகும் பத்தியம்.

விஷங்கடித்தவர்களுக்கு பழைய அரிசி, சாமையரிசி, தினையரிசி, பயறு, கறுப்புப்பயறு, துவரை, சிறுகீரை, பாலைக்கீரை, இலந்தைக்கொழுந்து, புளியாரை, சிருகத்தரிக்காய், நெல்லிக்காய், மாதுளம்பழம், நாவற்பழம், விளாம்பழம், இந்துப்பு முதலிய வஸ்துக்களும், காரமில்லாத அன்னபானாதிகளும் ஆகும்.

விஷத்திற்கு ஆகாப் பத்தியம்.

விஷங்கடித்தவர்களுக்கு, பகல் நித்திரை, கோபம், அதிகநடை, தீக்ஷண வெய்யில், ஸ்நானம், பெண் சேர்க்கை, கள்ளு, எள்ளு, கொள்ளு, சைத்தியபண்டம், காரமான அன்ன பானாதிகள் முதலியவை ஆகா.

சர்ப்பக்கடியால் அற்பவிஷம் ஏறியிருந்தாலும், பயம், கோபம், துக்கம், மிகுந்த நகைப்பு, பசி, தாகம், அக்கினித்தொழிலிலிருத்தல், சுடுகையான நிலத்தில் படுத்தல், கிழ்க்காற்றில் திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், சரீரசுட்கம், ஆகியவைகள், பேதி, அஜீரணம், துர்ப்பலம், பித்தவாயு என்னும் வியாதிகளால் மெலிதல், யானை, மேகம், எலி, மேளம் முதலிய தொனிகளைக் கவனமாய்க் கேட்குதல் என்னும் இவற்றால் அந்த விஷம் விருத்தியடையுமாகையால்; அத்தகையினர்கள், இவைகளைத் தவிர்ப்பதுமன்றி, உடனே நேரிட்டிருக்கும் வியாதி முதலியவைகளைத் தக்க அவுடதங்களைப் பிரயோகித்து நிவர்த்தி செய்து கொள்ள முயற்சி செய்யவேண்டியது.

Koviloor Digital Library

குறிப்பு

இச்செய்யுளில் "புண்" என்பதில் புண்ணிற்குக் காயம் என்னும் அருத்தமுமுண்டு; காயம் என்பது ஐங்காயமாகிய, ஹிங்கு, மிளகு, சுக்கு, பூண்டு, கடுகு என்பவைகளுக்கும்; வெண்காயம். தேகம் முதலியவைகளுக்கும் பொதுவாக அருத்தமாகும். இவற்றுள் இன்னகாயந்தான் என வற்புறுத்திக்காட்டும் பொருட்டு "வேகமுற வெட்டுண்ட புண்" என்றார்; இவ்விதம் உண்டாகும் காயத்திற்குப் பெருங்காயம், படுகாயம் என்று சொல்லப்படுமே யொழிய சாதாரணமாய் காயம் அல்லது சிறுகாயம் எனச் சொல்லப் படுகிறதில்லை. இன்னும் இதை விளக்கமாக்குவதற்காக "புண் பலமதோர்கட்டி" ஒரு பலம் கட்டியாய் எனவும் சொல்லியிருக்கிறார். ஆகையால் இங்கு பெருங்காயந்தான் என்பது நன்குவிளங்கும்.

இந்த அவுடதத்தை சித்தப்படுத்த தில்லை மரத்தினிடம் போய் குடையும் போது, அதன் பால் வகையறாக்கள் கண்முதலிய நுண்ணிய ஸ்தானங்களிற் படாமல் அதிக சாக்கிரதையுடன் இருக்க வேண்டியது. உஷ்ண சம்பந்தமுடையவர்கள் இந்த மரத்தின் நிழலிலும் நிற்கக்கூடாதெனச் சொல்லுகின்றார்கள். அது எப்படியாயினும் இந்தப் பிரயத்தனம் செய்யும்போது அதிக சாக்கிரதையுடன் இருக்கவேண்டிய தென்பதே கருத்து.

நாற்பது நாட் சென்றும் மேற்கண்ட சரக்கானது காலவித்தியாசத்தால் அல்லது வேறேதேனும் ஏதுவால் மேற்சொன்னபடியே யிடித்த பழம்புளியைப் போல ஆகாவிட்டால், மறுபடியும் முன்போலவே நாற்பது நாள் வைத்தெடுக்கின், அவசியம் மேற்கண்டபடியே சித்தமாகி விடும்.

இந்த மருந்தை உபயோகிப்பதிலும் சமயோசிதமாக நடக்கவேண்டிய புத்தி, தந்திரம், யுக்தி முதலியவைகளும் அவசியமே. உள்ளிற்குக் கொடுக்க ஏதுவில்லாத சமயத்தில் கண்ணிற் கலிக்கமிடுவதுமின்றி, நாசியிலும் நசியமிடலாம். அல்லது இதனைத் துணித் துண்டில் தடவித் திரியாகத் திரித்துக் கொளுத்தி அந்தப்புகையை நாசியிலேற்றலாம். இந்த விஷயங்களையெல்லாம் இங்கெழுதி முடியாதாகையால், சமயத்திற் கேற்றதுபோலச் செய்யவேண்டிய தென்பதே பிரதானம்.

"சின்னீர்கள்" எனச் சொல்லப்பட்டிருப்பதால், லவங்கக் கஷாயம், துவரம்பருப்புக் கஷாயம், மிளகுக் கஷாயம், முதலியவைகளுமாகும்.

64. விஷத் தைலம்.

பேய்ப்பீர்க்குவிதைப் பருப்பு, சுத்திசெய்த நேர்வாள பருப்பு, வேப்பன்விதைப் பருப்பு, இம்மூன்றும் வகை-1-க்கு சமனெடை.

செய்முறை:- இம்மூன்றையும் வெய்யிலில் நன்றாயுலரவைத்துப் பின்பு மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து, அடையாகத்தட்டி, வெங்கலக்கிண்ணியில்

Koviloor Digital Library

அப்பி, வெய்யிலில் வைத்து வரவேண்டும். இந்தப் பாத்திரத்தை யொருபக்கம் சாய்த்து வைக்கவும் வேண்டும். இப்படிச் செய்துவர இரண்டு மூன்று நாளைக்குப்பின் தைலம் கசிய ஆரம்பமாகும். இவ்விதம் பிரதிதினமும் வடிகிற தைலத்தை யொரு சீஷாவில் சேகரித்துக் கொண்டு வரவேண்டியது. இப்படிச் சுமார் இரண்டு அல்லது மூன்று வாரம், வைத்த சரக்குகளின் அளவிற்குத் தகுந்ததுபோல செல்லுமாகையால், பொறுமையுடனும், சாக்கிரதையுடனும் செய்து சேகரித்து வரவேண்டியது. இன்னும் மேற்படி அடையில் தும்பு, தூசு முதலியவைகள் விழாதபடித் தக்க முயற்சியும் செய்து வரவேண்டும். தைலம் வடியாமல் நிற்கிறவரையில் வெய்யிலில்வைத்துச் சேகரித்த எல்லாவற்றையும் மெல்லிய சீலையில் வடிகட்டிப் பத்திரப்படுத்த வேண்டியது.

உபயோகம் :- இந்தத்தைலத்தில் இரண்டு அல்லது மூன்று குன்றிமணியெடை, தேக சுபாவம் முதலியவைகளுக்கேற்றது போல், ஒரு வெற்றிலையில் விட்டு மடித்துச் சாப்பிடச் செய்யவேண்டும். இதில் ஒரு கடுகளவு கண்ணிலும் கலிக்கமிடவும் வேண்டும். இவ்விதம் செய்வதால்; மகாவிஷம்; கொடியவிஷம்; முதலியவைகள் தீர்ந்துபோம். இன்னும் இந்தத் தைலத்தை மெல்லிய சேலைத்துண்டில் சொட்டித்திரியாகத் திரித்துக் கொளுத்தி, நாசிக்குச்சமீபத்திற் பிடித்து, அதன் புகையை சுவாசிக்க செய்யின்; விஷ ஜன்னி; தோஷங்கள்; மூர்ச்சை வலிப்புகள் முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இந்தத் தைலமானது பேதியாகும் சுபாவமுடையதாகையால் இதனளவை சற்று நிதானித்தே கொடுக்க வேண்டும்.

இந்த நூலில் விஷச் சிகிச்சைக்காக, பாதிரிக்குழம்பு, விஷத்தூள், விஷமை, விஷத்தைலம் என்னும் இந்த நான்கு முறைகளையும் சொல்லி யிருக்கின்றார். இந்தமுறைகளோ அதிக சிரேஷ்டமானவைகளாகவே காணப்படுகின்றன. இந்த வைத்தியத்திற் பிரியமுள்ளவர்களும், இவை அவசியமானவர்களும் இவற்றை முறைப்படி செய்து ஜீவகாருண்யத்துடன் ஆபத்துக்காலங்களில், இத்துன்புற்றோரைக் காப்பாற்றி ரட்சித்து இருலோகத்திலும் புண்ணியத்தையும் புகழையும் அடைவார்கள். மேலும் நாட்டுப்புறங்களிலுள்ள கனவான்கள் தனவான்கள் முதலியவர்கள் தாங்களேனும் செய்து அல்லது பிறரைக்கொண்டேனும் செய்வித்து வைத்திருந்தால் உற்ற சமயத்தில் ஏழைகள் முதலிய பலருக்கும் உபயோகப்பட்டு ஜீவரக்ஷணக் கிடமாகி நன்மையுண்டா.மென்பதிற் சந்தேகமேயில்லை.

65. மதன காமேசுர லேகியம்

(a) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அதிமதுரம்; ஏலம்; சீரகம்; ஓமம்; லவங்கம்; இலவங்கப்பட்டை; இலவங்கப்பத்திரி; நாகேசுரம்; நெல்லி புள்ளி; அமுக்காரக்கிழங்கு; நிலப்பனைக்கிழங்கு; இலவம்பிசின்; பூனைக்காலிவிதை வாய்விளங்கம்; நெருஞ்சிமுள்; இப்பதினெட்டு வகைகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் தனித்தனி வகை-1-க்கு வராகனெடை 1 ¼.

Koviloor Digital Library

(b) உளுந்து மாவு; கசகசா, அபின்; இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை 1¼; சுத்திசெய்த கஞ்சா வராகனெடை-26 ¼. (c) பசுவின்பால் படி-½, பசுவின் நெய் பலம்-5, தேன் பலம்-2½, சீனிசர்க்கரை பலம்-10 ½.

செய்முறை :- (a) யிலுள்ள சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்ளவும். (b) யிலுள்ள கசகசாவை அம்மியில் வைத்துக் கொஞ்சம் சலம்வார்த்து வெண்ணெய்போல அரைத்துக்கொள்க. கஞ்சாவை நெய்யில் பொன் வருணமாகச் சிவக்கவறுத்து அம்மியில்வைத்து மைபோல அரைத்துக்கொள்க. அபினியைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் பசுவின் பாலைவிட்டு, மைபோல அரைத்துக்கொள்க. இம்மூன்று வகைகளையும் மாவையும் ஒன்றாய்க்கலந்து முன் சூரணத்துடன் கலந்துவிடவேண்டும். (c) யிலுள்ள பசுவின் பாலில் சர்க்கரையைக் கரைத்து, அவசியமானால் கொஞ்சந் தண்ணீரும்கலந்து காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணத்தைச் சிறுகச் சிறுகத்தூவி, மத்தால் நன்றாய்க்கடைந்து கீழிறக்கித் தேனையும் நெய்யையும்விட்டு மறுபடியும் நன்றாய்க் கடைந்து, ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- வேளை-1-க்குக் குன்றிமணியெடை-2, இதனைப் பெரும் பான்மையும் ஆகாரத்திற்கு பின் சாப்பிடவேண்டும்.

• தீரும்நோய்கள் :- கிராணி, மூலக்கிராணி, பேதி, அஜீரணம் முதலியவைகள் தீரும். இரத்த விருத்தி, தாதுவிருத்தி முதலியவைகளுண்டாகி, தேகபலம், மனோபலம் ஆகியவைகளுண்டாம். இதன் குணம் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால், தாம் தாமே சித்தப்படுத்தி அதனுண்மையை அநுபவத்தால் நிச்சயித்துத் தெளிந்து கொள்ளலாம்.

குறிப்பு

இம்முறையில், கஞ்சாவானது சரக்குகளுக்குச் சமனெடையாய்ச் சேர்க்கப்பட்டிருப்பதாலும், சரக்குகளுடன் அபினும் இருக்கிறபடியாலும், இதில் போதையும் அதிகமாகவே யிருக்குமாகையால் இதன் பிரமாணம் மிகவும் குறைந்த அளவாகவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் இது மதுபானாதிப் பழக்கமுள்ளவர்களுக்கு அதிகம் ஏற்குமேயொழிய மற்ற சுகுமாரதேகிகளுக்கும், மதுபானாதிப் பழக்கமில்லாதவர்களுக்கும் அவ்வளவா யேற்காது. இத்தகையினர் களுக்குக் கொடுக்கவேண்டியதா யிருந்தால் கஞ்சாவின் அளவைக் குறைத்துவிட வேண்டும். அதாவது இந்த எடையில்-½, ¼, 1/8 வீசம் என்னும் இவற்றுள் ஒரு கணக்கின்படி சமயோசிதம்போற் சேர்த்துச்செய்ய வேண்டும்.

கஞ்சாவைத் தூள்செய்து சேர்ப்பதைப் பார்க்கிலும் கஞ்சாவின் நெய்யெடுத்துச் சேர்ப்பது விசேஷம். இன்னும் கஞ்சாவைப் பாலில்போட்டுக் காய்ச்சி உறைகுத்தி வெண்ணெயெடுத்து நெய்யாக்கிச் சேர்ப்பது முன்னிலும் மிகவும் விசேஷமே. இவ்விதம் செய்வது எல்லாத் தேகிகளுக்கும் பொருந்தும். இதில் பிரதானமானது

Koviloor Digital Library

கஞ்சாவே யாதலின் இதனெடையைக் குறைப்பதிலும், மேற்கண்ட அளவேசேர்த்து வெண்ணெயெடுத்து நெய்யாக்கிச் சேர்ப்பதே உத்தமம்.

இதில் இங்கு (நில்தால்) என்பதில் தாலம் என்பது தால் என மாற்றப் பட்டிருக்கிறது. தாலம் = நிலப்பனைக் கிழங்கு; இன்னும் நெருஞ்சிவேர் எனச் சொல்லப் பட்டிருப்பது அந்தப் பூண்டின்வேறல்ல. உலர்த்தப்பட்ட அதன் காயே. இன்னும் இந்தப் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கும் சர்க்கரையின் எடையானது மிகவும் குறைந்த அளவாயிருக்கிறது. இவ்வகை மருந்துகளிலெல்லாம் சரக்கிற்கிரட்டிப்பு சர்க்கரை யிருக்கவேண்டியது பிரமாண சாஸ்திரவிதி யாகையால், அதன்படியே இங்கும் சர்க்கரையின் அளவானது யிரட்டிப்பாக்கப் பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதால், மூலிகையின் கந்தம், வேகம் முதலியவை மாற ஏதுவாயிருக்கும்.

இதில் சொல்லியிருக்கிற அளவையே சேர்த்துச் செய்ய இஷ்டமானவர்கள் அவ்விதமே செய்துகொள்ளட்டும். அதற் கெவ்வித அக்ஷேபமு மில்லை.

66. இஞ்சிச் சூரணம்.

அதிக இளசாகவும் அதிக முற்றளாகவுமில்லாமல் நடுத்தரமான இஞ்சிபலம்-10. இதன் மேல்தோலை சீவிப்போக்கி சிறுதுண்டுகளாகத் துண்டித்து வெயிலில் உலர்த்தி முக்காற்பாகம் உலர்ந்தவுடன் எடுத்துப் பசுவின்நெய் தெளித்து வறுத்துப் பொன்னிறமானவுடன் அம்மியில்வைத்து வெண்ணெய்போலப் பொடித்துக்கொள்ள வேண்டும். உரலிலும் இடித்து கொள்ளலாம். எப்படியாயினும் தூளானது அதிக நுண்மையாயிருக்க வேண்டியதே பிரதானம்.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, அதிமதுரம், ஓமம், இலவங்கம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நரகேசுரம், ஏலரிசி, அதிவிடயம், இந்தப் பதினொறு சரக்குகளையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-1¼. இந்துப்புத் தூள் வராகனெடை-1¼. சீனிசர்க்கரை, மேற்கண்ட இஞ்சிச்சூரணம், மற்றச் சரக்குகளின் சூரணம் என்னும் இரண்டின் எடையிற்பாதி அளவு.

செய்முறை .:- மேற்கண்ட சூரணங்களையெல்லாம் ஒன்றாய்க்கலந்து, சர்க்கரையையும் சேர்த்து மிஸ்ரமித்து வைத்துக் கொள்வதேயாம்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-¾-1-காலை மாலை இரண்டு வேளையும் தனியாகவும் வேறு மருந்துகளுடன் அநுபானித்தும் உட்கொள்ளலாம்.

தீரும் நோய்கள் :- வாயுக்கள், வாயு சம்பந்தக்கிராணிகள், முதலிய எட்டுவகைக் கிராணிகள், அஜீரணம், வயிற்றுப்பிசம், வயிற்றுப்பொருமல், மந்தாக்கினி முதலிய ரோகங்கள் தீர்ந்து தேக ஆரோக்கியமுண்டாகும்.

Koviloor Digital Library

பத்தியம் :- புளி, புளிப்பு வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கிவிடவும். உப்பைமாத்திரம் சேர்த்துக் கொள்ளலாம். இன்னும் அவரவர்கட்கு ஏற்றுக் கொள்ளும் இலகுவான வஸ்துக்களையும் அன்னபானாதிகளையும் சேர்த்துக் கொள்ளவும். புளிப்பைத்தள்ளிப் பத்தியம் வைப்பது எல்லோருக்கும் அவசியமில்லை. வியாதி கடினமாக இருக்கப் பெற்றவர்களுக்கு மாத்திரம் பத்தியம் வைக்கலாம். மற்றவர்களுக்கு இதனைப் பத்தியமில்லாமலே சாதாரணமாய்க் கொடுக்கலாம்.

67. பல்லாதகி.

சேராங்கொட்டை பலம்-1-இதனை முகிழ்வெட்டி குளிர்ந்த ஜலம்விட்டு நன்றாயலசிக்கழுவி, வெய்யிலில் உலர்த்திக்கொள்க. தகரை விதையை யிளவறுப்பாய் வறுத்து, இடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் பலம்-1. நற்சீரகம், ஆடா திண்டாப்பாளை விதை, உலர்த்தப்பட்ட ஆடுதிண்டா மரப்பட்டை, கருஞ்சீரகம், இந்நான்கையும் தனித்தனி இளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்குப் பலம்-½, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம், சுத்திசெய்த மைசாட்சி, கருங் குங்கிலியம் இம்மூன்றையும் தனித்தனி யரைத்துத் தூள்செய்து வடிகட்டின தூள் வகை-1-க்குப் பலம்-½.

செய்முறை :- சூரணங்களையெல்லாம் நன்றாய்க் கலந்து கொள்ளவேண்டும். சேராங்கொட்டையைக் கல்வத்திலிட்டு அதிக சாக்கிரதையுடன் மைபோல அரைத்து மற்றச் சூரணங்களையும் சேர்த்தரைத்து, கல்லுரலிலிட்டு நன்றாயிடித்து நன்றாய் மசிந்தபின்பெடுத்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-½-1-இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உட்கொள்க.

தீரும் நோய்கள் :- குஷ்டரோகங்கள், கிரந்திரோகங்கள், மேகத்தடிப்புகள், கருமேகங்கள், சூலைகள், கரப்பான், சிரங்கு, சொறி, புண் முதலியவைகள் தீரும்.

பத்தியம் :- புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கி, உப்பைச் சேர்த்துக் கொள்ளலாம். மருந்தை நிறுத்தினபின் முக்கூட்டெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இன்னும் இதற்கான பத்தியவிஷயங்களைக் குட்டக்குழித்தைலம் முதலியவைகளில் எழுதியிருப்பதால் அதைப்பார்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு

இந்த பல்லாதகியானது ஒன்பதே சரக்குகளிற் சொல்லப் பட்டிருக்கிறது. ஆயினும் குணத்திலும் அதிகம் சிறந்ததே. மற்ற பல்லாதகி வகைகளைப்பார்க்கிலும் இது மிகவும் சூக்ஷுமமானதும் செய்வதற்கு மிகு சுலபமானதும், சுகுமார தேகிகளுக்கும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான முறை இதில் கொடூர சரக்குகளான இரசம், இரசகர்ப்பூரம் முதலியவைகள் சொல்லப்படவில்லை. இந்நூலில்

Koviloor Digital Library

சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொருமுறையும் ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று அதிக சிரேஷ்டமான தென்பதிற் சந்தேகமே யில்லை.

இந்த முறையில் சேராங்கொட்டைக்குப் பதிலாக சேராங்கொட்டைக் குழித்தைலத்தைச் சேர்த்துச் செய்வதால் மிகவும் உத்தமமாயிருக்கும். அதைச் சேர்ப்பதால் அரைத்தல்; இடித்தல்; முதலிய விஷயங்களிலும் அதிக சுலபமாகவே முடியும்.

68. வாயு வுண்டை.

அண்டக்கல் பலம் - 3; (இதனைக் கல்லுரலிலிட்டு இரும்புக் கட்டப் பாரையினால் மெல்லியதூள் செய்து கொள்ள வேண்டும். இது அகப்படாவிட்டால் சுத்திசெய்த அப்பளக்காரம் பலம் மூன்றைச் சேர்த்துக் கொள்ளவும்). சுத்திசெய்த கறியுப்பு பலம்-2.

செய்முறை :- இவ்விரண்டையும் சேர்த்து மைபோல அரைத்து ஒரு புது மண் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. இதனைக் கொஞ்சம் நாட்கள் கழித்த பின். உபயோகிக்க வேண்டும்.

பிரமாணம்:- வேளை-1-க்கு வராகனெடை-1-1½- காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள் :- சூலைகள்; வயிற்றிலெரிச்சல்; பலவகை வாயுக்கள்; சூதக மலட்டுவலி; குடற்சூலை குன்மம்; குடல்வாயு முதலியவைகள் தீர்ந்து தேகசவுக்கிய முண்டாகும்.

பத்தியம் :- இலகுவான ஆகாரங்களைக் காலக்கிரமப்படியாகவும், தம் தம் ஜீரணசக்திக் கேற்றவிதமாகவும் சாப்பிட்டு வருவதேயாம்.

அப்பளக்காரச் சுத்தி :- தேவையான அளவு அப்பளக் காரத்தைப் பொடித்து ஒரு மண் பாத்திரத்திற்போட்டு அந்த அளவிற் கிரண்டுபங்கு பனித் தெளிவு நீரை அல்லது நல்ல தண்ணீரைவிட்டுக் கலக்கி ஒருநாள் தெளியவைத்து மறுநாள் அந்தச் தெளிவையிறுத்துக் காய்ச்சி யுப்பாக்கிக் கொள்வதேயாம். இவ்விதம் இதனை மடக்கி மடக்கி-3-5-தடவைகள் செய்துகொள்ளின் விசேஷகுணமென இங்கெடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

உப்பையும் மேற்கண்ட படியே சுத்தி செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு

இச்செய்யுளில் "உகமதனினக்கல்" என்பதற்கு அண்டக்கல் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு சிலர் இதனைப் பூநீறு என்றும் சிலர் பூநாகம் என்றும்

Koviloor Digital Library

சொல்கிறார்கள். ஆயினும் பெரும்பாலர்களின் கருத்தின்படியும் அநுபவத்தின்படியும் அண்டக்கல்லென்றே யேற்படுகிறது. இன்னும் அண்டக்கல் அகப்படாத சமயங்களில், அதற்குப் பதிலாக அப்பளாக்காரத்தைச் சேர்த்துச் செய்து மேற்கண்ட குணங் கண்டிருப்பதாகவும் அநுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு அடியேனது சிற்றறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் எட்டினவரையில் நிச்சயித்து எழுதியிருக்கின்றேன் ஒருவேளை யிக்கருத்தானது பிரழ்ந்திருக்கின், இதன் உண்மையை நிச்சயமாயறிந்த அநுபவசாலிகள், அடியேனைக் கிருபையுடன் மன்னித் தருள்வதுடன் யாவருக்கும் பிரயோசனப்படும்படி செய்யும்பொருட்டு, மேற்படி விபரத்தை அடியேனுக்குத் தெரிவிக்கும்படியாக மிகவும் விநயத்துடன் பிராத்திக்கின்றேன் "முற்று முணர்ந்தவில்லை" என ஆன்றோர்களும் அருள் செய்திருக்கின்றார்கள்.

69. குக்குடச் சூரணம்.

(a) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி; கருஞ்சீரகம்; ஓமம், குறோசானியோமம், கடுகு, மஞ்சள், கழற்சிக்காய்ப்பருப்பு, இலுப்பைக்கட்டி யென்னும் அரைப்பு, இப்பத்துவகைகளையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-½ 1/8 (b) பொரித்த வெண்காரம், எவச்சாரம், பொரித்த சீனாக்காரம், நவச்சாரம், சவுக்காரம் நெல்லிக்காய்க் கந்தகம், இவ்வாறும் வகை-1-க்கு வராகனெடை- ½ 1/8 இவற்றுள் ஒவ்வொன்றையும் முன்னர் தனித்தனி யரைத்துத் தூள் செய்துப் பின்னர் எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்தரைத்துக் கொள்ளவேண்டும். (c) நீரடிமுத்துப்பருப்பு, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ், இவை வகை-1-க்கு வராகனெடை- ½ 1/8. இவ்விரண்டையும் தனித்தனி மைபோல அரைத்துக் கொள்ளவேண்டும். (d) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு இவ்விரண்டையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயம் செய்து சூரணம் வகை-1-க்குப் பலம்-1. (d) முட்டையிடாத கன்னிக் கருங்கோழி-1. மேல்தோல் சீவியிடித்துப் பிழிந்த இஞ்சிச்சாறு படி-2.

செய்முறை :- கோழியை அருத்துக் கால், தலை, ரோமம், ஆகியவைகளைப் போக்கி, வயிற்றைக் கிறி ஈரல், குடல், முதலியவைகளை நீக்கி, (a), (b), (c), என்னும் மூன்றிலுள்ள சரக்குகளையெல்லாம் ஒன்றாய்க் கலந்து நன்றாய் மிஸ்ரமித்து கோழி வயிற்றிற் செலுத்தி, இரண்டு புறமும் ஒன்றாய்த்தைத்து; ஒரு புது மண்பாத்திரத்தில் இஞ்சிச்சாற்றை விட்டு, பாத்திர வாய்க்கு வேடுகட்டி, அதன்மேல் கோழியை வைத்து மேற்சட்டிமூடி ஏழு சீலைமண்செய்து, அடுப்பேற்றி ஒரு ஜாதிவிறகால், சுமாராய் சாறுவற்றுகிற வரையில் எரித்து ஆறவிட்டு எடுத்து, எலும்பு, சவ்வு ஆகியவைகளை நீக்கி, மற்றவைகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து வெயிலில் உலர்த்தி யிடித்து வடிகட்டி, (d) யிலுள்ள சூரணங்களையும் சேர்த்துக் கலந்து சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம் :- வியாதிபலம், தேகபலம், முதலியவைகளுக்குத் தக்கபடி, வேளை-1-க்கு வராகனெடை-2-முதல்-3¾-வரையில், தேன், நெய், இளவெந்நீர்

Koviloor Digital Library

முதலியவைகளிலும், தக்க வேறு அநுபானாதிகளிலும், அரைமண்டலம், ஒருமண்டலம், சாப்பிடவும்.

தீரும்நோய்கள் :- உள்மூலம், குன்மம், குடல்வாதம், சோகை, கவிசிகை முதலிய ரோகங்கள் தீரும்.

பத்திரம் :- முளைக்கீரை முளை, பச்சைப் பயறு, துவரை, முருங்கைப்பிஞ்சு; காடை முயல்; உடும்பு முதலியனவகளையும்; தம்தம் தேககுபாவத்திற்கேற்கும் வஸ்துகளையும் சேர்த்துக்கொள்ளவும்.

குறிப்பு

கருங்கோழிச் சூரணம் என்னும் வகைகளில் இது ஒரு சிறந்த முறையாம். மற்ற முறைகளில் கடுரமான சரக்குகள் சேர்க்கப்பட்டிருப்பதுபோல் இம்முறையில் ஒன்றும் சேர்க்கப்படவில்லை. இது சுகுமார தேகிகளான எவருக்கும் உபயோகமாம்.

கோழியானது பருமனானதாக இருந்தால் மேற்கண்ட மருந்துகளில் எடையையும் அதிகப்படுத்திச் செய்து கொள்ளலாம். சிறுகச்சிறுகப் பலதடவைகள் செய்வதைப் பார்க்கிலும் அதிகமாக ஒரேதடவையாய்ச் செய்து வைத்து கொள்ளலாம். மற்றப்பாகங்களுக்கு உப்பு, புளி, புகையிலை ஆகியவைகளைத் தள்ளிப்பத்தியம் வைப்பதுபோல் இதற்குப் பத்தியம் வைக்க வேண்டியதில்லை. மற்ற இவ்வகை அவுடதங்களால் பேதியாதல்; உஷ்ணம் அதிகப்படல்; வேறுசில துர்க்குணங்களுண்டாதல்; முதலியவைகள் இந்த அவுடதத்தால் நேரிடாது; ஆகையால் இதையெந்த தேகிக்கும் உபயோகிக்கலாம். ஆயினும் சிகிச்சகர் எப்போதும், அதிக ஜாக்கிரதையுடன் ஒவ்வொருவருடைய தேககுபாவம்; காலசுபாவம்; தேசசுபாவம்; வியாதிசுபாவம் ஆகியவைகளைக் கவனித்து எவ்வித சாந்த அவுடதத்தையும் நிதானித்து உபயோகிக்க வேண்டியது அவசியம்.

70. இராஜ பேதி மாத்திரை.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு; மிளகு; அரிசித்திப்பிலி; இம்மூன்றையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை- 1 ¼; சுத்திசெய்த சாதிலிங்கம்; சுத்திசெய்த ரசம்; வெண்காரம்; இம்மூன்றும் வகை-1-க்கு வராகனெடை 1¼; சிற்றாமணக்குப் பருப்பு; இதனை மணம் வரும்படியாக ஓட்டில் வறுத்துக் கொள்ளவும். பருத்தி விதைப்பருப்பு; இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை- 1¼. சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு வராகனெடை-10. இதனை நெய் தெளித்து மணம் எழும்பும்படி வறுத்துக்கொள்ள வேண்டும்.

செய்முறை :- லிங்கத்தையும்; ரசத்தையும் சேர்த்துக் கல்வத்தில் அரைத்து ரசம் நன்றாய் மடிந்தபின், வெண்காரத்தையும் சேர்த்து மூன்றும் ஒன்றாய் மிஸ்ரமிக்கும்படி அரைத்தெடுத்துக் கொள்க. வாளப்பருப்பு, ஆமணக்குப்பருப்பு, பருத்திப்பருப்பு, இம்மூன்றையும் சேர்த்து வெண்ணெய்போல அரைத்துக்கொள்ள

Koviloor Digital Library

வேண்டும். இவ்விரண்டு வகைகளையும் சேர்த்து, அதனுடன் சுக்கு முதலிய மூன்று சூரண வகைகளையும் கலந்து சுத்த ஜலத்தைச் சிறுகச்சிறுக வார்த்து-12-சாமமரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி, சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணமும், உபயோகமும் :- பேதியாகவேண்டுமானால் இரண்டு மாத்திரைகளைப் பேயன்வாழைப்பழத்திற்குள் வைத்து உட்கொண்டு-¼-மணிநேரம் தாமதித்து, இரண்டாழாக்குக் குளிர்ந்தஜலம்குடிக்க, நன்றாய் பேதியாகும். வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் முத்தோஷங்களும் வெளிப்படும். பின்பு குளிர்ந்த ஜலத்தில் அல்லது இளவெந்நீரில் குளித்துப் பத்தியம் செய்ய வேண்டியது. தேக ஆரோக்கியமும் மனதிற்குச் சந்தோஷமு முண்டாகும்.

மலபந்தப்பட்டு அதைப்போக்க வேண்டிய காலங்களில் ஒரு மாத்திரையைக் கொடுத்தால் இரண்டொருதடவை மலம்போகும்.

குறிப்பு

இந்த மாத்திரையைப் பேயன் வாழைப்பழத்திற் சாப்பிட வேண்டுமெனச் சொல்லியிருப்பதால், மற்ற வகைகளான மொந்தம்பழம்; ரஸ்தாளிப்பழம், பச்சை நாடன்பழம், தேன்வாழைப்பழம், கருவாழைப்பழம் முதலியவைகளிலும், சர்க்கரை, வெல்லம், அரைத்த திராக்ஷைப்பழம் முதலியவைகளிலும், தகுந்தலேகிய வகைகளிலும், உள்வைத்துச் சாப்பிடலாம். இந்த மாத்திரையை யுட்கொண்டு வெந்நீர் பானஞ்செய்தால் செம்மையாய் பேதியாகாது. இன்னும் இந்த மாத்திரையில் ஒரு விசேஷமுண்டு அதாவது எத்தனை தடவை குளிர்ந்த ஜலம் சாப்பிடுகிறோமோ, அத்தனை தடவை பேதியாகுமென்பதே. இதன் அளவு இரண்டு மாத்திரைகளெனச் சொல்லப்படினும், சிலதேக சுபாவத்திற்கு-3-4-மாத்திரைகள் வேண்டியதாயிருக்கும். சிலதேகிகளுக்கோ, ஒரு மாத்திரையினாலேயே களைத்துப்போகும் படியாக-20-30-தடவைகள் பேதியாகிவிடுவதுமுண்டு. ஆகையால் தேகசுபாவம் நிச்சயிக்கப் படாதவரையில் அதிகசாக்கிரதையுடன் குறைந்த அளவாகவே யுபயோகிக்க வேண்டும். நேர்வாளத்தின் வாடைபட்டாலும் தேகம் பிணங்கிக் கொள்ளும் சுபாவமுடையவர்களுமுண்டு. அத்தகையினர்களுக்கு இதில் சமனெடை வாளம் சேர்ந்திருப்பதால் இந்த மாத்திரையைக் கொஞ்சமும் உபயோகிக்கலாகாது. இந்தமாத்திரையால் அதிக பேதியானால், வசம்பைச் சுட்டு பஸ்பமாக்கித் தேனிற் குழைத்துக்கொடுக்க நின்றுபோம். இன்னும் நேர்வாளத்திற்கு மாற்றானவைகளை யுபயோகித்து அந்த விஷத்தை முறித்தும் போக்கவேண்டியது.

பேதியானவர்களுக்கு இரைப்பை துர்ப்பலப்பட்டிக்குமாகையால், அன்று சாதாரணமான இலகு ஆகாரமான மிளகு நீர், இறைச்சி, சூப்பு, கஞ்சி முதலியவகளை யுபயோகிக்கவேண்டியது. கடினபதார்த்தங்களையும், வாயு பதார்த்தங்களையும் அறவே நீக்கவேண்டும்.

Koviloor Digital Library

இதற்கு "ராஜபேதி" எனப் பெயரிடப்பட்டிருபதின் காரணம் :- இராஜா இராஜன் என்னும் நேர்வாளம் இதில் முக்கியமானதாயிருப்பதேயாம். ஆகையால் பேதிமாத்திரை யென்பதற்காக, அலங்காரமாக இராஜபேதியெனச் சொல்லப் பட்டிருக்கிறதே யொழிய இராஜசுபாவமுடைய சுகுமாரதேகிகள், பாலர்கள், விருத்தர்கள், ஸ்திரீகள் முதலியவர்களுக்கும் கொடுக்கத்தகுந்ததென அர்த்தமாகாது.

நேர்வாளத்தைத் தகுந்த விதமாகச் சுத்திசெய்யாவிட்டால் அதன் துர்க்குணங்களான ஆசன எரிச்சல், நெஞ்செரிச்சல், உஷ்ணம் அதிகப்படல், வாந்தியாதல், பேதியான அடுத்தநாட்களில் மலபந்தப் படுதல் முதலியதுர்க்குணங்கள் நீங்குகிறதில்லை. ஆகையால் இது கிரமமாக சுத்திசெய்யப்படவேண்டியது.

வேறு சில தேகிகளுக்கு இலகுபேதி அவுடதங்களை யெவ்வளவாய் உபயோகித்தாலும் கொஞ்சமும் பேதியாகிறதேயில்லை. ஆகையால் அந்த இராஜன் சேர்ந்த பலமுறைகளும் சிகிச்சகர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியதும் அவசியமே.

பேதிக்கு எப்போது சாப்பிடவேண்டுமென்பதும் பேதிக்கு சாப்பிடு முன்னும், பேதிக்குச் சாப்பிட்ட பின்னும், பேதிக்குச் சாப்பிட்டிருக்கும் போதும் என்னென்ன செய்ய வேண்டுமென்பதும்; சுகுமாரயோகிகளான பாலர், விருத்தர், ஸ்திரீகள் முதலிய நுண்மையான சுபாவமுடையவர்களுக் கேற்றபல முறைகளும் நேர்வாளத்தின் கிரமமான சுத்திமுறைகளும், கடின சுபாவமுடையவர்களுக்காகவும், அவசரமான காலங்களில் உதவுகிறதற்காகவும் மேற்படி வாளசம்பந்தமான சில முறைகளும் ஒவ்வொரு சிகிச்சர்களுக்குந் தெரிந்திருக்கவேண்டியது எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகவும் முக்கியமானவிஷயம். இவ்விதமே பேதிக்குச் சாப்பிடுகிறவர்களும் சில விஷயங்களை யறிந்திருக்கவேண்டியதும் முக்கியமே. இவ்விதிகளை யெல்லாம் எழுத இச்சிறியகிரந்தம் இடந்தராதாகையால் பேதிக்கு சாப்பிடுகிறவர்களும் பேதிக்குக் கொடுக்கிறவர்களுமாகிய இருதரத்தாருக்கும் அவசியமான அனேக விதிவிலக்குகள் நமது யூநாநிவைத்தியதாது விர்த்திபோதினி இரண்டாம் பாகத்தில் வகைவிபரமாய் எழுதப்பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் அதை வாங்கி வாசித்து, அதன்படி நடந்து தேகசவுக்கிய முதலியவைகளையடைந்து சுகமாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்பதே அடியேன் கோரிக்கை.

71. க்ஷயப்புகை.

நற்பவழம், சுத்திசெய்த மடலரிதாரம், சுத்தி செய்த சாதிலிங்கம், கடல்நுரை, இந்நான்கும் வகை-1-க்கு வராகனெடை- 1 ¼. எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- இந்த நான்கு சரக்குகளையும் முன்னர் தனித்தனி நன்றாய்ப் பொடித்துப் பின்னர் எல்லாவற்றையும் சேர்த்தரைத்து, எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து-2-சாமமரைத்துப் பின்பு ஒரு ஆழாக்கு எலுமிச்சம்பழச் சாற்றிற்கரைத்து கொண்டு, மூன்றுசாண் நீளம், மூன்று சாண் அகலமுள்ள

Koviloor Digital Library

மெல்லிய சல்லாத்துண்டை நனைத்து, எல்லாவற்றையும் அதிலூட்டி, நிழலுலர்த்தி, சரிபாகமாக ஏழு துண்டுகளாய்ச்செய்து வைத்துக்கொள்க.

உபயோகம் :- மேற்கண்டபடி பாகப்படுத்தின துண்டைக் கொளுத்திப் புகைபிடிக்க வேண்டும். இதற்குச் சுலபமான மார்க்கமாவது சுங்கானில் அல்லது உக்காவில் வைத்துக் குடிப்பதேயாம். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் செய்ய வேண்டியது. அல்லது காலையில் ஒருவேளை மாத்திரமும் செய்யலாம். புளிப்பில்லாத பசுவின்மோர்ச்சாதம் சாப்பிடவேண்டும். இராக்காலங்களில் அவசியமானால் பசுவின் பாற் சாதமும் சாப்பிடலாம். புளி, புளிப்பு வஸ்துக்கள், சீதளவஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது. அவசியமானால் உப்பை வறுத்துக் கொள்ளலாம். இவ்விதம் ஏழுவேளைசெய்து அடுத்த மறு ஏழுவேளை வரையில் மறு பத்தியமிருந்து, பின்பு ஓமத்தை அரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதனால் க்ஷயரோகம் முதலிய, தபசம்பந்தமான தொண்ணூற்றாறு ரோகங்களும் குணமாம்.

குறிப்பு

க்ஷயரோகச் சிகிச்சையானது மிகவும் கடினமானவைகளிலொன்று. இதில் உட்பிரயோகத்தைப் பார்க்கிலும் உடனே கஷ்ட நிவாரணஞ்செய்வது புகைப்பிரயோகமாகியப் வெளிப் பிரயோகமேயாம். இச்சிகிச்சை ஆங்கிலேயர்களாலும் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக அனேகவிதமான சுருட்டுகள் விற்கப்பட்டும் வருகிறது. ஆனால் இச் சுருட்டுகள் (Asthama) என்னும் சுவாசரோகத்திற்கு அதிகமாய் உபயோகப் படுத்தப்படுகின்றன (Consumption = க்ஷயம்) என்று ரோகத்திற்கு புகையானது இங்கிலீஷ் வைத்திய முறைப்படி பெரும்பாலும் உபயோகப்படுத்தப் படுகிறதில்லையாயினும், ஆயுர்வேத பண்டிதர்கள் மேற்படி ஆதாரத்தை யனுசரித்து க்ஷயரோகங்களுக்கும் புகைப்பிரயோகத்தை யேற்படுத்தி யிருக்கின்றார்கள். ஆகையால் மேற்கண்ட பிரயோகத்தை மேற்கண்டமுறைப்படி க்ஷயரோகங்களுக்குச் செய்யவேண்டியது. ஆயினும் தேகசுபாவம், தேகபலம், வியர்தியின் தன்மை ஆகியவைகளை நிதானித்து, அதற்கேற்ற விதமான சிகிச்சைகளைச் செய்ய வேண்டியது சிகிச்சகர்களின் பெருங்கடமையாம். இன்னும் பத்தியபாவனைகளிலும் வியாதியஸ்தரின் நிலைமைக் கேற்றதுபோலத்தான் செய்யவேண்டியது. ஏனெனில் இங்கு மோர்ச்சாதம் கொடுக்கவேண்டுமென எழுதியிருந்த போதிலும், சிலர்க்கு அது சுத்தமா யேற்காதாகையால், அவர்களுக் கேற்றதுபோல பாற்சாதம், வாதுமைப் பருப்புப் பாயசம், கசகசாப் பாயசம், பாற்பாயசம், வாதுமை ஷர்பத்து, கசகசா ஷர்பத்து ஆகியவைகளையும் இவை போன்றவைகளும் சேர்க்கவேண்டியது. இவ்விஷயங்களை யெல்லாங் கவனித்து நடத்தவேண்டியது சிகிச்சகர்களின் பொறுப்பைச் சேர்ந்ததாம்.

Koviloor Digital Library

72. வீக்கத் தைலம்.

எள்ளெண்ணெய் படி.-½, எலுமிச்சம்பழச் சாறு படி-¼, உலர்த்தின உசிலம்பட்டையை யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் ஆழாக்கு-1.

செய்முறை :- முன்னிரண்டு திரவங்களையும் ஒன்றாய்க்கலந்து, பின்பு சூரணத்தைப்போட்டு நன்றாய்க்கரைத்து, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து, கடுகு திரள் பதத்திலிறக்கி வடிகட்டி சீஷாவில்விட்டு, வாய்பந்தனம்செய்து தானியத்தில்-20-நாள் வைத்தெடுத்து உபயோகிக்கவும்.

உபயோகம் :- முன் சொல்லப்பட்டிருக்கும் விதிமுறைப்படி வாரத்திற் கொருதடவை அல்லது இருதடவைகள், சிரசு, தேகம் முதலியவைகளில் தேய்த்து வெந்நீரில் ஸ்நாநம்செய்யவும். இவ்விதம் தொடர்ச்சியாய்ச் செய்துவரின், பாண்டுரோகம், வீக்கங்கள், சோகைகள், காமாலைகள், பீலிகைரோகம் முதலியவைகள் தீரும்.

பத்தியம் :- முன் தைலத்திற்காகச் சொல்லப்பட்டிருக்கும் பத்தியம், பாண்டு முதலிய ரோகத்திற்கு சொல்லப்பட்டிருக்கிற பத்தியம் என்னும் இருவகைகளையும் அநுசரித்து வரவேண்டியது.

குறிப்பு

இந்தத் தைலமானது மிகவும் சூக்ஷ்மமானதும், அதிக உபயோககரமுமானதுமாயினும், இதனாலேயே மேற்கண்ட ரோகம் எல்லா நிலைமையிலும் தீர்ந்துபோகுமென்று யோசிக்கலாகாது. இந்த ரோகமானது ஆரம்ப நிலைமையிலிருக்கும்போது அல்லது வேறு பிரயோகங்களால் சிகிச்சைசெய்யப்பட்டு வியாதியின் மும்முறம் குறைந்து க்ஷீணதசையிலிருக்கும்போது உபயோகிக்கவேண்டும். வியாதியின் மும்முரதசையில் வேறுவகை உட்பிரயோகத்தைச் செய்வதுடன், இதனால் ஸ்நாநம் செய்விப்பதால் சிரேட்டகுணமுண்டாகும். இந்த ரோகச்சிகிச்சைத் தைலவகைகளில் இது சிரேஷ்டமானதும் அதிக சுலபமானதும் என்பதில் எவ்வித ஆக்ஷேபனையுமே யில்லை.

75. நீரடைப்புப் பிரயோகம்.

உலர்ந்த நாயுருவிச் சமூலம், உலர்ந்த சிறுநெருஞ்சிச்சமூலம், உலர்ந்த வாழைச்சருகு, உலர்ந்த பெருநெருஞ்சிச் சமூலம், உலர்ந்த சிறுபீளைச்சமூலம் இந்த அஞ்சுவகைகளையும் தனித்தனிச் சுட்டெரித்து சாம்பலாக்கித் தனித்தனி வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றுள் ஒவ்வொன்றிலும் ஆழாக்காழாக்குச் சாம்பலையெடுத்து ஒன்றாய்க்கலந்து இரண்டுபடி ஜலத்திற்போட்டுக் கரைத்து ஓரிரவு பகல் தெளியவைக்க வேண்டும். இடையில் இரண்டொருதடவை நன்றாய்க்கலக்கி

Koviloor Digital Library

விடவும் வேண்டும். பின்பு தெளிவையெல்லாம் ஜாக்கிரதையுடன் இறுத்து, காரக்குள்ள சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம் :- மேற்படி தெளிநீரில் வேளை-1-க்கு ஒரு ஆழாக்கு முதல் இரண்டாழாக்கு வரையில் கீழ்க்காணும் பொடியைச் சேர்த்து பானஞ்செய்விக்கவும். பொரித்த நாட்டு வெண்காரம், அதிமதுரம் சூரணம் இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை-½ 1/8. இவ்விரண்டு சூரணங்களையும் மேற்படி தெளிநிருடன்கலந்து பானஞ் செய்விக்கவும். இவ்விதம் சமயோசிதமாக காலை மாலை இரண்டுவேளையும் அல்லது தினம் மூன்றுவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள் :- கல்லடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிஷம், நீரடைப்பு, கிரிச்சரம் முதலிய நீரடைப்பு சம்பந்த ரோகங்கள் தீரும். இந்த மருந்தின் சிறந்த குணம் மூன்று பொழுதிலேயே தெரியும்.

குறிப்பு :- மேற்படி பாகப்படி தெளிநீரெடுத்துக் காய்ச்சி உப்பெடுத்து வைத்துக்கொண்டால் சமயங்களில் உபயோகிக்க ஏதுவாகும் அல்லது மேற்கண்ட வகைகளின் தெளிநீரை முன்னதாகவே தயார்செய்து வைத்திருந்தாலும் சமயத்திலுடனே உபயோகிக்க ஏதுவாம்; அவசரமான சமயங்களில் இந்தப் பாகப்படி சித்தம் பண்ணுவதானது இலேசான காரியமல்ல. இன்னும் அவசரமான சமயங்களில் மேற்கண்ட வகைகளில் கிடைத்த வரையில் சாம்பலாக்கி யுடனே கரைத்துடனே தெளிவிறுத்தும் மேற்கண்ட பொடியையும் சேர்த்து யுபயோகிக்க கூடின வரையில் சிறந்த குணத்தையே தரும். இன்னும் மேற்கண்ட தெளிநீரை வேறு மருந்துகளுக்கு அனுபானமாகவும் செய்து கொள்ளலாம். இன்னும் இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கும் சுந்தரிப் பிரயோகத்தையும் சேர்த்தும் உபயோகிக்கலாம். இவ்வகை உபயோகங்களை யெல்லாம் சிகிச்சகர்கள் தம் தம் புத்தி சாதுரியத்தால் சமயோசிதமாய்ச் செய்து வெற்றியடைய வேண்டியதே யொழிய அவை யெல்லாவற்றையும் இங்கெழுதுவது சாத்தியமான காரியமல்லாவாயினும் ஞாபகச்சின்னமாக சில குறிப்புகள் மேலேயெழுதப்பட்டன. இனி அவரவர்கள் தம் அநுபவ சித்தமாகச் செய்துகொள்ளலாம்.

74. சுரபாணம்.

மேல்தோல் சீவின சுக்கு, காட்டாத்திப்பூ, பொன்னூமத்தம்விதை (இதனை யிளவறுப்பாய் வறுத்துக் கொள்க), இம்மூன்றையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-3 ¼ சுத்தியான இரசம். சுத்தியான நெல்லிக்காய்க் கந்தகம், சுத்திசெய்த நாபிச்சூரணம், இம்மூன்றும் வகை-1-க்கு, வராகனெடை- 1¼, மேல்தோலை சீவி யிடித்துப் பிழிந்து வடிகட்டின இஞ்சிச்சாறு செல்லைத்தக்க அளவு.

செய்முறை :- முன்னர் கந்தகத்தையும் இரசத்தையும் கல்வத்திலிட்டு நன்றாய்க் கருத்துத் தூளாகிறவரையில் அரைத்து மற்ற நாலுவகைச் சூரணங்களையும் சேர்த்து

Koviloor Digital Library

1-மணி நேரம் அரைத்துப் பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு-2-சாமமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டியது.

பிரமாணம் :- வேளை-1-க்கு மாத்திரை-1-2- இஞ்சிச்சாற்றிலிழைத்துக் கொடுக்கலாம்; இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள் :- பித்தசுரம்; பித்ததொந்தசுரம்; பித்ததோஷம், தனுவாதசுரம் முதலிய பலவகை சுரந் தீரும்.

பத்தியம்:- இதற்கு முன் எழுதப்பட்டிருக்கும் 19-வது முறையான சுரமாத்திரையிற் சொல்லப்பட்டிருப்பவைகளே யிதற்குமாம்.

குறிப்பு

இக்கிரந்தத்திற் சுர சிகிச்சைக்காக அனேகப் பிரயோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றுள் பிரத்தியேகமாகச் சுரத்திற்காகவே சொல்லப்பட்டவைகள் மேலேகண்ட சுரமாத்திரை, சுரபாணம் என்னும் இரண்டு வகைகளே. இவ்விரண்டில் முன்னது மலத்தைப் போக்கக்கூடியது. பின்னது மலத்தைக்கட்டும் சுபாவமுடையது. ஆகையால் சிகிச்சகர்கள் இவ்விரண்டு வகைகளையும் சித்தஞ் செய்துகொண்டால் எந்தச் சமயத்தில் எந்த மாத்திரைகளை யுபயோகிக்க அவசியமோ அவற்றை யுபயோகிக்க ஏதுவாகும். இம் மாத்திரைகளை எந்தெந்த சுரங்களுக்கு கேற்ற அநுபானாதிகளிற் கொடுக்கின்றோமோ, அந்த அந்த சுரங்கள் குணமாம். இக்காலத்தில் சுரத்திற்குப் பிரபலமாய் உபயோகப்பட்டு வருவது எல்லோருக்குந் தெரியாத விஷயமல்ல. அதனால் வெகு சீக்கிரத்தில் சுரம் நின்றுபோன போதிலும், அதன் துர்க்குணமாகிய, சுரங்கட்டி, அன்னத்துவேஷம், மஞ்சட்காமாலை, அடுத்தடுத்து மறுபடியும் சுரமுண்டாதல் என்னும் இத் துன்பங்கள் பெரும்பாலாரை வருத்தப்படுத்தி வருவதும் எல்லோருக்கும் பிரசித்தமான சங்கதியே. ஆனால் இந்த மாத்திரைகளால் அவ்வித துர்க்குணங்களுண்டாக ஏதுவிராது. ஆயினும் சிகிச்சகர்கள் அமுதமாயினும் தேகசுபாவம், வியாதியின் சுபாவம் முதலியவைகளைக் கவனித்து ஏற்றதுபோல செய்யவேண்டியது பெருங்கடமை. ஏனெனில் ஒவ்வொரு சமயங்களில் ஒவ்வொரு தேக சுபாவத்திற்கு மிகவும் சுலபமான வஸ்துவும் ஏற்றுக் கொள்ளாமல் நஞ்சின் குணத்தைக் கொடுத்துத் துன்பத்திற்குள்ளும், சிலசமயம் அபாயத்திற் குள்ளும் மாட்டி வைத்துவிடுவதே காரணமாம்.

75. குட்டத்தெண்ணெய்.

(a) கோங்கிலவிலிலை, வெண்ணொச்சியிலை, முள் முருக்கிலை, சிறுசெருப்படி சமூலம், பெருஞ்செருப்படி சமூலம், குப்பைமேனியிலை, செம்பருத்தியிலை, கழற்சியிலை, இவ்வெட்டுவகைகளையும் தனித்தனி யிடித்துப்

Koviloor Digital Library

பிழிந்து வடிகட்டின சாறு வகை-1-க்குப் படி-¼, (b) அவுரிவேர், கருஞ்சூரை வேர்ப்பட்டை, பொடுதலைவேர், சங்கம்வேர்ப்பட்டை, இந்நான் குவகைகளையும் தனித்தனி யரைத்தெடுத்த விழுது வகை-1-க்கு எலுமிச்சம் பழத்தளவு; அரசனிலை பலம்-1; இதனை அம்மியில் வெண்ணெய்போல அரைத்துக் கொள்ளவும்; எள்ளெண்ணெய் படி-½. (c) துரிசு, துத்தம் இவை யிரண்டும் வகை-1-க்கு YWÕLù] ûP -½, 1/8. இவ்விரண்டையும் நுண்மையாகப் பொடித்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை :- மேற்படி (b) யிலுள்ள எண்ணெய்யில் (a) யிலுள்ள சாறு வகைகளைவிட்டு அதில் (b) யிலுள்ள வேர் விழுதுகளை கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து மெழுகு பதத்திலிறக்கி இளஞ் சூட்டுடன் வடிகட்டினதில் (c) யிலுள்ளவைகளைப் போட்டு நன்றாய்க் கலக்கி சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம் :- இதனை வாரத்திற்கொரு முறை அல்லது இருமுறை தைலவிதிமுறைப்படி தேய்த்து உசிலந்தூளைத் தேய்த்து வெந்நீரில் ஸ்நாநம் செய்துவரின், குட்டரோகங்கள், கரப்பான் ரோகங்கள் முதலியவை தீரும்.

பத்தியம்:- இதற்குமுன் தைலமுறையிற் சொல்லப்பட்டிருக்கும் பத்தியமே யிதற்குமாம். ஆனால் மாமிச பக்ஷணிகள் நெய்த்தொலியென்னும் உலர்ந்த மச்சத்தைச் சேர்த்துக்கொண்டால் நன்மையாம்.

குறிப்பு

இச்செய்யுளில் (கொங்குலவு) என ஒரு பிரதியின்படி எழுதப்பட்டிருந்தாலும், மற்றப் பிரதிகளில் (கொங்கிலவு) என்றே எழுதப்பட்டிருக்கிறது. இதுவே சரியானதாம். ஆகையால் (கொங்குலவு) என்பது பிழையாம்.

இச்செய்யுளில் "சூரை வேர்" எனப் பொதுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இது முக்கியமாய் கருஞ்சூரை, கொடிச்சூரை யென இருவகையுண்டு. இன்னும் சூரையென நெற்றிப் புல்லுக்கும் ஒரு பெயருண்டு. அவ்விதமே தூதுவளைக்கும் ஒரு பெயருண்டு. ஆயினும் கருஞ்சூரையே அதிகமாக அவுடதங்களில் உபயோகப் படுத்தப் படுகிறது. ஆகையால் அதனையே இங்கு யெழுதப்பட்டது. அது அகப்படாத சமயங்களில் மற்ற சூரையைச் சேர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் இவ்வகைகளின் குணமானது ஒன்றிற் கொன்று சற்றேறக்குறைய ஒத்திருப்பதே காரணம்.

76. பாண்டுச்சிதம்.

ஒரு கை கொண்ட அளவு ஒருதலை வெள்ளைப் பூண்டை யெடுத்துரித்துத் தோல்போக்கி அம்மியில் வெண்ணெயைப்போல அரைத்துக்கொள்ள வேண்டும். கழுதையின் புதிய லத்தி-2. இதனை-2½-ஆழாக்கு ஜலத்திற்கரைத்து வடிகட்டி-2-ஆழாக்கு ஜலத்தை யெடுத்துக்கொள்க. இதற்குக் கழுதைலத்திப் பாலெனப்பெயர்.

Koviloor Digital Library

உபயோகம் :- மேற்படி லத்திப்பாலில் முன் அரைத்த விழுதைக்கரைத்துப் பானஞ்செய்விக்கவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாக மூன்று நாட்கள் செய்யின் பாண்டுரோகம், சோபைரோகம், வீக்கம், வெள்ளுழுவை ரோகம், பெருவயிறு, கவிசை முதலியரோகங்கள் தீரும்.

பத்தியம் :- புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது. இன்னும் அவரவர்கள் சுபாவத்திற்கேற்றதை எடுத்தும் ஏற்காததை நீக்கியும் விடவேண்டியது.

77. பாண்டு மாத்திரை.

சுத்திசெய்த தாம்பிர அரபொடி, சுத்திசெய்த அயஅரபொடி, சுத்திசெய்த கந்தகம், மேல்தோல் சிவப்பட்ட சுக்குச்சூரணம், இன்னான்கும் வகை-1-க்கு வராகனெடை-1¼. எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- முன் மூன்றையும் சேர்த்து எல்லாம் ஒன்றுபடும்படியாக அரைத்துப் பின்பு சுக்குத்தூளைச் சேர்த்துப் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமங்களரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- வேளை-1-க்கு ஒரு மாத்திரையை வெந்நீரிலிழைத்துட்கொள்க. இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம். இப்படிச் செய்துவரின் பாண்டுரோகங்கள், வீக்கங்கள், சேர்கை, காமாலை, ஆகியவை போம்.

பத்தியம் :- உப்பு, புளி, புகை, பெண்ணாகியவைகளை நீக்கவேண்டியது; வெண்மை நிறப்பசும் பால்கஞ்சி; வெண்ணிற பசும்பாற்சாதம் ஆகியவையாகும்; மற்றவைகளாகா.

குறிப்பு

இதில் தாம்பிர அரபொடியைப் பச்சையாய்ச்சேர்க்கும்படி சொல்லப் பட்டிருக்கிறது; இவ்விதம் சேர்ப்பதைக்காண வீரப்பிரதாபாஞ்சனேய முறைப்படி இதனைப் பக்குவப்படுத்திக் கொண்டால் அதிக குணமுள்ளதாகவும் நிர்ப்பயமானதாகவு மிருக்கும்; அம்முறை பின் வருகிறவிதமாம்.

ஒரு இரும்புச்சட்டியில் சுமார்-1½-வராகனெடை பசுவின்நெய்யைவிட்டுருக்கி, நன்றாயுருகினவுடனே, கந்தகத்தைப் போட்டு, அதுவும் உருகினவுடனே தாம்பிரபொடியைப் போட்டு, சிறுதீயாயெரித்து இரும்பு கட்டப்பாரையால் கடையவேண்டும். *(இதன் பிறகு-1¼-வராகனெடை ரசத்தைவிட்டு அதைக்கொஞ்ச

* இந்தப் பாகத்தில் ரசத்தைச் சேர்க்கும்படி முன் சொல்லப்படவில்லை. ஆயினும் இவ்விதம் செய்யும்போது இரசத்தைச் சேர்ப்பதால் பலவித நன்மைக் கேதுவாயிருக்கிறது. மேலும் இரசமானது அதன் சத்தைக் கொடுத்துவிட்டு பறந்துபோகிறது.

Koviloor Digital Library

நேரங் கடையவேண்டியது) பின்பு அயத்தைச் சேர்த்துப் பொடியாகிறவரையில் கடையவேண்டும். தீயை ஆரம்பத்தில் இலேசாகவும் வரவர அதிகப்படுத்தியும் வரவேண்டும். இந்தத்தூளை சுக்குத் தூளுடன் சேர்த்து பழச்சாற்றைவிட்டு-2-சாமமரைத்து முன் போல மாத்திரை செய்து உபயோகிக்கவேண்டும்.

இப்படிச்செய்வதும் கஷ்டமாயிருந்தால் முன் சொல்லப்பட்ட இரசதாம் பிராதியை இத்தாம்பிர அரபொடிக்குப் பதிலாகச்சேர்த்துச் செய்துகொள்வது அதி விசேஷமானதாகவும் இலேசானதாகவு மிருக்கும்.

இன்னும் இச்செய்யுளிலும் இதன் மேற்செய்யுளிலும் முக்கியமாய்ப் பாண்டுரோகவகைச் சிகிச்சைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பாண்டு, காமாலை, சோகை-என்னும் மூன்றுவகையும் வெவ்வேறு வியாதிகளாயினும் இம்மூன்றும் ஒன்றோ டொன்று சம்பந்தப்பட்டதாகவே யிருக்கின்றன. ஆகையால் இவற்றுள் ஒவ்வொன்றின் எல்லாவகைகளையும் தெரிந்து கொள்ளாவிட்டாலும் முக்கியமாய் இம்மூன்றின் பொது லக்ஷணங்களைத் தெரிந்துகொள்வதாலும் இது இவ்வகையைச் சேர்ந்ததென நிதானிக்கக் கூடும்; பின்பு அதற்கேற்ற சிகிச்சையை யேற்படுத்த மிகவும் இலேசாயிருக்கும்.

பாண்டு ரோகம்.

தேகத்தின் இரத்தந்திலுள்ள சிவந்த அணுக்கள் குறைந்து தேகம் வெளுத்து விடுவதற்கு பாண்டு ரோகம் என்று பெயர். பாண்டு என்பது வெண்மை.

இதன் பிரதானலக்ஷணம்:- சர்வாங்கமும் வெளுத்திருப்பதேயாம். இதற்கு இங்கிலீஷில் (Anaemia) அனிமியா என்று பெயர்; இது பலவகைப்படும்; இந்த விபரத்தைப் பெரு நூற்களிற் பார்வையிடவும்; ஆயினும் அசாத்திய பாண்டு ரோகலக்ஷணத்தை மாத்திரம் யிங்கெழுதுவது அவசியமாம்.

அசாத்திய பாண்டு ரோகம்.

இதன்லக்ஷணம்;- பாண்டு ரோகிகட்கு வீக்கம்; சோம்பல்; தாகம்; அரோசகம்; வாந்தி, விக்கல், இருமல், பேதி என்னும் இக்குணங்களுண்டாகி எந்த வஸ்துவைப் பார்த்தாலும், பார்வைக்கு மஞ்சள் நிறமாகத் தோற்றுவதுமன்றிக் கண்களிலும் நகங்களிலும் மஞ்சள் நிறமுண்டாகில் அசாத்தியம். இக்குறிகளொன்று மில்லாதிருக்கில் சுகசாத்தியம்.

சோபை அல்லது சோகைரோகம்.

உடம்பிலிருக்கிற சில்லி ஜவ்வில் நீர் சேர்ந்து கொள்ளுகிற ரோகத்திற்குப் பொதுவாய் நீர்க்கோர்வையெனப் பெயர். ஆனால் வழமையில் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் வெவ்வேறுபெயர் வழங்கப்படுகிறது. அது வயிற்றிலிருந்தால் பெருவயிறு அல்லது ஜலோதரமென்றும், அண்டத்திலிருந்தால் நீர் அண்டமென்றும்; கை, கால்களிலிருந்தால் வீக்கமென்றும் பெயர். முகத்தில் மாத்திரம் நீர் சேர்ந்து சுரந்திருப்பதற்கு சோபை அல்லது சோகை என்று பெயர். ஆனால் அமிர்தாகரம்,

Koviloor Digital Library

ஜீவரக்ஷாமிர்தம் முதலிய கிரந்தங்களில் சோபைரோக பூர்வம், பின்வருகிறபடி சொல்லப்பட்டிருக்கிறது.

தேகத்தில் நரம்புகளில் வீக்கம், வீக்கம் ஏறுகிறகதியில் வாந்தியும் தேககனதியும் உண்டாதல் ஆகியவைகளாம். சோபை என்பது வீக்கம்.

இது அனேக வகைகளாகையால் இங்கெழுதுவது சாத்தியமாகாது. ஆயினும் சாத்தியா சாத்திய சோபையின் லக்ஷணத்தைமாத்திரம் இங்கெழுதுவாம்.

சாத்திய சோபை

இதன் லக்ஷணம் எவ்வித உபத்திரவமுமில்லாமல் வீக்கமாத்திரங் கண்டால் சுகசாத்தியம்.

அசாத்திய சோபை

சரீரமுழுவதும் பூசினாற்போல் வியாபித்த வீக்கமானது அனேநாளாகியும் குணத்திற்கு வராமல் அதிகவேதனையைத் தருவதாயிருந்தால் அசாத்தியம்; புருஷர்களுக்கு ஆரம்பத்தில் பாதத்திற்கண்டு கன உபத்திரத்துடன் மேலேறினாலும், ஸ்திரீகளுக்கு முன்னற் முன்னர் முகத்திற்கண்டு கீழேநோக்கி யிறங்கினாலும் அசாத்தியம்; ஆண் பெண் ஆகிய இருபாலார்களுக்கும் வயிறு, குதம், அக்குல், ஆண்குறி இவ்விடங்களிற் கண்டாலும் அசாத்தியமாம். இந்த வீக்கத்துடன் வாந்தி, சுரம், மேற்சுவாசம், பேதி இக்குணங்கள் கண்டாலும் அசாத்தியமாம். முகம், கைகால் என்னும் இவ்விடங்கள் சுட்சித்து வீக்கம் ஏறினாலும் அல்லது தேகஞ் சுட்கித்து முன் சொன்ன அவயவங்களில் வீக்கம் ஏறினாலும் ஒரு மாதத்தில் மரணத்தைத்தரும்.

காமாலை ரோகம்.

ஈரலிலுண்டாகிற பித்த நீரானது இரத்தத்தில் சேர்ந்து உண்டாகிற ரோகத்திற்குக் காமாலை ரோகமெனப் பெயர்: இது இருவகையாம். (1) சுரந்த பித்த நீரானது குடலில் வந்து விழுவது தடைப்பட்டு மறுபடியும் ரத்தத்தில் தானே போய் கலந்து விடுவது. (2) யகிர்தகண்டத்தின் தொழில் விகற்பப்பட்டு பித்தநீர் சுரக்காமல் ரத்தத்தில் தானே நின்று விடுவது ஆகிய இரண்டாம்.

இதன் லக்ஷணம் :- கண், மூத்திரம், நகம், ஆகிய இவை மஞ்சள் நிறமாயிருத்தல், மலம் வெளுத்திருத்தல், ஆயாசம், உறக்கம், தலை சுழற்றல், வயிறுப்பு குணம், வாய்கசப்பு, தாகம் முதலிய குணங்களுண்டாயிருக்கும்.

இந்த ரோகமும் பல வகைகளாம். அவசியமாயின் பெரிய கிரந்தங்களைப் பார்வையிடவும்.

இதுவரையில் பாண்டுரோகம், சோபைரோகம், காமாலைரோகம் என்னும் மூன்றின் லக்ஷணங்களைத் தெரிந்துகொண்டோமாகையால், இனி அவற்றுள் பேதாபேதங்களை சூக்ஷ்மமாகத் தெரிந்து சிகிச்சை செய்ய ஏதுவாகும்.

Koviloor Digital Library

78. கிராணி பற்பம்

இந்துப்பு வராகனெடை-12 ½. சேராங்கொட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, மஞ்சட் கடுக்காய் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல் இவ்வைந்தும் வகை-1 க்கு வராகனெடை-12 ½.

செய்முறை :- இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்து உரலிலிட்டு நைய இடித்து ஒரு சிறியகுழி அகலிலிட்டு மேலகல்மூடி-5-சீலைமண்செய்துலர்த்தி கவசத்தி னெடைக்கு-10-பங்கு வராட்டியிற்புடமிட் டாறின பின்னெடுத்துக் கல்வத்திற் பொடித்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வராகனெடை-1-1¼. இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் வெண்ணெயில் அல்லது வேறு தகுந்த அனுபானங்களிற் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் :- கிராணிவகைகள், உஷ்ணபேத, பலவகை பேதிகள் ஆகியவை தீரும்.

பத்தியம் :- காராமணி, பருங்காராமணி, பறங்கிக்கீரை, அகத்திக்கீரை, கத்தரிக்காய், பச்சை மீன் ஆகியவைகளும் இவைபோன்றவைகளும் ஆகா.

வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, காடை, சிட்டுக்குருவி, முயல் கவுதாரி, ஆகியவைகளும் இவைபோன்றவைகளுமாம்.

குறிப்பு

இந்தப்பற்பமானது மிகவும் சிரேஷ்டமானது; கிரகணி ரோகமானது, குஷ்டம், மேகரோகம்; கல்லடைப்புரோகம், மகோதரம், பகந்தரரோகம், மூன் ரோகம், வாதரோகம் முதலிய அஷ்டமகா ரோகத்தில் ஒன்று. இந்த ரோகங்கள் இலேசில் சிகிச்சைக்குட் படா. ஆயினும் மேற்கண்ட அவுடதத்தைத் தக்க விதமாய் உபயோகித்துவரின் கடவுளினது கிருபையால் மேற்கண்ட ரோகங்கள் தீர்ந்துபோகும். இன்னும் பல சமயங்களில் வேறு சில அவுடதங்களின் உதவியால் அவசியமாய் இருக்கலாம். அந்தச் சமயங்களில் முன்சொல்லப்பட்டிருக்கும் உப்புச் சிந்தூரம், இஞ்சிச் சூரணம் முதலியவைகளைச் சமயோசிதம்போல் கூடச்சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

79. பித்த வாயுத் தைலம்

மேல்தோல் சீவி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த அதிமதுரச் சூரணம் பலம்-6. நெல்லிக்காய், மேற்புறணி நீக்கப்பட்ட சீந்தில் தண்டு, கையாந்தகரை, தேவியார் செங்கழுநீர் கிழங்கு இந்நான்கையும் தனித்தனி யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறுகள், சோற்றுக் கற்றாழைச் சோறு ஆகிய இவ்வைந்தும் வகை-1-க்குப்-படி-¼. எள்ளெண்ணெய்-படி-1, பசுவின்பால்-படி-1.

Koviloor Digital Library

செய்முறை :- அதிமதுரச் சூரணத்தை அம்மியில் வைத்துப் பசும் பாலைவார்த்து வெண்ணெய் போல அரைத்து, மிகுதியான பாலில்கரைத்து எண்ணெயுடன் கலந்துவிடவும். சாறு வகைகளையும் அதிற்கலந்து விடவும். இரண்டு மூன்று நாட்கள் இளஞ்சூடு காண்பித்து மறுநாள் காய்ச்சி மெழுகுப்பதத்தில் வடிகட்டித் தைலப்பாத்திரத்தில் வாய்பந்தனஞ் செய்து, தானியபுடம்வைத்து உபயோகிக்கவும்.

உபயோகம் :- இதனைத் தைலமுறைப்படி ஒருவாரத்திற் கொருதடவை அல்லது இருதடவை தேகத்தில் தேய்த்து, உசிலிலையை யரைத்துத்தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்துவர, பித்தரோகங்கள், வெறிவாயு, தலைநோய்கள், உஷ்ணரோகங்கள் ஆகியவை தீரும்.

பத்தியம் :- முன் தைலபாகங்களிற் சொல்லப்பட்டவைகளே யிதற்குமாம்.

80. அசனாத தைலம்.

(a) சிற்றரத்தை (சந்நராஷ்டம்), அரிசித்திப்பிலி, அதிமதுரம், கோரைக்கிழங்கு, வெண்சந்தனம், நன்னாரிவேர், தேவதாரம், வில்லாமிச்சைவேர், சிற்றாமட்டிவேர், கடுகுரோகணி, கோஷ்டம், செவ்வள்ளிக்கொடி, பொன்மெழுக்கு, கடல்நுரை, இப் பதினான்கு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-2½. (b) பசுவின்மோர் படி-2, நல்லெண்ணெய்படி-1.

செய்முறை :- மேற்படி (a) யிலுள்ள சரக்குகளிற் பின்னுள்ள இரண்டு சரக்குகளையும் தனித்தனி பொடித்துக்கொள்ள வேண்டும். மற்றச் சரக்குகளை யெல்லாம் ஒன்றாயிடித்து மெல்லிய தூளாகச்செய்து முன்னிரண்டு சூரணங்களையும் கலந்து அம்மியில்வைத்து, மேற்படி மோரைவார்த்து மைபோல அரைத்து மிகுதியான பாலிற்கரைத்து எண்ணெயுடன்கலந்து, சிறுதீயாயெரித்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இதனைத் தைலமுறைப்படி தேய்த்து, சீயக்காயை அரைப்பாகத்தேய்த்து, வெந்நீரில் ஸ்நானம் செய்துவர, குளிர்சுரங்கள், விடாசுரங்கள், அஸ்திச்சூடு முதலியவை தீரும்.

பத்தியம் :- முன் சொல்லப்பட்டவைகளே யாம்.

குறிப்பு

இத்தைலமானது, அரக்குத்தைலம், அரக்கு சந்தனாதித்தைலம் முதலியவைகளைப் பார்க்கிலும் மிகவும் சுலபமானதாயினும் குணத்தில் அவற்றிற்குப் பின் வாங்கினதல்ல. இச்செய்யுளில் "பொன்மெழுகு" என்று சொல்லப்பட்டிருப்பது தில்லை மரப்பாலாம். இது, சிறுதுண்டுகளாக உலர்த்தப்பட்டு, இலங்கை முதலியவிடங்களில் விற்கப்படுகிறது. இங்கு கிடைப்பது அரிது. அவசியமானபோது அங்கிருந்து தேவையான அளவு வரவழைத்துக்கொள்ளலாம். இன்றும் வேறு சிலர் "பொன்மெழுகு" என்பதை "பொன்னம்பர்" என அர்த்தம் செய்கிறார்கள்; அந்தச்

Koviloor Digital Library

சரக்கையும் இத்தைலத்துடன் சேர்க்கலாமெனினும் அது விலையுயர்ந்த சரக்கு; மேலும் இந்தத்தைலத்தில் தில்லை மரப்பால் செய்யுங்குணத்தைப்போல் அது தராது; சிலேடையருத்தமுள்ள சரக்குகளைப் பற்றிச் சந்தேகமுண்டாமிடத்தில் அநுபவத்தை அநுசரித்து ஏற்படுத்தவேண்டியதே கிரமமாகையால் அவ்விதமே யிங்கும் எழுதப் பட்டிருக்கிறது; இனி ஆக்ஷேபனையுள்ளவர்கள் அவரவர்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளட்டும்.

81. வாதசூலைத் தைலம்

எருக்கம்பால், வெள்ளாட்டுப்பால், வெண்ணொச்சி யிலைச்சாறு, வீழியிலைச்சாறு, இந்நான்கும் வகை-1-க்கு ஆழாக்கு 3; எள்ளெண்ணெய் படி-½.

செய்முறை :- எல்லாவற்றையும் ஒன்றாய்க்கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடித்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இதனை வாரத்திற் கொருடதவை தைலமுறைப்படி தேய்த்து அரைப்பிட்டு; வெந்நீரில் முழுகிவர சூலைரோகங்கள், வாதரோகங்கள், பிடிப்புகள் முதலியவை போம்.

பத்தியம் :- அந்தந்த ரோகங்களின் வலுவிற் கேற்றதுபோல், உப்பு; புளி; புகை முதலியவைகளைச் சேர்த்தும் சேர்க்காமலும் சமயோசிதமாகப் பத்திய மிருக்க வேண்டும்.

குறிப்பு

இவ்வகைத் தைலங்களில் இது மிகவும் இலேசானதும் குணத்திற் சிறந்ததுமாம். இதனைத் தேய்த்து ஸ்நாநம் செய்து வருவதைப் பார்க்கிலும் இதனை நாள்தோறும் வியாதியுள்ள ஸ்தானத்தில் மேற்பூச்சுத் தைலமாக உபயோகித்து வந்து, நான்கு அல்லது எட்டு நாளைக்கொருதடவை அரைப்பிட்டுத் தேய்த்துக் குளித்துப் போக்கிவிடுவது உத்தமமாகவும் அபாயமற்றதாகவு மிருக்கும். இதில் எருக்கம்பால் சேர்ந்திருப்பதால், கண், மூளை முதலியவைகளுக்குச் சில தேகிகளுக்குச் சில சமயங்களில் கெடுதி நேரிட ஏதுவாகும். ஆகையால் எப்போதும் காரமான வஸ்துக்களை யெச்சரிக்கையுடன் உபயோகிக்க வேண்டுமென இங்கு வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

82. சன்னித் தைலம்.

(a) முற்றின வேப்பமரப்பட்டை, சிவனார் வேம்பு சமூலம், பிரமியவழுக்கை சமூலம், கருந்துளசி சமூலம், ஆடாதோடை வேர்ப்பட்டை வெண்ணொச்சிமரப்பட்டைச் சங்கம் வேர்ப்பட்டை, வட்டக்கிலுகிலுப்பை சமூலம், வேலிப்பருத்திசமூலம், விறலிமஞ்சள்; சந்தனத்தூள்; நன்னாரிவேர்; அதிமதுரம்; நத்தைச்சூரிவேர்; கோட்டம்; வசம்பு; கடுகுரோகணி; மரமஞ்சள்; சிறுதேக்கு; மஞ்சட் கடுக்காய்த்தோல்; மேல் தோல் சீவப்பட்ட சுக்கு; மிளகு; அரிசித்திப்பிலி; (b) இந்துப்பு; பாம்புரித்த சட்டை, முசிர்முட்டை நாக்குப்பூச்சி; இந்த இருபத்தேழு வகைகளும் வகை-1-க்கு வராகனெடை-2½-எள்ளெண்ணெய் படி-1.

Koviloor Digital Library

செய்முறை :- (a) யில் உள்ளவகைகளில் இடிக்க வேண்டியவைகளை யிடித்தும் அரைக்கவேண்டியவைகளை யரைத்தும் எண்ணெயிற் போட்டு விடவேண்டும், (b) யிலுள்ளதில் இந்துப்பை மாத்திரம் பொடித்தும் மற்றவைகளை அப்படியேயும் முன் எண்ணெயிற் போட்டு, கூடுமானால் மூன்று நாள் வரையில் பிரதிதினமும் சூடுகாட்டி யூறவைத்துப் பின்பு காய்ச்சலாம். அவசரமாய் வேண்டியதிருந்தால் உடனே காய்ச்சிப் பதத்தில் வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இதனைத் துவாலையாக உபயோகிக்க வேண்டியது. இதனைத் தேகமெங்கும் பூசி உரிமட்டை நெருப்பின் அனல் காட்டவேண்டும். இவ்விதஞ் செய்யின் எல்லா வகை ஜன்னிகளும் போம்.

குறிப்பு

இதனை அவசர காலங்களிற் சித்தப்படுத்துவது இலேசான காரியமல்ல. ஆகையால் இதனை முன்னதாகவே செய்து வைத்திருந்தால் உற்றசமயத்திற்கு உதவும். இம்முறையானது பட்டண வாசிகள் அவ்வளவாய் விரும்பத்தக்கதன்று. ஏனெனில் இந்த சமயங்களுக் குதவவேண்டியவைகளான கர்ப்பூரத்தைலம், ஏலக்காய்த்தைலம், மண்தைலம், ஓடிக்கலான் முதலியவைகள் தக்ஷணம் கிடைப்பதே காரணம்; ஆயினும் இதன் குணம் அவற்றிற்கிராது. கிராமாந்திரங்களில் அப்படி கிடைப்பது அரிதாகையால் அத்தகையினர்கள் முன்னதாகவே யிதைச் சித்தப்படுத்தி வைப்பது ஆபத்துக் காலங்களில் உதவும்.

83. உஷ்ண நிவாரணத் தைலம்

ஏலரிசி, அதிமதுரம்; சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர்; சீதேவியார் செங்கழு நீர்க்கிழங்கு; கோட்டம்; கடுகுரோகணி; இலவங்கம் இவ்வெட்டும் வகை-1-க்கு வராகனெடை-2½. சீதேவியார் செங்கழுநீர்ச்சாறு, பசுவின்நெய், இவ்விரண்டும் வகை-1-க்குப் படி-½.

செய்முறை :- சரக்குகளையெல்லாம் இடித்து மெல்லிய தூளாக்கி அம்மியில் வைத்து மேற்படி சாற்றைவார்த்து வெண்ணெய்போலரைத்து, மிகுதியான சாற்றிற் கரைத்து நெய்யிற்கலந்து தைலபாகப்படி பதமாய்க்காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இதனைத் தைலமுறைப்படி ஒரு வாரத்திற் கொருமுறை அல்லது இருமுறை தேய்த்து, சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்துவர உஷ்ணசம்பந்தமான எல்லாவகை சுரங்கள், தலையெரிவு, கைகாலெரிவு, பித்தரோகங்கள் ஆகியவை தீரும்.

84. குமரித் தைலம்

(a) தேவதாரம், சந்தனத்தூள், அசிறகட்டை, விலாமிச்சம்வேர், சாதிப்பத்திரி, அதிமதுரம், கடுகுரோகணி, தக்கோலம், விறலிமஞ்சள், சாதிக்காய், ஏலரிசி, கோரைக்கிழங்கு, சடாமாஞ்சி, இலவங்கம், மஞ்சிட்டி, நன்னாரிவேர், தாமரை

Koviloor Digital Library

வளையம்; செங்கழுநீர்க்கிழங்கு; சிறுநாகப்பூ; மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல்; நெல்லி முள்ளி; (b) பச்சைக் கர்ப்பூரம்; புனுகுசட்டம் இந்த இருபத்தினான்கு சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை-2 ½. சோற்றுக்கற்றாழைப் பால் படி-½. எள்ளெண்ணெய் படி-1.

செய்முறை :- (a) யிலுள்ள சரக்குகளை யெல்லாம் இடித்து நுண்மையான தூளாக்கிப் பின்பு அம்மியில் வைத்துக் கொஞ்சம் பசுவின்பால் வார்த்து வெண்ணெய்போலரைத்து எண்ணெயிற்கலக்கி; கற்றாழை பாலையும் அதனுடன் சேர்த்து சிறுதீயாயெரித்துக் காய்ச்சிப் பதத்தில் வடிகட்டி யெடுத்து (b) யிலுள்ள பச்சைக்கர்ப்பூரத்தை நுண்மையாய்ப் பொடித்துத் தைலத்திற் கலந்து விடவும், புனுகு சட்டத்தையரைப்பதற்கு முதல் நாளே சிறுதுண்டுகளாய்த் துண்டித்துக் கொஞ்சம் சலம்விட்டூறவைத்து, மறுநாள் வெண்ணெய்போல அரைத்து முன் தைலத்தில் கலக்கிக் கலந்துவிடவேண்டும். பின்பு தைலத்தில் நீரிருக்கிறதாக சந்தேகமிருக்கின் வெய்யிலில் வைத்து நீரைப் போக்கவேண்டியது. அப்படி கூடாவிட்டால் அடுப்பில் வைத்து சிறுதீயாயெரித்துப் போக்கிவிடவேண்டும். அதிகமாய் நெருப்பில் வைத்தால் அதன் சுகந்தம் மாறிப்போம்.

உபயோகம் :- இதனை முறைப்படி ஸ்நாநம் செய்துவரின் கண் ரோகங்களெல்லாம் தீரும்.

குறிப்பு

இம்முறையில் குமரிப்பாலைச் சேர்க்கச் சொல்லப்பட்டிருக்கிறது. சோற்றுக்கற்றாழையின் அடிமரத்திற் கீறி விட, மஞ்சள் நிறமானபால் சொட்டும். அதனைச் சிறுகச்சிறுக சேகரித்துக் கொள்வதே குமரிப்பாலாம். குறைந்த அளவாய் வேண்டிய காலங்களில்தான் இவ்விதம் செய்தெடுக்கக் கூடும். அதிக அளவாய் வேண்டிய காலங்களில் அதுவும் எதேஷ்டமிருந்து சக்தியுள்ளவர்கள் அப்படியே யெடுத்துக் கொள்ளலாம். அப்படி சக்தியில்லாவிட்டாலும் அது வேண்டிய அளவு கிடைக்கக் கூடாதசமயத்திலும், அதன்வேர்க் கிழங்கை யிடித்துப்பிழிந்து வடிகட்டிக்கொள்ளலாம். இப்படி யெடுக்கப் பட்டதும் குமரிவேர்ப் பாலெனப் படினும் முன்னதே பின்னதைப் பார்க்கிலும் விசேஷ குணமுள்ளதாம்.

கண்ரோகத்திற்காக கற்றாழைச்சோற்றைச் சேர்த்துத் தைலம்செய்து மூழ்கி கண்ணை முன்னிலும் அதிகங் கெடுத்துக் கொண்டவர்களனேகர். ஏனெனில் கண்ரோகமானது சீதளசம்பந்தமானதாயினும் சரியே அல்லது அந்த ரோகி சீதளதேகியாயினும் சரியே இந்தச் சமயங்களில் அந்தத்தைலம் ஏற்றுக்கொள்ளாததே காரணம். ஆனால் மேற்கண்ட குமரித்தைலம் அவ்வித வியாதிக்கும் அவ்வித தேகிக்கும் பொருந்தும். ஆகையால் உஷ்ணதேகிகள்; சீதளதேகிகள் உஷ்ணசம்பந்தக் கண்ரோகம், சீதள சம்பந்த கண்ரோகம் ஆகிய எல்லாவற்றிற்கும் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம்.

Koviloor Digital Library

85. உளமாந்தைக் கிருதம்.

அவுரிவேர்; பால்கடுக்காய்; சிற்றாமல்லி; அரிசித்திப்பிலி; கடுகுரோகணி; நன்னாரிவேர்; கீழ்க்காய் நெல்லிவேர்; எலுமிச்சம் வேர்ப்பட்டை. சந்தனத்தூள்; கொத்துமல்லிவிதை; இச்சிப்பூ; விலாமிச்சம்வேர்; ஆடாதோடை வேர்ப்பட்டை இப்பன்னிரண்டு சரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2 ½, குச்சி, காம்பு, கொட்டை முதலியவைகள் நீக்கப்பட்ட திராக்ஷப்பழம் வராகனெடை-2½; இளநீர், பசுவின்நெய் இவை வகை-1-க்கு படி-2.

செய்முறை :- திராக்ஷப்பழத்தை வெண்ணெய் போல அரைத்து, சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து அதில் மிஸ்ரமித்து அம்மியில்வைத்து இளநீரைச் சிறுகச் சிறுக வார்த்து மைபோல அரைத்து, மீதியான இளநீரிற் கரைத்து நெய்யுடன் கலந்து அடுப்பேற்றிச் சிறுதியாயெரித்து மெழுகு பதத்திலிறக்கி வடி கட்டாமல் கடுகுடனே சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-1-2.

தீரும்நோய்கள் :- உளமாந்தை ரோகம்; சுரம், காசரோகங்கள், பைத்தியரோகம், தேகஇளைப்பு, கபரோகங்கள் ஆகியவை தீரும்.

பத்தியம் :- முன் கபரோகங்களுக்குச் சொல்லப்பட்டவைகளே யிதற்குமாம்.

80. ஏரண்டத் தைலம்.

தேவையான அளவு எருக்கிலையையிடித்து பிழிந்து வடிகட்டின சாற்றில் சிற்றாமணக்கு முத்தைப்போட்டு வேகவைத்து வெய்யிலில் உலர்த்திப் பதமாய்க் காய்ந்த பின், அதை யிடித்து மறுபடியும் புதிய எருக்கிலைச் சாற்றிற் போட்டு வேகவைத்து எண்ணெய் புறப்படுகிற சமயம்பார்த்துக் குளிர்ந்த இடத்தில் வைத்து மறுநாள் எண்ணெய் மிதந்து நிற்கும். அதைக்கையால் வழித்துச் சேர்த்து மறுபடியும் அந்த எண்ணெயில் சமபாகம் புதிய எருக்கிலைச் சாற்றைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடிகட்டிப் பத்திரப் படுத்தவேண்டியது.

உபயோகம் :- இதனை வியாதியுள்ள விடத்தில் மேற்பூச்சாகப் பூசி வரவேண்டும். பிரதிதினமும் வியாதியின் கொடூரத்திற்கேற்றதுபோல இரண்டு மூன்று தடவைகள் செய்துவரவும். இவ்விதம் தொடர்ச்சியாய் நான்கு நாட்கள் செய்து அஞ்சாம் நாள் அரைப்பிட்டு வெந்நீரில் ஸ்நாநம் செய்யவேண்டியது. இப்படிச்செய்துவரின் சூலைரோகங்கள், வாதரோகங்கள், கைகால் முடக்கம், முதலிய பலரோகங்கள் தீர்ந்து தேகந் தெளிவுகொடுத்து வசீகரமுண்டாம்.

பத்தியம் :- புளி, புகை, பெண் முதலியவைகளை நீக்கிவைப்பதே உத்தமமாம்.

குறிப்பு

இந்தச் சிகிச்சையானது, சுகுமார தேகிகளுக்கு ஏற்காது. இது பெரும்பாலும் முரட்டு சுபாவமுடைய கஷ்டஜீவிகளுக்கேற்கும், அவர்களுக்கும் அவர்கள் சுபாவ

Koviloor Digital Library

முதலியவைகளை நிதானித்தே செய்ய வேண்டும். ஆனால் கால் முதலிய பாகங்களிலிருந்தால் மேற்பூச்சாகப் பூசலாம். அப்படிச் செய்வதாலும் குணமுண்டாகாதிராது.

87. சூதகவாயுப் பிரயோகம்.

அரைப்படி வெள்ளிரில் தண்ணீரை விட்டுத் தேய்த்துக் கழுவிக் கழுவி காற்படி ஜலம் எடுத்து வடிகட்டி அதில் ஒரு பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பானஞ் செய்விக்க வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் அல்லது காலையில் மாத்திரம் ஒரு வேளையாக பதினான்கு வேளை கொடுக்க சூதகபந்தத்தைப்பற்றின எல்லாரோகங்களும் தீரும். சூதகபந்தம், அக்கிரம சூதகம், உஷ்ணத்தால் கட்டுப்பட்டிருக்கிற சூதகம், சூதக இரத்தங் கட்டுப்பட்டுண்டான கட்டி, வயதாகியும் சூதங் காணாதிருத்தல், முதலிய எல்லாத் தோஷங்களும் தீர்ந்து, தேகவடிவு, முகவசீகரம் ஆகியவைகளுண்டாம்.

குறிப்பு

சில பாலிய ஸ்திரீகள்-16-20-வயதாகியும் பிரவடையாகாமல், உலர்ந்து காய்ந்து வற்றிப்போவதுண்டு. இதனால் கல்யாண முதலியவைகளுமில்லாமல் பேய் பிடித்திருக்கிறது; பிசாசு தலையிலுட் கார்ந்திருகிறது; காட்டேரி சகவாசஞ் செய்கிறது என பலவகைப் பேச்சுக்களைக் கட்டாகக் கட்டி விட்டுப் புலம்பித்திரிவது நமது பாட்டிமார்களின் பழங்கதையாம். இவ்விஷயங்களைப் பலதடவை நாம் நேரே கண்ணாற் பார்த்திருப்பதுமன்றி பலராலும் கேள்வியும் பட்டிக்கின்றோம். அவ்வித ஸ்திரீகளுக்குண்டாயிருப்பது வியாதியே யொழிய பேயுமல்ல, பிசாசு மல்ல. ஆகையால் அத்தகையினர்களுக்கும் இந்தப் பிரயோகத்தைச் செய்தால் தேகபுஷ்டியுண்டாகி சூதகசம்பந்த தோஷங்கள் நிவாரணமாகி, தேகந் தழைத்துக் கல்யாண ஏதுவுமாகிப் பிள்ளைப்பேறு முண்டாகுமென்பது இந் நூலாசிரியர் அபிப்பிராயம்.

சில ஸ்திரீகளுக்கு பாலியத்தில் கல்யாணமாகியும் அனேக வருஷம் பிரவடையாகாமலிருப்பது முண்டு. அப்பொழுது அந்தப் புருஷன் முதலானவர் மேற்கண்டபடி பேய், சூனியம் என பலவாறாக அபிப்பிராயப்பட்டு வேறு கல்யாணஞ் செய்துகொண்டு பின்பு பாக்குவெட்டியிலகப்பட்டுக்கொண்ட பாக்கைப் போலத் துன்புற்றவர்களையுங் கண்டிருக்கிறோம். ஆகையால் தப்பான இவ்வித அபிப்பிராயங் கொண்டு ஏழை பாலிய ஸ்திரீகளின் மனதை வருத்தப்படுத்தாமல் மேற்கண்ட பிரயோகத்தை உபயோகிக்கச் குணமாம்.

88. மகா வல்லாதகி

(a) இரசம், நெல்லிக்காய்க் கந்தகம், சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், துத்தம், துருசு, தீபகர்ப்பூரம், இவ்வெட்டினுள் ஒவ்வொன்றையும் சுத்திசெய்து வகை-1-க்கு வராகனெடை-1¼.

Koviloor Digital Library

(b) கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், அதிமதுரம், கோட்டம் இவ்வைந்து சரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-1¼.

(c) சுத்திசெய்த சேராங்கொட்டை, 10-எண், நீரடி முத்துப்பருப்பு-8-எண், கல் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்த எள்ளு ஆழாக்கு-2, சர்க்கரை பலம்-5, பசுவின் நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- (a) யிலுள்ள இரசத்தையும் கந்தகத்தையும் முன்னர் சேர்த்தரைத்து நன்றாய் கறுத்த தூளானவுடன் எடுத்துக்கொள்க. மற்றச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து முன் தூளுடன் சேர்த்து நன்றாயரைத்து (b) யிலுள்ள எல்லாச் சூரணங்களையும் ஒன்றாய் கலந்து, அதனுடன் சேர்த்தரைத்து எடுத்துக்கொள்க (c) யிலுள்ள சேராங்கொட்டையை உரலிலிட்டிடித்து எடுத்துக் கல்வத்திலிட்டு வெண்ணெய்போலரைத்து, நீரடி முத்துப் பருப்பையும் சேர்த்து அரைத்துக்கொள்ளவேண்டும்.

எள்ளைக் கல்லுரலிலிட்டு, அதன்கூட சர்க்கரையையும் சேர்த்திடித்து வெண்ணெய்போலானபின்பு முன் சித்தப்படுத்தின ஒவ்வொன்றையும் முறையே சேர்த்து இடித்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் இடிக்கும்போது அப்போதைக்கப் போது பசுவின்நெய் தெளித்து இடித்தும் கொள்ளலாம். அல்லது எல்லாவற்றையும் தூளாயிடித்துப். பசுவின்நெய்யைவிட்டுப் பிசைந்து லேகியபதமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-5-7-ஆக காலை மாலை இரண்டுவேளையும் சாப்பிடலாம். இவ்விதம்-10-வேளை அஞ்சுநாள் சாப்பிட வேண்டியது.

பத்தியம் :- பசுவின்பாற்கஞ்சி, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு முதலியவைகளாம். இதைக்குறித்த மற்ற விபரங்களெல்லாம் முன்சொல்லப் பட்டிருக்கும் பல்லாதகி முறைகளில் விவரிக்கப்பட்டிருப்பதால், அதை வாசித்தறிந்து அந்த விதிவிலக்குகளைக் கையாடிவர வேண்டியது.

தீரும் நோய்கள் :- எல்லாவகைக் குஷ்டங்களும் போம்.

குறிப்பு

குஷ்டமானது அஷ்டமகா ரோகங்களில் ஒன்றாயிருந்தாலும், அவ்வெட்டினுள் இது வொன்றே பிரதானமானதாம். ஆயினமையின் இந்நூலாசிரியர் இந்த வியாதிக்குப் பல முறைகளைச் சொல்லியிருக்கின்றார். இவர்கருத்தை யனுசரித்தே இந்த குஷ்டரோக நிதானம், லக்ஷணம், அநுபானாதிகள் முதலிய அநேகம் சற்று விபரமாகவும். விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ரோகத்தைப்பற்றி விரிவாய் எழுதப்பட்டிருக்கிறதேயென மலைத்துப் பின்வாங்காமல் கூடியவரையில் சாவகாசத்துடன் கண்ணுங்கருத்துமாய்ப்பார்த்து, அந்தந்தவகையிற்கேற்ற தக்க

Koviloor Digital Library

அவுடதங்களைச்செய்து பிரயோகித்தால் கடவுளினது கிருபையால் எந்த வியாதியும் குணமாம் என்பதிற் சந்தேகமில்லை. எந்த விஷயத்தையும் நாம் பரிசுத்தமான மனதுடன் கடவுளின் மீது நம்பிக்கையை வைத்து எந்தக்காரியத்தைச் செய்கின்றோமோ, அந்தக்காரியமெல்லாம் கைகூடுமென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

89. சூரித் தைலம்.

நத்தைச்சூரிவேர்த் தோல் பலம்-1½, எலுமிச்சம்பழச் சாறு, எள்ளெண்ணெய் இவ்விரண்டும் வகை-1-க்குப் படி- ½.

செய்முறை :- முன் வேர்த் தோலை வெண்ணெய் போலரைத்துப் பழச்சாற்றிற்கரைத்து, அதை யெண்ணெயுடன்கலந்து பக்குவமாய்க்காய்ச்சிப் பதத்திலிறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இத்தைலத்தை முறைப்படி தேய்த்து, சிகைக்காயிட்டு, வெந்நீரில் ஸ்நாநம் செய்யவேண்டும். இவ்விதம் வாரம் ஒரு முறை அல்லது இருமுறை செய்துவரின், நாசிப்புழுவிழுதல், நாசிப்புண்கள், மண்டையிடி, சூலைகள் முதலிய பீநிச ரோகங்களெல்லாம் போகும்.

பத்தியம் :- இதற்கும் முன் தைல வகைகளிற் சொல்லப் பட்டதேயாம்.

90. மல்லியாதிக் கஷாயம்.

கொத்துமல்லிவிதை, வில்வவேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு, சிற்றாமட்டி வேர்ப்பட்டை, மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, நெற்பொரி, இந்த ஐந்தும் வகை-1-க்கு வராகனெடை-5. சீனிசர்க்கரை இஷ்டத்திற் கேற்ற அளவு.

செய்முறையும் உபயோகமும் :- எல்லாவற்றையும் சிதைத்து-1-படி ஜலத்திற்போட்டு, எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து, அதில் அவரவர்கள் பிரியப்படி சர்க்கரையைச் சேர்த்து பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் அல்லது காலையில் மாத்திரம், அல்லது மாலையில் மாத்திரம் ஒரு வேளையும் பானஞ்செய்யலாம். இவ்விதம் அநுஷ்டித்துவர, பித்தங்கள், சத்திகுன்மம், தேகத்திலுள்ள உஷ்ணம் முதலியவை நீங்கி குளிர்ச்சியுண்டாம். சாப்பிடும் ஆகாரம் ஜீரணமாகும். இரைப்பை, குடல் முதலியவைகளிலுண்டாகும் வாயு, குடலிரைச்சல் ஆகியவைகளும் தீரும். இரைப்பை, ஈரல் முதலியவைகளுக்குப் பலமுண்டாகி, தேகசவுக்கியமும் ஆரோக்கியமு முண்டாகும்.

குறிப்பு

இதில் சரக்குகளின் அளவு அதிகமாகக்காணப்பட்டிருக்கிறது; சிலவேளை இந்த அளவானது நல்ல உரத்த தேகிகளுக் கேற்கும். ஆகையால் சுகுமார தேகிகள், மெலிந்த தேகிகள் முதலியவர்களுக்கு வேண்டியதாயிருந்தால் அவரவர்களின் தேககுபாவ முதலியவைகளுக் கேற்றவிதமாக அளவைக்குறைத்து ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

Koviloor Digital Library

மேலும் இந்தத் தூளை யிடித்து வைத்துக்கொண்டு காப்பி. தேநீர் முதலியவைகளுக்குப் பதிலாக இதனைக்காய்ச்சித் தண்ணீரெடுத்து பால் சர்க்கரை முதலியவைகளைச் சேர்த்து உபயோகித்து வருவதால், பலவித நன்மைக்கு ஏதுவாகலாம்.

91. நவக்கிரக வெள்ளை

(a) சீனாக்காரம், நாட்டு வெண்காரம், சீமைவெண்காரம், வெடியுப்பு, இந்துப்பு, கௌரிப்பாஷாணம், சவ்வீரம், சாதிலிங்கம், தீபகர்ப்பூரம்; இந்த ஒன்பது சரக்குகளும் வகை-1-க்கு வராகனெடை- ½ 1/8கொடிவேலியிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

(b) பாலரசம் வராகனெடை-6 ¼. கறியுப்பு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- (a) யிலுள்ள ஒன்பது சரக்குகளையும் முன்னர் தனித்தனி பொடித்துப் பின் பொன்றாய்ச் சேர்த்தரைத்துக் கொடி வேலியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து மைபோலாகிற வரையிலரைத்து சிறிய குகையொன்றுசெய்து நிழலிலுலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சரக்கானது அதிக நுண்மையா யரைபடாவிட்டால் குகையில் வெடிப்புண்டாகும். அப்படி வெடிப்புண்டாகாதபடி முன்னதாகவே செம்மையாய் அரைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு படி கொள்ளத்தக்கதும் வாயகண்டதுமான ஒரு சிறு பானை தயார் செய்து அதன் வாயில் வேறொரு சட்டியைக் கவிழ்த்து மூடினால் அதற்குச் சரியாயிருக்கும் படியான சட்டியொன்று சித்தப்படுத்த வேண்டும், இவ்விரண்டின் வாய்களையும் தேய்த்து சந்தில்லாமல் பொருந்தும் படியாகவும் செய்து கொள்ள வேண்டும்.

இந்தக் கீழ்ப்பானையில் இடித்த உப்புத்தூளை பானையின் முக்காற் பங்குவரையில் இருக்கும் படியாக போட்டு நன்றாயமுத்திவிட்டு; நடுவில் விரலால் முன்குகைகொள்ளும் படியான சிறு பள்ளஞ் செய்யவேண்டும். முன் சித்தப்படுத்தின குகையில் பாலரசத்தைவிட்டு, உப்புக்குழியில்வைத்து மேல்சட்டிமூடி ஏழு சீலைமண்செய்து வெய்யிலிலுலர்த்தி அடுப்பேற்றி முதல் சாமம் தீபாக்கினியாகவும்; இரண்டாம் சாமம் கமலாக்கினியாகவும்; மற்றிரண்டு சாமங்களும் காடாக்கினியாகவும் எரித்து; நன்றாய்க்குளிர ஆறினபின் மெதுவாய்ப் பிரித்தெடுத்து; மேற்சட்டியிலும் அடிப்பானையின் உதட்டிலும் பதங்கித்திருப்பதைச் சுரண்டியெடுத்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்குக் குன்றிமணியெடை அரையாம். இதனை வெல்லத்திற்குள் வைத்துப் பொதிந்து உட்கொள்ள வேண்டும். வேறு தகுந்த அனுபானத்திற் பொதிந்தும் உட்கொள்ளலாம். இதனை யுட்கொள்ளும்போது மருந்துவாய்க்குட் படாமற் செய்ய வேண்டியதே பிரதானகருத்து. இவ்விதம் காலை மாலை இருவேளையும் ஏழுவேளை சாப்பிடவேண்டியது.

தீரும்நோய்கள் :- சூலைரோகங்கள், குட்டரோகங்கள் முதலியவை தீரும்.

Koviloor Digital Library

பத்தியம் :- புளி, புகை, பெண், உப்பு, சீதள வெப்பமுள்ள பண்டங்கள், அக்கினியை மந்தப்படுத்தும் வஸ்துக்கள், எண்ணெய்கள், கசப்பு வஸ்துக்கள் முதலியவையாகாவாம்.

குறிப்பு

இங்கு இதனை நவக்கிரக வெள்ளையென சிறப்பாய்ப் பெயரிட்டிருக்கினும், இரசபாலை வகைகளி லொன்றென்பது திண்ணம். இது மகா வேகமுள்ள ரச சம்பந்த அவுடத மாகையால், அதிக சாக்கிரதையுடன் உபயோகிக்க வேண்டியது. சில தேகிகளுக்கு இரண்டு மூன்று வேளையிலேயே வாய்பிடிக்கும். சில தேகிகளுக்கு நாட்கணக்காய்க் கொடுக்கினும் வாய் வேகிறதேயில்லை. ஆகையால் தேக சுபாவத்தைத் தெரிந்து செய்வதே எல்லாவற்றிற்கும் அனுகூலமாயிருக்கும். இந்த மருந்தால் அல்லது வேறு ரச சம்பந்த மருந்தால் வாய்வெந்து அதிகந் தொந்திரவாய் இருந்தால் பின்காணும் இரசசாந்தம் என்னும் பிரயோகத்தை உபயோகிக்கவும்.

இரசசாந்தம் :- தேவையான அளவு நெல்லிக்காய்க் கந்தகத்தைப்பொடித்து வைத்துக்கொள்க. ஒரு மண் கோப்பையை கரிநெருப்பின்மீது வைத்து மேற்படி கந்தகத்தூளைக் கொஞ்சம்போட்டு அதன்மேல் ஒரு சாணகியை மூடிவைக்க வேண்டும். புகையடங்கினபின் எடுத்தால் சாணகியில் சத்து படிந்திருக்கும். அதனை வழித்துப் பீங்கானில் வைத்துக்கொள்ளவும். இவ்விதம் சில தடவைகள்செய்து இஷ்டமானவரையில் சித்தப்படுத்திக் கொள்ளவும். இந்தச் சத்தில் கொஞ்சமெடுத்து வாயில் வேக்காடுள்ள இடங்களிற் ..வதுமன்றி, உள்ளுக்குச் சாப்பிடவும் கொடுக்கலாம்.

இன்னும் இங்கிலீஷ் மருந்துகடைகளில் விற்கும் கந்தகப்புளிப்பு திராவகத்தில், அதற்கு-20-பங்கு ஜலத்தைவிட்டு விளாவி வாய்கொப்பளிக்கச் செய்யலாம்.

இன்னும் பருத்திப்பிஞ்சை மென்றுதின்னச் செய்யலாம். கடுக்காய், படிக்காரம், கருவேலம்பட்டை, கொட்டைப்பாக்கு முதலியவைகளைக் கஷாயமிட்டு, வாய்கொப்பளிக்கச் செய்வதாலும் குணமுண்டாகும்.

இரச மருந்தை யுபயோகிக்கும் போது, அதிகமாகத் தாம்பூலம் போட்டுக் கொண்டு வந்தால் வாய்வேகாது. ஆனால் சில சமயங்களில் சிலருக்கு அப்படி செய்தும் வாய்வெந்து போவதுமுண்டு. ஆனால் அதுவும் மிகவும் சொற்பமாக வேயிருக்கும்.

மேற்கண்ட வகைகளில் ஏதேனும் ஒருவகையைச்செய்து, வாய்வேக்காளத்தை மாற்ற வேண்டும்.

எத்தனைநாள் மருந்து உபயோகப் படுத்தப்படுகிறதோ அத்தனைநாள் மறுபத்தியமுமிருக்க வேண்டியது. பொதுவாய் இரசமருந்துகளைச் சாப்பிடும்போது, மற்ற மருந்துகளைப் பார்க்கிலும் அதிக ஜாக்கிரதையுடன் பத்தியவிஷயத்தைக் கவனித்துவர வேண்டியது.

Koviloor Digital Library

92. கர்ப்பக்கிரந்தி வெண்ணெய்.

(a) சித்தாமணக் கெண்ணெய் படி-¼. பிரமத்தண்டுசமூலம், வெண்ணொச்சியிலை, சங்கங்குப்பியிலை, ஆடுதீண்டாப் பாளையிலை, கழுதையின் புதிய லத்தி, இவ்வைந்தையும் தனித்தனியிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு வகை-1-க்குப்படி-½. (b) கருஞ்சீரகம், கடுகுரோகணி, காட்டாத்திப்பூ, மஞ்சட் கடுக்காய்த்தோல், பறங்கிப்பட்டை, கார்கோலரிசி, செஞ்சூரைவேர், இவ்வேழும் வகை-1-க்கு வராகனெடை-2 ½. இவற்றையெல்லாம் நுண்மையான சூரணமாய் இடித்துக்கொள்க. (c) இரசம், நெல்லிக்காய்க் கந்தகம், சாதிலிங்கம், மடலரிதாரம், இந்நான்கையும் தனித்தனி சுத்திசெய்து வகை-1-க்கு வராகனெடை-1¼. இவற்றுள் முன்னிரண்டு சரக்கையும் தொந்தித்தரைத்து லிங்கத்தையும் சேர்த்தரைத்துக் கொள்க. தாளகத்தைத் தனியே பொடிசெய்து பின்பு முன் சூரணத்துடன் சேர்த்தரைத்துக் கொள்க.

செய்முறை :- (a) யிலுள்ள சாறுகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்க. பின்பு (b) யிலும் (c) யிலும் உள்ளதை யொன்றாய்க்கலந்து முன்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து வெண்ணெய்போல அரைத்து, முன் சாற்றிற்கரைத்து, அதை யெண்ணெயுடன் கலந்து, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து மெழுக்குபதத்திலிறக்கி வடிகட்டி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

இதனையே பின்வருவிதமாகவும் செய்துகொள்ளலாம். மேற்கண்டபடி (b) யிலுள்ள சரக்குகளை மாத்திரம் அரைத்து எண்ணெயிற் கரைத்துக்காய்ச்சி பதத்திலிறக்கி வடிகட்டி (c) யிலுள்ளவைகளை மேல்பொடியாகத் தூவி சீஷாவில் வைத்துக் கொள்ளலாம்.

இவ்விரண்டு வகைகளிலும் முன்கண்டதே விசேஷமானது. ஏனெனில் பின்கண்ட பாகத்தில் அரிதாரம் முதலியவைகள் பச்சைவெட்டாக உபயோகிக்கப் படுகின்றன. முன்னதிலோ வேகவைத்துப் பக்குவப் படுத்தப்படுகிறதே காரணம். ஆயினும் பெருத்த விகற்பமில்லாதபடியால் இஷ்டம்போல் எவ்விதமேனும் செய்துகொள்ளலாம்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-2-3 ½-வரையிலுட் கொள்ளலாம். இது பேதியாகும் குணமுடைய தாகையால், அதிக நுண்மையான சுபாவமுடையவர்களுக்குக் காலையில் ஒருவேளை போதுமானது. இரண்டு வேளையும் கொடுக்க வேண்டுமானால், குறைந்த அளவாகக் கொடுக்க வேண்டியது.

தீரும்நோய்கள் :- உள்மூலம், கருப்பக் கிரந்தி, முதலியவை தீரும்.

பத்தியம் :- வியாதியின் அதிகங் குறைவிற்குத் தக்கபடி உப்பு, புளி, புகை, சம்போகம் முதலியவைகளை நீக்கவேண்டியது.

குறிப்பு

கர்ப்பக்கிரந்தியென்பது கருப்பையிலுண்டாகும் ஒருவகை ரணம். அதிலிருந்து சீழ், இரத்தம் முதலியவகை ளொழுகிக்கொண்டிருக்கும். கஷ்ட சாத்தியங்களில்

Koviloor Digital Library

இதுவுமொன்று. இந்தக் கஷ்டரோகத்தின் சிகிச்சையும் அவசியம் வேண்டியதென்றே அதற்கு தகுதியான அவுடதமொன்றும், இங்கு சொல்லியிருக்கிறார். இதனைத் தகுந்தவிதமாய் உபயோகிக்கின் மேற்கண்டரோகங் கடினமானதாயினும் கடவுளினது கிருபையால் மேற்கண்டரோகந் தீரும்.

93. சஞ்சீவி யாதிக் கிருதம்.

உலர்த்தப்பட்ட சீந்திற்கிழங்கு, மேல்தோல் சீவப்பட்ட அதிமதுரம், நற்சீரகம், ஏலரிசி, இலவங்கம், சூகைநீறு, இவ்வாறு சரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2½, சீனி சர்க்கரை வராகனெடை-5, பசுவின்நெய் படி-½.

செய்முறை :- நெய்யில் மேற்கண்டவைகளைப் போட்டுச் சிறுதீயாயெரித்துக் காய்ச்சி இளம்பதத்திலிறக்கி வடிகட்டாமற் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு வராகனெடை-2-3-சாப்பிடலாம். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் கடுகுடன் உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள் :- கை, கால், தேகம் முதலிய ஸ்தானங்களின் எரிச்சல், பலவித வரட்சிகள், பலவகை உஷ்ணங்கள் முதலியவைதீர்ந்து, தேகங்குளிர்ந்து, ஆரோக்கியமும் சுகமுமுண்டாகும். இது சுலபமாயிருக்கிறதேயென்று அலட்சியம் செய்யாதிருக்கும்படி இது மகா அவுடதமென வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றார். சில சமயங்களில் பார்வைக்கு இலேசாயிருக்கும் அவுடதங்கள் சிலசமயம்கொடுக்கும் பெரும் பிரயோசனத்தைப் போல பாரிய அவுடதங்கள் கொடுக்கிற தில்லையென்பது அநுபவசித்தமான விஷயமே.

94. சோகைக் குளிகை

சுத்திசெய்த தாம்பிர அரபொடி, சுத்தி செய்த இரும்பின் அரபொடி, இவ்விரண்டும் வகை-1-க்கு வராகனெடை-6¼. எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி இரண்டு பொடிகளையும் கல்வத்திலிட்டு, மேற்படி பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு-12-சாமம் கைவிடாமலரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் :- வேளை-1-க்கு மாத்திரை-1- வெந்நீரிலிழைத்துட் கொள்க. இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் அஞ்சுநாள் உபயோகிக்கலாம்.

பத்தியம் :- உப்பு, புளி, புகை, போகம் முதலியவைகளை நீக்கி, பசும்பாற்கஞ்சி, வெள்ளாட்டுப்பாற்கஞ்சி ஆகியவைகளைப் பானஞ்செய்ய

Koviloor Digital Library

வேண்டும். மருந்தை நிறுத்தி மறுபத்தியமுமிருந்து முக்கூட்டெண்ணெய் ஸ்நானம் செய்யவும்.

தீரும் நோய்கள் :- சோகைகள், காமாலைகள், பாண்டு ரோகங்கள், எட்டுவித பீலிகை ரோகங்கள் ஆகியவை தீரும்.

குறிப்பு

இம்முறையிற் சேர்க்கப்பட்டிருக்கிற தாம்பிரமானது பச்சைச்சரக்கு. இதற்கு மாற்றாக பழச்சாறு, அயம் ஆகியவைகள் சேர்க்கப்பட்டிருந்தாலும், சில சுகுமார தேகிகளுக்கு வாந்தி, அன்னத்துவேஷம் முதலியவைகள் உண்டாக ஏதுவாகும். ஆகையால் தாம்பிரப்பொடிக்குச் சமனெடை கெந்தியைச்சேர்த்து, இவ்விரண்டையும் முன்னர் பழச்சாற்றைவிட்டு-2-சாமமரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து, அகலில் வைத்துப் புடமிட்டெடுத்தரைத்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் தாம்பிரத்தின் துர்க்குணம் அடங்கிப்போம். இவ்விதமே அயப்பொடியையும் அதற்குச் சமனெடை கந்தகத்தைச்சேர்த்து முன்போலவே அரைத்துப் புடமிட்டெடுத்துக் கொள்ளவும். பின்பு இவ்விரண்டு பொடிகளையும் சேர்த்து மேற்சொன்னபடி செய்துகொண்டால் எவ்வித துர்க்குணமு முண்டாகாது. மேலும் முன்கண்ட குணத்தைப்பார்க்கிலும் அதிகமேயுண்டாம். ஆனால் இதில் கஷ்டம் அதிகமென்பதிற் சந்தேகமுமில்லை. இனி செய்து கொள்பவர்களின் முயற்சியைச் சேர்ந்ததாம்.

95. குட்டோ சிதம்.

(a) எள்ளெண்ணெய் பலம்-2 ½. பொடுதலையையிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு பலம்-5. பனவெல்லம் பலம்-½. (b) மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, இவ்வாறு சரக்கையும் தனித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-1-க்குச் சமபாகம். இவற்றை யொன்றாய் மிஸ்ரமித்து வைத்துக்கொள்க.

உபயோகம் :- (a) யிலுள்ள முன்னிரண்டையும் ஒன்றாய்க்கலந்து, அதில் வெல்லத்தைக்கரைத்து (b) யிலுள்ள சூரணக் கலவையில் மூன்றுவிரற்கள்கொண்ட அளவு எடுத்துப்போட்டுக் கலக்கிப் பானஞ்செய்விக்கவும். இவ்விதம் காலையில் ஒருவேளைமாத்திரம் ஏழு காலை குடிப்பாட்டவேண்டும்.

பத்தியம் :- உப்பு, புளி, புகை, போகம் முதலியவைகளை அறவே நீக்கவேண்டும். புளிக்குப்பதிலாக நெல்லிப்பிஞ்சைச் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதம் செய்தால் குறுக்குவலி, கோரைவலி, குட்டரோகம், பறங்கிப்புண், படர்தாமரை முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இது பேதியாகும் சுபாவமுடைய தாகையால் தேககுபாவத்தைத் தெரிந்து அளவைக்குறைத்து அல்லது அதிகப்படுத்தி சமயோசிதமாகக் கொடுக்க வேண்டும்.

Koviloor Digital Library

வியாதி கஷ்டமானதாகவும் நாட்பட்டதாகவும் இருந்தால் இடையில் ஐந்தாறுநாள் விட்டு மறுமுறையுங் கொடுக்க வேண்டும். இவ்விதம் இரண்டு, மூன்று, நான்கு முறைகளும் கொடுக்கலாம்.

96. செவிநோய் சங்காரன்.

(a) பிரமத்தண்டிலை, விளாயிலை, வெண்ணொச்சியிலை, முருங்கையிலை, பருத்தியிலை, துளசியிலை, நீர்முள்ளியிலை, நல்ல வேளையிலை, மாவிலங்கையிலை, குப்பைமேனியிலை, எருக்கிலை, முள்முருக்கிலை இவை வகை-1-க்கு வராகனெடை-1¼. (b)கோஷ்டம், சதகுப்பை, தேவதாரம், கருஞ்சீரகம், வசம்பு, சிற்றரத்தை (சந்நராஷ்டம்), இந்த ஆறும் வகை-1-க்கு வராகனெடை-2 ½, நல்லெண்ணெய் பலம்-5.

செய்முறை :- (a யிலுள்ள இலைகளைப் பஞ்சு போல் இடித்து எண்ணெயிற் சேர்க்கவேண்டும். (b) யிலுள்ள சரக்குகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்திடித்து மேற்படி யெண்ணெயிற்போட்டுக் கலக்கி, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து மெழுகுபதத்திலிறக்கி வடிகட்டி யெண்ணெயைப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம் :- இத்தைலத்தை சிரசின் உச்சியில் தேய்த்து, நோயுற்றகாதில்-2-3-துளி விட்டுப் பஞ்சுவைத் தடைக்கவேண்டும். இவ்விதம் செய்து வருவதால் காதிலுண்டாம் வியாதிகளெல்லாம் தீரும்.

குறிப்பு

இத்தைலத்தைக் காதிலுண்டாம் வியாதிகளுக்கெல்லாம் உபயோகிக்கலா மெனச் சொல்லப்பட்டிருக்கினும் வாயுசம்பந்தமான வியாதிகளுக்கு அதிகம் உபயோகப்படுத்தப்பட வேண்டும். காதில், ஜலம், எண்ணெய் முதலியவைகளை விடும்போதெல்லாம், அதைச் சற்று இளஞ்சூடாக்கிப் போடவேண்டும். இப்படி யிளஞ்சூடாக்கி விடாவிட்டால், காதுக்கு ஏதேனும் கெடுதிக் கேதுவாம். இந்த விஷயத்தில் சிகிச்சகர்கள், சிகிச்சைசெய்து கொள்பவர்கள் ஆகிய இருவரும் அதிக சாக்கிரதையா யிருக்கவேண்டும். காதிற்கண்டதைவிட்டுக் காது மந்தப்பட்டவர்கள் அனேகரை யின்றைக்கும் காணலாம். ஆகையால் காது நோய்ச் சிகிச்சையில் அதிக சாக்கிரதை வேண்டுமென்பதே கருத்து.

97. மூலமுளை நிவாரணி

(a) கீழ்க்காணும் முறைப்படி பாகப்படுத்தினகுக்கில் அல்லது மைசாட்சி பலம்-4, கீழ்க்காணும் முறைப்படி பாகப்படுத்தின நெல்லிக்காய்க் கந்தகம் பலம்-4, கீழ்க்காணும் முறைப்படியாகப் பாகப்படுத்தின பறங்கிப்பட்டை பலம்-8. இம்மூன்றையும் தனித்தனியாய் மெல்லியதூளாய் இடித்து வஸ்திரகாயம் செய்து நிறுத்தெடுத்து ஒன்றாய் மிஸ்ராமித்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

(b) மேற்புரணி நீக்கிப் பாலில் வேகவைத்துலர்த்தின சிவதைவேர்ப்பட்டை, வாய்விளங்கம், விளாலரிசி, நற்சீரகம், கருஞ்சீரகம், குறோசானியோமம், இலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாகேசுரம், மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, அதிவிடையம், கடுகு ரோகணி, சிகப்புக் கொடிவேலி வேர்ப்பட்டை, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், வசம்பு, திப்பிலிமூலம், கண்டுமூலம், சித்திரமூலம், இச்சரக்குகளைத் தனித்தனி யிளவறுப்பாய் வறுத்திடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் வகை-1-க்கு வராகனெடை-2 ½. இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கொள்க.

(c) பொரித்தவெண்காரம்; எவச்சாரம், நவச்சாரம், வெள்ளைக் குங்கிலியம், இந்நான்கையும் தனித்தனி மெல்லிய தூளாகச்செய்து வகை-1-க்கு வராகனெடை-2½. இவைகளையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கொள்க.

(d) சீனிசர்க்கரை பலம்-10; பசுவின் நெய், தேன் இவ்விரண்டும் தனித்தனி செல்லத்தக்க அளவு.

செய்முறை :- (a) (b) (c) என்னும் இவற்றிலுள்ள சூரணங்களையெல்லாம் ஒன்றாய்க்கலந்து, (d) யிலுள்ள சீனிசர்க்கரையையும் சேர்த்து, இதில் நெய்யையும் தேனையும் சமபாகமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு; சிறுகச்சிறுக விட்டுக் கையால் நன்றாய்மத்தித்து லேகியபதமாய்ச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டியது.

பிரமாணம் :- வேளை-1-க்குப் பலம்-1½-2-உட்கொள்ளலாம். இவ்விதம் காலை மாலை யிரண்டு வேளையும் நாற்பது நாள் சாப்பிடவேண்டும்.

பத்தியம் :- துவரை சிறு முளைக்கீரை வரையாட்டிறைச்சி; வெள்ளாட்டுப் புக்கண்டம், நெய்த்தோலி ஆகியவைகளும் இவைபோன்றவைகளும் ஆம்.

தீரும் நோய்கள் :- மூலரோகங்கள், உட்பவுத்திர முதலிய பவுத்திரரோகங்கள்; சூலைரோகங்கள்; பற்பலவகை சிரங்குகள்; பரங்கிப்புண்; குட்டரோகங்கள் முதலியவை தீரும்.

குறிப்பு

திரிமூலம் என்பது திப்பிலிமூலம் கண்டுமூலம், சித்திரமூலம் என்னும் மூன்றிற்குப் பெயர்; அதனுடன் "வீரான சித்திரமூலம்" என்று சொல்லப்பட்டிருப்பதால் அதை சிவப்பு சித்திர மூலமென கிரகிக்கப்பட்டிருக்கிறது. இந்தமுறையில் சரக்குகளின் மொத்த எடைக்கு நான்குபங்கு சர்க்கரை சேர்க்கப்பட்டிருப்பதாலும், இது ஒருவகை மிட்டாயைப்போல விருக்கும். இக்காரணம் பற்றியே எலுமிச்சங்காயளவுப் பிரமாணம் சாப்பிடலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அது சுமார் மேற்கண்ட நிறையேயிருக்கும். ஆகையால் நிறைக்கணக்காய் எழுதப்பட்டது.

Koviloor Digital Library

குக்கில் **பக்குவம்** :- குக்கில் அல்லது மைசாட்சி சுமார் பலம்-10. முற்றின வேப்பமரப்பட்டை ஆடா தோடை மரப்பட்டை வேலிப்பருத்தியென்னும் உத்தாமணிசமூலம்; கண்டங்கத்திரி சமூலம்; இந்நான்கும் வகை-1-க்குப் பலம் 10, ஒரு பெரிய மண்பாண்டத்தில் எட்டுபங்கு நல்லதண்ணீரை விட்டு, அதில் மேற்படி நான்கு வஸ்துக்களையும் சிறிதாகத்துண்டித்துப் போட்டுப் பாண்டத்தின் வாய்க்கு உரத்த துணியால் வேடுகட்டி அதன்மேல் முன் குக்கிலைவைத்து; வாய்க்கு மேற்சட்டிமூடி மெதுவாயெரித்து நீரெல்லாம் சுண்டினபின் ஆறவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். குக்கில் உருகி பாண்டத்திற் குள்ளும் இருக்குமாகையால் அதனையும் சாக்கிரதையுடன் எடுத்து சேகரித்துக் கொள்ள வேண்டும். பின்பிதனை ஜலம்விட்டுக்கழுவி; ஒருபடி வெள்ளாட்டுப்பாலை விட்டு வேகவைத்தெடுத்து பசுவின் நெய் தெளித்து வறுத்து பொடித்து மேற்கண்ட நான்கு பலம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதற்குத்தான் குக்கில் பக்குவமென இம்முறையிற் சொல்லப்பட்டிருக்கிறது. முன் இன்னொருவிதமும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆயினும் எந்தெந்த முறையில் எந்தெந்த விதமாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றனவோ அந்தந்த முறையாகச் செய்துகொள்வது தான் உசிதமாம்.

நெல்லிக்காய்க் கந்தகப்பக்குவம் :- அதைப்படி எருக்கிலைச் சாற்றை ஒரு மண் பாண்டத்தில் விட்டு வாய்க்கு வேடுகட்டி அதன்மேல் சுமார்-7-பலம்-கந்தகத்தைத் தூள்செய்து வைத்து மேற்சட்டி மூடி அடுப்பேற்றி மெதுவாயெரிக்க கந்தகமெல்லா முருகி, சாற்றில் விழுந்துவிடும். அல்லது முன்போல சாற்றைப் பாண்டத்தில்விட்டு வேடுகட்டி அதன்மேல் கந்தகத்தைத் தூள் செய்து வைத்து ஒரு சாணகியால் மூடி, பூமியில் பள்ளந்தோண்டி, இந்தப் பாத்திரத்தைப் புதைக்கவேண்டும் பாத்திரமானது பூமி மட்டத்திற் கிருக்கவேண்டியது; அந்த சாணகியின் சுற்றிலும் இரண்டு விரற்கனம் மண்ணைத்தள்ளி மூடி, 10-வராட்டியை யடுக்கிப் புடமிட, கந்தகமெல்லாம் உருகிக் கீழ்ச்சட்டியில் விழுந்து நிற்கும். மேற்கண்ட இருவகையில் ஏதேனும் ஒரு வகையாய்ச் செய்து கழுவி சுத்தி செய்து ஈரத்தை யுலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

பறங்கிப் பட்டைப் பக்குவம் :- பறங்கிப்பட்டை பலம்-16-இதனை யிடித்து தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்க. ஒன்றரைப் படி பசுவின்பாலை ஒரு பாண்டத்தில் விட்டு வாய்க்கு வேடுகட்டி முன் சூரணத்தில் கொஞ்சம் பாலைத் தெளித்துப் பிசிறிவைத்து மேற்சட்டிமூடி மெதுவாயெரித்து பாலானது முக்கால்வாசி சுண்டின பக்குவத்தில் இறக்கி நிழலில் உலர்த்தி நன்றாயுலர்ந்தபின்பு மறுபடியும் இடித்துத் தூளாக்கி மறுபடியும் வஸ்திரகாயம் செய்து மேற்கண்ட எட்டுப்பலம் நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதுதான் பறங்கிப்பட்டைப் பக்குவமாம். இவ்விதமே இங்கு செய்து கொள்ள வேண்டியது.

சிலர் சோம்பலினால் அவுடதங்களைக் கிரமமாய் சித்தப்படுத்தாமல் மருந்து குணஞ்செய்யவில்லை யென தம்மிதுள்ள பழியை மருந்தின்மீது போட்டு விடுவது அசாதாரணமான காரியமல்ல.

LIBRARY KOVILOOR

Koviloor Digital Library

98. சிரநோய்த் தைலம்.

(a) எள்ளெண்ணெய், பொன்னாங்காணிச் சாறு, கையாந்தகரைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, கம்மாறு வெற்றிலைச்சாறு, கஞ்சாயிலைச்சாறு இவை வகை-1க்கு ஆழாக்கு-1.

(b) மிளகு, அபினி, அதிமதுரம், நற்சீரகம், வால்மிளகு இவை வகை 1-க்கு வராகனெடை-1 ¼.

செய்முறை :- சாறுகளையெல்லாம் ஒன்றாய் கலந்துகொண்டு மேற்கண்ட சரக்குகளில் அபின் தவிர மற்றவைகளை முன் சாற்றைவிட்டு வெண்ணெய் போல் அரைத்து எண்ணெயிற்கலக்கி, மிகுந்த சாற்றையும் சேர்த்து சிறுதீயாயெரித்துக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கும் சமயத்தில் அபினியைக் கரைத்துவிட்டு, ஒருகொதி வந்தவுடன் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

உபயோகம் :- இதனை நான்குநாளைக் கொரு தடவை தைலவிதிப்படி ஸ்நானம்செய்துவரின், நாசியில் நீர்வடிதல், ஒருதலைநோய், சிரச்சூலைகள், சிராய்ப்பீனிசம், பீனிசவகைகள் ஆகியவை தீரும்.

ஸ்நாநம் செய்ததினம் புளி, உப்பு ஆகியவைகளை நீக்கவேண்டியது.

99. திமிர்ப் பிரயோகம்

கண்டங்கத்தரி, குருவிஞ்சி, கொடிவேலி, கொல்லன்கோவை, சங்கங்குப்பி, சங்கன், சதுரக்கள்ளி, சிவனார்வேம்பு, சிறுகாஞ்சோறி, சிற்றீச்சன், செங்கத்தாரி, தகரை, நத்தைச்சூரி, நிலஆவாரை, நிலவாகை மருதோன்றி; மாவிலிகங்கை, வெண்ணொச்சி; வெள்ளறுகு; இவற்றின் வேர்ப்பட்டைகள் சம்பாகம் இவ்வேர் வகைகளை அம்மியில்வைத்துப் பசுவின்பாலைச் சிறுகச்சிறுகவிட்டு வெண்ணெய்போலரைத்த விழுது நடுத்தரமான எலுமிச்சங்காய்ப் பிரமாணம். இதனை ஆழாக்குப் பசுவின்பாலிற் கரைத்துப் பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக எட்டுநாள் உபயோகித்துப் பத்தியமாயிருக்க வேண்டும்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44779

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை

நூலகம்